357

உ

பதினெண் சித்தர்களில்
தெய்வீகத்தன்மைபொருந்திய

# போகமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய
பெருநூல்

# நிகண்டு ஆயிரத்திருநூறு

## முதற்காண்டம்

இஃது,
பட்டாளம் எருக்கஞ்சேரி
**கனகசபைபண்டிதர் முன்னிலையில்**
மதுரை-புதுவை-சென்னை இச்சங்கங்களில்
தமிழ்த்தலைமைப் புலமைநடாத்திய
**களத்தூர்-வேதகிரிமுதலியார் குமாரர்கள்**
**ஆறுமுகமுதலியாராலும்**

ஆயுர்வேதபாஸ்கரன்
**கந்தசாமி முதலியாராலும்**
பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டாராய்ந்து
பிழையறப்பரிசோதித்து

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்
**தி. ரா. மு. குருசாமிக்கோனார்**
அவர்கள் விருப்பத்தின்படி

**எ. தீனதயாள முதலியார்**
அவர்களால்

சென்னை.—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1925. [ரூபா 1-8

உ

பதினெண் சித்தர்களில்

தெய்வீகத்தன்மைபொருந்திய

# போகமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பெருநூல்

## நிகண்டு ஆயிரத்திருநூறு

## முதற்காண்டம்

S. 16
S.S.D.C

இஃது,

பட்டாளம் எருக்கன்சேரி

**கனகசபைபண்டிதர் முன்னிலையில்**

மதுரை-புதுவை-சென்னை இச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப் புலமைநடாத்திய

**களத்தூர்-வேதகிரிமுதலியார் குமாரர்கள்**

**ஆறுமுகமுதலியாராலும்**

ஆயுள்வேதபாஷ்கரன்

**கந்தசாமிமுதலியாராலும்**

பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டாராய்ந்து

பிழையறப்பரிசோதித்து

**இ. ரா. ம. குருசாமிக்கோனார்**

அவர்கள் கேட்டுக்கொண்டபடி

**எ. தீனதயாள முதலியார்**

அவர்களால்

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை 1925 1-8-0

உ

கடவுள்துணை.

# போகர் பொருள் அட்டவணை.


| பெயர். | பக்கம். |
|---|---|
| அ | |
| அமுரியுப்பின் பெயர் | 7 |
| அப்பிரேகத்தின் பெயர் | 17 |
| அஞ்சனக்கல்லின்பெயர் | 19 |
| அன்னபேதியின்பெயர் | 32 |
| அஸ்திபேதியின்பெயர் | 33 |
| அயமலையின்பெயர் | 46 |
| அயச்செம்பின்பெயர் | 51 |
| அயச்சத்தின்பெயர் | ,, |
| அரிதாரத்தின்பெயர் | 58 |
| அவுபல்பாஷாணத்தின்பெயர் | 63 |
| அஞ்சனப்பாஷாணத்தின்பெயர் | 64 |
| அப்பிரேகபாஷாணத்தின்பெயர் | 66 |
| அமுரியின்பெயர் | 101 |
| அப்பிரேகச்சத்து | 114 |
| அப்பிரேகச்சத்தில்வேதை | 115 |
| அயத்துக்காகக்களங்கு | 151 |
| அசமதாகத்தின்பெயர் | 189 |
| அதிவிடையத்தின்பெயர் | 196 |
| அதிமதுரத்தின்பெயர் | 197 |
| அரத்தையின்பெயர் | 198 |
| அரக்கின்பெயர் | 200 |
| அமுக்கராவின்பெயர் | 231 |
| அழிஞ்சிலின்பெயர் | 233 |
| அரச்சாம்பலின்பெயர் | 248 |
| அரசின்பெயர் | 255 |
| அத்தியின்பெயர் | 256 |
| அலரியின்பெயர் | 257 |
| அஷ்டிமதுகத்தின்பெயர் | 267 |
| அசோகின்பெயர் | 280 |
| அதிங்கின்பெயர் | 281 |
| அனிச்சையின்பெயர் | 283 |
| அமுகண்ணியின்பெயர் | 293 |
| அம்பளங்காயின்பெயர் | 302 |
| ஆ | |
| ஆமையின்பெயர் | 23 |
| ஆனைக்கொம்பின்பெயர் | ,, |
| ஆட்டுக்கொம்பின்பெயர் | 25 |
| ஆனந்தகற்பம் | 137 |
| ஆனைத்திப்பிலியின்பெயர் | 188 |
| ஆடாதோடையின்பெயர் | 213 |
| ஆத்துமுள்ளங்கியின்பெயர் | 239 |
| ஆத்திமல்லிகையின்பெயர் | 249 |
| ஆலின்பெயர் | 255 |
| ஆத்துமருந்தின்பெயர் | 262 |
| ஆட்டுச்செவிமருந்தின்பெயர் | ,, |
| ஆவில்புங்கின்பெயர் | 271 |
| ஆதண்டையின்பெயர் | 275 |
| ஆடுதின்னாப்பாளையின்பெயர் | 285 |
| ஆகாசகெருடன்பெயர் | 286 |
| ஆமிரத்தின்பெயர் | 302 |
| ஆவாரையின்பெயர் | 325 |
| ஆதளைக்காயின்பெயர் | 326 |
| இ | |
| இந்துப்பின்பெயர் | 8 |
| இந்திரகோபப்பூச்சியின்பெயர் | 25 |
| இந்திரபாஷாணத்தின்பெயர் | 75 |
| இரும்பின்பெயர் | 79 |
| இரும்புசத்துருமித்துரு | 149 |
| இலாமிச்சவேரின்பெயர் | 261 |
| இருவாட்சியின்பெயர் | 251 |
| இலந்தையின்பெயர் | 254 |
| இலுப்பையின்பெயர் | ,, |
| இச்சிலின்பெயர் | 256 |
| இலவின்பெயர் | 260 |
| இலவின்பிசினின்பெயர் | ,, |
| இந்திரக்கிழங்கின்பெயர் | 263 |
| இடவகத்தின்பெயர் | 177 |
| இருளின்பெயர் | 278 |
| இருள்விடுசெடியின்பெயர் | 273 |
| இங்குணத்தின்பெயர் | 282 |
| இரத்தமண்டலியின்பெயர் | 286 |
| இருப்பவலியின்பெயர் | 299 |
| இறசுவசறபாட்சியின்பெயர் | 307 |
| இடுகொள்ளின்பெயர் | 311 |
| இசங்கின்பெயர் | 315 |
| இதளையின்பெயர் | 303 |
| இந்நூற்பெருமை கூறுகின்றார் | 329 |
| ஈ | |
| ஈரக்கல்லின்பெயர் | 20 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| ஈயமூலிகைகள் | 129 |
| ஈருள்ளியின்பெயர் | 241 |
| ஈகையின்பெயர் | 309 |
| உ | |
| உப்பெல்லாங்கட்ட | 13 |
| உப்புபஞ்சசிறமணி | 14 |
| உபசரங்களின்பெயர் | 15 |
| உவர்மண்ணின்பெயர் | 33 |
| உபரசப்பேரின்பெயர் | 47 |
| உருக்கின்பெயர் | 80 |
| உப்புகெதையின்பெயர் | 81 |
| உபசரத்தின்சத்து | 121 |
| உதிரிமாரியின்பெயர் | 323 |
| உபரசபஞ்சபூதம் | 136 |
| உப்புபுளிசரக்கு | 154 |
| உத்தாமணியின்பெயர் | 277 |
| ஊ | |
| ஊமத்தையின்பெயர் | 236 |
| எ | |
| எவாச்சாரத்தின்பெயர் | 5 |
| எலும்பின்பெயர் | 21 |
| எலிச்செவியின்பெயர் | 224 |
| எருக்கின்பெயர் | 237 |
| எலுமிச்சையின்பெயர் | 252 |
| ஏ | |
| ஏகம்பச்சாரத்தின்பெயர் | 6 |
| ஏலத்தின்பெயர் | 201 |
| ஏழிலைப்புன்னையின்பெயர் | 235 |
| ஏலாவாலூகத்தின்பெயர் | 280 |
| ஏமமணலின்பெயர் | 43 |
| ஐ | |
| ஐமித்திரம் | 128 |
| ஒ | |
| ஒட்டைமரத்தின்பெயர் | 259 |
| ஒருக்கொம்பின்பெயர் | 320 |
| ஓ | |
| ஓரிதட்டாமரையின்பெயர் | 328 |
| ஓட்டின்பெயர் | 21 |
| ஓமமலையின்பெயர் | 30 |
| ஓமையின்பெயர் | 322 |
| க | |
| கல்லுப்பின்பெயர் | 8 |
| கர்ப்பூரசலாசத்தின்பெயர் | 17 |
| கல்நாரின்பெயர் | 18 |
| கல்மதத்தின்பெயர் | 18 |
| கருங்கல்லின்பெயர் | 19 |
| கலைக்கொம்பின்பெயர் | 24 |
| கடல்னுரையின்பேர் | 36 |
| கரடியின்பெயர் | 27 |
| கருமணலின்பெயர் | 34 |
| கற்சிட்டத்தின்பெயர் | ,, |
| கருவண்டின்பெயர் | 35 |
| கடல்நுரையின்பெயர் | 11 |
| கதண்டுக்கல்லின்பெயர் | 38 |
| கஸ்தூரியின்பெயர் | 39 |
| கடற்பாசியின்பெயர் | ,, |
| கற்காவின்பெயர் | 41 |
| கருஞ்சுக்கானின்பெயர் | 43 |
| கற்கடகப்பாஷாணத்தின் | 57 |
| கற்பரிபாஷாணத்தின்பெயர் | 64 |
| கற்பாஷாணத்தின்பெயர் | ,, |
| கச்சாலப்பாஷாணத்தின்பெ | 65 |
| கருமுகில்பாஷாணத்தின்பெ | 69 |
| கடலின்பெயர் | 85 |
| கற்பமுண்ணப்பாத்திரம் | 112 |
| கல்லுப்புச்சத்துரு | 146 |
| கல்லுப்புமித்துரு | ,, |
| கருநாகத்துக்காகக்களங்கு | 152 |
| கருப்புசித்திரமூலத்தின் | 189 |
| கருஞ்சீரகத்தின்பெயர் | 190 |
| கடுக்காயின்பெயர் | 192 |
| கடுகின்பெயர் | 195 |
| கடுகுரோகணியின்பெயர் | 196 |
| கடற்கடகச்சிங்கியின்பெயர் | 197 |
| கங்குஷ்டத்தின்பெயர் | 200 |
| கஸ்தூரியின்பெயர் | 204 |
| கருப்புஅகரத்தின்பெயர் | ,, |
| கடைமருந்து | 207 |
| கடைமருந்தின்றுருப்பு | 212 |
| கருங்காலின்பெயர் | 213 |
| கழற்கொடியின்பெயர் | 145 |
| கரும்பின்பெயர் | 230 |
| கருங்கொள்ளின்பெயர் | 235 |
| கரியாலங்கண்ணின்பெயர் | 237 |
| கருந்தக்காளியின்பெயர் | 238 |
| கருந்துளசியின்பெயர் | 240 |
| கருநொச்சியின்பெயர் | 242 |
| கருப்பருகின்பெயர் | 24 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| கல்தாமரையின்பெயர் | 248 |
| கடம்பின்பெயர் | 258 |
| கருப்புவாகையின்பெயர் | 259 |
| களாவிழுதின்பெயர் | 273 |
| கமுகின்பெயர் | 274 |
| கலப்புக்குவன்னிப்பெயர் | 279 |
| கண்பூவின்பெயர் | 279 |
| கஞ்சாங்கோரையின்பெயர் | 282 |
| கற்றாழையின்பெயர் | 284 |
| கப்புச்சடைச்சியின்பெயர் | 217 |
| கருமருதின்பெயர் | 320 |
| கஞ்சாவின்பெயர் | 287 |
| கட்டுக்கொடியின்பெயர் | ,, |
| கபபொடியின்பெயர் | 290 |
| கருப்பூமத்தையின்பெயர் | 294 |
| கருநெல்லியின்பெயர் | 297 |
| கல்லாரையின்பெயர் | ,, |
| கலைச்சம்பின்பெயர் | 298 |
| கல்லறளியின்பெயர் | ,, |
| கட்டுமாப்பெயரின்பெயர் | 302 |
| கருவேலின்பெயர் | 316 |
| கழுதைமான்புள்ளியின்பேர் | 321 |
| கண்டங்கத்திரியின்பேர் | 219 |
| **கா** | |
| காசிசாரத்தின்பெயர் | 6 |
| காச்சுலவணத்தின்பெயர் | 10 |
| காந்தத்தின்பெயர் | 17 |
| காகச்சிலையின்பெயர் | 38 |
| காண்டாமிருகத்தின்பெயர் | 39 |
| காஸ்மீரக்கல்லின்பெயர் | 41 |
| கானகக்கல்லின்பெயர் | 44 |
| காரீயமலையின்பெயர் | 45 |
| காந்தாபாஷாணத்தின்பெயர் | 62 |
| கார்முகில்பாஷாணத்தின்பெயர் | 65 |
| காகபாஷாணத்தின்பெயர் | 75 |
| காரீயத்தின்பெயர் | 78 |
| காடியின்பெயர் | 107 |
| காரசாரப்பஞ்சபூதம் | 134 |
| காரத்தில்பஞ்சபூதம் | 90 |
| காரசத்துமித்துரு | 147 |
| காரீயசத்துரு | 150 |
| காரீயமித்துரு | ,, |
| காசிசாரவைப்பு | 182 |
| காட்டுசதகுப்பையின்பெய | 191 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| கார்போகவரிசியின்பெயர் | 198 |
| காட்டாத்தியின்பெயர் | 234 |
| காகோளியின்பெயர் | 265 |
| காட்டுத்துளசியின்பெயர் | 283 |
| காட்டாமணக்கின்பெயர் | 286 |
| கானல்மாவின்பெயர் | 289 |
| காவட்டம்புல்லின்பெயர் | 295 |
| காட்டுக்கொள்ளின்பெயர் | 392 |
| காஞ்சிரையின்பெயர் | 316 |
| காரெள்ளியின்பெயர் | 324 |
| காட்டுக்கருணையின்பெய | 325 |
| காய்ப்பாகலின்பெயர் | 313 |
| **கி** | |
| கிளிஞ்சிலின்பெயர் | 23 |
| கிச்சிலிக்கிழங்கின்பெயர் | 197 |
| கிராம்பின்பெயர் | 201 |
| கிறட்டையின்பெயர் | 281 |
| கிளிமூக்கின்பெயர் | 308 |
| கிருமிசத்துருவின்பெயர் | 313 |
| கிளிமுருக்கின்பெயர் | 326 |
| **கீ** | |
| கீழாநெல்லியின்பெயர் | 235 |
| **கு** | |
| குருமொழியின்பெயர் | 52 |
| குருந்தக்கல்லின்பெயர் | 44 |
| குதிரைப்பல்பாஷாணத்தின்பெயர் | 60 |
| குளிகையேறச்சிமிளின்பெயர் | 118 |
| குருவர்க்கம் | 142 |
| குங்கிலியத்தின்பெயர் | 203 |
| குந்திருக்கத்தின்பெயர் | 203 |
| குக்கிலின்பெயர் | 203 |
| குங்குமப்பூவின்பெயர் | 205 |
| குமுளின்பெயர் | 217 |
| குடசப்பாலையின்பெயர் | 227 |
| குண்டுமணியின்பெயர் | 238 |
| குங்குமச்செவ்வந்தியின்பெயர் | 252 |
| குதிரைச்செவியின்பெயர் | 263 |
| குமதையின்பெயர் | 268 |
| குருஞ்சூவின்பெயர் | 270 |
| குழலாதொண்டையின்பெயர் | 275 |
| குளிரியின்பெயர் | 249 |
| குங்குமபாஷாணத்தின்பெயர் | 72 |
| குப்பைமேனியின்பெயர் | 284 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| கெ 4 | |
| கெர்திலவணத்தின்பெமர் | 9 |
| கெருடபட்சிக்கல்லின்பெயர் | 20 |
| கெண்டகச்சிலையின்பெயர் | 30 |
| கெந்தகத்தின்பெயர் | 58 |
| கெவுரிபாஷாணத்தின்பெயர் | 69 |
| கெந்தகப்பாஷாணத்தின்பெயர் | 74 |
| கெதைபஞ்சவர்னம் | 83 |
| கெந்தகச்செம்பின்பெயர் | 85 |
| கெந்தகமாஞ்சலியின்பெயர் | 202 |
| கொ 8 | |
| கொத்தானின்பெயர் | 301 |
| கொட்டைக்கரந்தையின்பெயர் | 145 |
| கொருக்காப்புளியின்பெயர் | 190 |
| கொத்துமல்லியின்பெயர் | 192 |
| கொன்றையின்பெயர் | 223 |
| கொம்மட்டிமாதளையின்பெயர் | 224 |
| கொக்கிறகின்பெயர் | 233 |
| கொடிநெல்லியின்பெயர் | 321 |
| கோ 9 | |
| கோடாசூரியின்பெயர் × | 76 |
| கோழியின்பெய | 26 |
| கோமேதகத்தின்பெய | 28 |
| கோளகப்பாஷாணத்தின்பெய | 57 |
| கோழித்தலைக்கெந்தியின்பெய | 70 |
| கோடாசூரியின்பெய | 311 |
| கோஷ்டத்தின்பெய | 202 |
| கோரோசினையின்பெய | 204 |
| கோரைக்கிழங்கின்பெய | 215 |
| கோவையின்பெய | 223 |
| கௌ - 1 | |
| கௌரிபாஷாணத்தின்பெய | 61 |
| ச 20 | |
| சவர்க்காரப்பெய | 4 |
| சவுட்டுப்பின்பெய | 9 |
| சங்கபாஷாணத்தின்பெய | 61 |
| சரக்காண்டபாஷாணத்தின்பெய | 62 |
| சவ்வீரத்தின்பெய | 70 |
| சரக்குகள்செம்பின்பெய | 87 |
| சரக்குசாய்க்கமித்திரம் | 115 |
| சதகுப்பியின்பெய | 191 |
| சடாமாஞ்சின்பெய | 202 |
| சந்தனத்தின்பெய | 205 |
| சர்க்கரைவேம்பின்பெய | 230 |
| சதுரக்கள்ளியின்பெய | 224 |
| சங்கின்பெய | 27 |
| சர்க்கரையின்பெய | 215 |
| சங்கங்குப்பியின்பெய | 244 |
| சத்திச்சாரணையின்பெய | 291 |
| சற்பாட்சியின்பெய | 307 |
| சமனத்துவயத்தின்பெய | 318 |
| சதுகமரத்தின்பெய | ,, |
| சடைச்சியின்பெய | 317 |
| சா 14 | |
| சாத்திரப்பேதியின்பெயர் | 18 |
| சாலாங்கபாஷாணத்தின்பெய | 63 |
| சாளக்கிராமத்தின்பெய | 40 |
| சாதிலிங்கத்தின்பெயர் | 46 |
| சாரசத்துரு | 145 |
| சாரமித்துரு | ,, |
| சாரவைப்பு | 184 |
| சாளஞ்சோதிவிருட்சத்தின்பெய | 234 |
| சாரிபாதியின்பெய | 267 |
| சாசியின்பெய | 283 |
| சாயவிருட்சத்தின்பெய | 297 |
| சாதிக்காயின்பெய | 205 |
| சாதிபத்திரியின்பெய | 206 |
| சாரணையின்பெய | 225 |
| சி 32 | |
| சிர்துலவணத்தின்பெப | 10 |
| சிலாவங்கக்கல்லின்பெய | 32 |
| சிலநாகத்தின்பெய | ,, |
| சிலாமதப்பாஷாணத்தின்பெய | 65 |
| சிங்கிபாஷாணத்தின்பெய | 68 |
| சிவம்பண்ணமணிநிரை | 117 |
| சித்தருடையவயது | 139 |
| சித்திரமூலத்தின்பெயர் | 189 |
| சிறுதேக்கின்பெயா | 197 |
| சிறுவாலுழுவையின்பெய | 199 |
| சிறுநாகப்பூவின்பெயர் | 201 |
| சிறுகாஞ்சோறியின்பெய | 213 |
| சிறுவழுதலையின்பெய | 219 |
| சிவதையின்பெய | 224 |
| சித்தர்களுக்குவணக்கம்கூறுகின் | 330 |
| சித்தாமுட்டியின்பெய | 225 |
| சிவப்பாமணக்கின்பெய | 229 |
| சிறுபூளையின்பெய | 232 |
| சின்னமுள்ளங்கியின்பெய | 339 |

| பெயா. | பக்கம். |
|---|---|
| சிறுகீரையின்பெய | 244 |
| சிறுசண்பகத்தின்பெய | 251 |
| சித்திஞ்சின்பெய | 253 |
| சிறுவிடுகொள்ளியின்பெய | 264 |
| சிரகாகோளியின்பெய | 265 |
| சிங்கத்தின்பெய | ,, |
| சிற்றுமல்லியின்பெய | 266 |
| சிறுபுள்ளடியின்பெய | ,, |
| சிவனார்வேம்பின்பெய | 285 |
| சிறுநீலியின்பெய | 322 |
| சின்னருகையின்பெய | 325 |
| சிறுதும்பியின்பெய | 303 |
| சிறுகல்லூரியின்பெய | 309 |
| சீ - 6 | |
| சீனக்காரத்தின்பெய | 6 |
| சீர்பந்தபாஷாணத்தின்பெய | 60 |
| சீதாங்கபாஷாணத்தின்பெய | 65 |
| சீனசத்துருமித்துரு | 647 |
| சீரகத்தின்பெய | 190 |
| சீதேவிசெங்கழுநீர் நெய்ச்சட்டிக் கீரையின்பெய | 263 |
| சு - 7 | |
| சுக்கான்கல்லின்பெய | 19 |
| சுத்தமண்ணின்பெய | 35 |
| சுக்கிலத்தின்பெய | 104 |
| சுரூபமென்றகுளிகையின்பெய | 129 |
| சுக்கின்பெய | 187 |
| சுணங்கவிருட்சத்தின்பெய | 195 |
| சுண்டைக்காயின்பெய | 323 |
| சூ - 9 | |
| சூடன்பெய | 7 |
| சூடாலைக்கல்லின்பெயர் | 30 |
| சூதகக்கிணற்றின்பெய | 56 |
| சூதபாஷாணத்தின்பெயர் | 59 |
| சூதபாஷாணத்தின்பெய | 73 |
| சூதத்தின்பெயர் | 102 |
| சூதத்தின்பெருமையின்பெய | ,, |
| சூதசத்துரு | 148 |
| சூதத்தின்மித்துரு | 145 |
| செ - 29 | |
| செங்கல்லின்பெய | 21 |
| செவ்வட்டையின்பெய | 26 |
| செம்மண்ணியின்பெய | 23 |
| செம்புமணலின்பெய | 41 |
| செம்மணலின்பெய | 34 |
| செம்புமலையின்பெயர் | 47 |
| செம்பின்பெய | 77 |
| செம்புமூலிகை | 127 |
| செம்பு-ச-மித்திரம் | 128 |
| செந்தூரக்களங்கு | 182 |
| செம்புகளைத்தாக்க | 100 |
| செயநீர | 163 |
| செவ்வியத்தின்பெய | 138 |
| செகப்புசதுரக்கள்ளியின்பெய | 225 |
| செம்முள்ளியின்பெய | 226 |
| செம்பையின்பெய | 244 |
| செங்கழுநீரின்பெய | 247 |
| செண்பகத்தின்பெய | 251 |
| செப்புநெரிஞ்சின்பெய | 279 |
| செவ்வறளின்பெய | 291 |
| செந்திராவின்பெய | 299 |
| செம்பல்லியின்பெய | ,, |
| செவ்வகத்தின்பெய | ,, |
| செருந்தியின்பெய | 301 |
| செருப்படையின்பெய | 284 |
| செர்தாடுபாவையின்பெய | 196 |
| செவ்விறகின்பெய | 319 |
| செம்மரத்தின்பெய | ,, |
| செழுமலக்கொன்றையின்பெய | 321 |
| சே 2 | |
| சேங்கொட்டையின்பெய | 199 |
| சேவகனார்கிழங்கின்பெயர் | 236 |
| சொ 1 | |
| சொர்னபேதியின்பெய | 33 |
| சோ 2 | |
| சோனகப்பூவின்பெய | 304 |
| சோரபாஷாணத்தின்பெய | 74 |
| ஞா 1 | |
| ஞாழலின்பெய | 269 |
| த 15 | |
| தண்ணீரின்பெய | 309 |
| தவளையின்பெய | 10 |
| தவளைக்கல்லின்பெய | 31 |
| தங்கசத்துரு | 147 |
| தங்கமித்துரு | 148 |
| தங்கத்தில்ரசமெடுக்க | 164 |
| தமாலப்பத்திரியின்பெய | 201 |
| தண்ணீர்மிட்டான்பெய | 264 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| தழுதாழையின்பெய | 274 |
| தலைச்சுருடுவள்ளியின்பெய | 310 |
| தணக்கின்பெய | 315 |
| தகளாயின்பெய | 236 |
| தயிரின்பெய | 106 |
| **தா** | |
| தாம்பூரச்சிகையின்பெய | 289 |
| தாமரைக்கிழங்கின்பெய | 247 |
| தாமரைத்தாதுவின்பெய | ,, |
| தாமரையின்பெய | 246 |
| தாமரைவளையத்தின்பெய | ,, |
| தாமரைமணியின்பெய | 247 |
| தான்றிக்காயின்பெய | 194 |
| தாளிசபத்திரியின்பெய | 200 |
| தாலப்பாஷாணத்தின்பெய | 59 |
| தாளகத்தின்பெய | 63 |
| தாளிப்பனையின்பெய | 328 |
| தாளியின்பெய | 305 |
| **தி** | |
| திலாலவணப்பெய | 9 |
| திராமலையின்பெய | 46 |
| திராவின்பெய | 79 |
| திப்பிலியின்பெய | 188 |
| திப்பிலிமூலத்தின்பெய | ,, |
| தின்னுகிறபீர்க்கின்பெய | 146 |
| தித்துப்புக்கோவையின்பெய | 223 |
| திருநாமப்பாலையின்பெய | 227 |
| திப்பிலின்பெய | 283 |
| தில்லையின்பெய | 289 |
| திமிசியின்பெய | 276 |
| **தீ** | |
| தீமுறுகலின்பெய | 68 |
| தீன்பூவின்பெய | 312 |
| **து** | |
| துத்தபாஷாணத்தின்பெய | 63 |
| துத்தத்தின்பெய | 22 |
| துரிசியின்பெய | 73 |
| துரிசிசெந்தூரம் | 110 |
| துரிசிசத்துரு | 144 |
| துரிசிமித்துரு | 145 |
| துளசியின்பெய | 240 |
| தும்பையின்பெய | 191 |
| தும்புருவின்பெய | 315 |
| தும்பியின்பெய | 303 |
| துரிசின்பெய | 15 |
| **தூ** | |
| தூதுவளையின்பெய | 285 |
| தூணியாங்கிஷத்தின்பெயர் | 206 |
| **தெ** | |
| தென்னமரத்தின்பே | 242 |
| **தே** | |
| தேகக்கல்லின்பே | 31 |
| தேனின்பே | 106 |
| தேவதாரத்தின்பே | 217 |
| தேத்தான்கொட்டையின்பெய | 235 |
| தேள்கொடுக்கின்பே | 263 |
| தேக்கின்பே | 268 |
| தேவதாளியின்பெய | 306 |
| தேவமகிமை | 153 |
| **தொ** | |
| தொப்பையின்பே | 182 |
| தொட்டிபாஷாணத்தின்பெய | 60 |
| தொட்டிபாஷாணத்தின்பே | 67 |
| தொட்டியின்தொகைப்பே | ,, |
| தொழுகண்ணியின்பே | 293 |
| **ந** | |
| நவாச்சாரத்தின்பெய | 5 |
| நத்தையின்பெய | 22 |
| நண்டின்பே | 22 |
| நவலோகசத்து | 125 |
| நவரத்தினசத்து | 126 |
| நன்னாரியின்பே | 146 |
| நரிப்பயரின்பே | 228 |
| நந்தியாவட்டத்தின்பே | 250 |
| நருமுருக்கையின்பே | 171 |
| நத்தைச்சூரியின்பே | 278 |
| நருங்குரிஞ்சியின்பே | 278 |
| நரிமுருக்கன்பே | 326 |
| நறுவிளியின்பே | 309 |
| நச்சுப்புல்லின்பே | 295 |
| நறுந்தாளியின்பே | 305 |
| **நா** | |
| நாகச்சத்துரு | 149 |
| நாகமித்துரு | ,, |
| நாகபலையின்பே | 308 |
| நாகதாளியின்பே | 306 |
| நாகசிங்கின்பே | 293 |
| நான்முகப்புல்லியின்பே | 295 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| நாகரவண்டின்பேர் | 22 |
| நாகப்பச்சையின்பேர் | 37 |
| நாகமணலின்பேர் | 41 |
| நாகமலையின்பேர் | 45 |
| நாகபாஷாணத்தின்பேர் | 75 |
| நாகத்தின்பேர் | 78 |
| நாரிசுக்கிலத்தின்பேர் | 105 |
| நாகக்கிண்ணி | 111 |
| நாறுகரந்தையின்பேர் | 146 |
| நாயுருவியின்பெய | 225 |
| நாரத்தையின்பெய | 254 |
| நாவலின்பெய | 256 |
| நாணலின்பெய | 275 |
| நாய்வேளையின்பெய | 327 |
| **நி** | |
| நிலவுகாய்ப்பேரின்பெய | 222 |
| நிலப்பனையின்பெய | 243 |
| நிலவாகையின்பெய | 287 |
| நிலக்கடம்பின்பெய | 300 |
| நிலவேம்பின்பெய | 215 |
| நிலக்குரோசினையின்பெய | 314 |
| **நீ** | |
| நீலத்தின்பெய | 29 |
| நீலபாஷாணத்தின்பே | 74 |
| நீர்த்திப்பிலியின்பே | 241 |
| நீர்கடம்பின்பே | 258 |
| நீரறளின்பே | 290 |
| நீலஞ்சோதியின்பே | 330 |
| நீர்விளாவின்பே | 320 |
| நீர்க்கடம்பின்பே | 308 |
| நீர்ப்பூலாவின்பே | 310 |
| நீர்முள்ளியின்பே | 329 |
| **நூ** | |
| நூல் | 1 |
| **நெ** | |
| நெபத்திலையின்பே | 327 |
| நெய்யின்பே | 106 |
| நெல்லின்பே | 194 |
| நெட்டிதளத்தின்பே | 227 |
| **நே** | |
| நேயமரத்தின்பே | 321 |
| நேர்வாளத்தின்பே | 218 |
| **நொ** | |
| நொச்சிலியின்பேர் | 241 |
| **ப** | |
| பச்சைக்கற்பூரத்தின் | 9 |
| படிகக்கல்லின்பே | 19 |
| பன்றிக்கொம்பின்பெய | 24 |
| பல்லின்பே | 25 |
| பவளத்தின்பே | 28 |
| பச்சையின்பேர் | 29 |
| பன்றிமுள்ளின்பேர் | 35 |
| பலண்டுபாஷாணத்தின்பேர் | 61 |
| பரங்கிவைப்புபாஷாணம் | 32 |
| பவழப் புற்றுப் பாஷாணத்தின் | 48 |
| பஞ்சபட்சிபாஷாணத்தின்பே | 71 |
| பரிபாஷைக் கருவுக்குத் திறவுகோல் | 130 |
| பஞ்சபூதவிபரம் | 131 |
| பஞ்சபூதவர்னம் | 131 |
| பஞ்சகர்த்தாளொடுங்கும்நிலைமை | ,, |
| கூறல் | 135 |
| பதினெட்டுப்புராணச்சரக்கு | 156 |
| பஞ்சபூதசெயநீர் | ,, |
| பற்பாடகத்தின்பேர் | 215 |
| பழுபாகலின்பேர் | 146 |
| பழமுண்ணிபாலையின்பேர் | 228 |
| பனைமரத்தின்பேர் | 243 |
| பவழம்அருகின்பேர் | 245 |
| பலாசின்பேர் | 255 |
| பம்பர்திராயின்பேர் | 304 |
| பலாவின்பேர் | 314 |
| பச்சைநாபியின்பேர் | 327 |
| பதுமசத்தின்பேர் | 267 |
| பலாவிளியின்பேர் | 269 |
| **பா** | |
| பாதிரியின்பேர் | 269 |
| பார்ப்பையின்பேர் | 272 |
| பாலிருளின்பேர் | 273 |
| பாலின்பேர் | 106 |
| பாஷாணப்பஞ்சபூதம் | 135 |
| பாக்கின்பேர் | 206 |
| பாலையின்பேர் | 207 |
| பாகலின்பேர் | 233 |
| பாஷாணம் 32-ன்பெய | 54 |
| பாஷாணச்சத்து | 132 |
| **பி** | |
| பிடாலவணத்தின்பே | 10 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| பித்தளைமலையின்பேர் | 47 |
| பித்தளையின்பே | 79 |
| பிரஸ்னிபரணியின்பே | 218 |
| பிரமியின்பே | 231 |
| பிரபுண்டரிகத்தின்பே | 267 |
| பிரண்டையின்பே | 288 |
| பிளிச்சிறுகீரையின்பே | 290 |
| பிர்மதண்டின்பே | 311 |
| **பீ** | |
| பீதரோகணியின்பெய | 324 |
| **பு** | |
| புட்பராகத்தின்பே | 28 |
| புத்தான்பவளத்தின்பே | 37 |
| புனல்முருங்கை காட்டுமுருங்கை கசப்புமுருங்கையின்பே | 159 |
| புளியின்பேர் | 190 |
| புளிநரளைக்கிழங்கின்பே | 323 |
| புனம்புளியின்பே | 303 |
| புளிவஞ்சியின்பே | 309 |
| புளியாரையின்பே | 246 |
| புளிமுந்திரிகையின்பே | 253 |
| புங்கின்பேர் | 271 |
| புல்லுருவியின்பே | 278 |
| புறங்கைநாரியின்பேர் | 300 |
| **பூ** | |
| பூநாகத்தின்பேர் | 25 |
| பூமியின்பேர் | 103 |
| பூநாகச்சத்து | 116 |
| பூநாகச்சத்து | 117 |
| பூனைக்காஞ்சொறியின்பே | 231 |
| பூனைக்காலின்பேர் | 232 |
| பூதணத்தின்பேர் | 276 |
| பூசபத்திரியின்பேர் | 183 |
| பூவரசின்பேர் | 257 |
| பூவமாமரத்தின்பேர் | 314 |
| **பெ** | |
| பெருவழுகலையின்பேர் | 219 |
| பெருங்குமுளின்பேர் | 217 |
| பெருங்காயத்தின்பேர் | 199 |
| பெருங்காஞ்சொறியின்பேர் | 213 |
| பெரியவேம்பின்பேர் | 214 |
| பெண்காமக்களையின்பேர் | 105 |
| பெருங்கம்பியின்பேர் | 305 |
| பெருங்குமிழின்பேர் | 239 |
| பெரியமுள்ளங்கியின்பேர் | 239 |
| பெருவிடுகொள்ளின்பேர் | 264 |
| பெருங்குரும்பையின்பேர் | 270 |
| பெருங்குரிஞ்சின்பேர் | 271 |
| பெருமுத்தக்காசின்பேர் | 280 |
| பெருமலர்க் கொன்றையின்பெயர் | 322 |
| **பே** | |
| பேரிஞ்சின்பேர் | 253 |
| பேயத்தியின்பேர் | 257 |
| பேராமல்லியின்பேர் | 266 |
| பேரிலாழயின்பேர் | 277 |
| பேராமுட்டியின்பேர் | 277 |
| பேரோசனையின்பேர் | 37 |
| பேய்ப்புல்லின்பேர் | 218 |
| பேய்க்கும்பட்டியின்பேர் | 313 |
| பேய்ப்பீர்க்கின்பேர் | 146 |
| பேராமுட்டியின்பேர் | 226 |
| பேய்ப்புடலின்பே | 216 |
| பேய்ச்சுரையின்பே | 306 |
| பேய்ப்பீர்க்கின்பே | 307 |
| பேய்த்தும்பையின்பே | 291 |
| பேய்க்கொள்ளின்பே | 292 |
| பேய்க்கடலையின்பே | ,, |
| பேய்த்துவரையின்பே | ,, |
| ~~பேய்த்துவரையின்பேர்~~ | ,, |
| பேய்க்கரும்பின்பேர் | 312 |
| பேய்த்முட்டியின்பேர் | 304 |
| பேய்க்குமட்டியின்பே | 323 |
| **பொ** | |
| பொன்னம்பரின்பேர் | 10 |
| பொன்னிமிளையின்பே | 16 |
| பொன்னின்பே | 76 |
| பொட்டிலுப்பின்பே | 8 |
| பொற்றலைக் கையாந் தகரையின்பேர் | 237 |
| பொரும்பிலியின்பேர் | 245 |
| பொன்னுங்கண்ணியின்பே | 261 |
| பொடுதலையின்பே | 311 |
| பொன் வண்ணச் சாலியின் பெயர் | 321 |
| பொன்மத்தையின்பே | 294 |
| **ம** | |
| யிமலிறகின்பேர் | 43 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| ஞேசிலையின்பேர் | 63 |
| லைகளில்பிறந்த பாஷாணம் முப்பத்திரண்டி னுடைய சமுதாய குணத்தின்பேர் | 97 |
| லையின்பேர் | 102 |
| ரமஞ்சளின்பேர் | 195 |
| ந்திஷ்டியின்பெய | 196 |
| ருளின்பேர் | 140 |
| மந்தாரையின்பெய | 233 |
| மணத்தக்காளியின்பேர் | 238 |
| மலையிலுப்பையின்பெய | 254 |
| மகாமேதையின்பெய | 268 |
| மருக்காரையின்பெய | 272 |
| மராமரத்தின்பேர் | 274 |
| மருவகத்தின்பெய | 282 |
| மருதாணியின்பெய | 287 |
| மயூரச்சிகையின்பெய | 288 |
| மலைமாவின்பெய | 289 |
| மயிரின்பெய | 21 |
| மஞ்சட்கல்லின்பெயர் | 31 |
| மரகதபச்சையின்பெயர் | 37 |
| மந்தாரச்சிலையின்பெயர் | 29 |
| மடாதிபதிகள் | 140 |
| மஞ்சளின்பெயர் | 195 |
| மல்லிகையின்பேர் | 249 |
| மகிழின்பெயர் | 250 |
| மலையாற்றின்பெயர் | 317 |
| மஞ்சிபத்திரியின்பெயர் | 327 |
| மறுதுடரின்பெயர் | 305 |
| **மா** | |
| மாட்டுக்கொம்பின்பெயர் | 24 |
| மாங்கினச்சிலையின்பெயர் | 40 |
| மார்துளிர்கல்லின்பெயர் | ,, |
| மாமரத்தின்பெயர் | 268 |
| மாவிலங்கத்தின்பெயர் | 268 |
| மாதளையின்பெயர் | 220 |
| மரக்கல்லின்பெய | 31 |
| மாங்கிஷபேதியின்பெயர் | 33 |
| மாஞ்சரோகணியின்பெயர் | 318 |
| மாகாளியின்பேர் | 323 |
| **மி** | |
| மிளிறையின்பெய | 279 |
| மிளகின்பெயர் | 137 |
| **மீ** | |
| மீனெலும்பின்பெயர் | 36 |
| மீனம்பரின்பெயர் | 11 |
| **மு** | |
| முலைப்பாலின்பெயர் | 104 |
| முல்லைபேதங்கள் | 250 |
| முட்டையின்பேர் | 23 |
| முத்துச்சிப்பியின்பெய | 27 |
| முத்தின்பெயர் | ,, |
| முன்னையின்பெய | 220 |
| முள்வெள்ளரியின்பெய | 222 |
| முதியார்கூந்தலின்பெயர் | 223 |
| முசுமுசுக்கையின்பெயர் | 123 |
| முருங்கையின்பெயர் | 239 |
| முடக்கொத்தானின்பெயர் | 243 |
| முல்லையின்பெயர் | 249 |
| முந்திரிகையின்பெயர் | 253 |
| முட்பலாசியின்பெயர் | 255 |
| முடவாட்டின்காலின்பெயர் | 293 |
| முண்டினிவிருட்சத்தின்பெயர் | 227 |
| முத்திருக்கஞ்செவியின்பெயர் | 299 |
| முளவாட்டுக்காலின்பெயர் | 35 |
| முட்பலாவின்பெயர் | 315 |
| முட்சங்கின்பெயர் | 36 |
| முரதபாஷாணத்தின்பெயர் | 59 |
| **மூ** | |
| மூக்கரட்டைப்பெயர் | 224 |
| மூலவர்க்கவேடம் | 144 |
| மூலிகைவகுப்புச்சீந்திற்பெய | 140 |
| மூக்குரட்டைப்பேர் | 149 |
| மூவிலைக்குருந்துப்பேர் | 298 |
| மூங்கிலரிசிப்பெய | 319 |
| மூங்கிற்குருத்துப்பேர் | 319 |
| **மெ** | |
| மெழுகுப்பெய | 203 |
| **ர** | |
| ரசிதமலைப்பெய | 44 |
| ரத்தபாஷாணப்பெயர் | 72 |
| ரசிதபாஷாணப்பெய | 73 |
| ரசேந்திரகுருவின்பெயர் | 82 |
| **ரா** | |
| ராசலவத்தக்கற்பெய | 20 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| **ரு** | |
| ருதந்திப்பெய | 325 |
| **ரோ** | |
| ரோமவிருட்சப்பெயர் | 296 |
| **ல** | |
| லவணபாடாணப்பெயர் | 75 |
| லவணகாரசாரசத்துரு | 225 |
| **லி** | |
| லிங்கபாடாணம்பெய | 62 |
| **லோ** | |
| லோசபதினென்றுக்கும் தொகுப்பின் பெய | 80 |
| லோகமணலின்பெயர் | 43 |
| லோத்திரப்பெயர் | 261 |
| **வ** | |
| வயிரத்தின்பெயர் | 29 |
| வன்மரையின்பெயர் | 316 |
| வளையலுப்புப்பெயர் | 31 |
| வயிடூரியப்பெயர் | 30 |
| வங்கமணலின்பெய | 42 |
| வங்கமலைப்பெயர் | 45 |
| வசம்புப்பெயர் | 192 |
| வட்டத்திருப்பிப்பெயர் | 217 |
| வல்லாரைப்பெயர் | 288 |
| வரட்சுண்டிப்பெய | 301 |
| வலம்புரிக்கொடிப்பெய | 272 |
| வஞ்சிப்பெயர் | 262 |
| வன்னிப்பெயர் | 257 |
| **வா** | |
| வாழைப்பெயர் | 242 |
| வாசைப்பேர் | 259 |
| வாணகெந்திசுரைகெந்திப்பெய | 70 |
| வாய்விளங்கப்பெய | 198 |
| வாலுழுவையரிசிப்பெயர் | 19 |
| **வி** | |
| விஷ்ணுகரந்தைப்பெய | 307 |
| விருத்தியின்பெய | 328 |
| விளாவின்பெய | 230 |
| விடப்பாலைப்பெய | 227 |
| வில்வப்பெய | 219 |
| விந்துநாதச்சரக்கு | 156 |
| விடத்தேர்ப்பெய | 276 |

| பெயர். | பக்க |
|---|---|
| **வீ** | |
| வீரப்பே | 4 |
| வீரத்தின்பெய | 7 |
| விழினியுடப்பே | 16 |
| வீரவைப்பு | 17 |
| **வே** | |
| வெங்கலமலைப்பெயர் | 4 |
| வெள்ளீயமணற்பே | 42 |
| வெள்ளிமணலின்பெய | 42 |
| வெள்ளைக்கழற்கோடியின் | 145 |
| வெள்ளைக்கிலுகிலுப்பையின்பெ | 223 |
| வெள்ளையாமணக்கின்பெய | 229 |
| வெள்ளைக்கரும்பின்பேர் | 231 |
| வெள்ளெருக்கின்பெய | 237 |
| வெள்ளுள்ளியின்பெய | 241 |
| வெள்வேலின்பெயர் | 316 |
| வேட்பூலாவின்பெயர் | 310 |
| வெள்ளைநீர்முள்ளியின்பெய | 329 |
| வெள்ளைச்சுக்கான்கல்லின்பெய | 38 |
| வெண்காரசாரத்தொகைபெய | 11 |
| வெண்காரத்தின்பெயர் | 6 |
| வெற்றிலையின்பெயர் | 285 |
| வெள்ளைநாகரத்தின்பெய | 281 |
| வெள்ளிலோத்திரத்தின்பெயர் | 261 |
| வெடியுப்புத்திராவகம் | 162 |
| வெடியுப்புவைப்பு | 185 |
| வெந்தயத்தின்பேர் | 191 |
| வெண்பாதிரியின்பே | 270 |
| வெள்ளைக்காக்கணவின்பே | 243 |
| வெள்ளறுகின்பே | 245 |
| வெள்ளித்தாமரையின்பெய | 248 |
| வெண்கடம்பின்பேர் | 258 |
| வெள்ளைப்பாஷாணத்தின்பே | 66 |
| வெள்ளைப்பாஷாணத்தின்பெய | 69 |
| வெள்ளியின்பே | 77 |
| வெள்ளீயத்தின்பெய | 78 |
| வெங்கலத்தின்பெய | 79 |
| வெடியுப்புச்செயநீரின்பெய | 107 |
| வெடியுப்புத்திராவகம் | 110 |
| வெடியுப்புச்சத்துரு | 145 |
| வெடியுப்புமித்துரு | 1 |
| வெள்வங்கம் | 1 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| வெள்ளிக்காகக்களங்கு | 151 |
| வெண்கடுகின்பெய | 195 |
| வெண்கருங்காலின்பெய | 214 |
| வெட்டிவேரின்பெய | 216 |
| **வே** | |
| வேளையின்பெய | 218 |
| வேங்கையின்பெய | 259 |
| வேம்பின்பெய | 214 |
| வேம்பாடலின்பெய | 317 |
| **வை** | |
| வைப்பரிதாரத்தின்பெய | 71 |
| வைக்கிராந்தத்தின்பெய | 59 |


## போகர் நிகண்டு-அட்டவணை.

முற்றுப்பெற்றது.



உ

கடவுள்துணை.

# போகர் நிகண்டு–௧௨௱.

என்னுமல் ௧௨௱ என்று சொல்வதற்கு

திருஷ்டாந்தம்

சதுர்காண்டம் நாலாயிரத்தில் மூன்றும்வகுப்பில்

நூற்பிரிவுத்தொகை கூறுகின்றார்.

---

பாரப்பா சதுர்காண்டம் நாலாயிரத்தில்
பரிவுடனே சித்தர்கள்தான் மறைத்தமார்க்கம்
ஆரப்பா வறிவார்க ளிந்தமார்க்கம்
அப்பனே நானுனக்குச் சொல்வேன்பாரு
சிரப்பா ஆயிரத் திருநூருகச்
சேர்ந்ததோர் கருக்கடைதா னைஞ்னூருகச்
தேரப்பா ஆயிரத் தெழுநூருகச்
செப்பினர் லோகத்து மாந்தராமே (1)

ஆமப்பா சட்டைமுனி யிந்தவாற்போ
லடக்கிவைத்தா ராயிரத் திருநூருகக்
காமப்பா கருக்கடைதா னைஞ்னூருகக்
கருதினர் சித்தர்க்கு மாந்தர்க்கென்றும்
போமப்பா விந்நூலின் மார்க்கமெல்லாம்
பொங்கமுட னெழுதிவைத்தார் முனிவர்தாமும்
தாமப்பா இந்நூல்போ லனந்தங்கோடி
சாற்றினர் சித்தர்களு முனிவர்தாமே. (2)

தன்வந்திரி வயித்தியகாவியம் ஆயிரத்தில்

மேற்கோள் கூறுகின்றது.

சொன்னர் பெரியோர் காவியத்தில்
சுருதி பெருநூல் கருக்கடையாம்
முன்னேர் பெரியோர் போகரிஷி
மொழிந்தா ராயிர மிருநூறும்
இந்நூற் சுருக்கம் கருக்கடையா
யிசைந்தா ரந்நூறெரு நூலாய்ப்
பன்னூலாயிரத்தெழு நூறுய்ப்
பரிவாயுரைத்தார் செந்திருவே. (3)

முற்றுப்பெற்றது.

S. 16
SSDL

உ

கடவுள் துணை.

# போகமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

# நிகண்டு-சூஉா.

காப்பு.

அகண்டபரி பூரணமா மையர் பாதம்போற்றி
அடுத்துநின்ற வுமையவடாய் பாதம்போற்றி
நிகண்டெனவே திருமூலர் நாயர் பாதம்போற்றி
நீங்காமல் காலாங்கியையர் பாதம்போற்றி
புகழ்ந்துநின்ற நாதாக்கள்ரிஷிகள் பாதம்போற்றி
புகழான வாக்குடையவரணி பாதம்போற்றி
மூவந்துநின்ற குஞ்சரத்தின் பதத்தைப்போற்றி
மூவுலகு மேச்சுதற்கு நிகண்டுகேளே. (1)

நூல்.

கேளப்பா வறுபத்துநாலு மரபுள்ளோர்
கேடியாகப் பாடியதோர் சாஸ்திரத்துக்கெல்லாம்
வாளப்பா மறைப்பான சூத்திரத்துக்கெல்லாம்
மாலையைப்போல் பெயர்மறப்பை வெளியாய்ச்சொ
சூளப்பா சவர்க்காரஞ் சுண்ணமாக [ன்னேன்
சூட்சமெல்லா நிகண்டுக்குள் சொல்லக்கேளே
பாரப்பா சவர்க்காரம் பாக்குப்போற்சீவி
பலமைந்து புத்தோட்டிற் பரப்பிடாயே. (2)

பரப்பிட்டு மல்லிகைப்பூச் சாறுவாங்கி
பாங்கமாய் நனைத்துவரச் சவர்க்காரத்தை
நிரப்பிட்டு ரவியில்வைத்துப் பாகஞ்செய்து
நேமமாய் நாளேழு ஆனபின்பு

உரைப்பிட்ட சீலைதனில் மல்லிகையினிலையை
வுயர்த்தியாய்ப் பரப்பியே சவர்க்காரம்வைத்து
மரப்பிட்டு மேலுமந்த விலைபரப்பி
வளமாக நெல்லின்மேல் தோளைபோல்வையே. (3)

வைத்துமே சீலைதன்னைத் தொங்கவிட்டு
வாகான சட்டிகொண்டு மேலேமூடி
ஐத்துமே நெல்லினும் ஆவிவெளிவந்தால்
அசையாம லெடுத்துமே புத்தோட்டிலிட்டு
நைத்துமே ரவிதனிலே காயப்போட்டு
நலங்காமல் முன்போலே சீவலாக்கி
நெய்த்துமே யிலைபரப்பி யதின்மேல்வைத்து
நேர்ப்பாக நெல்லுக்கு ளவித்துலர்த்தே. (4)

உலர்த்தியே மூன்றுதர மவித்தெடுத்து
உத்தமனே கற்சுண்ணஞ் சுட்டுக்கொண்டு
கலர்த்தியே கற்சுண்ணம் சீலைதனிற்பரப்பி
கசக்காமல் சவர்க்கார மதின்மேல்வைத்து
மலர்த்தியே கற்சுண்ணத் தாலேமூடி
மைந்தனே கிளிபோலே தளரக்கட்டி
குளர்த்தியே சட்டிக்குள் ளசையாமல்வைத்து
கோணுமல் சட்டியின்மே லோடுகொண்டுமூடே. (௫)

மூடியதோ ரோட்டுக்குத் தமர்நூறிட்டு
மூத்திரத்தில் மல்லிகையி னிலையைப்போட்டு
ஆடியதோ ரடுப்பில்வைத்துக் கோதிக்கிளம்பக்காய்ச்சி
யாராமற் றமரினுல்நீர் மட்டும்விட்டு
நாடியதோர் மேற்சட்டி மூடிப்போடு
நன்ருக ஆவியது அமர்ந்தபின்பு
தேடியதோர் சீலைதன்னை யசையாமலெடுத்துச்
சிறப்பாக மறுசீலைக் குள்ளேபோடே. (6)

சீலைக்குள் கிளிபோலத் தளரக்கட்டி
சிறப்பாகக் கற்சுண்ணம் புதிதாய்ச்சுட்டு
மாலைக்குள் சுண்ணத்தால் கிளிமேல்மூடி
மைந்தனே தமரிட்ட வோட்டைவைத்து

வேலைக்குள் முன்னீரைக் கோதிக்கவைத்து
விளங்கவே துவாரத்தால் விட்டுநீற்று
ஆலைக்குள் சாறுபோ லெண்ணெய்யெல்லாங்கக்கும்
அசையாதே பதினொரு தரமுநீற்றே. (7)

நீற்றியே சவர்க்கார மெடுத்துக்கொண்டு
நேரான மல்லிகையி னிலையும்வேரும்
மாற்றியே யசைத்துநின்றாய்க் குகைபோற்பண்ணி
வளமாகச் சவர்க்கார மதுக்குள்வைத்து,
போற்றியே மேல்மூடி சீலைசெய்து
புகழாகக் கிளிஞ்சிநீறுக் குள்ளேவைத்து
ஆற்றியே தீயெரிப்பாய் சாமமொன்று
ஆரவிட்டுச் சவர்க்காரம் வாங்கிக்கொள்ளே. (8)

வாங்கியே சவர்க்காரம் கலவத்திட்டு
வளமாகக் கடுங்காரத் திராவகத்தைக்குத்தி
ஓங்கியே யிருசாம நேரமாட்டி
யுர்ப்பனமாய்க் காசுபோல் வில்லைபண்ணி
தாங்கியே யண்டோடுக் குள்ளேவைத்து
சாதகமா யண்டோட்டி னூலேபண்ணி
தேங்கியே சுண்ணும்பு சீலைசெய்து
சிறப்பாகப் பத்தெருவிற் புடத்தைப்போடே. (9)

புடம்போட்டு யெடுத்தவுடன் வெள்ளையாகும்
பெரிதான கலவத்தி லிட்டுஆட்டி
கடம்போட்டுக் கடுங்கார செயநீர்க்குத்தி
காசுபோல் வில்லைதட்டிக் காயப்போட்டு
நடம்போட்டுக் கடுங்காரக் குகைக்குள்வைத்து
நலமாக மேல்மூடி சீலைசெய்து
விடம்போட்டு பத்தெருவிற் புடத்தைப்போடு
வெண்ணீறாய்ச் சுண்ணும்பா யாகும்பாரே. (10)

ஆகுமப்பா சவர்க்காரச் சுண்ணமாக
அரிதரிது இம்முறைபோ லார்க்குமில்லை
வேகுமப்பா சரக்கெல்லாங் கட்டிப்போடும்
விரைந்துநின்ற கல்லுப்பு மணிபோலாகும்

சாகுமப்பா நவச்சாரந் தந்தம்போலாம்
நலையான கர்ப்பூரஞ் சுண்ணமாகும்
நோகுமப்பா சடமெல்லாங் காயசித்தியாகும்
நோக்கான சவர்க்காரச் சுண்ணத்தாட்டே. (11)

சவர்க்காரப்பெயர்.

சவர்க்காரப் பெயர்தனையே சாற்றக்கேளு
சதாசிவமாம் வெண்கற்றை கஞ்சனித்தவண்ணன்
உவர்க்காரஞ் சிற்பரியா முப்பானவழலை
உயர்ந்தகுரு முறையாகு முமையாளீசன்
அவர்க்காரம் வாதத்தி லாதியானே
ஆதியாங் குடியானேன் கூர்மையாளன்
சுவர்க்காரஞ் சோமன்ரவி வன்னியானேன்
சுயம்பாகி தேரூர்ந்த சித்தியானே. (12)

சித்தியாஞ் சூலானேன் சுடலையாடி
சேகத்திலுள்ள பிறப்புக்குச் சிட்டியாளன்
முத்தியாம் வாதத்திற் றலைவனானேன்
முடியாத வாதவித்தை முடிக்கின்றேனும்
பத்தியாமந்தகனுங் காந்தண் மலரானேன்
பவளமென்றும் பேருடையான் பாதத்தோனும்
முத்தியா நமகத்துக்கு மாருமானேன்
மூதண்ட மாட்டிவித்த மூர்க்கனுமே. (13)

மூர்க்கனுந் தரணிக்குள் நாதனானேன்
முதிர்ந்ததொரு பூனீறு பூமிநாதம்
தீர்க்கன மொட்டச்சி யுயரமாம்வெள்ளை
சிறந்தபூச் சாரத்தி யாங்குசத்தி
ஆர்க்கனும் வேதசுத்தி யூமைசேவிடு
அழுக்ககற்றும் வண்ணாத்தி யாதிமுக்கறைச்சி
ஊர்க்கன முகாந்தவரைக் காயத்தை
யிருத்தியுற்ற பூவழலை யென்றுமுறைசெய்தபடியே.

படியான வழலைவிட்டால் வாதமில்லை
படிப்படியா யேறுகிற முறையுமில்லை
மிடியான காயசித்தி கெவுனசித்தியில்லை
பேய்க்கூத்தாய்ச் சுடலையலைந்து பிரேதமாவான்

அடியான மரத்தினின்று தோத்தியேற
ஆக்குறுணி மட்டுமே யேறலாகும்
முடியான வழலையுப்பை முன்னேசெய்தால்
மோசமில்லை முடிவுமட்டு மேறலாமே. (15)

நவாச்சாரத்தின்பெயர்.

ஆகுமே நவாச்சாரப் பெயரைக்கேளு
அடுக்காகு நவநீதிச் சாரமானேன்
வாகுமே சலக்கூர்மை வாரிதிக்குள்கப்பல்
வழங்கினே னென்பதுட வமுரியானேன்
வேதுமே யசுரன்றன் மேகநாதன்
மெய்ப்பான வாதத்துக் கோப்பாய்நின்றேன்
போதுமே வாதமென்ற வாரிதிக்கு ராசன்
பேரான செயநீராருக் கர்த்தனுமே. (16)

ஆமென்ற வாதத்திற் சிரோமணியாய் நின்றேன்
அசுரனுஞ் சலக்குருவுக்கதிநிதியேயானன்
வேமென்ற துரிசுக்குமேற் குருவேயானேன்
விடுபட்ட நவச்சாரிக்குஞ் சாரியானேன்
போமென்ற வாதத்தைச் சமைக்கின்றேனும்
பேரான கங்கையுட குணமுள்ளோனும்
நானென்ற சத்தியுடன் கூடிநின்றேன்
நவாச்சாரப் பெயரையெல்லாங் காட்டினேனே. (17)

எவாச்சாரப்பெயர்.

எவாச்சார நாமத்தை யியம்பக்கேளு
எகிற மாங்கணுப்பி யேவச்சியாகும்
நவச்சியாங் தாணச்சி பவசோதியாகும்
நலமான பறைக்குடிச்சி புகைசற்காதி
புவச்சியாங் காரணமாஞ் சத்தியாகும்
புதச்சீர வாரோப புலச்சியாகும்
கவர்ச்சியா மேவாச்சார நாமத்துக்குக்
கண்டபடி பெயர்சொன்னேன் கருதிப்பாரே. (18)

காசிச்சாரப்பெயர்.

காசியுட சாரப்பெயர் கருதக்கேளு
கடுங்குப்பி சாரந்தான் துர்ச்சியாகும்
வேசியுட வூசரத்தி னுப்பிற்றுனும்
வேடியுப்பு நவாச்சார மோக்கக்கூட்டி
ஓசியே குப்பியிலே சமைத்துவிட்டால்
உத்தமமாம் லவணமது அணங்கனுகும்
ஆசியுட பரங்கிக்குக் கூர்மையாகும்
ஆச்சரியங் காசியென்ற சாரப்போக்கே. (19)

ஏகம்பச்சாரப்பெயர்.

ஏகம்பச் சாரத்தி னுமங்கேளு
ஏமத்திற் பிறந்தவள்தா னேற்றமுள்ளகன்னி
ஆகம்ப லோகங்கள் பேதிக்குங்கன்னி
யழகான துரைப்பேண்டா னருணனுகும்
வாகம்பச் சூலியுர மாலினுடதங்கை
மகத்தான தாதுவுக்குச் சத்துருநாமத்தி
போகம்ப விந்திரியாம் பொன்பிறந்தகன்னி
புகழ்கின்ற யேகம்பச் சாரந்தானே. (20)

சீனக்கா ப்பெயர்.

சீனத்தின் பெயர்களையே செப்பக்கேளு
சிறந்தவெண் காரந்தான் படிகச்சீனி
வானத்தின் மீன்போல வெள்ளச்சியாகும்
மகத்தான பாணிச்சிக் குவிச்சியாகும்
பானத்தி னுப்புக்குச் சத்துருவுமாகும்
பாங்கான வெண்புளிக் குஞ்சுண்ணத்தி
கானத்தி கடுஞ்சீனப் பெயருதாகும்
கடுஞ்சுண்ண முறையெல்லா மிதனினுட்டே. (21)

வெண்காரப்பெயர்.

வெண்காரப் பெயர்தனையே விளம்பக்கேளு
மேதினியோர் தங்களுக்கு வுருக்கினமுமாகும்
சங்காரம் போலவே சத்தெல்லாமாகும்
சந்தான பொரிக்கரி குடோரியாகும்

அங்காரி மணிக்காரிடங் கணமுமாகு
மடங்காத தூமத்தை யடங்கப்பண்ணும்
பொங்காரி சரக்குக்கு மித்துருவேயான
பொரிக்காரி தனக்கிசைந்த பேருமாமே. (22)

சூடன்பெயர்.

சூடனுட பெயர்தனையே சொல்லக்கேளு
சுடர்கோடிதான் களிப்பண்ணைச் சூடனாகும்
மாடனுட விற்கோடிச்சி மாசற்றரூபி
மகத்தான தீக்கஞ்சி மாசற்றசோதி
வேடனெனவே வேடியுப்பு கருவாய்ப்பட்டை
விளங்கியதோர் பாண்டத்திற் சமைத்தகன்னி
ஆடெனவே ஆலத்தி கர்ப்பூரமென்று
மாரற்ற கேசரிதான் ரூபமென்றுசொல்லே. (23)

பச்சைக்கர்ப்பூரப்பெயர்.

பச்சைகற் பூரத்தின் பெயரைக்கேளு
பலகையாம் பூரமது சந்திரனுக்காகும்
உச்சைக்கண்ணீ ராக்கியுதை பாவிக்கஞ்சி
உண்மையாங் கதலியுப்பு மதிபூரமாமே
கோச்சைமதன் சரியாகுங் குருவுக்காகும்
கோடிதான முக்கண்ணி லொருகண்ணாகும்
கச்சையாம் படிசோமன் சீதளமானேன்
கர்ப்பூர மென்றபேர் கருவாய்ப்பாரே. (24)

அமுரியுப்புப்பெயர்.

அமுரியுப்பு பெயரதனையே யறையக்கேளு
ஆதார மூலத்தின் சாரமாகும்
அமுரியுப்பு வழங்கும்வன லமுரியேன்பார்
மூலவன்னித் தீச்சலமுந் தீர்ந்தசடவுப்பு
உமரியுப்பு சலக்கூர்னம் வஸ்துவுப்பு
உத்தமமாங் காயசித்தி யாகுமுப்பு
நமரியுப்பு சங்காரிக் காலத்துப்பு
லவணமாங் கடுங்காரக் கூர்மனமே. (25)

கல்லுப்புப்பெயர்.

கல்லுப்பு பெயர்தனையே கருதக்கேளு
கடற்குருவி பாறையுப்பு வன்னக்கூர்மை
அல்லுப்பு வட்சயமோ மயிரோத்தமாகும்
அறுசுவைக்கு மாதார மானவுப்பு
வெல்லுப்பு வேலைநீர் முனிமூத்திரமென்பார்
வேண்டுவரச் சலமரமாறி மிருத்தியகெந்தம்
நல்லுப்பு வாதத்தைச் சமைக்குகின்ற
நலமான தற்கால லவணமாமே. (26)

பொட்டிலுப்பின்பெயர்.

பொட்டிலுப்புன் பெயர்தனையே பொருந்தக்கேளு
பேரான படைராச னிணங்கனுகும்
கட்டளையின் பூநாகப் பூமிகூர்மை
கருதியதோர் மிடாலவணங் கருவாமுப்பு
அட்டனைய னுர்சாத்திரா லவணமென்றும்
அக்கினித் தீயாகினே ராண்மையுள்ளோன்
நட்டளையின் புஜங்கத்தின் சத்துருவாகும்
நவச்சார மித்துருவேன் றறிந்திடீரே. (27)

இந்துப்பின்பெயர்.

இந்துப்பின் பெயர்தனையே யியம்பக்கேளு
எழிலான சிந்தூரஞ் சயிந்தமாகும்
சந்திரனு முப்பதுதான் தனித்தமதிகூர்மை
தயங்காத வேலைதனிற் றளர்ந்தபனிக்கூர்மை
மந்திரம்போல் வளர்ந்தமதி யுப்புசில்லால்
மதியென்ற வமுதத்தின் மித்துருவாகும்
அந்திரம்போல் பாண்டத்திற் சமைந்தவுப்பு
ஆச்சரிய மிந்துப்பின் பெயருமாமே. (28)

வளையலுப்புப்பெயர்.

வளையலுப்பு பெயர்தனையே வகுக்கக்கேளு
மண்கூர்மை கடுங்குப்பி லவணமாகும்
களையலுப்பு நாகசங்கஞ்சி யிருசங்கங்
காச்சுமண்ணி கஞ்சுகமா மருவயிரமுப்பு

உளையலுப்பு தேல்லுப்பு உருப்பட்டபலவகை
யுப்பரிய கண்டகியாஞ் சிறந்தகடுவுப்பு
நிளையலுப்பு வைப்பான வளையலுப்புவென்றும்
கெருப்புக்குள் ளிருக்கின்ற வுப்பென்றுஞ்சொல்லே. ()

சவுட்டுப்புப்பெயர்.

சவுட்டுப்பின் பெயர்தனையே சாற்றக்கேளு
தற்பரஞ்சு லவணமது தார்முகமாமுப்பு
அவுட்டுப்புச் சவுட்டுப்பு மண்ணின்கூர்மையாகும்
அக்கினியின் கூர்மையாமு சரத்தின்சாரம்
தவுட்டுப்புக் கூர்மையா மத்தமாஞ்சார்
தனித்தநல்ல வுப்புப்பாகுங் காச்சுநீருப்பு
சவுட்டுப்புச் சரக்குக் காலனுதும்
காரியமாஞ் சவுட்டுப்பி னுமமாமே. (30)

திலாலவணப்பெயர்.

திலாலவணப் பெயர்தனையே செப்பக்கேளு
சிவந்தநிற மாயிருக்குங்கண்டு வுஷ்ணமாகும்
புலால்போலே நாறுமது போக்கானலவணம்
பொருந்தியதீக் கூர்மையாங் திலாச்சாரமாகும்
கலால்போலக் காடுப்பு கடுங்கூர்மையுப்பு
கசக்குகின்ற வுப்பதுதான் கரிப்புமாகும்
மலாசலம்போல் மத்திமமா மறுக்குகின்றவுப்பு
வைப்பான திலாலவணப் பேருமாமே. (31)

கெந்திலவணப்பெயர்.

கெந்தியுட லவணத்தின் பெயரைக்கேளு
கெடியான நாற்றமது அழுகல்நாறும்
வந்தியாங் கெந்தகமு முப்புங்கூட்டி
வைக்கின்ற வுப்பதுதான் கூர்மைநாரி
உந்தியாஞ் சிற்பரியி னுப்புமாகு
மெழுக்கான வுப்பதுதா னுயர்த்திமெத்த
புந்தியா மீறியதோர் வைப்பினுலே
போக்கான கல்லுப்பிற் சமைந்ததாமே. (32)

பிடாலவணப்பேயர்.

பிடாலவணப் பெயர்தனையே புகலக்கேளு
பேரான வெடியுப்பு நல்லுப்புங்கூட்டி
திடாலமென்ற சீனமுமே யோக்கச்சேர்த்து
சிறப்பாகப் பாண்டத்திற் சமைந்தவுப்பு
கடாலவணஞ் சாரணைக்கு மாதியாகும்
கடிதான சந்தான கூர்மையாகும்
விடாலவண மந்தார காந்தியாகும்
விசுவாச வணங்காத லவணமாமே. (33)

சிந்துலவணப்பேயர்.

சிந்துவென்ற லவணப்பெயர் செப்பக்கேளு
சிறந்தகடுங் கூர்மைதான் சிறப்பாமுப்பு
பந்துவென்ற தற்பாரை லவணமாகும்
பாங்கான கடுஞ்சிந்து சாரமாகும்
கந்துவென்ற மலைதனிலே பாரைக்குள்ளே
கடிதான பனியாலே விளைந்தவுப்பு
தந்துவென்ற தாபரத்தி னுப்புமாகும்
தனிச்சிந்து லவணமென்று சாற்றலாமே. (34)

காச்சுலவணப்பேயர்.

காச்சென்ற லவணப்பெயர் கருதக்கேளு
காரமுமே கச்சாரங் கருவென்றசாரம்
திச்சென்ற சாரமாஞ் சிறப்பாஞ்சாரம்
சிறப்பான மேகத்தின் தோயமாகும்
ஆச்சென்ற சாரமாம் வப்பித்தாட்சி
அசங்காத சமமூல அனித்தியவுப்பு
மூச்சென்ற நாச்சியென்ற லவணத்திற்கு
முயற்சியாயெடுத்துரைத்த நாமந்தானே. (35)

பேொன்னம்பர்பேயர்.

பொன்னம்பர் பெயர்தனையே புகலக்கேலு
போர்பெரிய பட்சியுட வெச்சிலாகும்
பன்னம்பர் பறவையுட வெச்சிலாகும்
பாங்கான மச்சத்திற் சேனித்தமலக்கல்

தன்னம்பர் தச்சத்தின் நாசனுதும்
சார்பான சூதத்தைத் தாக்குஞ்சூரன்
கன்னம்பர் கச்சாயத்தின் வாசனுதும்
கடுதும் பொன்னம்பருட நாமமாமே. (36)

மீனம்பர்பெயர்.

மீனம்பர் நாமத்தை விளம்பக்கேளு
மீன்மலத்தில் விளங்குகின்ற வயிரந்தானும்
கானம்பர் கானமலை பட்சிதானும்
கபனித்த மச்சைதான் கறுப்புமாகும்
வானம்பர் செம்மீனின் வயிரமாகும்
மகத்தான வூன்மலமாம் வாசமாகும்
தேனம்பர் மீனம்பர் நாமமாகும்
சிறப்பாகப் பெயர்தனையே செப்பினேனே. (37)

கடல்நுரைப்பெயர் அக்கினிகை.

கடல்நுரையின் பெயர்தனையே கருதக்கேளு
கடலுக்கு ளக்கினியாஞ் சாலமாகும்
மிடலான சமுத்திரத்தின் கோசமாகு
மிசையான வாரிதியி னஞ்சுமாகும்
படலான சலக்கனலா மக்கியதீக்கட்டி
பாங்கான மீனஞ்சு வன்னியாகும்
மிடலான மலசரக்கா மென்றும்பேர்தான்
மேதினிக்குள் கடல்நுரையா மென்றுபேரே (38)

வெண்காரசாரத்தொகை-கூ

பேரான லவணமொடு காரசாரம்
பிரிவாக வையஞ்சு தொகுப்பைக்கேளு
தாரான வழலையொடு பூனீறுசாரம்
சத்தியென்ற சாரமொடு வாச்சாரமாகும்
காரான காசியென்ற சாரத்தோடு
கனகமா மேகம்பர் சாரமாகும்
சீரான சீனமொடு வெண்காரஞ்சூடன்
திருவான பச்சையென்ற கற்பூரமாமே. (39)

ஆமேன்ற முரியுப்பு கல்லுப்புயிணங்கன்
அசையாத யிந்துப்பு வளையலுப்புசவுடு
தேமேன்ற திலாவணங் கேந்தியேன்ற லவணம்
சிறப்பான பிடாலவணஞ் சிந்துவேன்றலவணம்
காமேன்ற காச்சுவேன்ற லவணத்தோடுங்
காரமாம் போன்னம்பர் மீனம்பராகும்
வாமேன்ற கடல்நுரையோ டிருபத்தைந்து
மகத்தான வேதையிதில் மருவிப்பாரே. (40)

பாரப்பா லவணமுதற் காரசாரம்
பரிவாக விருபத்து ஐந்துதன்னை
சீரப்பா வகைக்குவோரு பலம்நிறுத்துச்
சிறப்பாகக் கல்வத்திற் போடியாய்ப்பண்ணி
வாரப்பா யேலுமிச்சம் பழச்சாற்படிதான்
மல்லிகைப்பூச் சாறுமோரு படிதான்வாங்கு
சாரப்பா சிவப்பான காய்சரக்குயிலையைக்
கசக்கியே சாறுமோரு படிதான்வாரே. (41)

படியான மேனிச்சா றுக்கவிட்டுப்
பண்பான புங்கம்பாற் படியும்வாரு
கேடியான பாண்டத்தி லோன்றுய்ச்சேர்த்துக்
கிண்டியே போடியேல்லா மோக்கப்போட்டு
நேடியான மூன்றுநாள் கலக்கிவைத்து
நேர்ப்பான வடுப்பேற்றி யடிபற்றுமல்
துடியானகரண்டியினுற் கிண்டிக்கிண்டி
துப்பரவாய் மேழுகான பதத்தில்வாங்கே. (42)

வாங்கியே யரைத்துநன்றுய் வில்லைகட்டி
வளமாக ரவியிலிட்டு காயப்போட்டு
ஓங்கியே கலசத்தில் வைத்துமூடி
உறுதியாய்ப் புடம்போடச் சுண்ணமாகும்
நீங்கியே கடுங்காரச் சேயநீர்குத்தி
நினைவாக வரைத்துநன்றுய் வில்லைக்கட்டி
தேங்கியே கடுங்காரக் குகையில்நீவைத்து
சிறப்பாகப் புடம்போடச் சுண்ணமாமே. (43)

ஆமிந்த சுண்ணத்துக் கிடைதான்சாரம்
அரைத்துமே மூன்றுநாள் ரவியிலிட்டு
மேமிந்த அண்டோட்டில் வைத்துமூடி
மேதுவாகப் புடம்போட்டப் படுபோலாகும்
ஓமிந்த பீங்கானிற் பொடியாய்ப்பண்ணி
யுத்தமனே பனியில்வைக்கச் செயநீராகும்
நாமிந்த செயநீரில் வீரம்பூரம்
நலமாகப் பொடித்திட்டு வைத்துக்கோள்ளே. (44)

கோள்ளென்ற செயநீரில் பாஷாணங்கள்
குறிப்பாக வாட்டையிலே கட்டிப்போகும்
துள்ளென்ற சூதமது கட்டிப்போகும்
துடியாக மூவங்கஞ் சேர்ந்துபோகும்
கள்ளென்ற வுபரசங்கள் மேதிச்சாகும்
காரசாரங்களெல்லா மணிபோலாகும்
விள்ளென்ற வுப்பெல்லாங் கரியிலாடும்
விரைத்துபோஞ் சரக்கேல்லா மணிபோலாமே. (45)

உப்பெல்லாங்கட்ட.

ஆமென்ற வுப்பையெல்லாங் கட்டக்கேளு
அப்பனே பாரையுப்பு பலந்தான்பத்து
காமிந்தப் பாக்கும்போ லுடைத்துக்கோண்டு
கலங்காத செயநீரிற் றோய்த்துப்போடு
ஏமிந்த வேழுநாள் கவியிற்போடு
ஏற்றமாப் பழம்புளியுங் கடல்நுரையுங்கூட்ட
நாமென்ற மேனியிலே மூன்றுங்கேளு
நலமாகச் சமபாக நிறுத்துக்கோள்ளே. (46)

நிறுத்தந்த மூன்றையுந்தா னறைத்துக்கோண்டு
நேராக ரண்டடையாய்த் தட்டிக்கோண்டு
மறுத்தந்த பாறையுப்பை யடைக்குள்வைத்து
மறுவடையால் மூடியதைச் சீலசெய்து

உறுத்தந்த பத்தெருவிற் புடத்தைப்போடு
உற்பனமா யாறினபின் னெடுத்துவாங்கி
அறுத்தந்த முன்போல வைந்துதரம்போட்டு
ஆறவிட்டுப் பார்த்தாக்கால் முத்துபோலாமே. (47)

உப்புபஞ்சனி.

ஆமிந்த மணியெடுத்துக் கரிவில்வைத்துருக்க
ஆஆ பொன்போலே கண்விட்டாடும்
தாமிந்த வெளுப்புக்கு சங்கமோவ்வா
தவளமாம் படிகம்போ னிறமுமாகும்
ஓமிந்த வுப்புகின் றுருகும்போது
உற்பனமாய் தாரத்தை யெடைகக்டைதானீய
வாமிந்த மஞ்சணிற மணியுமாகு
மகத்தான லிங்கத்தை யீந்திடாயே. (48)

ஈயவே சிவப்பான மணியுமாகும்
எத்தமாங் கல்லுப்பை யுருக்கிக்கொண்டு
காயவே கனன்முகிலை யடைக்கெடைதானீந்தால்
கறுப்பென்ற நிறமாகுங் கல்லுப்பையுருக்கி
மாயவே சாரத்தை இந்துப்புச்சேர்த்து
மகத்தான மணிபோல வுருக்குதற்கு
தோயவே துரிசியைத்தா னீந்தாயானுல்
சுத்தமாய்ப் பச்சையென்ற நிறமதாமே. (49)

நிறமான வீரத்தை யெடைக்கெடைதானீய
நேர்மையாய் வெளுப்பான மணியுமாகும்
அறமான பஞ்சவுப்பை தாவடமாய்க்கோர்த்து
அஞ்செழுத்து மெட்டெழுத்துஞ் செபித்தாயாகில்
திறமான சிவன்வந்து நிர்த்தஞ்செய்வார்
தேவிவந்து முன்னின்று செப்புவாள்பார்
குறமான வாதத்தின் சுருக்கமெல்லாங்
குறிப்பாகச் சொல்லிவைப்பாள் கூர்ந்துபாரே. (50)

பாரப்பா மஞ்சள்மணி யாயிரத்துக்கோடும்
பரிவான சிவப்பென்றல் தனிலிரட்டி
காரப்பா கருப்பென்றல் தனிலிரட்டி
கனமான பச்சையென்று லதற்குரேட்டி
வேரப்பா வெளுப்பென்றற் பத்துக்கோடு
மிளாதே பணவேடைதான் தேனிலுண்ண
ஆரப்பா அந்தந்த வன்னமாகு
மாச்சரியம் பஞ்சவன்ன வுப்புத்தானே. (51)

உபரசங்களின்பெயர்.

தானென்ற வுபரசங்க ணூற் றிரண்டுபத்து
சாங்கமாய் வெகுநூலை யாராய்ந்துபார்த்து
வானென்ற சரக்கையெல்லா மட்டவணைகொண்டு
மறைப்பையெல்லா நிகண்டுக்குள் வெளியாய்ச்சொல்
கானென்ற விருள்போல சாஸ்திரங்களெல்லாம் [வேன்
கரைகாணப் போகாமற் பாடிப்போட்டார்
தேனென்ற நிகண்டுக்குள் வெளியாய்ச்சொன்னேன்
சித்தர்சொன்ன நூலெல்லாங் காடுதானே. (52)

துரிசின்பெயர்.

துரிசியுடன்பெயர்தனையே சொல்லக்கேளு
சுடலையோ நிறமுற்ற நிஷ்களங்தான்
அரிசிப்பேர் கங்கான ஞடுங்கூத்த
னச்சமில்லா நற்பச்சையா திகுருநாதன்
மருகிப்போ மாற்றுமல் மச்சினன்றன்
மந்தார கெங்கையோன் அரசுபாணி
கருகிப்பேர் கருமேகன் பல்லுக்கேதான்
கடுங்கூத்தன் காசாம்பு வர்ணத்தோனே. (53)

கூத்தனுங் குலையோனுங் குன்றைத்தானுங்
குனித்துவில் லாக்கினேன் கொடியகண்டா
மூத்தனுஞ் சரக்குக்குக் குருவுமானேன்
மூதண்ட சூதத்தை முடிக்கின்றேனும்

காத்தனுங் கண்ணுக்கு ராசாவானேன்
கல்லுப்பு பாற்சாரு தயிருங்கூட்டி
ஆத்தனுஞ் செம்புக்கு ளமர்ந்தசத்தி
யாதியாங் குருவென்ற வரசன்றனே. (54)

பொன்னிமிளை.

பொன்னிமிளைப் பெயர்தனையே புகலக்கேளு
பொன்விளைந்த கெற்பத்தி லுற்பத்தியானேன்
கன்னியாஞ் சத்தியுட தன்னுதந்தான்
கடுவேகங் கன்னியுட மாதநீராம்
அன்னியதோர் மாட்சிகம் பொன்னிறமுதிர்ந்தோன்
ஆயியுட வாதமகா நாதமாகும்
நன்னியதோர் வெகுகாமி பொன்னிற்சத்தி
நாகமெல்லா நிமிளைக்கு நாட்டினேமே. (55)

நாலான நிமிளையுட பேரைக்கேளு
நல்கியதோர் முதற்றரந்தான் ரசிதநிமிளை
மேலாகக் கஞ்சமென்ற நிமிளையோடு
விளங்கியதோர் லோகமென்ற நிமிளைதானும்
மாலான காகமென்ற நிமிளையோடு
மருவியதோர் சத்தியென்றுஞ் சடச்சியென்றும்
சூலான சிற்பரியாம் வெள்ளைச்சிக்குப்பி
சூட்சமாம் நாதாந்தி துரத்தியென்றும்பேரே. (56)

பேரான செயகெந்தி தங்கநீற்றி
பெருமையாஞ் சத்துக்குப் பேராய்நின்றேன்
துரான சுண்ணத்தோன் சுக்கிரனுதும்
துலங்கியதோர் சனிபகைவன் றூய்மையாளன்
வாரான லோகத்தைத் தகர்த்துச்சாடும்
மாருதியாஞ் சூதத்தின் வேதையானேன்
காரான நிமிளையுட குணங்களெல்லாங்
கண்டறிந்த படிசொன்னேன் கருத்தாய்ப்பாரே. (57)

### அப்பிரேகப்பெயர்.

அப்பிரேகப் பெயர்தனையே யறையக்கேளு
ஆதியா மேகவன்னஞ் சிவப்புவன்னம்
ஒப்பியதோர் கருப்பு வன்னஞ் சுவேதவன்னம்
உக்கிரமாம் பூவிந்து நாதமாகும்
அப்பியதோர் கெந்தகந்தான் மனோன்மணியினதம்
அரிய அம்பரமாம் பிரகாசசத்தி
தப்பியதோர் கேசரமாம் பரையினதம்
தனித்துநின்ற பேரெல்லாமப் பிரேகமாமே. (58)

### காந்தத்தின்பெயர்.

காந்தத்தின் பெயர்தனையே கருதக்கேளு
காயசித்திக் கடியான பாத்திரவானும்
பாந்தமாஞ் சிவலோக சேவகன்றான்
பாரமா மயத்திலிட மீயமானேன்
காந்தமாஞ் சிவலோக சீவனகுங்
தரணிக்கு நாதமாம் சூதஅங்குசமாகும்
நாதந்தமாம் நவலோகத் துரட்டியாகும்
நால்வகையாங் காந்தமது நாட்டிப்பாரே. (59)

நாட்டிப்பா ரரகான காந்தமொன்று
நலமாக வூசியெட்டிப் பிடிக்குங்காந்தம்
முட்டிப்பா ருருளையாங் காந்தமொன்று
மூனையான கற்காந்தத் தோடுநாலு
பூட்டிப்பார் சத்தெடுத்துச் சூதத்துக்குப்
பேரண்ட லோகத்தி லிடிவிலக்கி
மூட்டிப்பார் காயத்துக் குயிருமானேன்
மூதண்ட மாட்டிவித்த காந்தமாமே. (60)

### கர்ப்பூரசலாசத்தின்பெயர்.

கற்பூரச் சிலையிடை பெயரைக்கேளு
கடிதான காயசித்திக் கடுத்த சுண்ணம்
சிற்பூர சலத்துக்குள் பிரிதீவியாகும்
சேர்ந்தசிலா சத்தாகுங் கறகுருவுமாகும்

அற்பிர மாவினுட விந்துவாகும்
அழகாகுங் குலத்துக்குச் சிலாமணியானேன்
உற்பூரக் காந்தியோன் சுண்ணத்தோனு
னுபரசத்தி வாதியாஞ் சுண்ணமாமே. (61)

கல்நாரின்பெயர்.

கல்நாரின் பெயர்தனையே கருதக்கேளு
கல்லுக்குட் சவளையாங் கடியசிலைநாரு
அல்நாரு வில்லுக்குள் சிலாவிந்துவாகு
மாற்றிகம்பூங் கல்லின் காரமாகும்
செல்நாரு சிலையின் கல்லுமாகும்
சிறுநாரு கல்லதுதான் சிவப்புமாகும்
முல்நாரு சத்துமாம் சுண்ணமாகு
முக்கிரமாங் சல்நாரின் பெயருந்தானே. (62)

சாத்திரப்பேதியின்பெயர்.

சாத்திரபேதி யின்பேரை சாற்றக்கேளு
சலத்தோடுங் கல்லுயிர்தான் சாத்திரபேதி
ஆத்திரத்தி னுகமலை நாதமாகு
மகன்றகனல் பேதியாமலைக் கருவுமாகும்
போத்திரத்தின் செஞ்சிலையாஞ் சிலைக்கெந்தியாகும்
பொதிகையின் றென்மலையாம் பொருப்புவிந்து
கோத்திரத்தி னசிமையா மிமையவெற்பு
குறிப்பான சாத்திரத்தின் பேதிப்பேரே. (63)

கல்மதத்தின்பெயர்.

கல்மதத்தின் பெயர்தனையே கருதக்கேளு
கலத்திட்டுக் கல்மலையி னுதமாகும்
வல்மதமா மலைத்துடைக்கு மலையின்மதமாகும்
மலைத்தூமை மலைரேத்த மலையினஞ்சு
சில்மதமாஞ் சிலையோமுக்குச் சிலைக்குள்திட்டாஞ்
சென்னீராஞ் சிலையினுட சுரோணிதமாகும்
அல்மதமாங் கல்லுக்குள் சோரமாகு
மடங்காத கற்காமி கல்மதத்தின்பேரே. (64)

அஞ்சனக்கல்லின்பெயர்.

அஞ்சனக்கல் பெயர்தனையே யறையக்கேளு
அழகான கண்ணுக்கு ளஞ்சனமுமாகும்
நெஞ்சினத்தில் நிலச்சிலை சூதமாகும்
நேர்கல்லி னீயமாம் லோகரஞ்சனமாகும்
அஞ்சனத்தின் சிலாஞ்சனமாங் கோடியவெற்பின்
அழகான அஞ்சனமாங் குவட்டினீயம்
பஞ்சனத்தின் செவ்வீராஞ் சனமுமாகும்
பாங்கான கிஷ்ணவர்ண அஞ்சனமுமாமே. (65)

கருங்கல்லின்பெயர்.

கருங்கல்லின் பெயர்தனையே கருதக்கேளு
காரணமாம் விக்கிர மானக்கல்லு
உருங்கல்லு உருப்பட்ட சிலையுமாகு
முயர்தியென்ற யிந்திரமா நீலமாகும்
அருங்கல்லு மேகத்தி லுற்பவிக்குங்கல்லு
அந்திரமே கத்திலருட் சிலையுமாகும்
மருங்கல்லு மத்திரமாங் கூடக்கல்லு
மாசித் தியானகல்லு மருவுகருங்கல்லே. (66)

படிகக்கல்லின்பெயர்.

படிகக்கல் பெயர்தனையே பகரக்கேளு
படிகமா நிறமாகுஞ் செம்படிகமாகும்
நெடிக்கமாம் நீலமாம் சேலோத்தவெண்கல்லு
நிறைந்தகா மீசுரமா மோளியுமாகும்
மடிக்கமல மாலைக்கல் வழங்குமதிகாந்தி
மாசற்ற நாதாந்தம் வளர்ந்தகல்லு
வடிவக்கல் சத்தியுடன் கூறுனகல்லு
வலையமென்ற கல்லாகும் பாலைசிலைக்கல்லே. (67)

சுக்கான்கல்லின்பெயர்.

சுக்கான்கற் பெயர்தனையே சொல்லக்கேளு
சொரிக்கல்லு வூர்க்கல்லு சுருமாக்கல்லு
மக்கான கல்மரிக்கல் தழற்கல்லுமாகும்
மருவியதோர் சுண்ணக்கல் வங்கக்கல்லு

புக்கான கல்பொரிக்கல் பூச்சரக்கல்
பூமிக்குள் வளர்ந்தகல் பாராங்கல்லு
அக்கான கல்நேரிக்கல் லமுக்கிறவுங்கல்லு
அடங்காத வெறிக்கல்லு சுக்கான்கல்லே. (68)

ஈரக்கல்லின்பெயர்.

ஈரக்கல் பெயர்தனையே யியம்பக்கேளு
ஏற்றமா மந்தாரக் கல்லுமாகும்
மாரக்கல் மாங்கிஷத்தின் சிலையுமாகு
மருவியதோர் வீத்தாரக் கல்லுமாகும்
கோரக்கல் கோழிக்கல் குருஞ்சிலைக்கல்
கோந்தார ரேத்தக்கல் கோமுட்புக்கல்லு
சீரக்கல் சிவப்பான கல்லுமாகும்
சித்தக்கல் வீரக்கல் காமமாமே. (69)

ராசவத்தக்கல்லின்பெயர்.

வத்தக்கல் பெயர்தனையே வழுத்தக்கேளு
மண்ணில்வைத்த மலைமேகச் சொர்னக்கல்லு
சித்தன்செய் வாதத்தின் செம்மையான
சிறப்பான வத்தக்கல் திறமைக்கல்லு
முத்தன்தான் வாதத்தின் புரட்டுக்கல்லு
மூர்க்கமாம் ராசாவின் வத்தக்கல்லு
நித்தன்தான் நீலக்கல் நிலுமைக்கல்லு
நிலையான வத்தத்தின் பெயருமாகும். (70)

கெருடபட்சிக்கல்லின்பெயர்.

கெருடபட்சிக் கல்லினுடை கீர்த்திகேளு
கேடியான விஷத்துக்கு அரசனாகும்
வருடபட்சி வயின்தேயக் கல்லுமாகு
மகத்தான விஷராசன் பட்சிநாதன்
பருடபட்சி பால்போல சிரசோனாகும்
பட்டத்துக் காருடன்கார்க் கோடனாகும்
கருடபட்சி கல்லுளனுங் கல்லுமாகும்
காரியமாங் கெருடபட்சி நாமமாமே. (71)

ஓட்டின்பெயர்.

ஒட்டினுடைப் பெயர்தனக்கு வுறுதிகேளு
உத்தமமாம் பண்டத்தி குசக்கலத்தி
சீட்டினுட சில்லுத்தான் சேத்தியாகும்
தேசாந்திரி செய்வித்த மண்ணினேடு
பூட்டின்பேர் மண்கலமா மழகாம் பாண்டம்
புதுகலசச் சக்கரமாம் புகையுஞ்சூளை
நாட்டகத்தி லிரந்துண்ணுஞ் சூட்டுக்குத்தான்
நலமாகச் சாற்றியதோர் நாமமாமே. (72)

செங்கல்லின்பெயர்.

செங்கல்லுப் பெயர்தனையே செப்பக்கேளு
செஞ்சிலைக்கல் மண்கல் சிறந்தகல்லு
மங்கல்லு சேம்பலகை யுருக்குக்கல்லு
மகத்தான காளைவாய்க் கல்லுமாகும்
பங்கரக்கல் சூலைக்கல் கோபுரக்கல்
பாரமாம் வீட்டுக்கல் பருமணக்கல்லு
அங்கல்லு செங்கல்லு சிலையாங்கல்லு
அழகான செங்கல்லு நாமமாமே. (73)

எலும்பின்பெயர்.

எலும்பினுட பெயர்தனையே யியம்பக்கேளு
யேற்றமாஞ் சல்லியறுதா னஸ்த்தியங்கம்
மலும்பான மன்னுயிரின் குரங்குதானும்
வச்சிரமாந் தண்டாகும் வரிச்சங்காகும்
பலும்பான விலாக்கோடிதா னுயிரின் சந்து
பல்விலாத் தோணமாம் பல்லியமுமாகும்
கலும்பான வேலும்பாகும் பேருதன்னைக்
கண்டுரைத்த படிதானுங் கருதிப்பாரே. (74)

மயிரின்பெயர்.

மயிரினுட பெயர்தனையே வகுக்கக்கேளு
மகத்தான கேசரமாம் ரோமமாகும்
பயிரான குழைகூந்தல் கதுப்போடளகம்
பாங்கான கோத்தள மஸ்திவேரு

உயிரான மசகந்தான் சிகையுமாகு
முற்றதே சரசாபங்குஞ் சரியாகும்
நயிரான கேத்தையா மாசரத்தின் கேந்தம்
நயமான கம்பிளியா மயிரின்பேரே. (75)

நண்டின்பெயர்.

நண்டினிட பெயர்தனையே நவிலக்கேளே
நரியுண்ணி தலையில்லா சேவகன்றான்
பண்டினுக்குப் பத்துக்கா லுடையமன்னன்
பருந்தினுக்கு விருந்தானேன் பரமயோகி
தண்டினுக்கு கோத்துகின்ற கூற்றுனுள்ளோன்
தயங்காத குளத்துக்கு குருவியானேன்
வண்டினுக்கு ஊளைதானுங் கள்வனகு
மாசற்ற நண்டுக்குப் பேயருமாமே. (76)

நத்தையின்பெயர்.

நத்தையுட பெயர்தனையே நவிலக்கேளு
நலமான வூமச்சி யுமரியாகும்
பத்தையுட நீர்க்காயங்கல் லொட்டியாகும்
பாங்கான குளத்துக்கு ருத்திராட்சம்
மத்தையுட சேலக்கூபமுள் ளுயிருமானேன்
மாசற்ற நீர்க்குன்று கோம்பூதியாகும்
சத்தையா மேல்முடி யூர்ந்துநிற்போன்
சாங்கமா நத்தைக்கு நாமமாமே. (77)

நாகரவண்டின்பெயர்.

நாகரமாம் வண்டினுட் பெயரைக்கேளு
நாசமாம் பாம்புக்கு வாய்க்கிரையுமானேன்
சாகரமாஞ் சங்கினுப சேடியிற்குடிபுக்கி
சங்கினுட காட்டுக்கு ளுமரியாகும்
பாகரமாங் காட்டுக்குள் சங்குமாகும்
பாம்புத்துத் தண்ணீருங் கோடுபோமன்னன்
ஒகரமாஞ் சுண்ணத்திற் கூர்மையானே
னுற்றநா கரவண்டின் பேயருமாமே. (78)

கிளிஞ்சிலின்பெயர்.

கிளிஞ்சினுட பெயர்தனையே கிளரக்கேளு
கெட்டியா முடலிரண்டு வுயிருமொன்று
ஒளிஞ்சியதோர் கடலுக்குள் பட்சியாகும்
ஒடியதோ ரோடந்தா னுயிருமாகுந்
தெளிஞ்சியதோர் சிப்பித்தான் றளிப்போலாகுஞ்
சுண்ணத்தில் வலசாரிக் குளத்திற்சிப்பி
தெளிஞ்சியா மாசாரி சிறந்தசிப்பி
செப்பியதோர் பேரெல்லாங் கிளிஞ்சிற்காமே. (79)

ஆமையின்பெயர்.

ஆமையுட பெயர்தனையே யறையக்கேளு
அந்தரங்க தியானியாம் நீர்ப்பச்சையாகும்
ஊமையாந் தனித்ததாமோ தரந்தா
னுத்தங்க முடியே மவுனியாகும்
பாமையாம் பஞ்சாங்கக் கூர்மையுள்ளோன்
பாரமாங் கச்சனுங் கூர்மராசன்
வாமையாம் ராசப்பிர திஷ்டையுள்ளோன்
வகுத்ததெல்லா மாமையுட பெயருமாமே. (80)

முட்டையின்பெயர்.

முட்டையுட பெயர்தனையே மொழியக்கேளு
மும்மூர்த்தி மஞ்சவெள்ளைக் கருவுமாகும்
நிட்டையாங் கடுங்கார நீருமானேன்
நீற்றுண்ட வூமையாம் உருளையாகும்
குட்டையாஞ் சுண்ணத்துக் குயிருமானேன்
கொடுவண்ட மெழுகுக்குக் கூர்மையானேன்
தட்டையாம் லோகங்கள் தகர்த்துச்சாடுஞ்
சாரத்தின் சத்துருவா முட்டைதானே. (81)

ஆனைகொம்பின்பெயர்.

ஆனையுட கொம்புபே ரறையக்கேளு
அழகான கேசப்பொடிதான் கரியின்கொம்பு
வானையாம் வாரணத்தின் கோடுமாகு
மகத்தான வொளிர்மருப்பு கிம்புரியுமாகும்

தானையாங் கோடேயிரு தந்தமாகும்
சாங்கமாங் தங்கத்தி னிராவுமாகு
மானையாங் குஞ்சரத்தின் கோடுமாகு
மதத்துநிற்கு டானையுட கோம்புபாரே. (82)

பன்றிக்கோம்பின்பெயர்.

பன்றியுட கோம்புப்பெயர் பகரக்கேளு
பாரமாம் வல்வாசி வராகதந்தம்
குன்றியுட நிறமான கண்ணையுள்ளோன்
கூர்மையாய்த் தரணிதனைக் களையுங்கோம்பு
கன்றியாங் கருமாவே யெருளிதேளாங்
கானகத்தின் சேவகனுஞ் சூகரனேயாகும்
கின்றியாம கிருட்டியரி கிட்டிப்பேராங்
குரோடமே போற்றரிய வேனமாமே. (83)

கலைக்கோம்பின்பெயர்.

கலைக்கோம்பின் பெயர்தனையே கருதக்கேளு
கானகத்தின் சாரங்க மருனமாகும்
புலைக்கோம்பு புள்ளிநீர் மிருகந்தானும்
புகழ்ந்தமா சிங்கமரை மாணுமாகும்
தலைக்கோம்பு கடவிழிதான் சாதகவேடி
சாத்தமாங் கிஷ்டனுட மிருகந்தானும்
நலக்கோம்பு மணியொளியில் சாவுசோல்லும்
நலுமான கலைக்கோம்பு நாட்டுப்பாரே. (84)

மாட்டுக்கோம்பின்பெயர்.

மாட்டினிட கோம்புப்பெயர் வகுக்கக்கேளு
மயிடமாங் கருமேதை கடாக்காலன்தான்
கோட்டினிட செழும்பசுவுங் கோவுமாகுங்
கூரான ஆலாகுஞ் சுரபியாகும்
நாட்டினிட விடையெருது ரிஷபக்கோம்பு
நலமான கருமயிடங் கார்க்கவரிக்கோம்பு
வீட்டினிட திடமுரிபுங் கவமாஞ்சேவு
வேண்பசுவின் கோம்பாகு மாட்டுக்கோம்பே. (85)

ஆட்டுக்கொம்பின்பெயர்.

ஆட்டினிட கொம்புப்பெய ரறையக்கேளு
மஞ்சாத தகர்சாகஞ் சாகினியுமாகும்
வீட்டினிட மேஷத்தின் கொம்புமாகும்
விளம்பியதோர் செம்போத்துபோல் ரோசிசாகி
காட்டினிட வோமத்திற் கலந்தவகைபசுவாம்
காரணமா முருப்பீர்மங் கரிகுறும்பாடு
தீட்டினிட செம்பலியாம் விரகசாகஞ்
செப்பியதோர் பேரெல்லா மாட்டுக்கொம்பே. (86)

பல்லின்பெயர்.

பல்லினிட பெயர்தனையே பகரக்கேளு
பரிவான கடைக்கவர்தான் தந்தமாகும்
தல்லினிட தரள்வாய்தான் மாக்கூடமாகுஞ்
சாந்தமாம் பார்வைதான்பவளமுத்து
வில்லினிட வோலிகடலாஞ் சரமுல்லையாகும்
விளங்கியதோர் நகைமுறுவ லீறுமாகும்
கல்லினிட பல்லாகு நாமந்தன்னைக்கண்டு
சொன்ன மொழிப்படியே கருதிப்பாரே. (87)

பூநாகத்தின்பெயர்.

பூநாகப் பெயர்தனையே பொருந்தக்கேளு
பேரான மேகத்தின் விந்துவாகும்
மீநாகம் விளங்குஞ்சஞ் சீவியாது
மிக்கான சோதிமய மானவேதி
மாநாகப் பாம்புதான் மாங்குளுத்தான்
மகத்தான பூமிவேர் மாசிலாதான்
கூநாக மாசத்தி பனமுத மூட்டுஞ்சத்து
கூறியதோர் பேரெல்லா பூநாகமாமே. (88)

இந்திரகோபப்பூச்சியின்பெயர்.

இந்திரகோப்பபூச்சி யியம்பக்கேளு
எழிலான மூன்றுவித வேளுப்புச்செம்மீ
தந்திரமாங் கருப்பாதுஞ் சந்திரபீசந்
தனுபீச மிந்திரனும் பீசமாகும்

தந்திரமா மிடிதனிலே சாரந்தபீசஞ்
சார்வான ரம்பையிட அமிர்தசுரோணிதம்
பந்திரமாஞ் சஞ்சீவி நாகபேதி
பரிவான விந்திர கோபப்பூச்சிப் பேயரே. (89)

செவ்வட்டையின்பெயர்

செவ்வட்டைப் பெயர்தனையே செப்பக்கேளு
திறமான ஆயிரமாங் காரியாகு
மவ்வட் டையமர்ந்தவரிச் சுருளுமாகு
மகத்தான கானகத்திற் பரவுந்தட்டான்
தவ்வட்டை யாயிரக்குண் டலிதானுகுஞ்
சமர்த்தான மண் திண்ணிச் சத்துக்கானேன்
கவ்வட்டை செவ்வட்டை நாமத்துக்குக்
கண்டுசொன்ன படிதானுங் கருதிப்பாரே. (90)

தவளையின்பெயர்

தவளையிட பெயர்தனையே சாற்றக்கேளு
சாற்றரிய மகாஃபேகன் கடித்ததூஷன்
துவளையாம் ராசமண்டு கவுச்சியன்
துடியான தத்தூரன் மண்டூகந்தான்
குவளையாந் தண்ணீரிற் றவளையானேன்
கோடியான மேகத்தின் றறிகின்றவனும்
முவளையா முற்றியதோர் கோழமூர்க்கன்
முதிர்ந்துநின்ற சோரியனுந் தவளைப்பேயரே. (91)

கோழியின்பெயர்

கோழியிட பெயர்தனையே கூறக்கேளு
துக்குடமாம் வாரணமாம் ஞானியாகும்
மூழியென்ற சேவலாமிரவை யறிவோனுகு
மொழிகின்ற சண்முகற்கு நீண்டகோடியோனுகும்
தாழியிட சண்டைக்குச் சூரனுனேன்
சம்போகி யடிக்கடிக்குத் தானும்வேண்டி
ஆழியிட பேரெல்லாங் கோழிக்கு
மாராய்ந்து சொன்னதெல்லா மறிந்துபாரே. (92)

கரடியின்பெயர்

கரடியிட பெயர்தனையே கருதக்கேளு
கானகத்தின் வெண்பல்லாம் கவுளீயாகும்
திரடியாங் தின்பல்லம் வல்லூகஞ்செங்கண்
திரமான பாதாள பேதியானேன்
விரடியாம் பலபண்ட சித்தனாகும்
வேதாளப் புற்றையெல்லா முரிஞ்சும்வேந்தன்
அரடியா மலைராச னுதாளிமன்ன
னகண்டகருங் கரடியிட நாமமாமே. (93)

சங்கின்பெயர்

சங்கினிட பெயர்தனையே சாற்றக்கேளு
தவளமாங் தசநாதம் வளையுமாகும்
வங்கினிட வலம்புரியு மிடம்புரியுமாகும்
வாநிதியா நாதந்தான் சின்னமாகும்
நங்கினிட சங்காகும் பணிலம்பாணி
நலமான சலம்புரியும் பட்சிகம்பும்
தங்கினிட நீங்காத வோசையோனன்
சலஞ்சலமாஞ் சங்கினிட நாமமாமே. (94)

முத்துச்சிப்பியின்பெயர்

முத்தினிட சிப்பிப்பெயர் மொழியக்கேளு
மேகவர்னத் தான்றுளி விந்துவாகுஞ்
சத்தினிட சந்திரன் சிவப்புமாகுந்
தனித்துநின்ற சோதியாநீச் சோடமாகு
மத்தினிட வந்திரமாம் வானந்தன்னி
லழகியதோர் கெர்ப்பத் திலங்கனுதி
பத்தினிட முத்தான சிப்பிக்குத்தான்
பாடியதோர் நாமமெல்லாம் பண்பாய்ப்பாரே. (95)

முத்தின்பெயர்

முத்தினிட பெயர்தனையே மொழியக்கேளு
முரிவஞ்சித் துலகமாஞ் சுக்கிரன்றான்
நித்திலமா முத்தாகுந் தரளமாகு
நீங்காத வாரிதிக்குள் சங்கீன்றபிள்ளை

அத்தலமா மாதித்தன் சோதிதன்னு
ளாகியதோர் தன்மணியா மாழிவித்துக்
கத்தலமா நன்முத்துப் பேராந்தன்னைக்
கண்டபடி யுரைத்தேனுன் கருதிப்பாரே. (96)

பவளத்தின்பெயர்.

பவளத்தின் பெயர்தனையே பகரக்கேளு
பாங்கான துகில்துப்பு வித்துமாகும்
துவளத்தின் வாரிதிக்குள் தண்டுமாகுஞ்
சுயம்பான செந்தண்டுக் கோடியுமாகும்
அவளத்தின் விற்பனைக்கு ளமர்ந்தகன்னி
யழகாகச் சாற்றியதோர் மாலையாகும்
குவளத்தின் பிரவாளம் விற்பவளமாகும்
கூறியதோர் குணமெல்லாங் கூர்ந்துபாரே. (97)

கோமேதகத்தின்பெயர்.

கோமேதகப் பெயர்தனையே கூறக்கேளு
கோமியாம் வாளனமாம் ராகுவாகும்
தாமியமா மார்ச்சாலந் தன்னுட்கேந்திரஞ்
சாரியாம் வியாக்கிரமம் புலிக்கண்ணுகும்
காமியமா மீயுகின்ற களிப்பாங்கல்லு
காதிலிடு வாபரணந் தேன்கல்லாகும்
ஓமியமாங் கதிர்விரியும் பணியுமாகு
முற்றதோரு நாமமெல்லாங் கோமேதகப்பெயரே. (98)

புட்பராகத்தின்பெயர்.

புட்பராசப் பெயர்தனையே பொருந்தக்கேளு
போதுநீலஞ் சூத்ரனும் ரத்னமாகும்
கேர்ப்பமாங் கேதுவுக்குச் சிலாங்கனுதுங்
கேடியான நயனத்தோன் கேதுஞானம்
மற்பமா மாலுடைய கண்டகனுது
மகத்தான தாதுகளைச் சலச்சீவன்றன்
ஒற்பமா மெடுத்துமுன்னஞ் சுடர்விளக்குப்பணிதா
மேற்றதெல்லாம் புட்பராகப் பெயருமாமே. (99)

வயிரத்தின்பெயர்.

வயிரத்தின் பெயர்தனையே வழுத்தக்கேளு
வன்னசிலை மயில்வளர்ந்த வயிரமாகும்
அயிரத்தி னருணனுங் கதிரோனுகு
மாதித்த ராயணன்று னருனரவிவிந்து
தயிலத்தின் றளுக்குருவாஞ் சூரியனுதுஞ்,
சார்பான சிலைராசன் தீபகாந்தி
உயர்த்தியொளிர் முகம்பழுத் துடைந்தோழுகுமோங்கி
யுற்றதெல்லாம் புட்பராகப் பெருமாமே. (100)

பச்சையின்பெயர்.

பச்சையின் பெயர்தனையே பகரக்கேளு
பசுங்காளையாம் பசளையாம்மழம் பச்சையாகும்
புச்சையாம் புக்தியின்றன் விந்துவாகும்
பேரான வாயுவிட மேனியாகும்
கச்சையாங் காந்தியாங் கலர்ச்சியாகுங்
கடியதனு விருளறுக்கு மொளியராகுஞ்
செச்சையா மாலினிட மேனியான
சீரான பச்சையிட நாமமாமே. (101)

நீலத்தின்பெயர்.

நீலமாம் பெயர்தனையே நிசமாய்க்கேளு
நீலமா மிசைந்தசனி விந்துவாகு
மாலமா மந்திரக்கண் மணியுமாகு
மரிநிறத்தின் கல்லுதா னிந்திரமாகுந்
தாலமாந் தந்திரத்தின் மேகமாகும்
தனுமேகச் சாயைதான் தரிக்கின்றநீலம்
காலமாங் கற்றைமுத்தக் கதிர்விரிக்குங்
கருதியதோர் பெயரேல்லா நீலமாமே. (102)

சிவப்பின்பெயர்.

சிவப்பினிட பெயர்தனையே செப்பக்கேளு
செப்பரிய மாணிக்கஞ் சொர்க்கம்தானு
முவப்பமாஞ் செவ்வாயா மொளியோரத்ன
முத்தமமாம் பரங்கியா மூழிக்கனல்நிறமா

மவப்பமா மணியாம் வாணிச்சிமேனி
யாதித்த சிவப்பாகும் ரூபியாகுங்
கவப்பமா மிகப்பருகுங் கற்றைவெயில்சிக்குங்
கருதியதோர் பெயரேல்லாஞ் சிவப்புமாமே. (103)

வயிடூரியத்தின்பேயர்.

வயிடூரியப் பெயரை வழுத்தக்கேளு
மன்னுகாந்தி யுள்ளசே லொளியுமாகு
முயிருருவி முயர்வான கல்லுமாகு
முற்றவோகச் சாதகச்சூத் திரமுமாகும்
தயிடூரி சிந்துதாகச் சூத்திரமாகுஞ்
சாதகமாகிய கிவன்ருன் சார்ந்தகல்லு
நியிடூரி வெயில்வயிறு வைக்குமணியாரம்
நேசமாம் வைடூரியப் பேருமாமே. (104)

கேண்டகச்சிலையின் பேயர்.

கேண்டகமாஞ் சிலையினிடப் பேரைக்கேளு
கேடியான கருஞ்சிலையாங் கூழனுகும்
வண்டகமாங் கவுனியமாங் வாணலிங்க
மாசற்றலிங்க மாங்கருஞ் சிலைக்கல்
தண்டகமாஞ் சாதகற்ற சிலையுமாகுஞ்
சால்மேனி மாருதிக் கேங்கைதானும்
முண்டகமா முனிவர்கள் பூசித்தலிங்க
முயற்சியாங் தேண்டசிலைப் பேருமாமே. (105)

சூடாலைக்கல்லின்பேர்.

சூடாலைக் கல்லினிட பேரைக்கேளு
சூட்சுமமா மனேகரக் கல்லுத்தானு
மாடாலை மரந்தனதி ரத்னமாகு
மாட்சியா நீடாலைக் கோடுமாகுங்
கோளாலைக் கல்லினுறச் சிலையுமாகுங்
கோடியசிலை நாகமாஞ் சக்ரமாகுஞ்
சூடாலைக் கல்லினிட நாமந்தானுஞ்
சுந்தரமா மணிசிகரப் போருப்புமாமே. (106)

மாக்கல்லின்பேர்.

மாக்கல்லின் பேர்தனையே வருக்கக்கேளு
மல்லமாக் கல்லுமாச் சிலைமாவாகுங்
காக்கல்லு கலந்தமதிச் சிலையுமாகுங்
காரணமாஞ் சிந்தூரச் சிலைமாவாகும்
பாக்கல்லு பலகைக்கு ளெழுதுங்கல்லு
பரிவான குப்பிமாக் கல்லுமாகும்
மூக்கல்லு மூதண்ட முகடுமோதி
மொழிபொருப்பு மாக்கல்லு நாமந்தானே. (107)

தேக்கல்லின்பேர்.

தேக்கல்லின் பேர்தனையே செப்பக்கேளு
செம்பாரை செம்பொடி நீர்க் கல்லுமாகும்
வாக்கல்லு சிலாகையுஞ் சாரக்கல்லு
மருவியதோர் புனற்கல்லு வம்புக்கல்லு
நாக்கல்லு நம்புறை போகக்கல்லு
நலமான சாதக்கல் பிறையாங்கல்லு
ஊக்கல்லு புத்தேளிர் விருக்கைப்பொருப்பு
வுற்றதொரு நாமமெல்லாம் தேக்கல்லுக்காமே. (108)

மஞ்சட்கல்லின்பேர்.

மஞ்சட்கற் பேருடைய வகுப்புகேளு
மகத்தான குங்குமமாம் வர்ணியாகும்
குஞ்சக்கற் கொடுங்கோபிச் சிலையதுவுமாகும்
கூறியதோர் பசுமையா மலையடிமண்ணுதான்
தஞ்சக்கற் பொடிசிலைதான் சாதக மஞ்சக்கல்
தானான படர்வாங்குஞ் சொரிப்புள்ளிக்கல்
பஞ்சக்க வெழுவாரி யெழுபொருப்புக்கல்லு
பாடியதோர் பேரெல்லா மஞ்சட்கல்லே. (109)

தவளைக்கல்லின்பேர்.

தவளைக்கல் பேர்தனையே சாற்றக்கேளு
தனித்துநின்ற மண்டூகச் சீவனாகும்
நிவளைக்கல் நிசிதனி லேத்துங்கல்லு
நேரான சொரிக்கல்லு மாசக்கல்லு

பவளக்கல் பரிவான சத்தன்றானும்
பாவத்தார் சாரக்கல் பகட்டுக்கல்லு
அவளைக்கல் வெற்புக்கு எடுத்தகல்லு
அறிந்துரைத்த பேரெல்லாந் தவளைக்கல்லே. (110)

சிவாவங்கக்கல்லின்பேர்.

சிலாவங்கப் பேர்தனையே செப்பக்கேளு
செயலான கடுவங்கத்தின் சிலையுமாகு
மலாவங்கம் வங்கத்தின் கல்லுமாகு
மகாசுக்கரன் பருவதந்தா னஞ்சுகந்தான்
நலாவங்க மதஞ்சுகக் கல்லுமாகு
நலங்குமே கசிலைதா னஞ்சுகந்தான்
அலாவங்கன் கசிகாபுகர துச்சிப்பொருப்பு
அறிந்துரைத்த பேரெல்லாஞ் சிலாவங்கமாமே. (111)

சிலாநாகத்தின்பேர்.

சிலாநாகப் பேர்தனையே செப்பக்கேளு
செயலான நாகசிலைக் கல்லுமாகும்
புலாநாகம் பொரிக்கல்லு பாகசிலைக்கல்லு
பேரான பஞ்சகிறக் கல்லுமாகும்
வலாநாகம் வாதருக்குக் கல்லுமாகு
மருவியதோர் சித்தக்கல் தாகக்கல்லு
திலாநாகந் தினகரோதைமணி சிகரப்பொருப்பு
செப்பியதோர் பேரெல்லாஞ் சிலாநாகமே. (112)

அன்னபேதியின்பேர்.

அன்னபேதிப் பேரை யறையக்கேளு
ஆதிக்கல் நாதமா மளவன்னக்காலன்
கன்னமாம் பேதியாக் கற்சவுடுநாதம்
கனமான களிப்புதான் கல்லுவேகம்
சின்னமாம் பேதியா மலைவீரியமாகும்
திராவகத்துக் கடுங்காரி பேதியாகும்
வன்னமாம் பேதியா மலைருதுவுமாகு
மாசற்ற வன்னமென்ற பேதிதானே. (113)

அஸ்திபேதியின்பேர்.

அஸ்திபே திப்பேரை யறியக்கேளு
ஆகத்தை யுருக்கியே நீருக்கியாகம்
எத்தியா மேலும்புருக்கி யேலும்பைநீருக்கி
யேற்றமா நாகத்தைச் சோர்னமாக்கி
பத்தியாம் பவளமது தானுமாக்கிப்
பரிந்தவச் சிரத்தைப் பாகாய்த்தோயமாக்கி
கத்தியாங் காயத்தை யுருக்குகின்ற
கனமான வஸ்தியிட நாமமாமே. (114)

சோர்னபேதியின்பேர்.

சோர்னமாம் பேதியிட பேரைக்கேளு
துக்கமாங் குவடுதன் றுதித்தோனுகும்
குன்மமாங் குவடுக்குள் முலர்ச்சியாகும்
குகைமேலே நாகத்தின் குமரியாகும்
தன்னமாந் தங்கத்தைச் சலமாயாக்கிச்
சார்ந்தமஞ்சள் போரிவாணி நிறத்தியாகும்
வண்ணமா மகத்தான பேதியான
மாசற்ற சோன்னமாம் பேதிதானே. (115)

மாங்கிஷபேதியின்பேர்.

மாங்கிஷபே திப்பேரை வகுக்கக்கேளு
மாங்கிஷத்தை நீருக்கி மலை துருச்சி
காங்கிஷமாங் கலையிலக்கும் காரியாகும்
கல்லுதனை நீருக்கிக் காந்தாரியாகும்
மூங்கிஷமா மூலையிற்பிணாங் திண்ணியாகு
முற்றகடு வுப்பாகு முகட்டிற்கூர்மை
கோங்கிஷமாம் வெற்புக்கு ளூற்பத்தியான
கோடியமாங் கிஷப்பேதி நாமமாமே. (116)

உவர்மண்ணின்பேர்.

உவர்மண்ணின் பேர்தனையே யுரைக்கக்கேளு
உற்றதோரு பூமிக்குட் சுவர்க்கமாகும்
அவர்மண்ணுஞ் சங்கினியாஞ் சங்கீனியுமாகு
மழகான பூமாதர் சந்தரியுமாகு

கவர்மண்ணு நாதமாம் காமியாகும்
கடுந்தணலின் பூமியாம் களிமண்ணாகும்
துவர்வண்ணன் பூமியும் குருவுமாகுஞ்
செப்பியதோர் நாமமெல்லா முவர்மண்ணின்பேரே.

கருமணலின்பேர்.

கருமணலின் பேர்தனையே கருதக்கேளு
கருந்திரையாஞ் சூட்டுமனல் கரையாக்குமணலா
அருமணலா மாற்வக்கு ளழகியதோர்
மணலாம சங்காதமணற்குன்ற மருவிதானும்
பருமணலாம் காடுவரி பரந்தமணலாகும்
பண்பாக அப்பிரேக மணலுமாகு
முருமணலா நீலமண லொளிமண்லுமாகு
மோங்கியதோற் நாமமெல்லாம் கருமணலுமாமே. ()

கற்சிட்டத்தின்பேர்.

கற்சிட்டப் போதனையே கருதக்கேளு
கருதியதோர் சிட்டசிலைக்கல்லுமாகும்
பற்சிட்டம் பரையாகும் பாரமாகும்
பசும்பவுரைக் கல்லென்று மிதுபேராகும்
மற்சிட்ட மரிச்சிட்ட மரையுமாகு
மகத்தான முனைக்கல்லு வுயர்கட்டுச்சிட்டம்
நற்சிட்டம் நகர்ச்சிட்டம் நாறுஞ்சிட்டம்
நலமான கற்சிட்ட நாமமாமே. (119)

செம்மணலின்பேர்.

செம்மண்ணின் பேர்தனையே செப்பக்கேளு
செம்மண்ணும் நாகமண்ணும் காவிமண்ணு
பம்மணலாம் பாகுமண் பழுத்தமண்ணும்
பரிவான சித்திரங்க ளெழுதுமண்ணும்
கம்மணலாம் களிப்புமண் காந்தமண்ணுங்
கருதியதோர் தாம்பிரத்தின் மண்ணுமாகும்
நம்மண்ணு நளிர்மண்ணு நளிர்மண்ணு நாட்டுமண்ணு
நலமான செம்மண்ணி னுமமாமே. (120)

சுத்தமண்ணின்பெயர்.

சுத்தமண்ணின் பெயர்தனையே சொல்லக்கேளு
சுயமான புடமண்ணுங் குடோரிமண்ணும்
புற்றுமண் பூமிக்குள் வெளுப்புமண்ணும்
பேரான சரமண்ணும் பாலைமண்ணாகும்
குத்தைமண் ணுடைமண்ணும் கும்பிக்குமண்ணாகுங்
கூரான சலவைமண்ணும் லோகந்தன்னை
கத்தைமண்ணுங் கசடருக்கு மண்ணுமாகுங்
கருதியதோர் நாமமெல்லாம் சுத்தமண்ணின்பேரே. ()

முடவாட்டுக்காலின்பெயர்.

முடவாட்டுக் கால்தனையே மொழியக்கேளு
மூத்தியா மாலைக்காலாங் குலைக்காலாகும்
குடவாட்டுக் குவட்டுக்கால் மேஷக்காலாங்
குண்சாலு மூன்றுக்கு மித்துருவாகும்
நடவாட்டு நன்மலையின் நோவுங்காலாம்
நலமாகக் கருடமேகக் கோர்ப்பக்காலாம்
தீவாட்டு முலைக்காலாந் திகிரிக்காலாகுஞ்
செப்பியதோர் பேரெல்லா முடவாட்டுக்காலே. (122)

கருவண்டின்பேர்.

கருவண்டின் பேர்தனையே கருதக்கேளு
கம்பிச் சாரணையாம் கானகத்தின் தீதம்
வரிவண்டு செம்பியாம் கருப்பியாகு
மதுவைவிட் டெழும்பிவிடாச் சுரும்புமாகுங்
குருவண்டுத் தண்டுதான் தும்பியாகும்
கோழிக்கும் கடலுளியா மறுகால்வண்டு
அரங்கத்துக் களித்தேறல் வண்டுமாகு
மறைந்ததோர் நாமமெல்லாம் கருவண்டாமே. (123)

பன்றிமுள்ளின்பேர்.

பண்ணிமுள்ளின் பேர்தனையே பகரக்கேளு
பரிவான எனத்தின் முள்ளுமாகும்
கண்ணிமுள்ளு எரிமூன்று வர்ணத்தியாகும்
கானகத்திற் சிந்திகின்ற முப்பாஷாணம்

முண்ணிமுள்ளு தருகின்ற வராகிவேலா
 முழிகுடைத் தலைத்தகவுத் தலைக்கேழாகும்
நண்ணிமுள்ளு நின்றெதிர்த்த குன்றிநிறக்கேழல்
 நலமான பன்றியிட முட்பேராமே. (124)

கடல்னுரையின்பேர்.

கடல்னுரையின் பேர்தனையே கருதக்கேளு
 காஷ்டமா மக்கினியின் சாலமாகு
மிடனுரையாம் லோகாக்கினியா மக்கினிகெற்ப
 மிரளான வலைதனிலே திரண்டதீபத்தான்
பிடனுரையாம் வாரிதியின் விந்துவாகும்
 படரான நீதியாசம் பதரவாக்கினி
அடனுரையாஞ் சிந்துபாலவ மதிகசுவால
 மறிந்துறைத்த பேரேல்லாம் கடனுரைக்கே. (125)

மீனெலும்பின்பெயர்.

மீனெலும்பின் பெயர்தனையே விளம்பக்கேளு
 மீளுமுதற் கோட்டுநீர் வாளையங்கம்
வானெலும்பு மச்சத்தின் சல்லியாகு
 மகரமீ னங்கமமாந் தளைவாளாகும்
மூனெலும்பு கச்சத்தி னங்கமாகும்
 முற்றஅர லெதிர்ந்தேறும் வாளையாகும்
கானெலும்பு மஞ்சூல வாளையாகுங்
 கருதியதோர் பேரேல்லா மீனெலும்புமாமே. (126)

முட்சங்கின்பெயர்.

முட்சங்கின் பெயர்தனையே மொழியக்கேளு
 முளக்கெடுக்கு மதுசரசச் சங்குமாகும்
கட்சங்கு கடுங்கண்டச் சங்குமாகும்
 கதித்தசங்குங் கவரேழுச் சங்குமாகும்
முட்சங்கு வுயன்றவேல் சங்குமாகு
 முரோமத்தின் சங்கமா மொற்றைவாகை
குட்சங்கு குடவயிறுளைந்து கூப்பிடுங்
 கூறியதோர் பேரேல்லா முட்சங்குக்காமே. (127)

பேரோசனையின்பெயர்.

பேரோசனைப் பெயரைப் புகலக்கேளு
பேரான வேதைதனை கெடுக்குங்கல்லு
மாரோசனை மாசித்தாய்ப் பிரட்டுங்கல்லு
மலைதனிலே புற்பவித்த மாமோசந்தான்
தாரோசன பசுமலைச்சார் குழலூற்றுச்
சயிலகிரி பருவதா ரோசனமாகும்
நாரோசன சிருங்கிகோ கிலமுமாகு
நலமான பேரோசனையி நாமமாமே. (128)

நாகப்பச்சையின்பெயர்.

நாகப்பச்சைப் பெயர்தனையே நவிலக்கேளு
நாதாந்த மாயியுட மேனியாகும்
பாகபரிசக் கிணறுபருஞ் செம்பின்பச்சை
பாவிட்டு அயன்றனக்குச் செம்புமாகும்
காகளதற் கூபங்கடும் பச்சையாகும்
கனிந்தொழுதுகுந் தீதனிலே கதிக்கும் பச்சை
வேகமா மாற்றுக்குள் மலையருவிதனக்குள்
விடுமட்ட நாகபச்சைப் பேருமாமே. (129)

மரகதபச்சையின்பெயர்.

மரகதப் பச்சையின்பேர் வகுக்கக்கேளு
மகும்பச்சை வர்ணம்வாள் மேகப்பச்சை
நரகதமாம் நடுபச்சைக் கல்லுமாகும்
நாயகிதன் மேனியாய் நலங்குங்கல்லு
கரகதமாங் கடும்பச்சை கானகத்தின்துவடு
கந்தமாங் கடும்பச்சை கதிக்கும்பச்சை
திரகதமாங் திகிரிக்கு ளடுக்கும்பச்சை
செப்பியதோர் மரகதமாம் பச்சையாமே. (130)

புத்தான்பவளத்தின்பெயர்.

புத்தான்றன் பவளப்பேர் புகலக்கேளு
புத்துக்குள் குளர்ச்சியாங் கருப்பியாமே
மகத்தான வாழ்மூலைப் பாலியாகு
மகத்தான காடிக்கு மருவுமிந்திரியம்

சித்தான திரண்டுருண்ட கோடிச்சியாகும்
சிவப்பான வெள்ளச்சி விஷத்தூள்வாசி
சித்தான மகாசேனை கூடிவாழுஞ்
சிறப்பான புத்தானபவழப் பேருமாமே. (131)

வெள்ளைச்சுக்கான்கல்லின்பெயர்.

வெள்ளைசுக்கான் பெயர்தனையே விளம்பக்கேளு
வெண்கல்லு திண்கல்லு வேளுக்குங்கல்லு
வள்ளையாம் வயல்க்கல்லு வங்கக்கல்லு
வளமான நீரோட்டம் பாயுங்கல்லு
தில்லையாஞ் சிறந்தகல்லு தானுமாகும்
செயமாக விளையுங்கல் செழித்தகல்லு
பிள்ளையாம் பெருமுக்கல் பூநீருக்கல்
பேய்க்கல்லு வெண்சுக்கான் பேருமாமே. (132)

சதண்டேக்கல்லின்பெயர்

கதண்டுகற் பெயர்தனையே கருதக்கேளு
கரிமுகனே யானையாங் கானத்தும்பி
வதண்டான வாகனப்பூ தச்சியாகும்
வச்சிரமாங் தலைச்சியாங் மடிலச்சியாகும்
புதண்டான பொற்புதையிற் குடியிருப்புப்
பேரான சித்திரமா மகிட்சியாகும்
சுதண்டான தேனகத்தின் குடிச்சியாகுஞ்
செப்பியதோர் நாமமெல்லாங் கதண்டுமாமே. (133)

காகச்சிலையின்பெயர்.

காகச்சிலையின் பெயரைக் கருதக்கேளு
கருமுகிலின் தண்டுகல் காசிக்கல்லாம்
மாகச்சில மாசிக்கல் வாளக்கல்லா
மாருதி வர்ணக்கல்லாங் திரணிக்கல்லாம்
தாகச்சில தாசிக்கல் சனிபகவான்கல்லாங்
தயங்காத வலூரசிலைக் கல்லுமாகும்
பாகச்சில பலிபுத்தக் கல்லுமாகும்
பாடியதோர் நாமமெல்லாங் காகச்சிலையாமே. (134)

காண்டாமிருகத்தின்பெயர்.

காண்டாமிரு கப்பெயரைக் கருதக்கேளு
காண்டகமாங் கோந்தளமாங் கடுவோற்றைக்கோம்பன்
நீண்டகையானை யாங்கருஞ் சாளித்தானும்
நேரான மருந்தீடு விஷங்கள்போக்கி
பூண்டகைப் பூயனுங் கண்டகனுக்கன்
பெருமையுள்ள பலாக்கிரமன் பேருடையோனும்
ஆண்டகை யரசனுட வுயிரைக்காத்தோன்
அதியகாண் டாமிருகப் பேயருமாமே. (135)

கஸ்தூரியின்பெயர்.

கஸ்தூரி யெனும்பின்பெயர் கருதக்கேளு
கடுகேஸ்தி புகழ்வாகச் செல்லியாகும்
நத்தூரி விணையா மிருகந்தானும்
நலமான வுதிரத்தோன் மாங்கிஷத்தோன்
தத்தூரி சாரிசா தகனுமாகுஞ்
சாதகமாம் சுகந்தனும் புதனுமாகும்
துத்தூரி சுகந்தனுமாங் திலதனுமாகுஞ்
சொல்லியதோர் பேரெல்லாங் கஸ்தூரியாமே. (136)

மந்தாரச்சிலையின்பெயர்.

மந்தாரச் சிலையின்பேர் வகுக்கக்கேளு
மந்தார மேகவர்னக் கல்லுமாகும்
பந்தாரப் பலவர்னப் பாகக்கல்லு
பார்தனிலே கனற்சிலையாம் பரிதிக்கல்லு
விந்தார வர்ணனுஞ் சிவன்புட்பமாம்
வெற்பான குலவரையின் மதிமேகக்கல்லு
கந்தார மாருதமாங் கோண்டல்மேக
நாமமெல்லா மந்தாரச் சிலையுமாமே. (137)

கடற்பாசியின்பெயர்

கடற்பாசி பெயர்தனையே கருதக்கேளு
க்டுவேலைக் கந்தரமாங் காருச்சீவல்
மடற்பாசி வாரிதியின் பாசியாகு
மருவியதோர் பின்னமதான் கரைக்கல்லோலன்

திடற்பாசி திசைமுழங்கு நீர்க்கடலின்பாசி
திரைசுருட்டுப் பாசியாஞ் சிறுநீர்ப்பாசி
குடற்பாசி நீங்காத சலமலமுமாகுங்
கூறியதோர் பேரெல்லாங் கடற்பாசியாமே. (138)

சலாக்கிராமத்தின்பெயர்.

சாலக்கிரா மத்தின்பேர் சாற்றக்கேளு
தானுனமுவர்க் கல்தாசிமலைக் கல்லாகும்
வாலமாம் வன்மலையில் தங்கமாகு
மருவியதோர் கேற்பத்தில் மால்வீடுதானும்
ஊலமா மும்மலையில் சக்கரமுமாகு
முலகமெல்லா மோருகுடையில் கிடத்துகின்றதிருமால்
மாலமாங் கோலமாக் கடவுளான
வண்ணலுறை சாலக்கிரா மந்தனுமே. (139)

மாங்கிஷச்சிலையின்பெயர்.

மாங்கிஷச் சிலையின்பேர் வழுத்தக்கேளு
வகுத்தெடுத்த சதைத்திரமாஞ் சென்னிறமுமாகும்
தாங்கிஷமாம் சடநிறமாம் வெண்ணிறமுமாகுஞ்
சார்வான வுதிரமா நிறமுமாகும்
காங்கிஷமாம் கார்நிறமா மதநிறமுமாகுங்
கசடற்ற மண்ணிறச் சிலையுமாகும்
பாங்கிஷமாம் பாங்கியுடசிலை நிறமுமாகும்
பண்பான மாங்கிஷச்சிலை பேருமாமே. (140)

மாந்துளிர்க்கல்லின்பெயர்.

மாந்துளிர்க்கல் பேரினுட மார்க்கங்கேளு
மகத்தான ரவிதிறந்தே நிறமுமாகும்
தேன்றுளிக்கல் தீபநிறஞ் சென்னிறகுமாகுஞ்
செயலான கோக்குமா நிறமுமாகும்
வான்றுளிர்க்கல் மாதளம்பூ நிறமுமாகும்
வலிநிறமாஞ் சேவிநிறமாம் வம்புநிறமாகும்
தான்றுளிர்க்கல் திகிரிக்குள் கலந்தசிலையாகுங்
கடியதோர் நாமமெல்லா மாந்துளிர்பேரே. (141)

காஸ்மீரக் கல்லின் பெயர்.

காஸ்மீரப் படிகப்பெயர் கருதக்கேளு
கயிலையுறை சிவனுடைய தேகமாகும்
தேசுமிர்த தேவிக்கு முத்திரையுமாகுந்
திங்கள்மாலைக் கடைக்கன்செஞ் சடையோனுகும்
பூஸ்மீர வச்சிரமாம் வேடமாகு
பூமிக்கு நாயகன்றன் மதிகாந்தியாகும்
ஆஸ்மீர அவனென்ன காந்தியாகு
மறிந்துரைத்த காஸ்மீரப் படிகந்தானே. (142)

கற்காவின் பெயர்.

கற்காவிப் பெயர்தனையே கருதக்கேளு
கனமான மந்துரவிச் சிலையுமாகும்
மற்காவி மருவியசெஞ் சிலையுமாகும்
வளமான செந்துயர்மான் சிலைச்செம்மண்ணும்
அற்காவி ஆந்துயர்தான் காவியாகு
மாதுரவிச் சிலைகாந்தி யதிகமேனி
நற்காவி நாதாந்தி தருக்குங்காவி
நலமான கற்காவிப் பேருமாமே. (143)

செம்புமணலின் பெயர்.

செம்புமணற் பெயர்தனையே செப்பக்கேளு
சிவந்திட்ட லோகமணஞ் சேவ்வாய்மண்ணும்
கம்புமணற் கவ்வாய்தான் தாம்பிரமுமாகுங்
கம்பிலச்ச முண்ணுகுங் குலப்பமாகும்
நம்புமணல் நவ்வாய்ச்செம் பொடியுமாகும்
நாடியசெங் கோலமா முதுமண்ணுகும்
வம்புமணல் ரவப்பிரிய மண்ணுமாகும்
மாசற்ற செம்புமணல் பேருமாமே. (144)

நாகமணலின் பெயர்.

நாகமண லின்பெயரை நயந்துகேளு
நலத்தஞ்சு வர்ணத்தா னேமவித்து
மீகமணல் மின்னலாந் தளுக்குத்தானும்
விளங்கியதோர் சீர்த்தாலன் தாசிப்புத்திரன்

நாகமணலஞ் சுவர்ணன் மழகாமவாதி
அவனிஷ்டம் நாதாகும்வலஞ் சக்கியனுகும்
பாகமணல்தார் சுத்திமீருது கிஷ்ணமாகும்
பரிவான சோர்னமாம் நாகமணல்பேரே. (145)

வங்கமணலின் பெயர்.

வங்கமணல் பெயர்தனையே வகுக்கக்கேளு
வடிப்பிளையின் வங்கமா மாருதியிநாதம்
கோங்கமாங் கெடிப்பின யடிப்பினையுமாகுங்
குடிலந்தான் சவளையாங் கோஷ்டவங்கம்
நங்கமாந் திரம்புவலி நாகவங்கம்
நலமான மாயுச்சம் பூதிலோகம்
தங்கமாங் குப்பியமாங் கைப்பினையுமாகுஞ்
சாற்றியதோர் நாமமெல்லாம் வங்கமாமே. (146)

வெள்ளீய மணலின் பெயர்.

வெள்ளீய மணல்தனையே விளம்பக்கேளு
மித்துருகும் புதுமையாம் வேதைச்சத்துரு
கள்ளியாங் காளகத்தின் சத்துருவாங்
களங்கெல்லாங் கெடுக்கின்ற காளியாகும்
நள்ளியா மனத்தருவா நாட்டியநாதம்
நலமான வெள்ளிபடி நருக்கித்தூளாம்
தள்ளிய மயசுபடில் தண்டவாளஞ்
சாரியதோர் பேரெல்லாம் வெள்ளிமணலாமே. (147)

வெள்ளி மணலின் பெயர்.

வெள்ளியுட மணற்பெயரை விளம்பக்கேளு
வெண்மணலாம் வெள்வாரி ரசிதமாகும்
குள்ளியா மின்மணலாங் குருமணலுமாகுங்
குணக்குமணல் தராமணல்கூர் மைமணலாங்
புள்ளியமாம் சோமமணல் மூரணமணலாகும்
புகழான மதிமணலாந் துய்யனுகும்
ஒள்ளியா மருபியின் மணலுமாகும்
நோக்கமா மணலெல்லாம் வெள்ளிமணலாமே. ()

ஏமமணலின் பெயர்.

ஏமமணலின் பெயரை யியம்பக்கேளு
யேற்றமா மேருவினில் வாரியாகும்
தாமமந்தான் குருவினுட தண்டாயந்தான்
தனிநாவல் சாரத்தாள் தாண்டவத்தாளாம்
வாமமாந் தனுக்களையு மதிசெம்பொற்றாள்
மாசற்ற வர்ணத்தாள் காஞ்சனத்தாள்
ஆமமா மபரஞ்சிதத் தாளுமாகும்
அறிந்துரைத்த நாமமெல்லாம் ஏமமணலாமே. (149)

லோகமணலின்பெயர்.

லோகமணல் பெயரினுட நுணுக்கங்கேளு
நோக்கான கருமணலின் வாரியாகும்
ஆலோக மாமயசான் மணலுமாகும்
ஆதிமகா நாதமா மாயிசுவர்த்தி
காலோக மாமலை யிரும்புசார்ந்து
கருமணலாந் தனுக்கான கிஷ்ணவர்ணம்
லோகமா மூலமலையின் வாரியாகும்
ஓங்கியதோர் மணலெல்லாம் லோகமணலாமே ()

மயிலிறகின்பெயர்.

மயிலிறகின் பெயர்தனையே மருவிக்கேளு
மயூரமயில் மன்னுயிரி லிராட்சதன்றான்
கயிலிறகு மேகத்திற் களிக்குந்தாசி
கதிர்வேலர் தானேறும் வாகனமுமாகும்
துமிலிறகு யிமையாத கருங்கண்தோகை
மயிலிறகுதோகையெல்லபம் பரப்பிவிரித்தாடுமயிலிறகு
கயிலிறகு கருவின்பலர் கலாபமயிலிறகுங்
கருதியதோர் பேரெல்லா மயிலிறகின்பேரே. (151)

கருஞ்சுக்கானின் பெயர்.

கருஞ்சுக்கான் பெயர்தனையே கருதிக்கேளு
கருமணலிற் சுக்சூனுங் காவளைச்சுக்கானும்
தருஞ்சுக்கான் தருமணலிற் சுக்கானுகுந்
தனிக்காகச் சுக்கானுந் தவளைச்சுக்கான்

மருஞ்சுக்கான் மணற்பொருக்குஞ் சுக்கானகும்
மாசற்ற சேர்ந்ததரும் பாரையாகும்
அருஞ்சுக்கா னருவிக்குள் கறுத்தசுக்கான்
அழுக்கான கருஞ்சுக்கா நாமமாமே. (152)

காணகக்கல்லின் பெயர்.

கானகக்கல் பெயர்தனையே கருதக்கேளு
கரும்புள்ளிக் கல்லுத்தான் வரிக்கல்லுமாகும்
ஊனகமா மரக்கல்லு வுளுக்கல்லாகும்
உத்தமமாஞ் சாரைக்கல் செம்பிரையுமாகும்
பானகக்கல் பவழக்கல் பாக்குக்கல்லு
பாங்கான நீர்க்கல்லு பருப்புக்கல்லு
தேனகக்கல் அடவிக்கல் செம்மைக்கல்லு
செப்பியதோர் திறமெல்லாம் கானகக்கல்லே. (153)

குருந்தக்கல்லின் பெயர்.

குருந்தக்கல் லின்பெயரைக் கூறக்கேளு
கொடுஞ்சாணைக் கல்லாகுங் கோளகவச்சிரமாம்
நெருந்தக்கல் நீள்வயிரம் நேரோத்ததூர்மம்
நிலையான வாளகப்பூச் சிலையுமாகும்
மருந்தக்கல் மருவியதோர் நாமமாகு
மகத்தான கூரியதோர் வாள்கல்லாகும்
திருந்தக்கல் தீக்கல்லு சிறப்பாங்கல்லு
செப்பியதோர் பேரெல்லாங் குருந்தக்கல்லே. (154)

ரசிதமலையின் பெயர்.

ரசிதமலை பெயர்தனையே நவிலக்கேளு
நயங்குகின்ற ஈசான மேருவாகும்
குசிதமாஞ் சயிலாதி வெள்ளிக்குன்றங்
கொடுமுடியின் பறுவதமா மதிமலையுமாகும்
தசிதமா மதன்சோலை தன்மதியினுமந்
தளுக்கான கயிலாசங் கண்ணிதலோன்வெற்பு
உசிதமா மிறைவனவர் க்ஷத்திற்செய்தார்
உற்றதோரு நாமமெல்லாம் ரசிதமலைப்பேரே. (155)

ஏமமலையின் பெயர்.

ஏமமலை யின்பேரை யியம்பக்கேளு
உற்றமா மேருவெண் ணுவற்சாரல்
ஆமமா மாலையாங் பொன்னசலமேரு
அமரர்க்காய் வேலைவிட முண்டானகைவில்
தாமமாஞ் சாம்பூந்தம் சுந்தரப்பொன்மலையாம்
சதாசிவன்றன் வாசமாம் புவியின் மையம்
சேமமாங் கொடுங்கையான் தெருவனமாகுஞ்
செப்பியதோர் பேரெல்லாமே மமலையாமே. (156)

நாகமலையின்பெயர்.

நாதமலை பெயர்தனையே நவிலக்கேளு
நலமான மந்தார மணிமுடியின்சர்ப்பம்
வீகமாம் விந்தரப் பூச்சாரமாகு
மேவியதோர் வாசுகிதான் விஷங்கடைவாயுடைக்கும்
ஆகமாங் குலவரையா மருந்தாங்தூரம்
ஆயிரம் பணுமுடியழகு யெயிற்றரவம்
மீகமா மின்னரைத்தன் மணிச்சுடிகையாவும்
வியங்கியதோர் பேரெல்லாம் நாகமலையாமே. (157)

வங்கமலையின்பெயர்.

வங்கத்தின் மலைப்பெயரை வகுக்கக்கேளு
மாருதிக் குடிலமா மாயியுடபீசம்
சிங்கத்தின் குவடுமாங் திருடகற்றுங்குடிலங்
திறமான மாசற்ற மலையுமாகும்
பங்கத்தின் குவடுமாம் பானுமின்மூலம்
பாசத்தை யறுக்கின்ற பருமலையுமாகும்
தங்கத்தின் குவடுமாம் புசங்கமாகுஞ்
சாற்றியதோர் பேரெல்லா வங்கமலையாமே. (158)

காரியமலையின்பெயர்.

காரிய மலைப்பெயரைக் கருதக்கேளு
காரிக்கு மலையாகு கானகத்தினீயம்
வாரியமாம் நாரிபரி சினமுமாகு
மகத்தான நமனுகும் பரிக்குத்தானுமாகும்

மாரீயச் சவளையா மணியேனுக்காரீய
மகத்தான பாரியா மலையுமாகும்
நாரியக் கனகமாங் தாம்பிரமுமாகும்
நாடியதோர் பேரெல்லாங் காரியமலையே. (159)

அயமலையின் பெயர்.

அயமலையின் பெயர்தனையே யறியக்கேளு
ஆதியா முபரசமாம் வாயுவாகும்
புயசிலையாம் புகண்டகத்தின் மலையுமாகும்
பேரான கருலோக மலையுமாகும்
கயசிலையாங் கடுவயசு குண்டமாகுங்
காட்டிடவே ஆயுதத்தை யிழுக்குமலையாகும்
வயசிலையா மயலோக சிலையுமாகுங்
வளர்சிவனுள் மலையாம் அயமலையின்பேரே. (160)

திராமலையின்பெயர்.

திராமலையின் பெயர்தனையே செப்பக்கேளு
செங்கோட்டத் திரட்சியாம் சிறியசெம்மலையாம்
அராவட்டக் குவடுமாம் நந்தகன்பீட
மடிக்கவே நறுங்கின்ற மலைதானுமே
விராவெட்டை யோகமாங் கலிப்புமலையாகு
மெழுகுகட்டி வார்க்கின்ற லோகமாகும்
முராமுட்டி முரியானி மலையுமாகு
முட்டியதோர் பேரெல்லாங் திராமலையுமாமே. (161)

வெங்கலமலையின் பெயர்.

வெங்கலமா மலையின்பெயர் விளம்பக்கேளு
வெங்கோஷ்டங் கோடுமலைகோ மணிக்குன்றங்
கடுவோசைக் குருங்கிண்ணித் தருளுவையாகும்
கிண்கலமாங் கெடியாரங் தராசுமாகுங்
கிண்கிணியாம் நாதமாங் கிலுக்குமாகும்
உண்கலமா மேஷகபுட் பகமுமாகும்
ஓங்கியதோர் பேரெல்லாங் வெண்கலமுமாமே. (162)

செம்புமலையின்பெயர்.

செம்பினுட மலையின்பேர் செப்பக்கேளு
 செம்பொன்னும் ரவிகுலத்தின் குன்றமாகும்
நம்புகின்ற காஷாயம் நாதாந்தியாகும்
 நலங்குசெம்பாங் களிம்புமனு ரவியின்மேரு
திம்புகின்ற சூரியனுந் திரியம்பகமாகுஞ்
 சேருகின்ற மிலேச்சமுக ரத்தமலையாகும்
தம்புகின்ற நாதாந்தக் கோடுமோதுங்
 கருதியதோர் நாமமெல்லாஞ் செம்புமலையாமே (163)

பித்தளைமலையின்பெயர்.

பித்தளையின் மலைப்பெயரைப் புகலக்கேளு
 பேரான குடவனென்ற பருவதந்தான்
பத்தளை நற்காலிக் கமிர்தியாகும்
 பாங்கான வர்க்கூடம் கோங்குமலையாகும்
தத்தளர்ச்சி நீர்ச்சரிகை மலையுமாகும்
 கலைவிரிச வூரலென்ற யேமமாகும்
நத்தளையின் மலையர்க்கும் நாரும்பொன்னும்
 நாட்டியதோர் பேரெல்லாம் பித்தளையுமாமே. (164)

உபரசப்பேரின்பெயர்.

ஆமப்பா உபசரங்களுற் றிரண்டுபத்து
 அறிந்துமட்டு மாராய்ந்து மாயியைத்தான்கேட்டு
ஒமப்பா மூலத்தி லோங்கிநின்ற
 வுற்றதோரு பாட்டரைத்தான் கேட்டுகேட்டு
சேமப்பா வையர்சொல்லக் கேட்டுக்கேட்டுத்
 திறமான சித்தர்களைத் தொழுதுகேட்டு
நாமப்பா நிகண்டுக்குட் கருவையெல்லா
 நலமாகப் பார்த்தறிந்து சொன்னேன்பாரே. (165)

பாரப்பா வுபரசங்க ளூற்றிரண்டுபத்தும்
 பண்பான பேரையெல்லாஞ் சொல்லக்கேளு
நேரப்பா துரிசியோடு பொன்நிமிளைக்கஞ்சம்
 நேரான ரசிதமோடு லோகங்காகம்

சேரப்பா வைந்துவகை நிமிளையாச்சு
சிறப்பான யேமமென்ற அப்பிரேகந்தானும்
காரப்பா சிவப்புவர்ணம் கிஷ்ணவர்னம்
கனகமாக சுவேதவர்னமப் பிரேகந்தானே. (166)

தானான வூசியென்ற காந்தத்தோடுஞ்
சார்பான வரக்கென்ற காந்தந்தானும்
ஊனான உருளையாங் காந்தத்தோடு
முயர்ந்துநின்ற கற்காந்தம் நாலுமாகும்
வானான கல்நாருஞ் சாத்திரபேதி
மகத்தான சிலாசத்துக் கல்மதந்தான்
தேனான வஞ்சனக்கல் கருங்கல்படிகஞ்
சிறப்பான சுக்கான்கல் வீரக்கல்லே. (167)

கல்லான வந்தகக்கல் கெருடபட்சி
கனமான வோடுசெங்க லெலும்புமயிர்கண்டு
நல்லான் நாகமாம் வண்டுநத்தை
நீலமான கிளிஞ்சியோடு வாமைமுட்டை
வல்லான யானைக்கோம்பு பன்றிக்கோம்பு
மாட்டிலுட கோம்போடு கலைக்கோம்பாடு
செல்லான பூநாக மிந்திரமாங்கோபம்
சிறப்பான பலவோடுசெவ் வட்டைதானே. (168)

தானென்ற தவளையோடு கரடிகோழி
சங்குடனே முத்தான சிப்பியாகும்
வேனென்ற முத்தோடு பவளங்கோமேதகம்
விளங்கியதோர் புட்பராகம் வயிரம்பச்சை
வானென்ற வயிடூரியம் சிவப்புநீல
மருவியதோர் கெண்டகச்சிலை சூடாலைக்கல்
ஊனென்ற மஞ்சக்கல் மர்க்கல்தேக்கல்
லுறுதிமாங் தவளைக்கல் சிலாவங்கமாமே. (169)

ஆமப்பா சிலாநாக மன்னபேதி
யஸ்தியாம் பேதியோடு சொன்னபேதி
வாமப்பா வுவர்மண்ணு வாங்கிஷபேதி
மகத்தான கற்கிட்டங் கருமணலின்செம்மண்

ஓமப்பா சுத்தமண் முடவாட்டுக்கா
லுயர்ந்துநின்ற குருவண்டு பன்றிமுள்ளு
ஏமப்பா யெலிமுள்ளு கடல்நுரையினோடு
ஏற்றமா மீனெலும்பு முள்சங்குமாமே. (170)

ஆமேதான் பேரோசனை நாகபச்சை
அப்பனே மரகதமாம் பச்சையோடு
போமேதான் புத்தானபவளங் வெள்ளைச்சுக்கான்
பேரான கதண்டோடு காகசிலையாகும்
காமேதான் கஸ்தூரி காண்டாமிருகங்
கடற்பாசி மந்தாரஞ் சிலையினோடு
வாமேதான் மாங்கிஷச்சிலை சாலக்கிராவங்
துளிர்க்கல் காஸ்மீரப் படிகக்கல்லே. (171)

கல்லோடுகற் காவிசெம்பு மணலுமாகுங்
கனமான நாகமணல் வங்கமணற்றனும்
பில்லோடுவெள் ளீயமணல் வெள்ளிமண்ணும்
பேரான வெம்மணலோ லோகமணலாம்
மல்லோடு மயிலிறகு கருஞ்சுக்கான்கல்லு
மகத்தான கானகக்கல் குருந்தக்கல்லு
நல்லோடு ரசிதசிலையே மசிலையாகும்
நாகசிலை வங்கிலை வெள்ளீயச்சிலையே. (172)

சிலையான வயசிலையுந் திராவிடைசிலையுந்
திறமான வெண்கலவா மலையினோடு
நிலையான செம்புமலை பித்தளையின்மலையும்
நேர்ப்பான வுபரசங்கணூற் றிரண்டுபத்தும்
மலையான வுபசரத்தை வாதியெங்கேகாண்பான்
வாய்ப்பேச்சாய்ச் சொன்னக்கால் கிட்டாதப்பா
தூலையான தேசத்தைத் திரிந்துசுற்றிச்
சூட்சமெல்லா மாராய்ந்தால் கிட்டும்பாரே. (173)

கிட்டுவது வெகுநாளிற் கிட்டவேணும்
கேடியான மலைகளிலே சுற்றிப்பார்த்து
மட்டுவது புலிகரடி யேனம்புள்ளு
மகத்தான நாகங்கள் மிருகமுண்டு

தேட்டுவது மந்திரத்தால் வசியஞ்செய்து
தேசத்தில் சஞ்சரித்து கேட்டுகேட்டு
பட்டுவது பசியடங்கக் கற்பமுண்டு
பாங்கான பிராணுயம் பண்ணிக்கோள்ளே. (174)

பண்ணியபின் வெகுநூலை யாராய்ந்துபார்த்து
பரிவான கருவையெல்லா மனதிலேண்ணி
உண்ணுவதுக் கிடந்தானும் பண்ணிக்கோண்டு
வுறுதியாய் மனந்தன்னை யோக்கப்பண்ணி
கண்ணுவது சூதத்தை யெளிதில்கட்டி
காதிலோன்று வாயிலோன்று சிரசிலோன்றுவைத்து
நண்ணுவது தேவியைத்தான் மனதிலுன்னி
நலமான மலைகளிலே திரிந்துபாரே. (175)

பாரப்பா வுபரசங்க ணூற்றிரண்டுபத்தும்
பாங்காக வோவ்வோன்றுய் விரித்துச்சோன்னேன்
வாரப்பா வுபரசங்கள் வாதியேங்கேகாண்பான்
வாய்ப்பேச்சால் சோன்னுக்கால் மண்ணுமில்லை
ஓமப்பா வுபரசங்கள் சாரணைக்குவாதி
யுத்தமனே வோவ்வோன்றில் வேதைகோடி
சேரப்பா சூதத்திற் சாரணையேசெய்து
சேர்ந்தோட வேணுமென்று லுபசாரத்தைத்தேடே. ()

தேடவே சீவனத்துக் கிடமேயாக
சித்தருட மரபெல்லாங் கண்டுபேச
வாடவே யிதிலகுவு முன்னேபாரு
மகத்தான வுபாசத்தில் சுளுக்குவேதை
நாடவே அயப்போடிதான் பலமும்பத்து
நலமான வேலுமிச்சங் பழச்சாற்விட்டு
நீடவே மூன்றுநா ளூறப்போட்டு
நேர்ப்பாகக் கழுவியதை யுலரப்போடே. (177)

உலர்ந்தபின்பு வேண்காரம் பலந்தானைந்து
உத்தமனே கல்வத்தி லிட்டுநீயும்
மலர்ந்துநின்ற சேவ்வல்லிப் பூச்சாற்விட்டு
மாளவே மூன்றுநாள் நேகவரைத்து

கலந்துநின்ற கிழங்குச்சாற் விட்டுக்குழப்பி
கலரவிட்டு அப்போடியை யொக்கத்தானும்
உலர்ந்துநின்ற மூன்றுநாள் பாவகமேபண்ணி
மூசைக்கே யெடுத்திட்டு வுருக்கிடாயே. (178)

அயச்சத்தின் பேயர்.

உருக்கிட்வே மணிமணியா யிறங்கும்பாரு
உத்தமனே முன்னுரைத்த காரங்கூட்டி
நெருக்கிடவே பூச்சாறு கிழங்குச்சாறு
கூட்டிநேக முரைத்துமுன்போல வுருக்கித்தீரு
நருக்கிடவே யிப்படியே யைந்துதிரமுருக்கி
நலமான சத்தையெல்லாம் பொருக்கிக்கொண்டு
அருக்கிடவே பூச்சாற்றில் மைபோலாட்டி
யவ்விடைக்குத் துரிசியோடு கட்டிவாங்கே. (179)

அயச்சேம்பின்பேயர்.

துருசியின்மேற் சத்தான அயத்தைத்தானுஞ்
சுகமாக வேபித்துக் காய்ந்தபின்பு
துருசிநின்ற அமத்தினீரை யிரண்டுக்குமுக்கால்
தெளிவாக கெந்தகத்தை நிறுத்துக்கொண்டு
துருசிநின்ற அயத்துநீரை யிரண்டுக்கும்பாதி
சூதனைத்தா னிறுத்துமே கூடப்போட்டு
துரிசிநின்ற அயத்துநீரை யிரண்டுக்குங்கால்தான்
சுயம்பான வீரத்தைக் கூடப்போடே. (180)

போட்டேல்லாம் வாய்நீரை விட்டுஆட்டிப்
போலிவாகத் துரிசியின்மேல் கவசங்கட்டி
வாட்டேல்லாம் ரவிதனிலே யுலரப்போட்டு
வளமான கிளிஞ்சியென்ற சுண்ணந்தானும்
நீட்டேல்லாம் விரல்பருமன் கவசங்கட்ட
நேரான சீலமண்தான் பிலக்கச்சேய்து
காட்டேல்லாங் கனயெருவிற் புடத்தைப்போட்டுக்
கசக்காம லேடுத்துமே கவசம்வாங்கே. (181)

வாங்கிய சுண்ணும்பை யெரிந்துப்போட்டு
வகையாக மருந்தையெல்லாங் குகையிலிட்டு
தேங்கியே சில்லிட்டுச் சீலேசெய்து
சிறப்பாக வூதிடவே ரவியுமாகும்
ஓங்கியே யிச்சேம்பை மதியில்தானும்
உத்தமனே யிருபதுக் கோன்றேயீய
வாங்கியே பார்த்தாக்கா லேழுகாணு
மகத்தோர்க்குத் தோண்டுபண்ணு வழிச்சோல்வாரே.

சோன்னதோரு சேம்புதனேச் சேலவுசேய்துக்கோண்டு
சுயம்பான மலேகளிலே வுபசரத்தைத்தேடு
கன்னதோரு காட்டிலுள்ள வேடர்களைக்கேளு
காட்டிலுள்ள கோபாலர் தன்னைக்கேளு
சின்னதோரு மலேகளிலே சித்தர்களைவணங்கு
சேப்புவா ருபரசங்க ளிருக்குந்தானும்
பன்னதோரு பாஷாணப் பகையுஞ்சோல்வார்
பரிவாகத் தோண்டுபண்ணி வணங்கிடாயே. (183)

குருமோழியின் பெயர்.

வணங்கியே நிற்கையிலே விசேஷஞ்சோன்னல்
வகையுடனே புறம்பாக நின்றுபேசும்
தணங்கையிலே நல்விசேஷஞ் சோன்னராகில்
தாட்சியில்லா வேலேசெய்து தயவாய்ப்பண்ணு
மணங்கையிலே மனதிரங்கப் பண்ணிக்கோண்டு
வாய்ப்பேச்சு சோல்லுமுன்னே வேலேசெய்து
விணங்கையிலே யடிமைபோல் காத்திருந்து
வேணுமென்ற பணிவிடைக்கு முன்னல்நில்லே. (184)

முன்னுக நிற்கையிலே மனமகிழ்ந்து
மோசமில்லே யேன்றுசோல்லி மனதிலேண்ணி
பின்னுக வாதத்தைச் சேய்யச்சோல்வார்
பேராக சரக்குகள்தா னிருக்குந்தானம்

கண்ணுகச் சொன்னுக்கா லெடுத்துவந்து
கைக்கொடுக்கில் முன்வைத்துக் காரியங்கள்செய்வார்
நண்ணுகக் கருவையெல்லா மறிந்துகொள்ளு
நலமான குளிகைகள்தான் செய்வார்பாரே. (185)

பாரப்பா சாரணைதான் செய்யுமார்க்கம்
பரிவான கருவையெல்லா மனதிலுன்னு
நேரப்பா கருவறிந்து கொண்டாயானல்
நினைவழிந்து மதத்திருற் கெற்சிக்காதே
சேரப்பா முன்போலே தொண்டுபண்ணு
செய்தொழிலை மறவாதே சித்திபண்ணு
காரப்பா நற்சீஷ னென்றுசொல்லக்
கடாட்சம்வரப் பண்ணியே காத்திடாயே. (186)

காத்திட்டால் காயசித்தி யேமசித்தியாகுங்
கைம்முறைதா னறிந்தாக்கால் குளிகைசித்தியாகும்
காத்திட்டா லுபரசங்க ணூற்றிரண்டு
பத்துங்கார சாரங்கள்முத லிருபத்தைந்துங்
காத்திட்டால் மலைகளிலே யிருக்குமூலி
கடிதான பாஷாண முதகஞ்சூதங்
காத்திட்டால் கைக்குள்ளாய்ச் சிக்குமப்பா
கடிதென்று விட்டாக்கா லெல்லாம்போச்சே. (187)

போச்சப்பா முப்பத் திரண்டுதாது
பேரான மலைகளிலே பிறக்கும்பாரு
பாச்சப்பா பரிபாஷை நாமமாகப்
பாடினுர் வாயுள்ள சித்தரப்பா
தோச்சப்பா பாஷாணப் பிறப்பிதென்று
சூளுக்காகப் பாடியதால் பலந்தானேது
மாச்சப்பா பாஷாணப் பிறப்பையெல்லாம்
வரிசையா யினத்தோடுஞ் சொல்வேன்பாரே. (188)

பாரப்பா பாஷாணம் பச்சைதன்னில்
பாய்ச்சினுல் பழுக்கிற பண்புமுண்டு
நேரப்பா நிகண்டுக்குள் திறந்துசொல்வேன்
நேர்ப்பெல்லா மனதிலெண்ணி யுன்னிப்பாரு

சேரப்பா யிம்முறைகள் பொய்யென்றெண்ணில்
சிவமென்றும் பரமென்றுஞ் சேரப்பொய்யாம்
காரப்பா அஷ்டகர்ம வித்தைக்குள்ளே
கைகண்ட வித்தையென்ன வாதந்தானே. (189)

பாஷாணம்-௩௰௨-ன்பெயர்.

தானென்ற பாஷாணத் தொகுப்புக்கேளு
சாங்கமமுப் பத்திரண்டு தாதும்
கானென்ற கற்கடங்கோ ளகமுஞ்சூதங்
காட்சியா மரிதாரங் கெந்தகமும்வீரம்
வானென்ற வைராக்கிராந்தந் தாலம்பமுத்தம்
வகையான சீர்பாதந் தொட்டிக்குதிரையில்
ஊனென்ற சங்கமொடு கெவுரிபாஷாண
முத்தமனே துத்தமென்ற பாஷானமாமே. (190)

ஆமென்ற பலன்றுருகங் காந்தம்லிங்கம்
அரமான சரக்கரண்டந் தாளகமுஞ்சிலையுங்
காமென்ற அவுப்பலமுஞ் காளாங்குமாகும்
கற்பரியுங் கல்லான பாஷானத்தோடு
ஓமென்ற அஞ்சனமும் பாஷாணத்தோடு
உத்தமனே கச்சாலஞ்சி தாங்கமாகும்
தேமென்ற சிலாமதமுங் காரமுகியினோடு
சிறப்பான அப்பிரேகம் வெள்ளையாமே. (191)

ஆமப்பா பாஷான முப்பத்திரண்டும்
அப்பனே மலைதோறும் பிறக்கும்பாரு
ஓமப்பா மலைபேரைச் சொல்லக்கேளு
உத்தம ருத்திரமென்ற கூட்டத்தோடும்
காமப்பா கலியாண கெந்தமாதம்
காரணமா மேமகூய மாரம்பகூடம்
போமப்பா சனிகண்டம் பூதகூடம்
பேரான லட்சுமியின் விசாலந்தானே. (192)

தானென்ற பத்திராலயங் கேதுமந்தந்
தயங்கியதோர் கொங்கணமும் வடக்கேயப்பா
வேனென்ற காசிக்குத் தெற்கேகேளு
விந்தையா ரண்ணியமுஞ் சிந்துமேரு
தானென்ற தனசாலைக் கிராமத்தோடுங்
கடியதோர் கிரவுஞ்சமென்ற மலையுங்கேளு
மானென்ற மல்லிகார்ச் சினத்திலப்பா
மகத்தான சித்தருண்டு கோடிதானே. (193)

தானான கொல்லிமலை பண்ணிமலையோடு
சதுர்முகமாம் பர்வதமு மடுக்கக்கேளு
வானான பொதிகையிலே யகஸ்தியர்க்கு
வாசமகத்தான் சிவரூப ரிஷிதானப்பா
கோனான அவர்கையிலே வேடங்கர்விக்
கொண்டாக்கால் கேவுனத்தில் திரியலாகும்
தேனான மேருவுக்கு வடக்கேகேளு
தெட்சிணா மூர்த்திகையில் வேடந்தானே. (194)

கைவேடங் காவிகொண்டால் நாலுதிக்குஞ்செல்லுங்
கலந்துநின்ற சிற்றண்டம் பேரண்டமட்டும்
கைவேடங் காவிகண்டால் வாவாவென்பார்
கருதியதோர் புவனத்தில் சித்தரேல்லாங்
கைவேடங் காவிகண்டால் வரிசைகேளு
கருதியதோர் சிரசில்வைப்பார் சின்மயத்தின்காவி
கைவேடங் காவிகண்டால் ரிஷியுடையகாவி
கருதியதோ ரிடையிற்குள் கட்டுவாரே. (195)

வாரப்பா வறுபத்துநாலு மரபுள்ளே
மகத்தான சீஷவர்க்கங் கோடியாச்சு
சீரப்பா சீஷவர்க்கஞ் சீஷர்களைச்சொல்ல
சிற்றண்டம் பேரண்டம் பரவிச்சப்பா
தாரப்பா தருமருக்கு ளடங்கினர்கோடி
சமாதியிலே யிருந்துரைத்த சித்தர்கோடி
பூரப்பா பூரணத்தி லயிசேர்ச்சார்கோடி
பேரான நாதாக்க ளாடுமொட்டே. (196)

நாதாக்கள் போதிகைவிட்டு அப்பாற்கேளு
நலமான தாடகையா மலைதானென்று
மாதான மகோதிரமா மலைதானென்று
மலைதனக்கு யிடைகளிலே குட்டிமலைக்கோடி
மூதான மலைதோறும் பாஷாணமுண்டு
மூலிகையோ வெகுகோடி யுதகமுண்டு
சூதான கல்லதுவுஞ் சூதமுண்டு
சூட்சமெல்லாங் குளிகையிட்டுப் பார்த்திடீரே. (197)

பார்த்திட்ட மகேந்திர சலத்துகுமப்பால்
பரிவான போதிகைக்கு வாயுமூலை
ஆத்திட்ட லட்சம்யோ சனைக்குமப்பா
லழகான தயிலந்தான் பட்டணந்தானென்று
நீத்திட்ட நிகளமது அகளங்கேளு
நேரான ஆயிரந்தான் காதமாகும்
தாத்திட்ட பட்டணத்து நவலோகங்கள்
நல்கியே மலைமலையாய் நிற்குங்காணே. (198)

சூதகக்கிணறின்பெயர்.

காணப்பா அம்மலையின் கீழேதானும்
கடிதான பாஷாண முப்பத்திரண்டு
மூணப்பா மலைசுற்றி கவிந்தாப்போல
வுத்தமனே பிறந்திருக்குந் தாதுதானுங்
தோணப்பா பட்டணத்துக் கப்பால்தானுங்
தூரமா யன்னூரு காதஞ்சென்றால்
ஆணப்பா யிமோகப்பர்வதந் தானென்று
அதிகமென்ன வாயிரத்தின் காதமாமே. (199)

ஆமென்ற மலையினுட நிகளங்கேளு
அலைந்துருண்டு கீழ்க்கடலில் முக்காதம்புக்கும்
வேமென்ற மேல்கடலில் முக்காதம்புக்கும்
விடுபட்டு நதியதிலே கோடாகோடி

காமென்ற மலையடியிற் கிணறேவைத்து
கலந்துநின்ற கிணறகலங் காணக்கேளு
நாமென்ற காற்காதம் நாலுதிக்குங்கிணறு
நலமான வாழ்வென்ன சேடனுடமுடியே. (200)

முடியளவுஞ் சூதமது தொட்டுநிற்கு
மூவுலகுந் தீயெரித்த வீசனுடவிந்து
நெடியளவுந் தொட்டவுடன் துரத்திக்கொல்லும்
நேராகக் குளிகையிட்டு கெவுனமாகி
கெடியளவுந் தேங்காயின் குடுக்கைக்குள்ளே
கெவுளியாத்தா னெடுப்பார்கள் துரத்தும்போது
துடியளவு ரவிதனிலே சொக்கிப்போவார்
சூட்சமிதை யறியாட்டால் ரேத்தும்பாரே. (201)

துரத்தியே வுள்ளுக்குள் சுளித்துக்கொல்லும்
திறமையாய்க் கொண்டுவந்தால் சுரூபசித்தி
மாத்திரையே பாஷான வர்க்கமெல்லா
மறவாம லெடுத்துமே மான்றேலிற்கட்டு
விரத்தியே வெவ்வேறு யெடுத்துக்கட்டு
விரவினு லொன்றேடே யொன்றுசேர்ந்து
இரத்தியே பிளகியெல்லாங் கெட்டுப்போகும்
எற்றமாந் தாதுடைய பேரைக்கேளே. (202)

கற்கடகப் பாஷாணத்தின் பெயர்.

கற்கடகப் பாஷாணப்பேரைக் கருதக்கேளு
காந்தமாங் கவுந்தகமாங் கல்லடிமூலங்
விற்கடக விந்தமாங் கஞ்சமாகு
மேலிமையாந் தாதுவா மேமபேதி
பற்கடமாம் பரணியாம்பார் மூலக்கரணி
பந்தரமாம் லோகத்தில் பரிசபேதி
நிற்கடமாங் கற்கடகப் பாஷாணந்தானும்
நிச்சயமாம் வெற்புதனி லுற்பத்திதானே. (203)

கோளக பாஷாணத்தின் பெயர்.

கோளகப் பாஷாணப்பேர் கூறக்கேளு
கோங்கமாங் கூவிளமாங் குந்தமாகுங்
காளகமாங் கவுந்தமாங் கந்தங்காரங்
கடியதோர் குளமரங் கோரந்தானும்

ஆளகமா மனந்தமாமய சிலவேதை
யாணிப் பாஷாணத்தால் தங்கமாகும்
நாளகமா மங்கமாம் நளினமாகும்
நாட்டினேங் கோளகப் பாஷாணப்பேரே. (204)

சூத பாஷாணத்தின் பெயர்.

சூதமென்ற பாஷாணஞ் சொல்லக்கேளு
சுந்தரமாஞ் சொல்குறியாங் தூமமாகும்
மாதமென்ற ஆதிவிராட் டியனுங்கெந்த
மந்தரமாங் காமமாங் திரந்தநாகம்
வாதமென்ற மாருதப் பிரமன்ருனுகு
மந்திரமாங் களஞ்சியாம் வங்கபேதி
வீதமென்ற விந்திரமாம் வேறுப்பாய்நின்றேன்
விளங்கினேஞ் சூதப்பா ஷாணப்பேரே. (205)

அரிதாரத்தின் பெயர்.

அரிதாரப் பெயர்தனையே அறையக்கேளு
ஆதியா மால்பாக மருவுலட்சுமிதான்
பெரிதான கோனந்தி பீதகந்தானுகும்
பின்சாமா மிச்சிரகெந் தகமுமாகும்
தெரிதான நடமண்டனம்பிடா லகமுமாகும்
சேல்கண்ணிச் சிறியமுகக் காட்சியாகும்
வரிதான ஆல்கொடிச்சி யரிதன்சத்தி
வளமான கெவுரமர மரிதாரப்பேரே. (206)

கெந்தகத்தின் பெயர்.

கெந்தகத்தின் பெயர்தனையே விரும்பக்கேளு
கெந்தோக கெந்தகமாங் தனமுமாகும்
கந்திப்பொன் வர்ன்னியாங் காரிழையினுதங்
கவிகுருந்தம் சவுகந்திரா சதரோணிதம்
தந்திசத்தி தன்மரதக் குணச்சலாகும்
தவணியமாம் நாரும்பூருவப் பட்சணமுமாகும்
கெந்தியாஞ் செந்தூரத் தாதியாதுஞ்
செப்பியதோர் பேரெல்லாங் கெந்தகமுமாமே. (207)

வீரத்தின் பெயர்.

வீரத்தின் பெயர்தனையே விரும்பிக்கேளு
விளங்கியதோ ரதீரஉத் திரனுமாகும்
மாரமா மாதிவெள்ளைச் சேந்தூரமாகு
மழகான வாதிகட்கு கேற்பமாகும்
வாரமாம் வகாரத்தின் றலைவனாகு
மன்னியதோர் பூவிந்து வுத்தமசேவகனாகும்
தாரமா மலைதனிலே யுற்பவித்த
தனிசுயம்பு வீரத்தின் பேருமாமே. (208)

வைக்கிராந்தத்தின் பெயர்.

வைக்கிராந்தப் பாஷாணப் பேரைக்கேளு
வையகமாங் குமுதமாமுகிற் குன்றமாகும்
கையகமாம் வெகுகோடுமை கானிற்குன்று
கருநாகந் தன்னுக்குள் வேதியாகி
வையகனல் பூமிமர மலையினாத
மாருதத்தி லுற்பவித்த அமிதமாகும்
நையகமாங் குவடுதனி லுற்பவித்த
நலமான வைக்கிராந்தப் பேருமாமே. (209)

தாலப் பாஷாணத்தின் பெயர்.

தாலப்பா ஷாணப்பேர் சாற்றக்கேளு
தாலமாங் குருந்தமாஞ் சாதகற்பம்
மூலமாங் கடுங்கும்ப மும்மதக்கோடு
முயற்சியாங் கோலமாம்பனங் காய்ப்பாஷாணம்
நாலமாம் நற்சாகங் கோடுங்காரந்தானும்
நலமான குன்றத்தில் நயந்தசத்தி
ஆலமாங் தாலமாஞ் சித்திசித்தி
யமைந்ததெல்லாந் தாலப்பா ஷாணந்தானே. (210)

முரத பாஷாண த்தின் பெயர்.

முரதபா ஷாணப்பேர் மொழியக்கேளு
மூர்த்தியாம் புங்கவனுங் கவனமாகும்
அரகதனு மாதியா மனந்தனாகு
மங்கணனு மடேக்குக்குள் ளைமந்தோனாகும்

கரதலனுங் காலாங்க னுதியாகுங்
காராள பூரணமேகுங் கவானவேந்தன்
பரதன முரதனேனென்ற பாஷாணத்தைப்
பாடியதோர் பாட்டெல்லா முரதனமே. (211)

சீர்பந்தப் பாஷாணத்தின் பெயர்.

சீர்பந்தபாஷாணஞ் செப்பக்கேளு
தில்லையாம் நடம்புரிவான் றிரியம்பகனாகும்
கார்பந்த னகிபந்தன் கபாலமாகுங்
கடுமேகச் சாய்கையோன் காலாங்கனாகும்
ஆர்பந்த னம்பகனுஞ் சம்புதானும்
அந்தகனுஞ் செங்கோன யமைந்தனாகும்
பார்பந்தன் பரமன்பா யுருகோபத்தோன்
பாரமாஞ் சீர்பந்தபா ஷாணப்பேரே. (212)

தோட்டிப் பாஷானத்தின் பெயர்.

தோட்டிப்பா ஷாணப்பேர் சொல்லக்கேளு
தோத்திரமாம் பலகையாங் துலங்குபூவோடு
திட்டியென்ற சலாகைமங் தாரவேகி
சிறப்பான லோகங்கள் வேதியாக்கி
குட்டியென்ற கோத்திரமாங் குரிஞ்சிலாமேகு
வட்டிலே யுற்பவித்த கூர்மையாமே
தோட்டியென்ற கும்பகவிம் பகமுமாமே
சிறப்பான பேரெல்லாங் தோட்டிப்பேரே. (213)

குதிரைப்பல் பாஷாணத்தின் பெயர்.

குதிரைப்பல் பாஷாணங் கூர்ந்துகேளு
குரகதமா மரிவரசி துரகதமுமாகும்
விதிரைவிங் தங்கவுனி விளங்கியகற்பல்லு
மிகுந்தசுவன் சரமுத்து வாசியோனும்
பதிரைபந்தங் தந்தமாங் கத்துருவுமாகும்
பல்லுறுசெங் களபாகும் வரிசையாகும்
மதிரையந்தங் குதிரைப்பல் பாஷானமாகு
மலைதனிலே யுற்பவித்த தாதுதானே. (214)

சங்க பாஷாணத்தின் பெயர்.

சங்கமாம் பாஷாணப் பேரைக்கேளு
சஞ்சலமாந் தவளமாஞ் சாங்கமாமே
கோங்கமாம் குவடுதான் கோசமாமே
கூறியதோர் வெண்ணிறமாஞ் சவளமாமே
போங்கமாம் புவனமாம் புனிதனுமே
பொங்கியதோர் வாளமாம் கச்சமாமே
நங்கமாஞ் சங்கபா ஷாணத்துக்கு
நாட்டியதோர் பேரெல்லாம் நன்றுய்ப்பாரே. (215)

கௌரி பாஷாணத்தின் பெயர்.

கௌவுரியிட பாஷாண பேரைக்கேளு
கேகயமாம் பூகமாம் கெந்தமாமே
அவுரியிட பந்தமா மாகாயமாமே
ஆதியாம் குமரிதா னழகானமாஞ்சில்
பவுரியிட பாகமா மருந்துவாமே
பரிவான முருக்கன்தான் பாகையமாமே
உவரியா மெழிற்குமரி நீலியாகு
மூத்தமாங் கெவுரியிட பாஷாணப்பேரே. (216)

துத்த பாஷாணத்தின் பெயர்.

துத்தபா ஷாணப்பேர் சொல்லக்கேளு
தூம்பரமாஞ் சுந்தரமாந் தாதுவாமே
மத்தமாங் கோபமாம் வரம்புமாமே
வர்னக்க லாங்கந்தன் மகத்தாம்வேதை
நத்தமாஞ் சயிலாதி தனிலுதித்த
தாம்பூரக் கெற்பந்தான் ரசிதமாகும்
வத்தமாம் லோகத்திற் சார்ந்ததாது
மருவியதோர் துத்தப்பா ஷாணப்பேரே. (217)

பலண்டுருகப் பாஷாணத்தின் பெயர்.

பலண்டுருகப் பாஷாணப் பேரைக்கேளு
பரிவாகும் பங்கமாம் பாகம்போகம்
வலண்டுருக மதுரமாம் வாகந்தாக
மாந்தமாம் வெகுவிதம்பம் வாணிகுருகுலமாம்

வேலண்டுருகம் வேதைக்குக் குருவுமானேன்
வெற்புதனி லுற்பவித்த வெண்சாயத்தான்
நலண்டுருகம் லோகத்தை நயத்தவேகன்
நாட்டினபே ரெல்லாந்தான் பலண்டுருகமாமே. (218)

காந்த பாஷாணத்தின் பெயர்.

காந்தபா ஷாணப்பேர் கருதக்கேளு
கருநிறமாம் வாரிவாங் காலனுமே
சாந்தனுஞ் சனியனுங் தருநீர்பஞ்சாஞ்
சாதகமாஞ் சாட்சியாஞ் சிற்சிகந்தான்
ஊந்துமா மோங்கியதோர் வன்னிதானு
மோங்கல்தனி லுற்பவித்த வுத்தமன்றான்
காந்தமா மயசுக்குள் குருவாய்நின்றேன்
காட்டியதோர் பேரெல்லரம் காந்தமாமே. (219)

லிங்க பாஷாணத்தின் பெயர்.

இலிங்கபா ஷாணப்பே ரியம்பக்கேளு
ஏற்றமாஞ் சண்டகந்தான் வன்னிக்கற்பம்
இலிங்கமாஞ் சார்வான சேந்தூரந்தா
னியன்றதோர் சமரசமா மிலேச்சமாகும்
கலிக்கமாங் காரணமாம் லிங்கமாகும்
காஞ்சனஞ்சா னியம்மலைவு ராசமாகும்
மலிங்கமா மணிநாக மென்றுசொல்லும்
வருவியதோர் பேரெல்லாம்·லிங்கமாமே. (220)

சாக்கண்ட பாஷாணத்தின் பெயர்.

சரக்கண்ட பாஷாணப் பெயரைக்கேளு
சாம்பரம்பம் அம்புருத் தோணியாமே
குரக்காண்டம் கூர்ப்பகழி பல்லம்பாண்டம்
கோவங்கங் காண்டமம்பு கணையுமாமே
நரக்காண்டம் நல்குதனு பாணமாமே
நலமான காண்டீப மிந்திரமாமே
திரக்காணஞ் சித்திரகுஞ்சஞ் சிலிமுகமுமாகுஞ்
செப்பியதோர் நாமமெல்லாஞ் சரக்காண்டமாமே. ( )

தாளகத்தின் பெயர்.

தாளகத்தின் பெயர்தனையே சாற்றக்கேளு
 தாமரையாள் செந்திருவுக் கரியதேவி
மாளகமா மால்பாக மகத்தாம்லட்சுமி
 மாமலர்க ளிந்திரரை மஞ்சள்வர்ணி
கோளகமாம் குருங்கடியாள் குணசாலியளாகும்
 குணமான பாற்கடலி னருளிதானும்
ஆளகமா மாவலுடன் தாளகமுமாகு
 மதிகமா மவனிதனி லுற்பவித்ததாமே. (222)

மனோ சிலையின் பெயர்.

மனோசிலையின் பெயர்தனையே வகுக்கக்கேளு
 மானோபுவி நாகசிறு விசுவபாலி
நனோசிலை நான்முகன் தேவியாகும்
 நாமங்கள்பார் வதிவாணிகலை மகளுமாகும்
தனோசிலை சரசோதி தாமுகவாக்கி
 தாமரை வாசனையாள் தயங்குவாளி
கனோசிலை பூமள்க தேவியாகும்
 கண்டுரைத்த நாமமெல்லா மனோசிலைக்காமே. (223)

அவுபல் பாஷாணத்தின் பெயர்.

அவுபல் பாஷாணப்பே ரறையக்கேளு
 அவலமாஞ் சவலமா மந்தகமுமாகும்
முவுபலமா முருண்டகமா முத்தஞ்சத்தாமே
 முரோணத்தி லுற்பவித்த வுத்தமமுமாமே
தவுபலமாம் குவலமாஞ் சராசரப்பாஷாணஞ்
 சாதகமாம் கத்தமாஞ் சாபமாகும்
துவலமாம் வல்லமாம் நிவலமாமே
 சொன்னதெல்லா மவுபலப்பா ஷாணப்பேரே. (224)

சாலாங்க பாஷாணத்தின் பெயர்.

சாலாங்க பாஷாணஞ் சாற்றக்கேளு
 தாரத்தில் வேதையாந் தாம்பிரசத்துருவாங்
காலாங்கம் பஞ்சாதக் கும்பமாமே
 கந்தமாஞ் சம்பமா மந்தகமுமாமே

மாலாங்கம் வழங்கியவா சாரமாமே
மகத்தான வாரோண வுற்பத்தியாமே
நாலாங்க நம்பலங்க நலங்கமாகும்
நாமமெல்லாஞ் சாலாங்கபா ஷாணநாமமாமே. (225)

கற்பரி பாஷாணத்தின் பெயர்.

கற்பரிபா ஷாணப்பேர் கருதக்கேளு
கதம்பமாம் கருமமாம் கனத்தின்தூமம்
நிற்பரிகி தம்பமாம் தம்பமாமே
நெடுங்குலிச நாதாங்தம் விதம்பமாகும்
சிற்பரியாஞ் செம்புக்குள் வேதையாக்கிச்
செயலான ரசிதசத் துருதிகிரியி லுற்பத்தி
அற்பெரிய தம்பமாஞ் சதம்பவாசி
யாட்டெல்லாங் கற்பரிபா ஷாணமாமே. (226)

கற்பாஷாணத்தின் பெயர்

கற்பாஷா ணத்தின்பேர் கருதக்கேளு
கருதரிய காரீயகடி சுண்டாக்கிக்
குற்பமாம் கோசமாம் குழர்த்தமாமே
கூவிளமாம் பூவிளமாம் கோசமாமே
அற்பமா மாசமா மந்தாரச்சிந்து
அழகியதோர் குந்தமாஞ் சலவுற்பத்தி
சுற்பமாஞ் சூட்சமமாம் பாறையாகுஞ்
சொன்னதொரு நாமங்கள் பாஷாணமாமே. (227)

அஞ்சனப் பாஷாணத்தின் பெயர்.

அஞ்சனப்பா ஷாணப்பே ரறையக்கேளு
ஆரமாஞ் சிலைக்காரி அயத்துக்கந்தனுகம்
துஞ்சனமாங் தூஷியாதி வானசோதி
சொற்சிலையின் வங்கந்தான் சொற்பேதிக்கும்
குஞ்சனமாம் கூர்மமாம் கோல்லன்பகைசாரி
கொடியதொரு வுருக்கினமாம் பாரமாகும்
வஞ்சனமா மீனமா நீலமாமே
வகுத்துறைத்த அஞ்சனப்பா ஷாணமாமே. (228)

கச்சாலப் பாஷாணத்தின் பெயர்.

கச்சாலப் பாஷாணம் கருதக்கேளு
காசாம்பூ வர்னத்தான் கரியமலைதான்
அச்சமாமனங் தன்ருனதி வராகமாதி
நாராயணன்ரு னலிலையிற் றயின்றேன்
மச்சமாருபங் தான்மறை யுறுகுலத்தோன்
மாருதியி லுற்பவித்த தசமச்சந்தான்
நிச்சமா நெடியமால் கூர்மமாகு
நேரான பேரெல்லாம் கச்சாலமாமே. (229)

சீதாங்க பாஷாணத்தின் பெயர்.

சீதாங்க பாஷாணஞ் செப்பக்கேளு
சீதமா மங்கிசமாஞ் சிறப்புமாமே
வாதமாம் வளாபமாம் வசியமாகு
மகத்தான பரிசனமும் பன்னகமுமாகும்
கோதமாங் குஞ்சரமாம் குவடுமாமே
குளிர்ந்ததோரு பரிமளமாங் கோடியவிடமாமே
நீதமா நிட்களமாங் கல்லுமாமே
நேரான சீதாங்கபா ஷாணமாமே. (230)

கார்முகில் பாஷாணத்தின் பெயர்.

கார்முகிலின் பாஷாணம் கருதக்கேளு
கனலோடு வாயுவாங் கலந்திடுஞ்சூதம்
ஆர்முகி யின்னலோடு வேந்தனுதை
மரனுதி மாதிமகா விந்துமாகும்
பார்முகியின் புனலோடு மேகமாகும்
பரிந்திட்ட தாமரையாங் பாறையிலுற்பத்தி
ஊர்முகி மாரசத்தைக் கருவாக்கும்
வேந்தனுரைத்திட்ட நாமமெல்லாம் கார்முகிலுமாமே.

சிலாமதப் பாஷாணத்தின் பெயர்.

சிலாமதப் பாஷாணப்பே ரறியக்கேளு
சீலக்காலின் றாய்மையாஞ் சிறந்ததாது
மலாமதமா மந்திரமா முதிரமாகு
மருவியதோர் கற்குரிய மயக்குந்தாது

உலாமதமாங் காந்தியால் யோனிதானு
யுதரத்தில் விளங்கியகற் கண்ணுமாகும்
திலாமதமாஞ் சிலேசென்னில் திரண்டதாது
செப்பியதோர் சிலாமதப்பா ஷாணமாமே. (232)

அப்பிரேக பாஷாணத்தின் பேர்.

ப்பிரேகப் பாஷாணப்பே ரறியக்கேளு
அதியமாஞ் சுரவல்லி வியோமசத்தி
யுப்பிருகம் பூமிதனிற் கல்லுமாகும்
புகுந்தமலைப் பாதமாம்ரோக மோகினியாம்
வப்பிருகம் வளிக்காந்தி வாமிதிட்ட
மருவியதோர் சமதாரசற் பிருதியாகும்
கப்பிருகம் கந்தரத்தின் பாங்சியாகும்
கருதியதோ ரப்பிரேக பாஷாணமாமே. (233)

வெள்ளைப் பாடாணத்தின் பேர்.

வெள்ளைப்பா டாணப்பேர் விரும்பிக்கேளு
வெள்ளையாம் வேடமா மேவியசங்கம்
தள்ளையாஞ் சமரசத்தின் பாகந்தானும்
தவனமா மாசிவித்தை தயங்குஞ்சோதி
உள்ளையா முருளையாம் படிகமாகு
மோங்கியதோ ரமிர்தமா முயர்த்தியாகும்
கள்ளர்யாம் கந்தரத்தின் கரடமாகும்
கருதியதோர் பெயலெல்லாம் வெள்ளையாமே. (234)

ஆமேதான் முப்பத்தி ரண்டுதோது
அப்பனே பிறந்திட்ட மலையுஞ்சொன்னேன்
ஏமவே பெயர்மறப்பை யெடுத்துச்சொன்னேன்
னேங்கியதோர் வாதிகளுக் கேற்றஞ்சொன்னேன்
போமவே மலைதனிலே போக்குஞ்சொன்னேன்
பேரான சீவனத்துக் கிடமேசொன்னேன்
தாமவே புலிகரடி சர்ப்பத்துக்கும்
தந்திரமாய்க் குளிகையொன்று செப்பினேனே. (235)

பரங்கிவைப்புப் பாடாணம்-ஙஉ.

செப்புகிறேன் பரங்கிவைப்பு முப்பத்திரண்டுஞ்
சீரான பேர்மறைப்பைத் தெளிவாய்க்கேளு
ஒப்புகிறேன் பொன்தொட்டி செப்புத்தொட்டி
யுயர்த்துகின்ற அயத்தொட்டி புத்தொட்டிதொட்டி
நப்புகிறே னிரத்தசிங்கி யேமசிங்கி
நலமான ரஜிதசிங்கிதீ முறுவலோடும்
கப்புகிறேன் கார்முகியும் லிங்கம்வெள்ளை
கனமான கௌரியோடு வீரந்தானே. (236)

வீரமாம் குக்குடத்தின் றலையாம்கெந்தி
விளங்கியதோர் கதைக்கெந்தி பவளப்புற்று
ஆரமா மகிதாரம் கோடாசூரி
யழகான பஞ்சபட்சி குங்குமப்பாடாணம்
கோரமா மிரத்தவர்னப் பாடாணந்தானும்
கோமுகமாம் பாஷாண துரிசிதுத்தம்
நாரமாம் ரசிதமென்ற பாடாணத்தோடு
நலமான சூதமென்ற பாடாணந்தானே. (237)

சூதமோடு கெந்தியென்ற பாடாணந்தான்
தொடங்காத நீலவர்னப் பாடாணமாகும்
காதமென்ற கார்முகில் பாடாணந்தான்
கரையற்ற சோரமென்ற பாடாணந்தான்
நாகமென்ற வண்முகிற் பாடாணந்தான்
நாகமாம் பாடாண முப்பத்திரண்டும்
வாதமோடு வசியமுமாம் வயஸ்தம்பமுமா
மகத்தான வேதையுமா மாட்டிப்பாரே. (238)

தொட்டிப் பாடாணத்தின் பேர்.

தொட்டிப்பா டாணம்பேர் சொல்லக்கேளு
சொல்லரிய மார்க்கமாஞ் சருவதாது
பட்டியென்ற பாரமும் கெந்தகமுங்கூட்டிப்
பாண்டத்திற் சமைத்ததுவுந் தொட்டியாச்சு

கட்டியென்ற தற்கத்தாட் டியமுமாகும்
கடிதான விஷவேகி சருவேடசாரி
ஒட்டியென்ற புத்தோடு வுருவாகும்
பலகையுயர்ங் திட்டவேதியர் முறுதியாமே. (239)

தோட்டியின் தொகைப் பேர்

உருவான அயத்தோட்டி செப்புத்தோட்டி
உகந்தகல் லெருமைநாதத் தோட்டியாகும்
புருவான புத்தோட்டி போரிச்சியாகும்
போற்புள்ளி பெரிதான பாண்டத்தியாகும்
கருவான கறுப்பியாஞ் சிவப்பியாகும்
கடிதான ஏமத்தி செம்பத்தியாகும்
வெருவான வெள்ளச்சி மயத்தியாகு
மிடுக்கான கல்வகையின் தோட்டிப்பேரே. (240)

சிங்கிப் பாடாணத்தின் பேர்.

சிங்சிபா டாணப்பேர் சேப்பக்கேளு
செயமான மிருதாறு ரத்தசிங்கி
ஏங்கியாம் ரசிதசிங்கி யேமசிங்கி
யேற்றமாம் போன்வர்னச் சிவப்புவர்னம்
மங்கியாம் ரசிதவர்ன மீயந்தானும்
வாங்கமா மிருதுவாங்க ளங்குதானும்
அங்கியா முபரசத்தின் சத்துருவாகு
மடுக்கான மிருதாறு சிங்கிப்பேரே. (241)

தீமுறுகலின் பேயர்.

தீமுறுகலின் பேயர்தனையே சேப்பக்கேளு
செயமாக வடிப்பட்ட காந்திதானும்
தூய்முருகற் சூதமாம் யானையாகுஞ்
சுகமான வலகற்ப மகேஸ்வரியுமாகும்
மாய்முறுவல் பரமகரு முகிலிவர்னன்
மகத்தான சமைத்திடுகேந் தரமுமாகும்
மாய்முறுவ லடிபட்ட முறுவலாகு
மறைத்திட்ட நாமமேல்லாந்தீ முறுகலாமே. (142)

கருமுகில் பாடாணத்தின் பெயர்.

கருமுகிற்பா டாணப்பேர் கருதக்கேளு
காக்காயின் மூக்குத்தான் காண்டவைப்பு
ஏருமுகிலி னிறமதாம் வாய்சுகன்மூக்கு
மகத்தான பதங்கத்தில் சமையுற்றநாரி
குருமுகிலின் நிறமதாம் பரமபேதி
கூறுன சானத்தி லுத்தமன்றுன்
அருமுகிலின் தீமுறவகல் மேலேநின்று
அழகான கருமுகிலின் பாடாணமாமே. (243)

சாதிலிங்க பேர்தனையே சாற்றக்கேளு
சண்டமதாஞ் சா திலிங்கப் பதங்கமாகும்
நீதிலிங்க இணங்குமாஞ் சிவசத்திமாது
மியலான பற்பமா மர்த்தகமுமாகும்
வாதிலிங்கம் வர்னிகேற்ப குருவிந்தமாது
மணிராசா சோற்பவனும் வாசம்கேந்தம்
காதிலிங்கம் இங்குலிகம் காஞ்சனுதுங்
கருதியதோர் பேரெல்லாஞ் சாதிலிங்கமாமே. (244)

வெள்ளைப்பாடாணத்தின் பெயர்.

வெள்ளைப்பா டாணப்பேர் விளம்பக்கேளு
மிடுக்கான எலிக்கு நல்ல காலனுகும்
விள்ளையாம் விஷராசன் கோடுவிடமுமாதும்
வெற்பான குடோரியாமன் னுயிரின்காலன்
முள்ளையா மூஷிக பாடாணமாது
மூர்க்கனும் கற்பரனும் பாடாணந்தான்
முள்ளையாம் லோகசங்கற் காரனுது
முரைத்தவெள்ளைப் பாடாணப் பேருமாமே. (245)

கெவுரி பாடாணத்தின் பெயர்.

கெவுரிபா டாணம்பேர் கூறக்கேளு
கெடியான ரசவீரி சூரணஞ்சனி
தவுரிநிறப் பொன்னிச்சி சங்கான்பெண்டிர்
சார்பான தாரத்திம் தயங்குஞ்சோதி

அவுரியாம் கானமாயி யானந்தவாதி
அண்டமுக டனைத்தினுக்கும் மருளுஞ்சோதி
உவரியோங் காரவுரு ஒளிவிளங்குமேனி
உரைத்ததொரு நாமமெல்லாம் கெவுரியாமே. (246)

சவ்வீரத்தின்பெயர்.

சவ்வீரப் பெயர்தனையே சாற்றக்கேளு
தளவாயாஞ் சரக்குக்குச் சுண்ணமானேன்
எவ்வீர மெழிவுருடன் கூடினேனை
மேற்றமாம் விற்பன்ன சேங்கனுமாகும்
அவ்வீர மதிவெள்ளைச் செந்தூரந்தா
னடங்காத சாரத்தின் சத்துருவுமாகும்
நவ்வீரம் பரியினட மித்துருவுமாகும்
நாட்டியதோர் பேரெல்லாஞ் சவ்வீரமாமே. (247)

கோழித்தலைக் கெந்தியின் பெயர்.

கோழித்தலைக் கெந்தியிட பெயரைக்கேளு
குருடத்தின் சூடாகுஞ் சுகண்டகெந்தி
தாளிபாஞ் சிவப்பான கெந்தியாகுந்
தயங்காத லோகசித்தி சணத்தில்சித்தி
சேளியாஞ் செம்பான சாதகாத்தி
செவப்பான வானந்த வல்லியாகும்
ஆளியாங் கற்பகம்போற் காமமீயு
மடங்காத கோழித்தலைக் கெந்தியாமே. (248)

வாணகெந்தி சுரைக்கெந்தியின் பெயர்.

வானகெந்தி யின்பெயரை வகுக்கக்கேளு
மகத்தான சடைதனக்கு வரசனாகும்
பாணமாம் படைதனக்கு மூர்க்கனாகும்
பாங்கான சுரைக்கெந்தி பற்றலாகும்
வீணமாம் வேந்தனுக்குத் தாரமாகு
முரித்தான முகுலையப் பண்ணுஞ்சூரன்
தோணமாஞ் சத்தானும் நாற்றமாமே
சொல்லியதோர் பேரெல்லாஞ் சுரகெந்தியாமே. (249)

ஸ்வப்பரி தாரத்தின் பெயர்.

வைப்பரிதா ரத்தினிட வண்மைகேளு
வண்டோழுகு மம்புயத்தில் வாழ்மடந்தையாமே
கோப்பான கோச்சியினிற் குழைந்தையாமே
குளக்கமலக் கோயிற்சிரு மடந்தையாமே
ஐப்பான மடந்தையிட தாரத்தியாமே
அழகான நடையுடைய பிராமணப்பெண்
கைப்பான தனத்தியாங் கனத்தியாமே
கருதியதோர் பேரெல்லா மரிதாரப்பெயரே. (250)

பவழப்புற்றுப் பாடாணத்தின் பெயர்.

பவழப்புற்றுப் பெயர்தனையே பகரக்கேளு
பாங்கான யோகத்தைப் பரியாக்கியாகும்
புவனமாம் புத்தாகுங் குளவியாகும்
பேரான கற்பகமாங் கோடிச்சியாகும்
துவளமாஞ் சுணச்சியா சுபத்தியாகுந்
துய்யான ரவியாக்கிச் சோர்னமாக்கி
அவளமா மடுக்கான கன்னியாகு
மறிந்துரைத்த பவளமுத்துப் பாடாணமாமே. (251)

கோடா சூரியின் பெயர்.

கோடாசூ ரிப்பெயரைக் குறிப்பாய்கேளு
கோடியதோரு மன்னனுங்குரு மூறையுமாகும்
காடகமாம் களிம்பகற்றும் வண்ணனுகும்
கருரோமன் தவளமாம் காட்டுவேந்தன்
தூடமாஞ் சோரனுந் திருடனுகுந்
தூர்க்கமாம் நஞ்சான வரதராசன்
வேடனும் வெண்டாள வெள்ளிமித்துரு
விளங்கியதோர் கோடாசூரி நாமமாமே. (252)

பஞ்சபட்சி பாடாணத்தின் பெயர்.

பஞ்சபட்சி பாடாணம் பகரக்கேளு
பரவியதோ ரம்புயனும் பஞ்சதாது
நெஞ்சமாம் சித்திரத்தின் பட்சியாகும்
நிறைந்திட்ட அஞ்சுவர்னத் தாதுவாகும்

மஞ்சுகிற மகமாயி பரங்கிப்பாதை
மகத்தான குப்பிக்குள் சமைந்தகன்னி
குஞ்சுகிறம் ரவிதனக்குள் கூர்ந்தவமம்
கோடியான நாமமெல்லாம் பஞ்சபட்சியாமே. (253)

குங்கும பாடாணத்தின் பெயர்.

குங்குமப்பா டாணப்பேர் கூர்ந்துகேளு
கூட்டியதோர் நவலோக மேமாக்கி
மங்குகிற மஞ்சளென்ற வரும்பியாரு
மாதுக்கு மதுவான மகத்தாங்கன்னி
பொங்குகிறப் பொற்கோங்கு குளச்சியாகும்
பீதப்பெண் ணுண்டிச்சி பிஞகபாணி
தங்குகிறத் தங்கத்தி தாடகத்தியாகுஞ்
சாற்றியதோர் குங்குமப்பா ஷாணமாமே. (254)

ரத்த பாஷாணத்தின் பெயர்.

இரத்தபா ஷாணப்பேர் நவிலக்கேளு
நால்வேதி நாதாந்தி நலங்கும்பொன்னி
பத்தமாம் பாங்கிச்சி பராபரக்கன்னி
பரிவுடைய கேற்பத்தில் பரிந்ததாது
அத்தியாங் கொடிச்சியாண் டிச்சிபொன்னி
ஆலகாலத் தையுண்ட வான்பகத்தி
சித்தியாஞ் சிவப்பிசாதக வர்ணத்தி
செப்பியதோ ரிரத்தபா ஷாணப்பேரே. (255)

துத்தத்தின் பெயர்.

துத்தத்தின் பெயர்தனையே சொல்லக்கேளு
தூம்பியாஞ் சிப்பிச்சி தூம்பரியாகும்
அத்தமாங் கற்பரிய ரசிதமாகும்
ஆகியதோர் செயநாதஞ் சோரியோனுகும்
நித்தமாம் நேத்தியாகிர் மலமுமாகும்
நேரான ரசகேச பிடமுமாகும்
நத்தமாம் நாகாஞ்சனமு மாகும்
நாட்டியதோர் பேரெல்லாந் துத்தமாமே. (256)

துரிசியின் பேயர்.

துரிசியின் பெயர்தனைச் சொல்லக்கேளு
கடலையோன் சிவசத்தி சூருபமாகும்
தருசியாங் தாம்புரத்தின் கெற்பமாகுந்
தயங்காத கண்டந்தான் நீதனிறக்காளி
வாசியா மால்பச்சை மேனியாகும்
வற்ரு மேனிபோன்மணி மிடற்றனுகும்
குருசியாங் குருவாகுங் கூறியதாம்
லவணம்கோலமார் கடவுளான்கோழுஞ் சுடருமாமே.

சுடராகும் பரிசுத்த பாணியாகுஞ்
சிற்பரையைப் பணிந்தசெஞ் சடையோனுகும்
அடராகு மாணிமுக நீலமாகு
மாதிமகா குருவாகுஞ் சதாசிவன்ருன்
மிடராகும் வேதாந்தி வாதிதானும்
விடையேறி விடமுண்டோன் மேதினியோர்க்கும்
மடராகும் வாளேயிற்வக் கண்ணனுகும்
வகுத்ததேல்லாங் துரிசியுட பெயருமாமே. (258)

ரசித பாஷாணத்தின் பெயர்.

இரசிதப்பா ஷாணப்பேர் நவிலக்கேளு
நலமான வாண்டிமதிக் குலமுமாகும்
விசிதமா மினிச்சி வெள்ளச்சியாகும்
வெண்டரள மேனியாம் வெண்பூதச்சி
கசிதமாங் காண்டிவெள்ளைக்குங் காந்தியாகுங்
கருதியதோர் தாம்பிரத்தைத் தாரமாக்கி
துசிதமாஞ் சூதத்தைப் பேதமாக்கிச்
சொல்லியதோ ரசிதப்பா ஷாணமாமே. (259)

சூத பாஷாணத்தின் பெயர்.

சூதபா ஷாணப்பேர் சொல்லக்கேளு
துடியான சூதமாஞ் சேர்ந்ததாது
வாதமா மலைக்குரவன் வாசுகிநாதன்
மகத்தான காந்தனுகங் காமக்கோடியோனுகும்

காதமாம் லோகத்திற் காமசித்தியானேன்
கடுவேதைப் படுமுன்னே யேமமானேன்
நாதமாங் குப்பியிலே நுணுக்கமானே
னவின்றியதோர் சூதபா ஷாணமாமே. (260)

நீல பாஷாணத்தின் பெயர்.

நீலபா ஷாணப்பேர் நிறையக்கேளு
நீலிதான் வைப்பான கருப்பியாகும்
காலனுங் காய்கயனுஞ் சோமனுகுங்
கடியவிளங் குளவியா மதியுமாகும்
காலனுங் தனஞ்சயனுஞ் சந்திரமவுலி
காரத்திற் சேர்ந்தவுடன் பசுமையானேன்
வீலனும் வெண்ணிலா வொழுகுங்
தண்மதியின் மிக்கானநீலனிறப் பாஷாணமாமே. ()

கெந்தகப் பாஷானத்தின் பெயர்.

கெந்தகப்பா ஷாணப்பேர் கூறக்கேளு
கெடியான நாத்தனுஞ் சடக்கனுகும்
பந்தனும் நாதனும் பார்த்தானுகும்
பாங்கான விசயன்புங் கவனுமாகும்
முந்தனு முத்தனு முயலகனுமாகு
மூதண்ட சத்திதான் முரசனுகும்
நந்தனும் நாயகனும் நவலோகபேதி
நாடியதோர் கெந்தகப்பா ஷாணமாமே. (262)

சோர பாஷாணத்தின் பெயர்.

சோரபா ஷாணப்பேர் சொல்லக்கேளு
சுயமான நவலோக மாரணனுகும்
காரானுங் கார்முகக் கள்ளன்றனும்
கந்தனுங் கடுவேகி கைப்புமானேன்
நாசனு மளவனு மனந்தன்றனும்
ரதிவிராட் டியனுகு மளகனுகும்
தீரனுஞ் செம்பில்மிக வேர்வையாகுஞ்
செப்பியதோர் சோரபா ஷாணப்பேரே. (263)

லவண பாஷாணத்தின் பெயர்.

லவணப்பா ஷாணத்தி நாமங்கேளு
லவணத்தின் கூர்மையாம் நாதாந்தவேதி
அவனத்தி னுதித்தன் கூர்மையாகு
மடங்காத நவலோக மேமமாக்கி
துவணத்தின் சூதத்தைத் தோசைப்போலாக்கிச்
சுயம்பான சரக்குகளைச் சுன்னமாக்கி
கவனத்தின் கம்பியாங் கடும்பதங்களுகுங்
கருதியதோர் லவணப்பா ஷாணப்பேரே. (264)

நாக பாஷாணத்தின் பெயர்.

நாகபா ஷாணப்பேர் நவிலக்கேளு
நாக்கடைப்புரட்டியே தீப்படவே யெரிப்போன்
சீகமாம் சீறலாம் பொருமலாகும்
திறந்திட்ட சர்ப்பத்தின் பதங்கியாகும்
கூகமாங் குலிசமாங் கோடியகுடிலந்தான்
குறிப்பான நாகத்தைக் குந்தளமாக்கி
பூகமாஞ் சூதத்தைப் பொன்னுமாக்கிப்
புகழ்ந்திட்ட நாகபா ஷாணமாமே. (265)

காக பாஷாணத்தின் பெயர்.

காகபா ஷாணப்பேர் கருதக்கேளு
கருமுகிலா மந்தகனுங் களங்கனுகும்
வாகமாம் வாசுகியின் கோடியுமாகும்
வாரிதியின் வாசகனு மாசிதக்குருக்கன்றன்
பாகமாம் பலிருத்தி லூர்சிதவாகும்
பாங்கான தாரத்தைக் கருகப்பண்ணி
சாகனுஞ் சனியினுட வாகனமுமாகுஞ்
சாற்றறிய காகபா ஷாணப்பேரே. (266)

இந்திர பாஷாணத்தின் பெயர்.

இந்திரமாம் பாஷாண மியம்பக்கேளு
இயலான மகாகன்னி யிந்திரசத்தி
மந்திரத்தின் ரூபியாம் வானவர்கள்போற்றி
வமரர்கோன் வணங்குகின்ற மகத்தானக்கன்னி

அந்திரமாம் பதங்கச்சி யழகுதுரைப்பெண்தான்
ஆயிரமாங் கண்ணுள்ள வதிஷ்டச்செல்லி
தந்திரமாஞ் சாதகியே பத்தியாகுந்
தளுக்கான விந்திரப்பா ஷாணப்பேரே. (267)

பாரப்பா பாஷாணமுப் பத்திரண்டும்
பரிவாக வெகுநூலை யாராய்ந்துபார்த்து
பாரப்பா ஒவ்வொன்றய்ப் பிரித்துவாட்டிப்
பலன்கண்ட படியெல்லாம் பார்த்துச்சொன்னேன்
பாரப்பா பச்சைதனில் வேதைசொன்னேன்
பரிவான வைப்புமுறை யெழுநூற்றிற்சொன்னேன்
பாரப்பா குளிகைக்குச் சத்தெடுத்துப்
பாச்சுகிற முறையெல்லாஞ் சொன்னேன்பாரே. ()

பாரப்பா தந்திரமாய்ப் பரங்கிவைப்புப்
பாஷாண முப்பத்திரண்டு தாதும்
சேரப்பா சித்தருட் மறப்பையெல்லாம்
தெளிவாகப் பலநூலை முறையாக்காணும்
வேரப்பா வெட்டவெளி யாகச்சொன்னேன்
வேதையொன்றுந் தப்பாது வெளியாய்க்காணும்
தூரப்பா சித்தர்சொன்ன கருமறைப்பு
சூட்சமெல்லா நிகண்டுக்குள் திறந்திட்டேனே. (269)

திறந்திட்டே னுபசரமுங் காரசாரஞ்
செயமான பாஷாணப் பிறப்புவைப்பும்
திறந்திட்டேன் சாஸ்திரத்தை யாராய்ந்தாய்ந்து
தறமாக மலையைப்போல் நிகண்டாய்க்கோர்த்தேன்
திறந்திட்டேன் கருவையெல்லாம் வெட்டவெளியாகச்
செயலான சரக்கினுட பெருமைதன்னைத்
திறந்திட்டேன் குருவுக்குத் தர்மமென்றுஞ்
சீரான வாதமெல்லாம் நிகண்டிலாச்சே. (270)

பொன்னின் பெயர்.

பொன்னினுட பெயர்தனையே புகலக்கேளு
பேரான சொர்ணமாங் கனகமாகும்
வன்னமா மருக்குமந்தான் சாதகும்ப
மகத்தான தாண்டமாங்காஞ் சனமுமாகுந்

தன்னமாஞ் சாம்பூன தமரசரதரூபங்
        தாக்கான ஆடகமா மேமமாகும்
பன்னமாம் பசுங்குருகு யிரணியமுமாகும்
        பாங்கான சாமீகரஞ்சாக னுற்றினமாகும். (271)

ஆமென்ற தமனியாம் பூஷணமுமாகு
        மடங்காத பீதகமாம் பரியுமாகுந்
தாமென்ற ஆதிச்சிய னுகமாகுந்
        தயங்காத ஆதிவதி தருவுமாகும்
வாமென்ற மேருவாம் பெருந்தாயாகு
        மகத்தான ஆணியா முத்தம்பீசம்
தேசமென்ற வாதித்தன் விந்துவாகுஞ்
        செயலான குந்தளமாந் தகடுமாமே (272)

வெள்ளியின் பெயர்.

வெள்ளியின் பெயர்தனையே செப்பக்கேளு
        வெளுப்பான சுப்பிரகம் ரசிதத்துய்யான்
துள்ளியதோர் சவுத்தியமா மடுத்தரூபம்
        துளமுள்ள வசுசிரேஷ்ட மதியென்பார்கள்
வள்ளியதோர் மாப்பாசி மகாசுரமாகும்
        வான்மீனு மேருமையுட நாக்குமாகும்
தள்ளியதோர் தனிக்கோட்டைக் காசுமாகுந்
        தளுக்குற்ற சீனியாஞ் சந்திரவாய்வே. (273)

சந்திரனில் பூதியாஞ் சந்திரவாசான்
        தளுக்கான சுவேதகாஞ் சனமுமாகுங்
குந்திரனுங் குணுக்குருத்தந் தூத்தமாகுங்
        கூறியதோர் வஸ்துவாம் போயதானு
மந்திரமாங் காஞ்சியமீ ரஞ்சுதாப்பிய
        மகத்தான ரூசிரமாமது ரசமுமாகும்
தந்திரனுந் தாரமாமித ரசமுமாகுஞ்
        சாற்றியதோர் பேரெல்லாம் வெள்ளியாமே. (274)

செம்பின்பெயர்.

செம்பினுட பெயர்தனையே செப்பக்கேளு
        சிறுந்தாவி சேந்தலை ராகியென்பார்
கம்பியென்ற தாம்பிரமிலேச்ச முகஞ்சோர்ப்பங்
        கனமான ரத்தத்தாது துகமுமாகும்

பம்பியென்ற பழுப்பினமாங் காளிக்கும்
பரிதி பஞ்ச நாகமேன்றுங் திரியம்பகமாகும்
தும்பியாங் தூம்பிரமுங் தும்பரமுமாகுஞ்
சொல்லியதோர் பேரெல்லாஞ் செம்புமாமே. (275)

காரீயத்தின் பெயர்.

காரீயப் பெயர்தனையே கருதக்கேளு
களங்குக்குங் கவ்வுக்குஞ் சிராவணமுமாகும்
பாரியாம் பலதோஷம் போக்கியாகும்
பண்பான களங்கு மாதியானேன்
வாரியாங் கருநாகங் காரீயமாகு
மன்னியதோர் சவளையாங் கள்ளம்போக்கி
நாரியாங் காரியப் பேருதன்னை
நாட்டினேம் நிகண்டுக்குள் நன்றாய்ப்பாரே. (276)

வெள்ளீயத்தின் பெயர்.

வெள்ளீயப் பெயர்தனையே வுளப்பக்கேளு
வெண்ணாகம் புசங்கமா மூர்க்கமாகும்
வள்ளியாம் வங்கமாங் குடிலமாகு
மாசற்ற யோனஷ்டம் தன்னுவனஷ்டம்
வெள்ளியாஞ் சிங்கமாம் பரிக்குத்தானுஞ்
செயரசத்தின் சேவகனும் நவலோகத்தைத்
துள்ளியாம் தூள்படுத்துஞ் சூரனுகுஞ்
சொல்லியதோர் பேரெல் லாமயமாமே. (277)

நாகத்தின் பெயர்.

நாகத்தின் பெயர்தனையே நவிலக்கேளு
நற்சோரம் வெண்ணாகஞ் சீரலாகும்
போகத்தின் பொருமலாம் பொங்கல்தானும்
புகையான வஞ்சுவர்ன னிறத்தோனுகு
மேகத்தி னிரைச்சலோடு மஞ்சலானேன்
எளிதான தாம்பரத்தின் வேதையானேன்
பாகத்தின் வாதத்துக் குயிருமானேன்
பாடியதோர் பேரெல்லா நாகமாமே. (278)

பித்தளையின் பெயர்.

பித்தளையின் பெயர்தனையே புகலக்கேளு
பேரான ஆரகூடத்தோ டிரதியாகு
முத்தான வூத்தலென்ற பரிதானுட்கு
முசலாமுள் கதுரைத்தான் குடவனுகும்
நத்தான காளிக்குங் நாதப்பசும்பொன்னுகும்
நலங்கியதோர் சேருவைதா னுற்றலாகும்
மத்தான செம்பிரண்டு நாகமொன்று
மருவியதோர் பித்தளையி னுமமாமே. (279)

வெங்கலத்தின் பெயர்.

வெங்கலத்தின் பெயர்தனையே விரும்பிக்கேளு
மிரளுகின்ற தோஷமாங் கஞ்சமாகும்
பங்கலத்தி னேசையாங் கலங்கிண்ணியாகும்
பார்க்கின்ற கண்ணுடி மணியுமாகும்
மங்கலத்தின் மாருதமாம் பிரகாசமாகும்
வலிகஞ்சம் வாசகையி னிறமுமாகும்
செங்கலத்தின் செம்பிரண்டு வெள்ளீயமொன்று
சேர்த்திட்ட வெங்கலத்தின் செயலுமாமே. (280)

திராவின் பெயர்.

திராவினுட பெயர்தனையே செப்பக்கேளு
சிகட்டுமாம் கோட்டுமாங் கருலோகமாகும்
முராவினுட மொட்டச்சி முரிசில்மந்த
மூசையிலே யுருக்கியே வார்க்கும்லோகம்
தராவினுட மூரியதோர் லோகமாகும்
தலமான செம்புக்குள் காரீயங்கூட்டி
சாராவினுட கடிதான லோகமாகுங்
கனமான திராவினுட நாமமாமே. (281)

இரும்பின் பெயர்.

இரும்பினுட நாமத்தை யியற்றக்கேளு
யீசரிட செயமாகும் சத்துமாகும்
அரும்பான அயமாகுங் கருப்பியாகு
மாதியாம் வாழ்பூமி நாதமாகும்

கரும்பியென்றும் லோகமென்றும் பிண்டதுண்டமென்றும்
கயசுசுச ரோசரமான் காலிநேகிதான்
திரும்பினுட சிப்பமாங் கிருஷ்ணஅயமாகு
செப்பியதோர் பேரெல்லாம் மிரும்புக்காமே. (282)

உருக்கின் பெயர்.

உருக்கினுட பெயர்தனையே யுரைக்கக்கேளு
ஓங்குமணி வாளாகு மொழுகரையாகும்
மருக்கான தீட்சணமா மயக்கடிசுமாகு
மமுதமா மலைதனக்குக் குடோரியாகும்
மருக்கான அரமாகும் வற்றலோக
மகத்தான தத்தலோகங் கிட்டலோகம்
நருக்கான உருக்கென்றும் யெருவென்றும்பேர்
நாட்டினே னுருக்கினிட காமந்தானே. (283)

லோகபதினேன்றுக்குந் தோகுப்பின்பெயர்.

தானென்ற பதினொன்று தொகுப்புக்கக்கேளு
தங்கமோடு வெள்ளிசெம்பு காரீயம்தான்
வேனென்ற வெள்ளீயங் துத்தநாகம்
விளங்கியதோர் பித்தளையும் வெண்கலத்திநெடு
ஊனென்ற திராவோடு யிரும்புருக்கு
உத்தமனே பதினொன்றும் லோகமாச்சு
பானென்ற லோகமிது பதினொன்றுக்கும்
பரிபாஷை நாமமெல்லாம் பாடினேனே. (284)

பாடினதோர் லோகத்தின் பெயரைக்கண்டு
பஞ்சபூ தத்தினுட வடிவுகண்டு
நாடினதோ ரினங்கண்டு சேர்வைகண்டு
நாட்டியதோர் களங்குசுன்னஞ் செந்தூரங்கள்
மூடினதோர் முட்டறிந்து கொடுத்தாயானல்
மோசமில்லை சாத்திரங்க ளொன்றும்பொய்யாம்
ஆடினதோர் நிகண்டைவிட்டு வாதம்பார்த்தா
லொன்றுமில்லை வாதமெல்லாம் பொய்ப்பாபோமே.

உப்புசெதையின் பெயர்.

போமென்ற உப்பினுட கேதையைக்கேளு
போக்கான கல்லுப்பு படிதான்ரண்டு
காமென்ற வடிகனத்த சட்டியிலேபோடு
கடல்தண்ணீர் நாலுபடி யதிலேவாரு
வாமென்ற வடுப்பேற்றி யெரிக்கும்போது
அப்பனே வுப்பெல்லாங் கரைந்துபோகும்
வாமென்ற சீலையென்ற வடிகட்டிக்கொண்டு
மறவாமற் சட்டியின்மேல் சீலைகட்டே. (286)

சீலைகட்டி யெரித்திடுவாய் தீபம்போலத்
திறமாகத் தண்ணீரெல்லாம் வற்றமட்டும்
ஆலைகட்டி ஆறவிட்டு யெரித்துவாங்கி
யடிகனத்த சட்டியிலே வுப்பைப்போட்டு
வேலையுட நீர்விட்டு நாலுபடி தானும்
விளங்கவே கோதியிட்டுக் கரைந்தபின்பு
மாலையுட சீலையிலே வடிகட்டிக்கொண்டு
மறவாமல் சீலைகட்டி யெரித்திடாயே. (287)

எரித்திட்ட வற்றியபின் றாறவிட்டு
இதமாக வுப்பையெல்லாஞ் சீவிவாங்கி
மரித்திட்டு மறுசட்டிக் குள்ளேபோட்டு
வளமாக நாலுபடி கடல்தண்ணீரில்
கரைத்திட்டுக் கோதிக்கவைத்துக் கரைந்தபின்பு
கலங்காமற் சீலையிலே வடிகட்டிக்கொண்டு
பரித்திட்டுச் சீலைகட்டி யடுப்பிலேற்றிப்
பக்குவமா யெரியிட்டு வற்றியபின்வாங்கே. (288)

வாங்கியே யிப்படிதான் முப்பத்திரண்டு
வளமாக முன்சொன்ன படியேகாச்சு
தாங்கியே யெடுத்துப்பார் தவளம்போலச்
சாற்றிய வயிரம்போ லிறுகிக்காணும்
ஓங்கியே கரியில்வைத்து வுருக்கும்போது
உத்தமனே பொன்போலே கண்விட்டாடும்
தேங்கியே மெழுகாலே கேதை போல்பண்ணிச்
சிறப்பாக வைந்துபட்டை வைத்திடாயே. (289)

வைத்திட்டு மண்கட்டிக் காயப்போட்டு
வளமாகக் காச்சியே மெழுகத்திப்போட்டு
உய்த்திட்டு வுப்பையெல்லாங் குகையிலிட்டுருக்கி
வுறுதியாய் வார்த்திடவே கெதையுமாகி
நைத்திட்டு கெதைநடுவே சீலைசுற்றி
நலமான கலசத்தில் வைத்துக்கொண்டு
மைத்திட்டு மலைகளிலே யுபரசபாஷாணம்
மகத்தான மூலிகைதா னுதகந்தோடே. (290)

தேடையிலே புலிகரடி யேனம்பாம்பு
சிவகதையைக் கண்டவுடன் தேண்டம்பண்ணும்
தேடையிலே சித்தரெல்லாம் வாவாவென்பார் [ண்டாம்
சிவகெதையைக் கேட்டவுடன்கையிற் கொடுக்கவே
தேடையிலே சீவனத்துக் கில்லாவிட்டால்
செம்புருக்கிச் சிவசெதையிற் சீவிப்போடு
தேடையிலே யாறுமே மாற்றுக்காணுஞ்
செலவழித்துச் சிவசோத்தை வருமைபோலுண்ணே.

வருமைபோ லுண்டுடுத்து வுபசரத்தைத்தேடு
மகத்தான யோகிகளைக் கண்டுபேசு
நேருமையா யவருடனே வார்த்தைபேசு
நினைவழிந்து போகாம லுபசரத்தைக்கேளு
வெருமைபோல் சீவனத்துக் கிடத்தைக்கேளு
வேதாந்த நட்பத்தின் விபரங்கேளு
திருமையாய் மலைதனிலே சஞ்சரித்துச்
சூதத்தின் சாரணைக்கு விபரங்கேளே. (292)

ரசேந்திரகுருவின் பெயர்.

கேளப்பா ரசேந்திரமென்ற குருவைத்தானும்
வைத்தானும் கெடியான மெழுகாலேமேருபண்ணி
வாளப்பா மண்கட்டி யுப்புருக்கிவார்த்து
மகத்தான வுப்பான மேருதன்னில்
தூளப்பா சீலைசெய்து அடியில்தானும்
சூதத்தைச் சுத்திபண்ணிக் கல்வத்திட்டு
வாளப்பா பொன்னுமத்துச் சாறுதன்னல்
வளமாக வெண்சாம மரைத்திடாயே. (293)

அரைத்திட்டு மெழுகுபோ லுண்டைபண்ணி
யரைவாசி யுப்பான மேருக்குள்போட்டு
நிரைத்திட்டு வாலுகையின் மேலேவைத்து
நேர்ப்பாகத் தீயெரிப்பா யறுசாமந்தான்
பறைத்திட்டு ஆறவிட் டெடுத்துக்கொண்டு
பக்குவமா யிருப்பான கதிரால்வாங்கு
தரைத்திட்ட தவளம்போல் குருவுமாகுஞ்
சாங்கமாய் நவலோகம் நூற்றுக்கொன்றே. (294)

ஒன்றான யேமமது பத்தரையேகாணும்
உகந்துமே பணவிடைதான் பாலிலுண்ணு
கண்ணான மேனியது கதிர்போலாகுங்
காயசித்தி யோகசித்தி கடசிலாகும்
தண்ணான சிவகேதையைக் கையில்வைத்துச்
சஞ்சயத்து மலைதனிலே சார்புபார்த்து
திண்ணான மகாமூலித் தேடியுண்ணு
சீக்கிரத்திற் சித்தியுமாந் தெளிந்துபாரே. (295)

கேதை பஞ்சவர்னம்.

பாரப்பா வுப்பான கேதையைத்தானும்
பஞ்சவர்ன மாக்குதற்குப் பண்புகேளு
நேரப்பா தாளகத்தைப் பழச்சாற்விட்டு
நெகிழரைத்து நெடும்பட்டை தன்னீர்பூசி
தாரப்பா ரவிதனிலே யுலரவைத்துச்
சாங்கமாய் மண்பூசி நாலுபட்டைத்தன்னை
சேரப்பா சீலைசுத்தி மணலுக்குள்ளே
தீர்க்கமாய்ப் புதைத்துவிட்டுப் புடத்தைப்போடே. ()

புடம்போடு அஞ்சேருவைத் தூளாய்ப்பண்ணி
பேராக மருந்திட்ட பட்டைதன்னை
விடம்போடு வெளியில்வைத்துப் புடத்தைப்போடு
வெந்துநன்று யாறியபின் னெடுத்துப்பாரு
குடம்போடு குங்குமத்தி னிறம்போலாகுங்
கோடியாநவ லோகத்தி லாயிரத்துக்கோடும்
மடம்போடு மருபட்டை தன்னிற்கேளு
மகத்தான கார்முகியை யரைத்துப்பூசே. (297)

பூசியே முன்போலே புடத்தைப்போடு
பெருங்கருப்பு கருங்காலி வயிரம்போலாம்
தேசியேரண்டான சகலிதத் திரத்திற்கோடுங்
கெப்பமாய்ப் பாலிலுண்ணச் சிதையாதுதேகம்
வாசியே யுள்ளிருகு மேலோடாது
மகத்தான கோடிவரை யிருந்துந்தேகம்
ஆசியே சதாகித்த மூலதூணி
யங்கேன்று வாசியைத்தான் கும்பித்தாடே. (298)

ஆடவே மருமட்டை தன்னிற்கேளு
ஆதியாங் துரிசியோரு பலமும்வாங்கி
நாடவே கலவத்தில் பழச்சார்விட்டு
நல்கரைத்து மறுபட்டை தன்னிற்பூசி
நாடவே மண்செய்து மறுபுடத்தில்
மகத்தான சீலைசெய்து மணற்குள்வைத்து
தேடவே யஞ்சேருவிற் புடத்தைப்போடு
சிறப்பாக வாறியபின் னேடுத்துப்பாரே. (299)

பார்த்தவுடன் பச்சைமால் மேனியாகு
பார்ந்தநவ லோகமூவா யிரத்திலோடும்
மாத்தவுடன் மறுபட்டை தன்னிற்கேளு
வன்னிகேற்பம் பலமோன்று கல்வத்திட்டு
எத்தவுட னேலும்புமிச்சம் பழச்சாற்விட்டு
யிழுத்தரைத்து நாற்சாமம் பட்டைதனிற்பூசி
தேத்தவுடன் மண்சேந்து சீலைசுத்தி
சிறப்பாகப் புதைத்துமே புடத்தைப்போடே. (300)

புடம்போட்டு யேரித்துவிட்டால் மாதளம்பூப்போலாம்
பேராக நாலுசகத் திரத்திக்கோடும்
படம்போட்டப் பணவிடைதான் பாலிலுண்ணப்
பாங்கான காயமது சேவ்வலரிபோலாம்
மடம்போட்ட மவபட்டை தன்னிற்கேளு
மாசற்ற வீரமது கல்வத்திட்டு
நடம்போட்ட பழச்சாற்றல் நல்கரைத்து
நலமான பட்டையின்மேல் பூசிப்போடே. (301)

பூசியே மண்செய்து சீலைசுற்றி
புதைத்துமே மணற்றண்ணிற் புடத்தைப்போடு
தாசியே தவளம்போல் படிகமாகுஞ்
சாற்றரிது அஞ்சுசகத் திரத்துக்கோடு
மாசியே கேதைதனையே வைத்துக்கொண்டு
மகத்தோர்க்குத் தொண்டுபண்ணி மகாமூலிதேடு
பாசியே பாஷாண முபரசங்கள்தேடி
பரிவாக கேவுனசித்தி பண்ணிக்கொள்ளே. (302)

கொள்ளென்ற சாத்திரத்திம் நாதாக்கள்சொன்னர்
கூறியதோ ரப்பாலே வுப்பைக்கட்டி
வள்ளென்ற வாதத்தைச் செய்யச்சொன்னர்
வாய்வீணர் வரிசையாய்ச் செய்யமாட்டார்
புள்ளென்ற பொன்தனையே கைக்கொடுக்கின்றபேர்
பெரிமூத்தாள் தான்முகத்தில் நின்று
தள்ளென்ற யேமமது செம்பாய்ப்போகுஞ்
சாற்றரிது அப்பிடை மார்க்கந்தானே. (303)

கடலின் பெயர்.

வாரிதியின் பெயர்தனையே வகுக்கக்கேளு
வருதிரை முழங்குநீர்க் கடலுமாகும்
வாரவமாம் பவ்வமாம் வேலைமுனிநீரு
வரிவாரிக் கடல்கராளிதிரை ஞலையாகும்
நீரவமாம் ரீர்புணரி நேமிவிலாவளையம்
நெடிதான வார்கலியா மாத்தியாகு
மூரவமா முன்மூத் திரமுத்தங்கள்
கோழிக்குமுட்டியே மகாரிவருங் கடலின்பேரே. ()

கெந்தகச் செம்பின் பெயர்.

பேரான கெந்தகத்தின் செம்புகேளு
பிரிவான கெந்தகத்தைச் சுத்திபண்ணி
காரான மூன்றுபத்து பலந்தான்கெந்தி
கல்வத்திற் பொடிபண்ணி யரைத்துமாப்போல்
வேரான வேடியுப்பு நீரைவார்த்து
விளங்கரைத்து மூன்றுநாள் காயப்போட்டு
பாரான பசுவின்பா லரைச்சட்டிவார்த்துப்
பரிவாக வதன்மேலே சீலைகட்டே. (305)

சிலையின்மேல் கெந்தகத்தைத் திறமாகப்பரப்பி
 செப்பமாய்ச் சட்டிகொண்டு மேலேமூடி
மாலையின்மேல் மண்செய்து உலர்ந்தபின்பு
 வளமாகக் குழிவெட்டிச் சக்கரம்போல்
ஆலையின்மே லடிசட்டிப் புதைத்துப்போட்டு
 ஆதரவாய் மேற்சட்டித் தெரியவிட்டு
பூலையினு லெரிவடக்கிப் புடத்தைப்போடு
 பேராக மணிமணியா யிறங்கும்பாரே. (306)

இறங்காமற் கடித்துக்கொண் டிருந்ததானல்
 ஏத்தமாய்ச் சீலைகட்டிப் பாலும்விட்டு
முறங்காமல் முன்போலே புடத்தைப்போடு
 முயற்சியா யாறவிட்டுக் கழுவிவாங்கி
கறங்காமற் கல்வத்தில் போட்டறைத்துக்
 காரியமாய் வெடியுப்பு நீராலாட்டி
தறங்காமல் முன்போலே புடத்தைப்போடு
 சாங்கமா யாறியபின் னெடுத்துவாங்கே. (307)

வாங்கியே கல்வத்தில் நீராலாட்டி
 வளமாக முன்போல் புடத்தைப்போடு
தேங்கியே மும்முறைதா னனபின்பு
 சுத்தியாய்த் தண்ணீரிற் கழுவிப்போட்டு
ஓங்கியே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
 யுத்தமனே மாந்துளிரின் சாறுவார்த்து
நீங்கியே நாற்சாம மாட்டிபின்பு
 நேர்ப்பாக முன்போல் புடத்தைப்போடே. (308)

போட்டபின்பு செங்கீரைச் சாறுதன்னில்
 பேசாமல் நால்சாம மரைத்துக்கொண்டு
மூட்டபின்பு முன்போலப் புடத்தைப்போடு
 முயற்சியாய் மகிமைபெறு சாற்றாலாட்டி
நாட்டபின்பு புடம்போட்டு நல்கவாங்கி
 நலமான காமணியின் சாற்றாலாட்டி
நீட்டபின்பு புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
 நேராகச் சரக்கதனைச் சேர்த்துக்கொள்ளே. (309)

சேர்த்துமே மூலப்பாலா லறுசாமமாட்டித்
திறமாக வுண்டைபண்ணி மிளகுபோலக்
கோர்த்துமே நவலோக மிடைக்கிமிடையேமிய
கோள்கியதோர் லோகமெல்லாஞ் செம்பாய்ப்போகும்
பார்த்துமே பரிதானுஞ் செம்புமாகும்
பண்பான ரசிதமது செம்புமாகும்
நார்த்துமே நாகமது செம்புமாகும்
நலமான காரீயஞ் செம்புமாமே. (310)

சரக்குகள் செம்பின் பெயர்.

காரீயஞ் சித்திபண்ணிக் கையிலிட்டுருக்கிச்
கிராசமாய்ப்போட்டுவர மிடைக்கிடைதான் சரியாய்
வாரீய மாமயனம்போற் றளாய்ப்போகும்
மருவவே யோட்டிலிட்டு வூதிப்போடு
நாரீயம் நலமான செம்புமாகும்
நாலுக் குபரியோன்று விட்டுருக்கிக்
கூரியங் கிண்ணிபோல் கொட்டிக்கொண்டு
குறிப்பாகச்சில்லுவென்று கொட்டிக்கொள்ளே. (311)

கொள்ளென்ற கிண்ணியிலே கருவூமத்தைச்சாறு
குறிப்பாக விட்டதுக்குள் சுத்திசூதம்
மள்ளென்ற விருபலந்தான் கூடவிட்டு
மண்செய்து வாலுகையின் மேலேவைத்து
நள்ளென்ற நாற்சாமந் தீயைப்போட்டு
நலமாகச் சாறெல்லாஞ் சுண்டிப்போனல்
வள்ளென்ற அயதீதாலே கிண்டிவிட்டு
அப்பனே மேற்சில்லு மூடிப்போடே. (312)

போட்டுமே யொருசாம மெரித்தபின்பு
புகழாக ஆறவிட் டெடுத்துவாங்கி
வேட்டுமே வெண்ணெய்போ லிறுக்கிக்காணு
மெய்யான வெண்ணெ யெல்லாம்வழித்துக்கொண்டு
கூட்டுமே குளந்தண்ணீர்க் குள்ளேபோட்டுச்
குறிப்பாகக் கட்டியது மணிபோலாகும்
வாட்டுமே மத்தங்காய்க் குள்ளேவைத்து
வரிசையாய் மூவாறு புடத்தைப்போடே. (313)

புடம்போட்டுச் சூடனுடத் தீயில்வாட்டி
பேரான யென்ணெய்குத்திக் கரண்டிதனிலுருக்கி
நிடம்போட்டு ரண்டாகப் பண்ணிக்கொண்டு
நேராகக் கரத்திலொன்று வாயிலொன்றுவைத்து
தடம்போட்டு மலைதனிலே சஞ்சரித்து
சாந்தமாய்ச் சித்தரைநீ கண்டுபேசி
வடம்போட்ட மகாமூலி யுதகந்தேடி
மகத்தான வுபரசங்கள் பாஷாணந்தேடே, (314)

தேடியே வொவ்வொன்றாய்ச் சம்பாதித்து
திறமாக குளிகைகட்டிக் கேவுனவழியோடு
நாடியே காரீயச் செம்புவொன்று
நலமான தங்கமது நூற்றுக்கொன்றீய
காடியே கனகமது செம்பாய்ப்போகுங்
கைவளைகள் மோதிரங்கள் குண்டலங்கள்பண்ணு
சீடியே சிவவேடந் தரித்துக்கொண்டு
சீராக வட்சரத்தை மனதிலுன்னே. (315)

உன்னவே நவலோகஞ் செப்புமாகும்
உத்தமனே யோவ்வொன்றில் கோடிவேதை
பன்னவே பரியிட்டுச் சூதமிட்டுப்
பண்பான கெந்தியிட்டுச் செந்தூரித்துண்ணு
தன்னவே மேனியது தங்கம்போலாகுஞ்
சார்வான நவலோக மாயிரத்துக்கோடும்
மன்னவே யேமத்தார் கெற்சிக்சாதே
மனமடங்கு யூமைபோல் மவுனமாமே. (316)

மவுனமாந் தவர்க்காரஞ் சுண்ணமானால்
வாதமுமாம் வசியமுமாம் வயத்தம்பமுமாகும
மவுனமாம் பூநீறு சாரத்தைக்கொல்லும்
போக்கான சாரம்விட்டால் செயநீரில்லை
தவனமாஞ் சத்தியது சூதஅமுக்கத்தி
சாதமாம் யெவச்சாரம் திராவகத்துக்காதி
கவனமாங் காசியென்ற சாரந்தானுங்
கருதியதோர் தயிலவகைக் காதியாமே. (317)

இருபத்தைந்து வகையுப்பின் சமுதாயகுணத்தின் பெயர்.

ஆமென்ற யேகம்பச் சாரந்தானும்
அணுகினல் நவலோக மேமமாகும்
வாமென்ற சீனமது குருவுக்காகு
மகத்தான காரந்தா னுருக்கினமுமாகும்
காமென்ற சூடனது நீரைகட்டுங்
கற்பூர லோகத்தைத் தின்றுபோடும்
வேமென்ற அமுரியுப்புச் சுன்னந்தன்னில்
விளங்கியதோர் நீரையெல்லா விடுவிக்கும்பாரே. (318)

பாரப்பா கல்லுப்புச் சுன்னந்தானும்
படுமுன்னே சரக்கெல்லாங் கட்டிப்போகும்
வேரப்பா வேடியுப்பு வாதத்துக்கு
வேரைவிட்டால் காயுமில்லை பூவுமில்லை
ஈரப்பா யிந்துப்பில் பூரமுப்பா
மியலான வளையலுப்பு புடத்துக்காதி
தாரப்பா சவுட்டுப்பில் சூதநீறுங்
தயங்காத திலாலவணச் சார்புகேளே. (319)

சார்வான வங்கமது நீறிப்போகும்
தயங்காத கெந்தியென்ற லவணந்தானும்
சேர்வான செம்புதனை நீறப்பண்ணும்
செயமான பிடாலவண நாகமீறும்
பார்வான சிந்துவென்ற லவணந்தானும்
படுமுன்னே வெண்காரங் கட்டிப்போகும்
கார்வான காச்சுவென்ற லவணத்துக்கு
கண்டரது குருவான கணக்குமாமே. (320)

ஆமப்பா பொன்னம்பர் சூதந்தன்னி
லணைத்தாக்கால் கஞ்சமாங் தோஷம்போகும்
வேமென்ற மீனம்பர் சினத்தைக்கட்டும்
விளங்கியதோர் கடனுரைதான் கல்லுப்புக்காதி
ஒமென்ற விருபத்து அஞ்சுதன்னில்
உத்தமமாம் வெகுபேர்க்கு வுன்னிப்பாரு
நாமிந்தப் படிபார்த்துத் தேர்ந்தமார்க்கம்
நாதாக்க ளிப்படியே பார்த்திடாரே. (321)

[ ]

உபரசகுணத்தின் பேயர்.

பார்த்திட்ட வுபரசத்தின் குணத்தைக்கேளு
பாங்கான துரிசியது சூதத்தைக்கொல்லும்
சேர்த்திட்ட போன்னிமிளை சத்துதன்னில்
சோர்னமது குருவாகிச் சுன்னமாகும்
நார்த்திட்ட ரசிதனிமிளை சத்துதன்னில்
நலங்காத ரசிதமது குருவுமாகும்
கார்த்திட்ட சஞ்சலமாம் நிமிளைதன்னில்
கடிசான வேண்கலந்தான் சுண்ணமாமே. (322)

சுண்ணமாம் லோகமேன்ற நிமிளைதன்னில்
சூட்சமாய்க் குருவாகு மிரும்புதானும்
கன்னமாங் காமமேன்ற நிமிளைதன்னில்
கடிதீராய் சுன்னமுமாங் கருதிப்பாரு
அன்னமாம் அப்பிரேகச் சத்தினலே
ஆதியாஞ் சூதமது கட்டிப்போகும்
சின்னமாங் காந்தத்தின் சத்துதன்னல்
தேகசித்தி சீக்கிரத்தி லாகும்பாரே. (323)

சீக்கிரத்திற் கர்பூரச் சிலையினலே
சேயமான வுபசரங்கள் சுன்னமாகும்
ஆக்கிரத்திற் கல்நாரின் சத்தினலே
ஆகாகா குளிகையிலே ஈய்ந்திட்டாக்கால்
பாக்கத்திற் பார்க்கையிலே வேகுதூரங்கள்
பாங்கான கண்ணுக்கு ளோளியோயியும்
சாக்கரத்திற் சாத்திரவேதி யின்சத்தாலே
சார்வான சோரமது கட்டிப்போமே. (324)

கட்டுமே கல்மதத்தில் சரக்கேல்லாந்தான்
கண்ணினுட அஞ்சனத்தின் சத்துதன்னல்
இட்டுமே வுபசரங்க ளீயமாகும்
விசைந்தகருங் கல்சத்தால் சகலசித்தி
பட்டுமே படிகக்கல் சத்தினலே
பால்கோள்ளக் காயசித்தி பரிவாஞ்சித்தி
சுட்டுமே சுக்கான்கல் சத்தினலே
சுழண்டுருகிக் காயசித்தி சுருக்கிலாமே. (325)

ஆமப்பா யீரக்கல் சத்தினாலே
ஆச்சரியஞ் சரீரத்தி லனலவிக்கும்
நாமப்பா ராசவர்க்க சத்துதன்னால்
நவலோக வேதையுமாம் நாட்டிப்பாரு
போமப்பா கருடபட்சி சத்தினாலே
போரியரவங் கடித்தவிஷ முட்கொள்ளாது
ஒமப்பா ஒட்டினட சத்தினாலே
உய்கின்ற குளிகையுட தோஷம்போமே. (326)

போமென்ற செங்கலுட சத்துதன்னால்
பேரான குளிகைக்குத் துலக்கங்காணும்
ஓமென்ற வேலும்பினுட சத்தினாலே
யிரும்பாகுஞ் சரீரத்துக் குறுதிமேத்த
வாமென்ற மயிரினுட சத்தினாலே
மகாவேக முண்டாகுங் குளிகைதன்னில்
நாமென்ற நத்தையுடச் சத்துக்குத்தான்
நாக்குத்தான் மேதுவாகி நற்கீதமாமே (327)

கீதமாம் நண்டினுட சத்துதன்னால்
கேட்டியாய்ச் சூதமது கட்டிப்போமே
நாதமாம் நாகரத்தின் வண்டுசேத்தால்
நாட்டியே யோடையிலே தாசுமில்லை
சூதமாஞ் சிப்பியுட சத்தினாலே
சோரமொடு காரீயஞ் சுழன்றுசாகும்
ஆதமா மாமையோட்டு சத்தினாலே
ஆச்சரியம் பூமியிலே கால்படாதேன்னே. (328)

என்னவே முட்டையுட சத்தினாலே
யேற்றமாம் வெள்ளீயம் நீரைவாங்குந்
தன்னவே தந்தத்தின் சத்தினாலே
தயங்காமல் வேடியுப்புக் கம்பிக்கட்டும்
மன்னவே வராகத்தின் கோம்புசத்தால்
வளமான வீரமது குருவுமாகும்
பன்னவே மாட்டுக்கொம்பு சத்தினாலே
பாஷான சிவப்பாகும் பண்பாய்ப்பாரே. (329)

பாரப்பா ஆட்டினுட கொம்புசத்தால்
பரிவான வுப்பெல்லாஞ் சுன்னமாமே
தாரப்பா பல்லினுட சத்துதன்னால்
தயங்காமல் வெகுதூரம் பார்க்கப்பண்ணும்
பூரப்பா நாகச் சத்துதன்னால்
புகழ்ந்துநின்ற குளிகைக் குருவுமாகும்
வேரப்பா யிந்திரகோபச் சத்தினாலே
வீண்தனிலே யோடையிலே தரிக்கலாமே. (330)

தரிக்கலாஞ் செவ்வட்டை சத்துதன்னால்
தயங்கியே நடக்கலாங் கெவுனந்தன்னில்
மரிக்கலா மண்டுகச் சத்தினாலே
வார்த்தைகள்தான் சொல்லலாங் கெவுனந்தன்னில்
குரிக்கலாங் கோழியுட சத்தினாலே
கொடியவிரு தோடையிலே திட்டங்காணும்
வரிக்கலாங் கரடியுட சத்தினாலே
வயத்தம்ப மாகுமப்பா மார்க்கந்தானே. (331)

மார்க்கமாஞ் சங்கினுட சத்தினாலே
மனிதனுக்குங் காணாது மருவிப்பாரு
மூர்க்கமா முத்தினுட சிப்பிசத்து
மூலமாம் நவச்சார முத்துப்போலாம்
மார்க்கமா முத்தினுட சத்துதன்னால்
மதயானை சூதமது மணியுமாகும்
பார்க்கமென்ற பவழமது சத்தேயானால்
பரிவான சூதமது யேமமாமே. (332)

எமமாங் கோமேதகச் சத்தினாலே
யிந்திரசால வித்தையெல்லா மறியலாகும்
பூமமாம் புட்பராகச் சத்தினாலே
பூமிக்கு ளடக்கமெல்லாந் தெரிந்துபோகும்
வாமமாம் வயிரத்தின் சத்தினாலே
வழங்கியதோர் சுண்ணமெல்லாம் வரிசையாகும்
பாமமாம் பச்சையுட சத்தினாலே
பரிதியுட கிரணமெல்லாம் பனிப்போலாமே. (333)

பனியான நீலத்தின் சத்திஞலே
பச்சையென்ற கண்டருமே குருவுமாகும்
தினியான சிவப்பினுடு சத்திஞலே
செயலான தாதுவெல்லாஞ் செம்பேயாகு
மணியான வயிடூரியச் சத்திஞலே
மகாநாகம் வணங்கியே வசனங்கேட்குங்
சேணியான கெண்டகச்சீலை சத்திஞலே
கேடியான நாகமது செம்புமாமே. (334)

செம்பான சூடாலைக் கல்லிஞலே
சேர்ந்தநவ லோகங்கள் செந்தூரமாகும்
வம்பான மாக்கல்லு சத்திஞலே
மருவியதோர் தாளகந்தா னீயமாகுந்
தெம்பான தேக்கல்லு சத்திஞலே
சிலைதானுஞ் செம்பாகுந் திறமைமேத்த
நம்பான மஞ்சக்கச் சத்திஞலே
நாறும்பூ செம்பாகும் நயந்துபாரே. (335)

நயந்துபார் தவளைக்கல் சத்திஞலே
நல்மான குளிகைதனை தரையில்வைத்தால்
தயந்துபார் தத்தியே குதிக்குமூருந்
தயவான சிலாவங்கச் சத்திஞலே
பயந்துபார் பாஷாணம் பற்பமாகும்
பரிவான சிலாநாகச் சத்திஞலே
வியந்துபார் வெடியுப்புச் செந்தூரமாகும்
விடுவன்ன பேதியென்ற சத்துக்கேளே. (336)

பேதியென்ற சத்திஞலே லிங்கமதுமேழுகாம்
பேதியா மஸ்தியென்ற சத்திஞலே
சாதியென்ற நவரத்நந் தண்ணீராகுந்
தனித்தசோர்ன பேதியுட சத்திஞலே
நாதியென்ற நவலோகந் தண்ணீராகும்
நலமான மாங்கிஷபேதி சத்திஞலே
ஓதியென்ற வுபரசங்கள் தண்ணீராகும்
உவாமண்ணின் சத்திஞ லுபரசங்கள்நீரே. (337)

நீரான கற்கிட்ட சத்திருலே
    நிலைத்துநிற்குங் காயமது கற்றானுதுங்
காரான கருமணலின் சத்திருலே
    கலந்துநின்ற சொர்னமது குருவுமாகும்
பேரான செம்மண்ணின் சத்திருலே
    புகழான காரீயஞ் செம்புமாகு
மாரான சுத்தமண்ணின் சத்திருலே
    மகத்தான அயஞ்செம்பா மறிந்துபாரே. (338)

அறிந்துபார் முடவாட்டுச் சத்துதன்னு
    லழகான ரசிதமது செம்புமாகும்
புரிந்துபார் கருவண்டு சத்துதன்னுல்
    பேணியதோர் குளிகைக்குக் கீதமுண்டாம்
பரிந்துபார் பன்றிமுள்ளு சத்துதன்னுல்
    பண்பான சூதமது பாலையாகும்
எரிந்துபார் யெளிமுள்ளின் சத்துதன்னுல்
    ஏற்றமுள்ள வீரமது செம்புமாமே. (339)

ஏற்றமாங் கடனுரையின் சத்துதன்னுல்
    எளிதிலே கட்டிப்போம் கல்லுப்புதானும்
நாற்றமா மீனெலும்பு சத்துதன்னுல்
    நற்கெவுரி கட்டியது யீயமாகும்
முத்தமா முட்சங்கு சத்து தன்னுல்
    மூர்க்கமாம் வெள்ளையது மீயமாகும்
பேத்தமாம் துபரோசனை சத்துதன்னுல்
    பிரளாமல் கெவுனத்தி லோடலாமே. (340)

ஓடலாம் நாகபச்சை சத்துதன்னுல்
    உருக்கதுவு முயர்த்தியாஞ் செம்புமாகு
மாடலா மரகதபச்சை சத்துதன்னுல்
    மாசற்ற விரும்பதுவுஞ் செம்புமாகும்
பூடலாம் புத்தான்பழச் சத்துதன்னுல்
    பொங்குகின்ற வெண்காரஞ் செந்தூரமாகும்
வீடலாம் வெண்சுக்கான் சத்துதன்னுல்
    வெள்ளீயம் வெள்ளியாய் விளங்கும்பாரே. (341)

விளங்கவே கதண்டுடைய சத்துதன்னல்
வேண்டியதோர் பாதாள நிதிகள்காணும்
விளங்கவே காகசிலை சத்தினலே
மகத்தான காந்தமது செம்புமாகுங்
களங்கவே காண்டா மிருகச்சத்தினலே
கடிதான பாம்புவிஷங் கழன்றுபோகும்
நளங்கவே கஸ்தூரி யெலும்புசத்தால்
நாறியதோ ருடம்புக்குள் நாற்றமாமே. (342)

போகுமே மந்தாரச் சிலையின்சத்தால்
பேரான சூடனது செம்புமாகும்
வாகுமே கடற்பாசி சத்துதன்னல்
வணங்காத ரோமமது வண்டுபோலாங்
தாகுமே சாலக்கிராமச் சத்துதன்னல்
தங்கமது செம்பாகுந் தாக்கிப்பாரு
ஏகுமே மாங்கிஷச்சீலை சத்துதன்ன
லெடுத்தோடுங் குளிகைக்கு மிடுக்குண்டாமே. (343)

ஆமப்பா மரந்துளிர்க்கல் சத்தினலே
யடங்காத கேந்திமது செம்புமாகுங்
காமப்பா காஸ்மீகப் படிகச்சத்து
கயிலையுறை சிவன்வந்து நிர்த்தஞ்செய்வார்
வேமப்பா நற்காவி சத்தினலே
வெள்ளீயஞ் செம்பாகும் விளங்கிப்பாரு
சேமப்பா செம்புமணற் சத்தினலே
திறமான சவ்வீரஞ் செம்புமாமே. (344)

ஆமென்ற நாகமென்ற சத்தினலே
ஆதியென்ற சூதமது செம்புமாகும்
காமென்ற காரீய மணலின்சத்தால்
காட்சியாம் லிங்கமது செம்புமாகும்
வேமென்ற வெள்ளீய மணலின்சத்தால்
வெண்காரஞ் செம்பாகும் வெதுதூரமோடும்
நாமென்ற ரசிமணற் சத்தினலே
நற்கெவுரி செம்பாகும் நயந்துபாரே. (345)

பாரப்பா யேமமென்ற சத்தினாலே
  பாங்கான தாளகமுஞ் செம்புமாகும்
ஏரப்பா லோகமென்ற சத்தினாலே
  யேற்றமாஞ் சிலையதுவுஞ் செம்புமாகும்
மாரப்பா மயிலிறகு சத்தினாலே
  மாசற்ற குளிகையிட்டு வோடும்போது
தாரப்பா சந்திரனில் நடுக்கல்காணும்
  தயங்காத சத்தினால் குளிர்ச்சிபோமே. (346)

குளிர்ச்சியாங் கருஞ்சுக்கான் சத்தினாலே
  குதிரைப்பற் பாஷாணஞ் செம்புமாகும்
களிர்ச்சியாங் கானகக்கற் சத்தினாலே
  கடுவேக மோடையிலே நில்லென்றால்நிற்கும்
துளிர்ச்சியாங் குருந்தக்கல் சத்தினாலே
  முனையான வாயுதங்கள் கைத்திடாது
துளிர்ச்சியாம் ரசிதசிலைச் சத்தினாலே
  துரிசியது செந்தூர மாகும்பாரே. (347)

பாருமே யேமமலைச் சத்தினாலே
  பாஷான வர்க்கமெல்லாஞ் செந்தூரமாம்
நாருமே நாகமலைச் சத்தினாலே
  நவலோகஞ் செந்தூர மாகும்பாரு
வேருமே வெள்ளியமலையின் சத்தால்
  வெட்டுக்கு தோய்யாது காயத்தில்தானும்
காருமே காரீய மலையின்சத்தால்
  கடும்பச்சை பூரமது செம்புமாமே. (348)

ஆமென்ற அயமலையின் சத்தினாலே
  அசங்காது காயமது யிருப்புத்தூணும்
தேமென்ற திராமலையின் சத்தினாலே
  சீனமது திறமையாஞ் செம்புமாகும்
வேமென்ற வேங்கலமலைச் சத்தினாலே
  வெடியுப்பு செம்பாகும் லெகுதூரமோடும்
ஆமென்ற செம்புமலைச் சத்தினாலே
  ஆதியாங் கல்லுப்புச் செம்புமாமே. (349)

ஆமென்ற பித்தளையின் மலையின்சத்தா
லழகான வேடியுப்புச் சேம்புமாகும்
ஓமென்ற வுபரசங்க ளாற்றிரண்டுபத்தும் [னேன்
ஒவ்வொன்ருய்க் குணகுணத்தி னுற்பனங்கள்சொன்
நாமென்ற நாதாக்கள் சொல்லக்கேட்டு
நன்னூலை யாராய்ந்து தெரிந்தமட்டும்
மாமெனவே மாயிசொன்ன சொல்லைக்கேட்டு
மனசொன்றி மறப்பையெல்லா மாட்டினேனே. ()

மலைகளிற்பிறந்த பாஷாணமுப்பத்திரண்டினுடைய
சமுதாயகுணத்தின் பெயர்.

மாட்டினே னறுபத்து நாலாய்நின்ற
மகத்தான தாதுவிட குணத்தைக்கேளு
காட்டினேன் கற்கடகப் பாஷாணந்தன்னில்
கருநாகஞ் செந்தூர மாகும்பாரு
கூட்டினேன் கோளக பாஷாணந்தன்னுல்
குறிப்பான வெள்ளீயம் செந்தூரமாகும்
சூட்டினேன் சூதபா ஷாணந்தன்னுல்
சொர்னமாம் நாகமது சூட்டிப்பாரே. (351)

சூட்டிப்பா ரரிதாரம் வங்கம்நீறுஞ்
சொற்பெரிய கெந்தியினுல் வீரஞ்சொக்கும்
வீட்டிப்பார் வீரத்தால் நவலோகம்நீறும்
விளங்கியதோர் வைக்கிராந்த தாளகநீருகுங்
தாட்டிப்பார் தாலமப்பா பாஷாணத்திற்குத்
தாரமது தளுக்குவெள்ளி யாகும்பாரு
மூட்டிப்பார் முந்தப்பா ஷாணந்தன்னுல்
முயற்சியாய் நாகமது ஏமமாமே. (352)

ஏமமாஞ் சீர்பந்தப் பாஷாணந்தன்னுல்
எரித்தோடுங் குளிகைக்கு மியல்புமேத்த
தூமமாந் தொட்டிப் பாஷாணந்தன்னுல்
துலங்கியதோர் குதிரைப்பல் சுறுக்காயோடுஞ்
சாமமாஞ் சங்கபா ஷாணந்தன்னுல்
தாமபிரந்தான் துய்யனுந் தாக்கிப்பாரு
கேமமாங் கெவுரியுட பாஷாணந்தன்னுல்
கெடியான சூதமது செம்புமாமே. (353)

செம்பான துத்தபா ஷாணந்தன்னுல்
        செப்பியதோர் நாகமது செம்பாய்ப்போகும்
பம்பான பண்டுருகம் பரிசவேதை
        படுமுன்னே லோகமது ஏமமாகும்
கம்பான காந்தபா ஷானந்தன்னுல்
        காயமது சாமத்திற் சித்தியாகும்
நிம்பான லிங்கபா ஷாணந்தன்னுல்
        நேரான காரீயஞ் செம்புமாமே. (354)

நேரான சரகண்ட பாஷாணந்தன்னுல்
        நோக்கான துரிசியது குருவுமாகும்
தாரான தாளகத்தா லீயங்கட்டுந்
        தாக்கான சிலையதுவுஞ் செந்தூரத்தாதி
ஆரான அவுலப் பாஷாணத்திற்கு
        அட்டமா சித்தியது கைக்குள்ளாகும்
பாரான சலாங்கந் தாரவேதை
        படுமுன்னே தாரமது தங்கமாமே. (355)

தாரமாங் கல்லினிட பாஷாணத்திற்குச்
        சார்வான காரீயங் கட்டிப்போகும்
கங்கமாங் கற்பரி பாஷாணத்திற்குக்
        கடிசான செம்பதுவு மேமமாகும்
அங்கமா மஞ்சனப் பாஷாணத்திற்கு
        அயந்தானுங் காரீய மாமேபாரு
துங்கமாங் கச்சால பாஷாணத்திற்குச்
        சுக்கான கற்செம்பாஞ் சூட்டிப்பாரே. (356)

சூட்டியதோர் சீதாங்க பாஷாணத்திற்குத்
        துரிசியது சுத்தவெளுப் பாமேபாரு
காட்டியதோர் கார்முகிப் பாஷாணத்திற்குங்
        கறுப்பாமே தான்கருவாய்ப் பாருபாரு
நீட்டியதோர் சிலாமதமாப் பாஷாணத்திற்கு
        நிகரான காந்தமது ஈயமாமே
ஆட்டியதோர் பிருகபா ஷாணத்துக்கு
        ஆதியாஞ் சூதமது கட்டிப்போமே. (357)

கட்டிப்போம் வெள்ளையென்ற பாஷாணத்துக்குக்
கடிதான வுருக்கதுவு மீயமாமே
முட்டியே முப்பத்தி ரண்டுதாது
மூளைத்தெழுந்த மலைதனிலே யுற்பத்தியாமே
பட்டியாம் பரங்கிவைப்பு முப்பத்திரண்டும்
பாங்கான குணமெல்லாம் பண்பாய்க்கேளு
தொட்டியென்ற புத்தோடு பச்சையிலே
வேதைதோடு முன்னேநவ லோகமேமமாமே. (358)

ஏமமாம் பொற்றொட்டி சூதங்கட்டு
மேருமைநாத் தொட்டிதான் கெவுரிகட்டுஞ்
சேமமாஞ் செம்பான தொட்டியென்றால்
செயலான செந்தூரம் பண்ணில்வேதை
ஆமமா மயத்தொட்டி களங்கிற்காதி
யழகான மிருதாரு சிங்கியென்றால்
பாமமாம் பரங்கிமா சத்துக்காதி
பண்பான ரத்தசிங்கி சகலமுஞ்செம்பே. (359)

ஆகுமே ரசிதசிங்கி தாரமாமே
யழுக்கான ஏமசிங்கி பச்சையிலேவேதை
தேகுமே தீமுறுகலுருக் கினத்தால்வேதை
சூதமது மாரணமாஞ் சுருக்கில்தானும்
காகுமே கருமுகிலின் பாஷாணந்தான்
கனமான தாரமது கறுப்பாகில்வேதை
சாகுமே சாதிலிங்கங் கட்டினத்தால்
தங்கமதிற் கூட்டிடவே தங்கமாமே. (360)

தங்கமாம் வெள்ளைப் பாஷாணத்திற்குச்
சார்பான வெள்ளீயஞ் சுன்னமாமே
பங்கமாங் கெவுரியென்ற பாஷாணத்திற்குப்
பரிவான காரீயஞ் சுன்னமாமே
பொங்கமாஞ் சைவீரப் பாஷாணத்துக்குப்
பொருமியது நவலோகஞ் சுன்னமாமே
கொங்கமாங் கெந்தியென்ற பாஷாணத்துக்குக்
கொடும்பச்சைக் காட்டுக் கொடிக்கும்போமே. (361)

போமென்ற வாணத்தின் கெந்திதானும்
பூட்டுமுன்னே களங்கெல்லாங் கறுத்துப்போமே
வானென்ற வைப்பரிதாரத் துக்குத்தானு
மகத்தான அயந்தானு முருகிப்போமே
பாமென்ற பவழப்புற்றுப் பாஷாணத்திற்குப்
படுமுன்னே பரீயதுவுஞ் செந்தூரமாமே
கோமென்ற கோடாசூரிப் பாஷாணத்துக்குக்
குருவாகுந் துரிசியது கூர்ந்துபாரே. (362)

கூர்ந்துபார் பஞ்சபட்சி பாஷாணத்திற்குக்
குறிப்பான லோகங்கள் ரவிதனிலேயேமம்
ஆர்ந்துபார் குங்குமப் பாஷாணந்தானு
மாயிரத்துக் கொன்றிடவே யதிகவேதை
நார்ந்துபா ரிரத்தவர்னப் பாஷாணந்தானும்
நவலோகங் காணுமுன்னே யேமமாமே
தூர்ந்துபார் துத்தபது தாரநீறுந்
துரிசிஎன்றுற் சூதத்தைக் கட்டுந்தானே. (363)

கட்டுமே ரசிதமென்ற பாஷாணந்தான்
கறையற்றநவலோகஞ் சித்தியாம் வெள்ளியாமே
மட்டுமே சூதமென்ற பாஷாணந்தான்
மகத்தான காயசித்தி யோகசித்தியாமே
தெட்டுமே நீலபா ஷாணத்துக்குத்
துய்யநீர் சேர்ந்தவுடன் பசுமையாமே
கிட்டுமே கெந்திபா ஷாணத்துக்குக்
கெடியான சூதமது செந்தூரமாமே. (364)

தூரமாஞ் செந்தூரம் பாஷாணந்தன்னுல்
செம்புதனில் பச்சையிலே வேதையாமே
காரமாம் சோரப் பாஷாணந்தன்னுல்
கடிதான தாரமது கறுப்பாய்ப்போமே
பாரமாம் லவண பாஷாணந்தன்னுல்
பாங்கான சூதமது கட்டிப்போமே
நாரமாம் நாகபா ஷாணந்தன்னுல்
நாகத்தில் தேர்ந்ததோரு சோர்னமாமே. (365)

சோர்னமா மிந்திரபா ஷானத்துக்குச்
சூட்சத்தில் பச்சையிலே வேதையாமே
வர்னமாம் பாஷாண முப்பத்திரண்டு [டேன்
வகைவகையாய்க் குணங்களெல்லாஞ் சொல்லிப்போட்
தன்னமாம் நிகண்டுக்குள் வெளியாய்ச்சொன்னேன்
சூத்திரத்திற் சொன்னபடி சரக்கைவைத்து
என்னமா யெடுத்தாடு மெதுவும்போய்யா
மீசானம் பூசைபண்ணி மதுவையுண்ணே. (366)

உண்ணவே தங்கத்தை நீறப்பண்ணு
முளவான காயசித்தி யேமசித்தியாமே
தண்ணவே தாரத்தி னீறினாலே
சரக்கெல்லாங் கட்டுண்ணுந் தாரமாமே
நிண்ணவே செம்பதுவும் நீறினக்கால்
நினைத்தகுரு ராயனென்று பேருமாமே
வென்னவே வெங்கத்தி னீறினாலே
வெள்ளிவித்தை வெகுதூர மோடுந்தானே. (367)

தானென்ற வெள்ளீய நீறினாலே
சாரமது கட்டியே தந்தமாமே
வானென்ற வங்கத்தி னீறினாலே
வளமான தாளகந்தான் குருவுமாமே
தானென்ற திராவினிட நீறினாலே
சிலையதுவுஞ் செந்தூர மாமேபாரு
ஆனென்ற பித்தளையி னீறினாலே
யடங்காத நவலோக மேமமாமே. (368)

எமமா மயத்தினிட நீறினாலே
யெளிதிலே காயசித்தி யாமேபாரு
மேமமா முருக்கினிட நீறினாலே
யுபசரங்கள் சத்தாமே யுன்னிப்பாரு
காமமா நாதத்தி னீறினாலே
நலமான செம்பதுவு மேமமாமே
பாமமாம் பதினொன்றும் பத்துஞ்சொன்னேன்
பார்த்தபடி சொன்னதிந்தப் பரிசுதானே. (369)

சூதத்தின் பெயர்.

சூதத்துப் பெயர்தனையே சொல்லக்கேளு
சிவமான வதன்பீசஞ் சலசூட்சமாமே
வாதத்துப் பெயருடையான் மகாவன்னியாமே
மகத்தான பாரதனும் பிச்சேந்திரனுமே
ஓதத்து ரசகேந்திர லோகனுமே
யுண்மையாஞ் சேயபாக்ய பரமதாமே
நாதத்து ரசநாதன் ரசராசனுமே
நலமான மகாதேச ரசதாதுவாமே. (370)

ஆமேதான் ரசானந்த னினிமைசிவசித்த
னழகான வர்னத்தோ னுகாசகேவுனி
பாமேதான் பராபரமாம் வாயுந்தூமம்
பண்பான சரக்குகளில் பரவச்சீவன்
தேமேதான் சிவனுமஞ் சிவனுமாமே
சினந்திட்ட விந்துவாந் தெரிமுத்தாமே
வேமேதான் மின்னலாம் வேதனுமே
வியங்கியதோர் நாமமெல்லாஞ் சூதமாமே. (371)

சூதத்தின் பெருமையின் பெயர்.

சூதந்தான் வாதத்தில் தேயுமாச்சு
துள்ளியதோ ராட்டெல்லாஞ் சூதத்தாலே
வாதந்தான் வயத்தம்பஞ் சூதத்தாலே
வழங்கியதோர் செந்தூரஞ் சூதத்தாலே
காதந்தான் காயசித்தி சூதத்தாலே
கலந்தோடுங் கெவுனமெல்லாஞ் சூதத்தாலே
நீதந்தான் பூரணமுஞ் சூதத்தாலே
நிலையான யோகமென்ன சூதந்தானே. (372)

மலையின் பெயர்.

மலையினிட பெயர்தனையே வழுத்தக்கேளு
மலையாமே பருவதந்தான் திகிரியாமே
சிலையான கிரியாமே கோத்ரமாமே
கெடியான சிருங்கியாஞ் சயிலமாமே

தலையான தாருப்பிர மஞ்ஞாள்சிகரி
மானதமாஞ் சலங்குன்றவரை ஓங்கலாமே
யலையான பருவதா ரேணமாமே
யழுங்கலாங்கு வாடாமே வெற்புமாமே. (373)

வெற்பாமே விலங்கலாஞ் சிலையுமாமே
வெள்ளியங் குன்றம்தான் சோலையாமே
கற்பான கயிலாயம் கண்ணுதலோன்வெற்பு
கனமான ஆலயப்போன் னசலமேரு
மற்பான மகாமேரு காசியாமே
மகத்தான ருத்திரன்றன் வில்லுமாமே
அற்பான ஆலவிஷ முண்டான்வீடு
அறிந்துரைத்த நாமமெல்லா மலைப்பேராமே. (374)

பூமியின் பெயர்.

பூமியிட பெயர்தனையே பொருந்தக்கேளு
பூமாதவ சுந்தரிமே தினியாமே
நேசியா மூலதக்கண் சங்கினியாமே
நிலமாமே வசுமதி சாந்தையாமே
ஊமியா முறவிலான் விபுலானந்தி
யுகமநகராஞ் சேகமாமே தாத்ரியாமே
காமியாங் காந்தரவம் அகலமாமே
கருதியதோர் பேரெல்லாம் பூமியாமே. (375)

தண்ணீரின் பெயர்.

தண்ணீரின் பெயர்தனையே சாற்றக்கேளு
சலமாமே சலிலமாம் தோயமாமே
அண்ணியாம் பாணியா மமிர்தமாமே
யழகாமே மாபகமா மப்புவாமே
வண்ணியாம் வானிணமாம் வாரியாமே
வழங்கின்ற வுதகமாம் பயமுமாமே
புண்ணியமாம் பாணியமாம் புனலுமாமே
புட்கரசீ வனமாகும் தண்ணீர்ப்பேரே. (376)

அமுரியின் பெயர்.

மூத்திரத்துப் பேர்தனையே மொழியக்கேளு
மூலத்தி லக்கினியால் முதிர்ந்தநீராம்
ஆத்திரத்தி னமுரியா மக்கினியாமே
அடங்காத வாரிதியா லவணமாமே
ஊத்திரத்து ஊகிநீர் வீரநீரா
முடலுக்குள் சேயநீராஞ் சேடநீராமே
காத்திரத்துக் கடுநீரா முவர்நீராமே
கருதியதோர் மூத்திரத்துப் பெயருமாமே. (377)

முலைப்பாலின் பெயர்.

முலைப்பாலின் பேர்தனையே மொழியக்கேளு
அமிர்தமாஞ்சஞ்சீ வியாமுலைப்பாலாமே
அலைப்பாலா மமிர்தத்தின் சலசமாமே
யழகான கெங்கையினீர் சேயநீராமே
மலைப்பாலா மடங்காத பச்சையாமே
மகத்தான சீரத்துப் பானமாமே
தலைப்பாலாம் தன்னியத்து க்ஷீரமாமே
சாற்றியதோர் முலைப்பாலி னுமந்தானே. (378)

சுக்கிலத்தின் பெயர்.

மாதவிடாய்ப் பெயர்தனையே வழுத்தக்கேளு
மாதாந்த வெள்ளமாஞ் செந்நீராமே
தோதாந்தம் தொடக்கத்துத் தீட்டமாமே
சுரோணிதமாம் ரத்தமாம் தூமையாமே
தீதாந்த மடக்கத்துச் சோரமாமே
சேரிவான காஷாயம் திருட்டுமாமே
நாதாந்தம் நாரியிட மருந்துமாமே
நலமான சத்தியின்றன் னுதமாமே. (379)

நாதமாஞ் சீரமா நயப்புமாமே
நலமான அன்னீராம் திரோபவமுமாமே
ஓதமா மொழுக்கமாங் கரியுமாமே
ஓங்கியதோர் பருவமா முழுக்குமாமே

போதமாம் புந்தியினில் வெள்ளமாமே
பெருக்கான ஆறுமே விரகமாமே
வேதமாஞ் சோரகுரு விதுக்குள்ளாமே
விளங்கியதோர் மாதவிடாய்ப் பேயருமாமே. (379)

நாரிசுக்கிலத்தின் பெயர்.

சுக்கிலத்துப் பேர்தனையே சொல்லக்கேளு
சூதமாம் பாரதமாம் வித்துவாமே
மங்குலமா மயங்கியதோர் காமநீரா
மாரதமா மகோதரமா மாய்கையாமே
குக்குலமாம் கோடியதோர் சீகாரமாமே
கூரான காமமாஞ் சரீரமூளும்
நெய்க்குல மாமுனைசி யுயிராய்நின்ற
நேயமாஞ் சிவமான நீண்டவித்தே. (380)

வித்தாகி விண்ணாகி மேலுமாகி
விளைந்திட்ட அமிர்தமாய் விளங்காநின்ற
மத்தாகி வானாகி வடிவுமாகி
வழங்கியதோர் தாம்பிரத்து லிங்கமாகி
சித்தாகிச் சின்மயமாய்ச் சேகச்சாலமாகி
திரோதாயின் மயக்கத்திற் சிக்கித்தானாய்
பத்தாகிக் கோனாகிப் பரத்துநின்ற
பகரரிய சுக்கிலத்துப் பேருமாமே. (381)

பெண்காமக்கலையின் பெயர்.

பெண்ணுடைய காமக்கலை பெயரைக்கேளு
புகலரிய சுரதநீர் திரிதியாமே
குண்ணுடைய காமநீர் குலையாள்யோனி
கூறியதோர் விந்துவாம் குளிர்ச்சியாமே
விண்ணுடைய விளைவான பூமியாமே
வேதும்பியதோர் காமமாம் விரிசுமாமே
உண்ணுடைய உன்னீரா ஊனீராமுத்து
ஓங்கியதோர் பெண்காமக் கலையின்பேரே. (382)

பாலின் பெயர்.

பாலுடைய பேர்தனையே பகரக்கேளு
பரிவாமே க்ஷீரமாஞ் சுத்தமாமே
மாலாமே வாதுரசா யந்தமாமே
மாசற்ற யமாசிரயம் நாகியந்தமாமே
பூலினிட்ப் புரத்தவனந் தன்னியமாமே
புகழான புரத்தவனம் வாரிசங்கியாமே
வேலினிட சீவனமாமக்கி யாந்தமாமே
வேரான பாலினிட நாமமாமே. (383)

நெய்யின் பெயர்

நெய்யினிட பெயர்தனையே நிகழ்த்தக்கேளு
நேயமா மாச்சியமாம் கிருதமாமே
நெய்யினிட சற்பியாம் பவித்திரமுமாமே
நவநீத மமிர்தமாஞ் சங்கிரியமாமே
விய்யினிட விஷநாசம்பிறகிச் தீதமுமாமே
மேலான பரவஞ் சனியுமாமே
மையினிட திரிதோஷ மமிர்தமாமே
மடங்காத நெய்யினிட நாமந்தானே. (384)

தயிரின் பெயர்.

தயிரினிட பேர்தனையே சாற்றக்கேளு
சங்கோலம் செவ்வியமலம் பயோத்தியுமாமே
தயிரினிட தத்தாகந்தரு சாத்திரமுமாமே
காலசெய மதமாகும் பூதோயமுமாமே
வயிரினிட தக்கிரமாம் கியாழமாமே
மதுரமா மம்மிலேச்சம்பரி கிருதமாமே
உயிரினிடவாத அரம்திரி தோஷசமன
மோங்கியதோர் தயிரினிட பேருமாமே. (385)

தேனின் பெயர்.

தேனினிட் பேர்தனையே செப்பக்கேளு
செவப்பான மதுவாமே சவுத்திரமாமே
மானினிற மாட்சீகமாஞ் சப்பிரமுமாமே
மாக்குசமா சனமாகும் புட்பரசமுமாமே

தானினிட தயிலவர்ன மதுப்புமாமே
சவுத்திரந்து கபிலங்கமிருத வர்னமாமே
ஊனினிட உருக்கினமா மேழுகுமாமே
ஓதியதோர் தேனினது நாமமாமே. (386)

காடியின் பெயர்.

காடினது பெயர்தனையே கருதக்கேளு
காஞ்சியாங் கஞ்சைவங்குல மாசமாமே
நீடியாம் சைவீரந்தா னியமலமாமே
நேரான வூர்நாளமகா ரசமுமாமே
ஆடியா மவந்தியாம் வீராமலமுமாமே
அவாக்கிர சமகோதந்து சோதகமுமாமே
காடியாங் கசலமாம் கோமயமுமாமே
சணித்துநின்ற பேரெல்லாம் காடியாமே. (387)

வெடியுப்புச் செயநீரின் பெயர்.

ஆமப்பா வெடியுப்பு செயநீர்கேளு
அப்பனே கல்லுப்பு பலந்தான்ரண்டு
ஓமப்பா பழம்புளிதான் பலந்தான்ரண்டு
ஒக்கநன்று யரைத்ததனை வில்லையாக்கி
தாமப்பா கலிலிட்டுச் சீலைசெய்து
சார்வாக புடம்போட்டு எடுத்துக்கொண்டு
நாமப்பா வப்புறத்தே வைத்துக்கொண்டு
நலமான கடனுரைதான் பலமிரண்டே. (388)

ரண்டோடு துரிசியது பலமும்ரண்டு
நேராகக் காச்சீர்க்கு இலைச்சாற்விட்டு
இரண்டோடு இருசாம மரைத்தபின்பு
இயலான வகலிலிட்டுச் சீலமண்செய்து
பண்டோடு பத்தெருவிற் புடத்தைப்போட்டுப்
பதராம லாறவிட் டெடுத்துவைத்து
துண்டோடு சீனவது பலமும்ரண்டு
துடியர்ன சூடனது பலமும்ரண்டே. (389)

பலமாக நாலையுந்தான் கல்வத்திட்டுப்
பண்பாகப் புலியரசனைச் சாறுவிட்டு
பேலமாக இருசாம மரைத்தபின்பு
பேசாதே யகலிலிட்டுப் புடத்தைப்போடு

நலமாகப் புறம்பாக எடுத்துவைத்து
நவாச்சாரம் பலம்ரண்டு கல்வத்திட்டு
அலமாக வண்டநீர் பலந்தான்ரண்டு
அழகாகக் கல்வத்திற் கூடப்போடே. (390)

போட்டுமே புளிமாங்காய்ச் சாறுவிட்டுப்
பேசாதே யிருசாம மரைத்தபின்பு
நாட்டுமே யகலிலிட்டுப் புடத்தைப்போடு
நலமாக வாறவிட்டு எடுத்துக்கொண்டு
ஆட்டுமே யப்பிரேகம் பலந்தான்ரண்டு
அடுக்குவெள்ளைப் பாஷாணம் பலந்தான்ரண்டு
வாட்டுமே கல்வத்திற் கூடப்போட்டு
மாதளையின் புளிச்சாற்று லிருசாமமாட்டே. (391)

ஆட்டியே முன்போலே புடத்தைப்போட்டு
அப்புறமா யெடுத்துவைத்து ஆண்மைகேளு
ஈட்டியே யிந்துப்பு பலந்தான்ரண்டு
எழிலான பூரமது பலம்தான்ரண்டு
நாட்டியே நாரத்தம் பழச்சாறுவிட்டு
நலமாக விருசாம மாட்டிப்பின்பு
மாட்டியே யகலிளிட்டுச் சீலைசெய்து
மணற்மறைவில் புடம்போட்டு எடுத்துவையே. (392)

வைப்பான சவ்வீரம் பலந்தான்ரண்டு
மகத்தான சத்தியென்ற சாரமிரண்டு
பொய்யான புளியாரைச் சாறுவிட்டுப்
பொருந்தவே யிருசாம மாட்டிப்பின்பு
ஐயான அகலிலிட்டுச் சீலைசெய்து
அலரவிட்டு மனல்மறைவில் புடத்தைப்போட்டு
மெய்யாக எடுத்துவைத்த பின்புகேளு
மேலான வெண்காரம் பலந்தான்ரண்டே. (393)

ரெண்டான பூநீறு பலந்தான்ரண்டு
நேர்ப்பாகச் சீக்காயிலைச் சாறுவிட்டு
இரண்டான இருசாம மரைத்துப்பின்பு
எழிலான வகலிலிட்டுப் புடத்தைப்போடு

வண்டான தேடுத்துவைத்து மறுபால்கேளு
மகத்தான வன்னமென்ற பேதிபலம்ரண்டு
கண்டான காந்தமது பலந்தான்ரண்டு
கடுகியரை புளியமோக்குச் சாற்றில்தானே. (394)

தானென்ற வகலிலிட்டுப் புடத்தைப்போடு
சமர்த்தாக வாறவிட்டு எடுத்துவைத்து
வானென்ற சிலையினிட சுண்ணமொன்று
மகத்தாக ஐயேழு பலமுமாச்சு
வேனென்ற வேடியுப்பு நாலாங்காய்ச்சல்
மிடுக்காக ஏயேழு பலமும்தூக்கி
கானென்ற கல்வத்திற் பொடியாய்ப்பண்ணிக்
கலரவே பழச்சாற்று லரைத்திடாயே. (395)

அரைத்திட்டு மூன்றுநா ளானபின்பு
அலரவே ரவிதனிலே காயப்போட்டு
தரைத்திட்டு இரும்பான சட்டியிலேவைத்துச்
சாமந்தா னெரியிட்டுத் தளரவிட்டு
கரைத்திட்டுக் கல்வத்திற் போட்டுக்கொண்டு
கடுங்கார நீர்விட்டு நாற்சாமமாட்டி
புரைத்திட்டுக் கல்வத்தில் வைத்துமூடி
பேலக்கவே மண்செய்துபெரும் புடமாய்ப்போடே. ()

புடம்போட்டு ஆறவிட்டுப் பொடியாய்ப்பண்ணி
பேரான பணியில்வைக்கச் செயநீராமே
நடம்போட்ட நீர்தனிலே போடக்கேளு
நல்லலிங்கம் சவ்வீரம் பூரமூன்றும்
வடம்போட்ட வகைக்குஇருகா நிடைதான்தூக்கி
மகிழ்ச்சியாய்ச் செயநீரில் கலக்கிக்கொண்டு
திடம்போட்ட வுபசரங்கள் பாஷாணங்கள்
சிறப்பான லோகத்திற் சுருக்குப்போடே. (397)

சுருக்கிடவே சரக்கெல்லாஞ் சுருண்டுபோகுந்
துடியாக வேததூர மெட்டியோடும்
முருக்கிடவே காயசித்தாம் யோகசித்துமாகும்
உர்ப்பனமாஞ் சூதமொழு சேருவாங்கி

கருக்கிடவே கல்வத்திற் போட்டுக்கொண்டு
கலங்காத வெடியுப்பு செயநீராலாட்டு
மருக்கிடவே யேழுநா ளாட்டியாட்டி
மாசற்ற ரவிதனிலே காயப்போடே. (398)

காய்ந்தபின்பு காடிதனிற் கழுவிவாங்கி
கடுகவே பீங்கானில் வைத்துக்கொண்டு
தோய்ந்தபின்பு துரிசியொரு சேருவாங்கி
சுகமாக வங்கத்தி லேழுதிரமூற்றி
பாய்ந்தபின்பு வெடியுப்புச் செயநீர்தோய்த்துப்
பருவமாய் பத்துநாள் ரவிதனிலேபோட்டு
ஆய்ந்தபின்பு அப்புறத்தே வைத்துக்கொண்டு
அரைப்பதற்கே திராவகத்தி னுண்மைகேளே. (399)

வெடியுப்புத் திராவகம்.

ஆண்மையாய் வெடியுப்புப் பலமோதுறு
ஆசில்லா சீனமது நூற்றுப்பத்து
காண்மையாய் கருதையுடக் கற்றத்தாட்டி
காரியமாஞ் சக்கரத்தின் வாலையிலேபோட்டு
தீண்மையாய்த் திராவகத்தை வாங்கிவாங்கிச்
சிறப்பான குப்பியிலே யடைத்துவைத்து
தாண்மையாய்ச் சூதமது கல்வத்திட்டுச்
சமபாகந் துரிசியைத்தா னதனிற்போடே. (400)

துரிசிசெந்தூரம்.

தன்னிலே போட்டபின்பு திராவகத்தைவார்த்து
தயங்காமல் மூன்றுநா ளாட்டிப்பின்பு
நன்னிலே ரவியிலிட்டுக் காயப்போட்டு
நலமான பெரும்பீங்கான் றன்னில்வாங்கி
மன்னிலே யுமிகெருப்பில் வறுத்துப்போட்டு
மயங்காமல் காசியென்ற குப்பிக்கேற்றி
துன்னிலே வாலுகையின் மேலேவைத்துத்
துரிசாகப் பனிரண்டு சாமத்தீயே. (401)

தீயிட்டுக் கமலம்போ லாறுமல்போடு
சிறப்பாகப் பனிரன்டுங் கடந்தபின்பு
காயிடவே யாறவிட்டுக் கருத்தாய்வாங்கிக்
கல்வத்திற் போட்டுமதி னீராலாட்டு

வேயிடவே மூன்றுநா ளாட்டிப்பின்பு
மீளாதே பீங்கானில் வறுத்துப்போடு
தாயிடவே காசியென்ற மேருக்குள்போட்டுத்
தாக்குகின்ற வாலுகையில் வைத்திடாயே. (402)

வைத்திட்டுத் தீயெரிப்பாய் கமலம்போல
மாறுமல் பனிரண்டு சாமந்தானும்
ஐத்திட்டு அஞ்சுதர மிப்படியே சாய்த்தா
லருணன்போல் சிவந்திருக்குந் துரிசிதானும்
நைந்திட்டு நவலோகம் நூற்றுக்கோடும்
நலமான மாற்றென்ன பனிரண்டாகுங்
கைத்திட்டுக் காவிக்கு மூப்புக்கேகாய்
காயசித்தாங் கவுனசித்தாங் கருதிப்பாரே. (403)

நாகக்கிண்ணி.

கருதியதோர் நாகமது பலந்தான்பத்துக்
கனமான குகைதன்னில் வைத்துருக்கி
இருதியதோ ரிலுப்பைநெய்யி லேழுதாமுருக்கி
யிதமாகச் சாய்த்தபின்பு கரண்டிதனில்வைத்து
மருதியதோர் வேடியுப்பு நீருக்குள்ளே
மகத்தான கெந்தியுட பீனிசூடன்
உருதியதோர் வகைக்குப் பலமொன்றேபோட்டு
உரவான வேடியுப்பு நீராலாட்டே. (404)

ஆட்டியே மூன்றுநாள் வேடியுப்புநீரால்
ஆண்மைா யொருசேரிற் கலந்துகொண்டு
ஊட்டியே யுருகையிலே சூருக்குப்போடு
உறவான நாகமங்கே கட்டிப்போகுங்
கூட்டியே லேசாகத் தகடுகட்டி
மூதண்ட வோரிலைத் தாமரையினேடு
நாட்டியே அவுரியோடு ஆடுதின்னுப்பாளை
நல்லமணத் தக்காளி சாணுங்கியாமே. (405)

ஆமப்பா யிதுவைந்து மரைத்துக்கொண்டு
அடைதட்டி ரண்டாக வப்பால்வைத்து
வாமப்பா அபினியோடு சூடன்கெந்தி
வகைக்கிரண்டு பலங்கூட்டி நீரிலாட்டி

தாமப்பா தகடுக்குள் பூசிப்பூசி
தளமான அடைதன்னற் கவசமூடி
சேமப்பா சீலைசெய்து உலரவிட்டுச்
சிறப்பாகப் பத்தெருவிற் புடத்தைப்போடே. (406)

புடம்போட்டு யிப்படிதானே மூவிசையானல்
பேரான நாகமது செம்புமாகுங்
கிடம்போட்டுக் கிண்ணிபோல் வார்த்துக்கொண்டு
கிண்ணிநிரை சமனுகச் சூதம்விட்டு
நடம்போட்டு நாரும்பூ நாலத்தோன்று
நலமான பொற்றலையின் சாற்றினலே
வடம்போட்டு வரைத்துமே கிண்ணிக்குள்பூசி
வாலுகையில் வைத்தெரிக்கச் செந்தூரமாமே. (407)

செந்தூரம் பணவிடைதான் தேனிலுண்ணச்
சிறுகதிர்போல் மேனியாஞ் சாவோயில்லை
நந்தூரம் நவலோக மாயிரத்துக்கொன்று
நாட்டிடவே பனிரண்டு மாற்றுமாகும்
எந்தூர மலைதனக்குள் சஞ்சரிக்கலாகும்
ஏத்தமாம் நாதாக்கள் பதத்தைப்போற்றி
குந்தூருங் குளிகைக்கு வகையைக்கேளு
குறியாறு தலங்களெல்லாஞ் சோதித்தேறே. (408)

கற்பமுண்ணப்பாத்திரம்.

ஏறவே கற்பமுண்ணப் பாத்திரத்தைக்கேளு
ஏற்றமா மூசியெட்டிப் பிடிக்குங்காந்த
மாறவே ஐந்துபத்துப் பலமெடுத்து
அப்பனே குன்றிபோ லுடைத்துக்கொண்டு
தேறவே சீலைதனில் தோலைக்கட்டிச்
சிறப்பாகக் கொள்ளிலைச்சார் சுவேதம்பண்ணி
நாறவே நாற்சாம மானபின்பு
நல்வேளைச் சாற்றினல் நாற்சாமந்தானே. (409)

தானென்ற குன்றிமணிச் சாற்றினலே
தயங்காமல் நாற்சாமஞ் சுருக்குப்போடு
கானென்ற கல்லுருவி சாணங்கி தன்னல்
கலங்காதே நாற்சாமஞ் சுருக்குப்போடு

வேனென்ற ரவிதனிலே காயப்போடு
வீரமது பலமைந்து வெண்காரமைந்து
கோனென்ற குன்றிமணிக் குக்கிலோடு
கோம்புத்தேன் வெள்ளையோடு யெல்லாக்கூட்டே. ()

கூட்டியெல்லாம் வேடியுப்பு நீரினாலே
குமரவே மூன்நாள் ளாட்டிப்பின்பு
காட்டியே காந்தத்தி லோக்கக்கூட்டி
கடுகியரைத் தோருசாமம் வில்லைகட்டி
மூட்டியே யுலரவிட்டுச் சரவுலையிலூது
முத்துப்போல் மணிமணியா யிறங்கிப்போகும்
நாட்டியே கரடெல்லாம் போக்கிக்கோண்டு
நலமாக முன்போல அரைத்துக்கட்டே. (411)

கட்டியே முன்போல அஞ்சுதரமூது
கசந்துமே மணிமணியா யிறங்கிப்போகும்
ஒட்டியே மணியெல்லாம் போருக்கிக்கோண்டு
போரிச்சேடுத்த வெண்காரம் பலந்தான்கூட்டி
உட்டியே யுருக்கியெல்லாந் தேளிந்தபின்பு
உகந்தஞ்சு மித்திரத்தில் சிதராமல்சாய்த்துக்
கட்டியே கலம்போல் வார்த்துக்கோண்டு
காயசித்தி பண்ணுகிற கற்பங்கேளே. (412)

கேளப்பா கற்பமெல்லா மிதிலேயுண்ணு
கெடியான வஸ்துவுண்ணு பால்தானுண்ணு
வாளப்பா மருந்துகளில் விஷத்தைநீக்கி
மகாசித்தி யாக்கியே மாளோட்டாது
தூளப்பா சூதமிட்டு கெந்தியிட்டுச்
சுத்தமாந் தாயிட்டுச் செந்தூரித்துண்ணு
காளப்பா கற்பாந்த காலந்தானுங்
காயமது வழியாது கனகமாமே. (413)

கனகத்தைக் கண்டவுடன் கெற்சிக்காதே
கன்னியின்மே லாசையுற்று யிச்சிக்காதே
மனமகத்தை துன்பத்தி லமிழ்ந்திடாதே
மாயமாம் வாசனையை மனத்தால்தள்ளு

இனமகத்து ஆறுதல மெத்தப்பாடு
மெழிலான குருபதத்தில் மனதையூணு
தினகத்தில் தீனியில் ருசியைவிட்டுச்
சேயமாக வுடல்தனையே சித்திபண்ணே. (414)

அப்பிரேகச் சத்து.

சித்தியா மப்பிரேகம் பலமோநூறு
திறமாக நவநீதம் பண்ணிக்கொண்டு
வெத்தியா மெருக்கினுட கிழங்குச்சாற்றில்
மிடுக்காக நாலுநாள் வைத்துக்கொண்டு
பத்தியாம் பில்லைபண்ணிக் காயப்போட்டு
பரும்புடமாய்ப் போட்டெடுத்துக் கல்வத்திட்டு
முத்தியா முள்ளங்கிச் சாற்றில்தானு
மூன்றுநா ளரைத்துமுன்போல் புடத்தைப்போடே. ()

போடவே புளியரணைக் கிழங்குசாற்றால்
போட்டரைத்து ரண்டுநாள் பில்லைசெய்து
மூடவே முன்போலே புடத்தைப்போட்டு
முயற்சியாய்ச் சாணங்கிச் சாற்றிலோர்நாள்
கூடவே கொள்ளிலையின் சாற்றிலோர்நாள்
கோடிக்கள்ளிச் சாற்றிலரைத் தோருநாள்போடு
வாடவேவாழையின் கிழங்குசாற்றி லோர்நாள்
மகத்தான வகத்தியுட பருப்புச்சாறே. (416)

சாறிலே யரைத்தோருநாள் புடத்தைப்போடு
தயங்காதே குன்றிமணிச் சாற்றிலோர்நாள்
சேறிலேசேவகனார் கிழங்குசாற்று லோர்நாள்
சேயமான புடம்போட்டு மிகத்துவைத்து
வேறிலே விற்றேருரு பலந்தான்ஐந்து
வெண்காரம் பலம்ஐந்து சாரம்ஐந்து
தேறிலே வெண்குன்றி வெல்லம்வெண்ணெய்
சிறப்பாகப் பலம்ஐந்து கூடப்போடே. (417)

கூட்டியெல்லாம் வேடியுப்பு நீராலாட்டிக்
குறிப்பாக மூன்றுபங்கு பண்ணிவைத்து
ஒட்டியே யொருபங்கு அப்பிரேகங்கூட
ஒன்றாக மத்திச்சுப் பில்லைசெய்து

தாட்டியா யுலரவிட்டுச் சரவுலையிலூது
தவளம்போல் மணிமணியாய்ச் சத்துவீழும்
ஆட்டியே தகடெல்லாம் போக்கிக்கொண்டு
அழகான முன்மருந்தோ டொக்கச்சேரே. (418)

ஒக்கவே சேர்த்தரைத்துப் பில்லைதட்டி
யுலரவிட்டுச் சரவுலையில் ஊதுஊது
மிக்கவே சத்தெல்லா முருகிவிழும்
வெளுப்பான சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
சிக்கவே நகநட்டோடேமுன் மருந்துபோட்டுச்
சிறப்பாகப் பில்லைதட்டித் தேரவிட்டு
மிக்கவே பின்பொருகா லூதிப்போடு
மிகப்பொருக்கி யனைத்துமொன்றாய் சேர்த்துகொள்ளே.

ஒண்ணாகச் சேர்த்துமே குகையிலிட்டு
ஒருபலந்தான் வெண்காரம் பொரித்துப்போடு
நண்ணாக உருக்கியே மித்திரத்தில்சாய்த்து
நலமான சத்தெல்லா மெடுத்துக்கொள்ளு
கண்ணாத மித்திரந்தா னேதென்றாக்கால்
கனமான தேங்காய்ப்பால் வெள்ளாட்டுப்பாலும்
திண்ணாகத் தேனோடு யிலுப்பைப்பூச்சாறு
திறமாக நெய்யோடு சமனாய்ச்சேரே. (420)

சரக்குசாய்க்க மித்திரம்.

சமனாகச் சதுரக்கள்ளிச் சாறுதானுஞ்
சாரமொடு கருவளையல் பலந்தான்ரண்டு
புமனாகப் பொடிசெய்து கலக்கிக்கொண்டு
போக்கான சரக்கெல்லா முருக்கிச்சாய்க்க
கமனாகக் கல்மஷங்க ளற்றுபோகும்
காரணமாஞ்சத்தோ செம்புவகை யெல்லாம்
சமனாக மூன்றுதா முருக்கிச்சாய்க்க
முத்துப்போல் வெளுப்பாகு மேனியாமே. (421)

அப்பிரேகச்சத்தில்வேதை.

மேனியாம் அப்பிரேகச் சத்தெடுத்து
விளங்கியதோர் மாணிக்கு வொன்றுதங்கம்
சீனியாம் மெழுதகட்டிக் கிண்ணிவார்த்து
சிறப்பாக அடித்தூரில் சீலைசெய்து

மாணியாம் வாலுகையின் மேலேவைத்து
மயங்காதே சுத்தித்துச் சூதந்தானும்
பாணியாம் பலமிரண்டு மதிலேவிட்டுப்
பக்குவமாய்க் கருமத்தின் சாறுவாரே. (422)

வார்த்துமே தீயெரிப்பாய் கமலம்போலே
வற்றவற்ற மறுக்காலுமச் சாறுவாரு
போர்த்துமே யறுசாமந் தீயைமூட்டு
பேரான சூதமது வெண்ணெயாகும்
கோர்த்துமே இரண்டாகக் குளிகைபண்ணு
குளுந்தண்ணீர் தன்னில்விட்டு மூடிவைத்து
மார்த்துமே மறுநாள்தா னெடுத்துவட்டி
மத்தங்காய்க் குள்வைத்துப் புதைத்துப்போடே. (423)

போடப்பா மத்தங்காய்க் குள்ளேபத்து
பேரான ஆதயிலேக் குள்ளேபத்து
வீடப்பா விராலியிலேக் குள்ளேபத்து
வேடியான பிராயிலேக் குள்ளேபத்து
ஆடப்பா அரிசிலேக் குள்ளேபத்து
அப்புறந்தான் சூடனுட தீயில்வாட்டி
ஊடப்பா வெண்ணெய்குத்தி யுருகிப்போடு
உர்ப்பனமாஞ் சூதமது மணியுமாமே. (424)

சூதமது மணியானல் சேந்தூரமாகுஞ்
சுப்பிரமாய்க் குருவாகுங் களங்கமாகும்
வாதந்தான் கைகட்டி யேவல்கேட்டு
மகத்தான காயமது சித்தியாகும்
நீதந்தான் யோகமது சித்தியாகு
நிராதாரக் குறிகளெல்லாம் நிசமாய்காணும்
பாதந்தான் பூமியிலே நடவாமல்பண்ணப்
பரிசிக்குள் சொல்லுகிறேன் பண்பாய்ப்பாரே. (425)

பூநாகச்சத்து.

பண்பான பூநாகம் பதக்குவாரி
பாலிலே ஊரவைத்துக் காடிவிட்டுக்கழுவி
நண்பான ரவிதனிலே உலரவைத்து
நலமான வெண்காரம் சேரிரண்டு

அண்பாக வவிரியிலேச் சாறுப்புரண்டு
அளந்துகொண்டு வெண்காரங் கூட்டப்போட்டு
மண்பானை தன்னிலே கோதிக்கவைத்து
வகையான வெண்காரங் கரைந்துபோமே. (426)

போனபின்பு பூநாகந் தனில்தெளித்துப்
புரட்டியே காயவைத்துப் பானையிலேசெம்மி
மானபின்பு மறுசட்டி மேலேமுடி
மண்செய்து காய்ந்தபின்பு அடுப்பில்வைத்து
கானபின்பு கமலம்போ சறுசாமமெரித்து
கசகாம லாறவிட்டு மண்ணைவாங்கி
தானபின்பு சாம்பலெல்லாஞ் சட்டியிலேகொட்டிச்
சாம்பல்நிறை பா திக்குச் சூதம்விட்டுத்தேயே. (427)

பூநாகச்சத்து.

தேய்த்தவுடன் சூதமது வெட்டைபோலச்
சிறப்பான குன்றிமணி காரஞ்சாரம்
சாய்த்தவுடன் சவ்வீரம் ரெண்டவித்து
தளுக்கான நெய்யோடு வெல்லங்குல்லம்
மீத்தவுடன் வெடியுப்பு நீராலாட்டி
மிடுக்கான சூதவெட்டை தனில்மதித்து
கோய்த்தவுடன் குகையிலிட்டு வுருக்கிச்சாய்க்கக்
கோடிதான பூநாகச் சத்துமாமே. (428)

சிவம்பண்ணமணிநிரை.

ஆமேதான் சிவம்பண்ண நிரையக்கேளு
அரியதோர் பணவிடைதான் பதின்னென்றாகும்
சேமேதான் சிவம்பண்ண நூற்றெட்டாகுந்
திரளவே யுருகியே செம்பட்டிற்கோர்த்து
ஏமேதா னைந்தெழுத்து மெட்டெழுத்துமோது
எளிதிலே சிவன்வந்து யெல்லாஞ்சொல்வார்
போமேதான் சிவகாமி புத்திசொல்வாள்
பேரான குளிகைக்கும் வகைசொல்வாளே. (429)

சொல்வாள் சுரபிக்கு விராகனிடையேழில்
சுத்தித்த சூதத்தின் குளிகைபண்ணு
சொல்லுவாள் தம்பனைக்கு மூவைந்துநிரையில்
சூட்டியே பால்வகையி லாட்டினுக்கால்

சொல்லுவாள் கேவுனத்துக் கைம்பத்தோன்று
சூட்சமாய்ச் சாரணையை யூட்டித்தீரு
சொல்லுவாள் ரண்டாகக் குளிகைகட்டுச்
சுகமாகக் கரத்திலொன்று வாயிலொன்றுவைவையே. ()

குளிகையேறச் சிமிள்.

வைக்கவே பொன்னாலே சிமிள்போல்பண்ணி
வரிசையாங் குளிகைக்குத் தமருமிட்டு
தைக்கவே பொன்னை சிமிளிகிலியில்மாட்டி
சரப்பளிபோல் மார்பதனில் போட்டுக்கொண்டு
உய்க்கவே வாயிலொன்று கருத்திலொன்றுவைத்து
ஒடுநீ கேவுனத்தில் தவறினுக்கால்
ஒய்க்கவே ஒன்றுவிட்டா லொன்றுதவுமப்பா
ஒடுகிற வேகத்தி னும்மைதானே. (431)

உண்மையாய் வைத்தடைக்கி யோடிப்பாரு
ஒகோகோ கேசரத்தை யெழும்பிநின்று
வண்மையாய் வாய்மூடும் போதுமானாள்
மகத்தான குளிகையது நாதஞ்செய்யும்
தண்மையாய்த் தயங்காதே வாசியைநீமாட்டு
தளரவிட்டால் கேவுனவழி சுருக்கோடாது
கண்மையாய்க் குளிகையுட னீருண்டாக்கால்
கேடியிலே காயசித்தியாகுங்கேளே. (432)

கேளுநீ வாசிவிட்டால் சித்தனல்ல
கேட்டியாய் மனந்தன்னை வாசியிலேவூணு
பாளுநீ பதுகமட்டுஞ் சங்கிலியிலோடு
பழக்கமே யானபின்பு சங்கிலியைநீக்கி
தூளுநீ வெருங்குளிகை தன்னிலோடு
துப்டரவாய் மனமதுவுஞ் செம்மையாகும்
மீளுநீ மலைதனுக்குள் சஞ்சரிக்கவேண்டு
மென்றவுப ரசங்கள் கிடைக்கமட்டுங்கேளே, (433)

கேளப்பா கிடைத்தமட்டுங் குளிகைபண்ணி
கேசரத்தி லோடாமல் மலைதனிலேயோட
நீளப்பா லகுவாகச் சொல்லக்கேளு
நேரான குளிகைதன்னை வச்சிரத்தின்குகையில்

தூளப்பா சூதமணி யுருகும்போது
தூிசரவே யிடைக்கிடைதான் பூநாகச்சத்து
வாளப்பா கொடுக்கையிலே யுள்கொண்டுகலக்கு
மகத்தான சாரணையில் சாய்த்திடாயே. (434)

சாய்க்குமுன்னே வச்சிரமாங் குகையில்தானும்
சாங்கமாய்க் குகைக்குள்ளே மருந்துபூசி
வாய்க்குமுன்னே யிடைக்கிடைதான் சத்தையீந்து
மணிபோலே நின்றுடும் பருவம்பார்த்து
போய்க்குமுன்னே புடத்தயிலம் பத்துக்கொன்று
பேரான குளிகைநிரைசத்துநிரைபார்த்து
நேய்க்குமுன்னே தயிலத்தை நீட்டினுக்கால்
நேரான சத்தையெல்லாந் திண்ணுப்போமே. (435)

திண்ணுப்போய் சூதயிடை சரியாய்நிற்குஞ்
சிங்கமாஞ் சூரணம்போல் தீபனமுமாகும்
முண்ணுபோங் குளிகைக்கு மருந்துபூசி
யுற்பனமாய்ச் சூதத்தை யுருக்கிக்கொண்டு
நண்ணுபோம் நாரும்பூச் சத்தையூட்டு
நலத்தபின்பு அப்பிரேகச் சத்தையூட்டு
கண்ணுபோங் காந்தத்தின் சத்தையூட்டு
கணக்கறிந்து வுருகையிலே புடத்தயிலம்நீட்டே. (436)

நீட்டியபின் சூதத்தை யெடுத்துப்பார்த்தால்
நிலவரமாம் முன்னிருந்த யிடைதானிற்கு
மாட்டியபின் புடத்தயிலம் குகைபூச்சுமருந்து
வச்சிரமாங் குகைதானுஞ் சத்துமார்க்கம்
ஒட்டியபின் னேழுநூற்றில் திறந்துசொன்னே
னதுக்குள்ளே இல்லையென்று யேங்கவேண்டாம்
மூட்டியபின் னேழுநூற்றைப் பார்த்துக்கொண்டு
மோசங்கள் வாராமல் செய்திடாயே. (437)

செய்திடவே திரும்பியொருகுகை வேறெடுத்துச்
சிறப்பாகக் கரியோட்டில் வாட்டிக்கொண்டு
கொய்திடவே குகைக்குள்ளே மருந்துபூசி
கொஞ்சசூத மிதில்வைத்து வுருக்கிக்கொண்டு

நெய்திடவே நிமிளையுடச் சத்தையீய்ந்து
நேர்ந்தபின்பு வைக்கிராந்தச் சத்தையீவாய்
செய்திடவே சாத்திரபேதி யின்சத்து
சார்ந்தபின்பு புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே. ()

எடுத்துமே வேறேயொன்று குகைக்குள்ளிட்டு
இதமாகச் சூதம்நின் றுருகும்போது
கடுத்துமே சிலாசத்து சத்தையூட்டு
கல்நாரின் சத்தூட்டிக் கல்மதத்தையூட்டு
பிடத்துமே புடமிட்டு யெடுத்துக்கொண்டு
பேரான குகையொன்று புதுசாய்வைத்து
மடுத்துமே குகைக்குள்ளே மருந்துபூசி
மாசற்ற சூதத்தை வைத்துருக்கி (439)

தாக்கியே படிக்கக்கற் சத்துயீய்ந்து
சார்பான புடமிட்டு யெடுத்துக்கொண்டு
போக்கியே புதுக்குகைக்குள் மருந்துபூசி
பேரான சூதம்நின் றுருகும்போது
நாக்கியே ராசவர்த்த சத்தையீய்ந்து
நலத்தபின்பு கெருடபட்சி சத்தையீவாய்
மூக்கியே சங்கினுட சத்தையீந்து
முன்போலப் புடமிட்டு யெடுத்துக்கொள்ளே. (440)

எடுத்தபின்பு பிறப்பான பாஷாணத்தை
யிதமாகக் கிடைத்தமட்டுஞ் சத்தைவாங்கி
துடுத்தபின்பு சூதமது வுருகையிலேயீந்து
சுளுக்காகப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
மிடுத்தபின்பு பாஷாண வைப்புதன்னை
வரிசையாய்ச் செய்தெடுத்து வைத்துக்கொண்டு
கடுத்தபின்பு கட்டியே சத்துவாங்கி
கைம்முறையாய்ச் சோதித் தெடுத்துக்கொள்ளே. ()

கொள்ளவே சூதநின் றுருகும்போது
குறிப்பாகப் பாஷாணச் சத்தையீந்து
கள்ளவே சுனக்காகப் புடத்தைத்தாக்கிக்
கருதியே நிறுத்துப்பார் சூதநிரைநிற்கும்

நள்ளவே சாரகா ரங்களெல்லாம்
நகைக்கவே கட்டியே சத்துவாங்கி
துள்ளவே சூதத்தில் கொடுத்தபின்பு
சுகமாகப் புடத்தையிட்டு நிறுத்துப்பாரே. (442)

நிறுத்தபின்பு சூதத்தி லதிகநிரைநின்றால்
நீட்டிநீ பின்பொருக்கால் புடத்தைநீயும்
மறுத்தபின்பு சூதத்தைக் குகையிலிட்டு
வுருக்கிமாசற்ற நவரத்னச் சத்தையூட்டு
ஒறுத்தபின்பு நவலோகச் சத்தையூட்டு
உயர்த்தியாய் மூலிகையின் சத்தையூட்டு
பொறுத்தபின்பு புடமிட்டுத் தமருமிட்டுப்
பூட்டியே சங்கிலியின் சிமிழில்வையே. (443)

வைத்துமே வாயிலொன்று கரத்திலொன்று
வாசியோ டிருத்தியங்கே வைத்துக்கொண்டு
மைத்துமே மலைதனக்கு ளோடலாகும்
மகத்தான ரிஷிசித்தர் நாதாக்களோடே
தைத்துமே தற்காலம் பேசவேண்டாம்
தாட்சண்யஞ் சொல்லியே சஞ்சரித்து
அந்துமே யஞ்சனத்தின் சத்தையீய்ந்து
ஆனபின்பு கருங்கல்லுச் சத்தைத்தாக்கே. (444)

தேடியே யுதகங்கள் சவுதரித்துச்
சிறப்பாகச் சாரூபமென்ற குளிகைபண்ணி
ஓடியே சித்தருடன் வாதுபேசி
உகந்துமே யேழுவரை சோதித்தேறி
தேடியே பேரண்டஞ் சிற்றண்டமபார்த்துச்
சிறப்பான சமாதியுற்றுச் சிவத்துள்புக்கி
நீடியே கற்பூர தேகமாகி
நிட்சயமாய்ச் சீஷரைநீ சேர்த்துக்கொள்ளே. (445)

உபசரத்தின் சத்து.

கொள்ளென்ற உபசரத்தைச் சத்துபண்ணு
கூறுகிறே னுதாக்கள் கூறாதெல்லாம்
விள்ளென்ற வுபசரத்தின் சத்துகேளு
வேடியுப்புச் சீனமோடு கல்லுப்புயீந்து

கள்ளென்ற காடியோடு பூசினிக்காய்சாறு
கழுதையுட மூத்திரமு மனுஷருடவமுரி
கள்ளென்ற சமபாய மாகக்கூட்டிச்
சட்டியிலே விட்டுவைத்துக் கலக்கிடாயே. (446)

கதக்கியே உபரசத்தை பொடியாக்கிக்கொண்டு
கடிதான சீலையிலே தளரக்கட்டி
துலக்கியே டோலையிலே தொங்கவிட்டுத்
துரிதாக யெரித்திடுவாய் வற்றமட்டும்
மலக்கியே காட்டினல் கழுவிப்போட்டு
மாசற்ற ரவிதனிலே யுலரவைத்து
நிலக்கியே பலம்வைத்து வுபரசத்தைத்தூக்கி
நேரான வேடியுப்புச் செயநீர்தோயே. (447)

தோச்செடுத்து ரவிதனிலே யுலரவைத்துச்
சுருக்காகப் பூநீறு வெண்காரஞ்சாரம்
வேச்செடுத்து வீரமோடு குன்றிமணிவெல்லாம்
வெண்ணெயோடு ஆமணக்கம் வித்துங்தேனும்
மாச்செடுத்து வகைக்குவிரு பலந்தான்கூட்டி
வாதமென்ற குடோரியோரு பலமும்போட்டு
பாச்செடுத்து வெடியுப்பு நீராலாட்டி
பக்குவமாய் மூன்றுபங்காய்ப்பண்ணிவையே, (448)

பண்ணியோரு பங்கெடுத்து வுபரசத்தில்கூட்டிப்
பக்குவமாய்ச் சரவுலையி லூதித்தீரு
கண்ணியே சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
கரடெடுத்துப் பின்னையோரு பங்குகூட்டி
தண்ணியே சரவுலையி லூதிப்பின்பு
சத்தெல்லாம் பொருக்கியே யெடுத்துக்கொண்டு
ஒண்ணியே யொருபங்கில் கரடுகூட்டி
யூதியே முன்போலே யெடுத்துக்கொள்ளே. (449)

எடுத்துமே சத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து
இதமான வெண்காரம் பொரித்துருக்கி
மடுத்துமே மித்திரத்தில் சாய்த்துக்கொண்டு
மாசற்ற குளிகைக்குச் சாரணையேயீவாய்

உடுத்துமே வுபரசங்கள் நூற்றிரண்டுபத்து
உத்தமனே யிப்படிதான் சத்துவாங்கு
தடுத்துமே சூதமிட்டுத் தங்கமிட்டுச்
சரியாக கெந்தியிட்டுச் செந்தூரித்துண்ணே. (450)

உண்ணவே காயமது சித்தியாகும்
உற்றநவ லோகத்தில் நூற்றுக்கோடும்
கண்ணவே காவிக்கு முப்புக்கேகா
கனமான வுபரசத்தின் செந்தூரந்தான்
திண்ணவே புளியுப்பை யிழந்துப்போடு
சிறந்திட்ட வரதார மேறிப்பாரு
பண்ணவே பராபரையை நித்தம்பூசி
பானத்தால் மயங்காதே பக்குவமாய்நில்லே. (451)

பாஷாணச் சத்து.

நில்லென்ற பாஷாணச் சத்துகேளு
நேர்ப்பான வெடியுப்புச் செயநீர்க்குள்ளே
கல்லென்ற கல்லுப்புச் சுன்னத்தோடுங்
கடிதான சவுக்காரச் சுன்னவீரங்
தில்லென்ற வகைக்குஅரைப் பலந்தான்ரண்டு
செயநீரில் கலக்கியே வைத்துக்கொண்டு
பல்லென்ற பாஷாணக் கட்டிவைத்துப்
பக்குவமாய் நாற்சாமங் சுருக்குப்போடே. (452)

சுருக்குக்கு முன்பேதான் சுத்திபண்ணிக்கொள்ளு
சுத்தியது யேதென்றால் சொல்லக்கேளு
முருக்கிமுருக் கிலைச்சாற் படிதானென்று
முயற்சியாய்ச் சிறுகீரைச்சாறு படிதானென்று
குருக்குக் குருக்கிலைச்சாற் படிதானென்று
குப்பைமேனிச் சாறு படிதானென்று
விருக்குக்கு வெள்ளைச்சா ரணையின்சாறு
வேளையோடு தும்பைச்சாற் படியும்வாரே. (453)

படிவாரு பாகலிலைச் சாறுதானும்
பசரிச்சாற் நொச்சியோடு குன்றிச்சாறும்
படிவாரு பூசினிக் காயின்சாறும்
பகர்கின்ற மனுஷனோடு கழுதையாடு

படிவாரு காடியொரு கள்ளுதானும்
    பாங்கான கற்சுன்னம் படிதான்போடு
படிவாரு பூநீறு சங்குநீறு
    பண்பாகக் கலக்கியெல்லாம் பாண்டத்திற்போடே ()

போட்டுமே நடுவேயொரு விட்டம்போட்டு
    பேரான பாஷாண மறுபத்துநாலுங்
தீட்டுமே சீலையிலே தளரக்கட்டிச்
    சிறப்பாக டோலைப்போல் தொங்கவிட்டு
ஆட்டுமே யடுப்பில்வைத்து வற்றவட்டுமெரித்து
    ஆறியபின் னெடுத்துமே காடிவிட்டுக்கழுவி
தூட்டுமே யுலரவிட்டு வெடியுப்புநீரால்
    சுருக்கிடவே நாற்சாமஞ் சுட்சங்கேளே. (455)

கேளப்பா துரிசியோடு பூநீர்ய்ந்து
    கெடியான கற்சுண்ணஞ் சங்குச்சுண்ணம்
வேளப்பா வெடியுப்பு செயநீராலாட்டி
    விளங்கியே மெழுகான பதத்தில்வாங்கி
பாளப்பா பாஷாண மேலேதானும்
    பக்குவமாய்க் கவசம்போல் பண்ணிக்கொண்டு
நீளப்பா சீலைசெய்து புடத்தைப்போட
    நேரான பாஷாணஞ் சத்துமாமே. (456)

சத்தான யிடைக்கிடைதான் பொரிக்காரமிட்டுச்
    சார்வான வச்சிரமாங் குகையில்வைத்து
சித்தான சில்லிட்டுச் சீலைசெய்து
    சிறப்பாக வுருக்கிடவே சத்துமாகும்
சத்தான பாஷாண மறுபத்துநாலுந்
    தருகியே யிம்முறைபோல் செய்துக்கொண்டு
சுத்தான சூதத்தி லிட்டுருக்கிச்
    சூட்சமாய் புடமிட்டு யெடுத்துக்கோள்ளே. (457)

கோள்ளென்ற சத்துக்குள் தங்கமிட்டுக்
    குறியாகச் சூதமிட்டுக் கெந்தியிட்டு
வள்ளென்ற வாலுகைமில் செந்தூரித்துண்ணு
    மாசற்ற தங்கமா மேனிதானும்

அள்ளென்ற நவலோக மாயிரத்துக்கோடும்
ஆணியில்லை பாஷாண வேமத்துக்கு
புள்ளென்ற விருபத்து ஐந்துமாற்று
பேரகத்திலே மேத்தவுண்டு புகட்டியாடே. (458)

லவணகாரசாரசத்து.

ஆடவே லவணமோடு காரசாரம்
அறிவாக யிருபத்து ஐந்துதன்னை
ஒடவே வெடியுப்புச் செயநீரிற்றேய்த்து
உகந்துமே ரவியிலிட்டுப் பாஷாணமொன்று
தேடவே சவர்க்காரச் சுன்னம்வீரந்
திறமையா யொன்றுக்கு நாலுபூசி
வாடவே பூநீரில் நடுவேவைத்து
வகையாக யிருசாம மெரித்திடாயே. (459)

எரித்திட்டுப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
யெழிலான வச்சிரமாங் குகைக்குள்தானு
வரித்திட்டுச் சுண்ணும்பு வுள்ளேபூசி
வளமாக மருந்தைவைத்து மண்ணைப்பூசு
பரித்திட்டு மூன்றுசீலை வலுவாய்ச்செய்து
பாங்குட னுலையில்வைத் தூதும்போது
தரித்திட்டுச் சத்தாக வுருகிநிற்கும்
தயங்காதே போரிக்கார மிட்டுருக்கே. (460)

உருக்கியே சூதத்திற் சாரணையேயீய்ந்து
உற்றுமே புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
மருக்கிரோ உப்பான சத்துதன்னை
மருவியதோர் திராவகத்தி லரைத்துக்கட்டி
பருகியேஉப்பான கேசப்புடந்தான் போட்டாயானுல்
பாங்கான வருணன்போல் செந்தூரமாகுந்
தருகியே உற்கொள்ள காயசித்தியாகுந்
தவராமல் நவலோக மாயிரத்துக்காமே. (461)

நவலோகச்சத்து.

ஆமப்பா நவலோகச் சத்துகேளு
ஆதியாம் வெடியுப்புச் செயநீர்க்குள்ளே
ஓமப்பா துரிசியுடன் கெவுரிரண்டு
ஊரவைத்து யிடைக்கிடைதான் ஒக்கக்கூட்டி

ஏமப்பா யேமுனா ளானபின்பு
எடுத்தரைத்து வேடியுப்புச் சேயநீர்தன்னில்
நாமப்பா வில்லைகட்டி ரவியில்வைத்து
நலமாக வுலர்ந்தபின்பு யெரித்திடாயே. (462)

எரித்திடவே கிளிஞ்சிநீர் குள்ளேவைத்து
இதமாகச் சாமமொன்று ஆனபின்பு
அரித்திடவே கடுங்காரக் குகையிலிட்டுமூடி
அப்பனே பத்தெருவிற் புடத்தைப்போடு
விரித்திடவே வெண்ணீறுய்ப் பொருமிப்போது
மீளாத நவலோகத் தகடுவாங்கி
தரித்திடவே சேயநீரிற் குழப்பிக்கொண்டு
செப்பமா யிடைக்கிடைதான் பூசிடாயே. (463)

பூசியே யுலரவைத்துப் பின்புகேளு
பேரான நிமிளைதனைப் பொடியாய்ப்பண்ணி
தாசியே தகடுக்குக் கீழ்மேல்வைத்துச்
சாங்கமா யைம்பதெரு வடுக்கிப்போடு
கூசியே யாரவிட்டு யெடுத்துப்பாரு
குறிப்பான காரீயம் போலேயாகும்
தேசியாஞ் சூதத்திற் சாரணையேசெய்து
சிறப்பாகப் புடமிட்டு எடுத்துக்கொள்ளே. (464)

எடுத்ததொரு சத்துதனில் தங்கமிட்டு
எளிதாகச் சூதமிட்டுக் கெந்தியிட்டு
மடுத்ததொரு வாலுகையில் செந்தூரித்துண்ணு
மருவியதோர் கசடுகக்கிப் பாலையாகும்
அடுத்ததொரு நவலோகஞ் சத்திரத்துக்கொன்று
அணைத்தக்கால் பதினறு மாற்றுகாணுங்
கடுத்ததொரு புடத்துக்குங் காவிக்கும்போகா
கனமான நவலோகஞ்செந்தூரமாமே. (465)

நவரத்தினச் சத்து.

தானென்ற நவரத்தினச் சத்துகேளு
சாதகமாய்க் கழுதையோடு குதிரையானை
பானென்ற பசுவோடு வெள்ளாடுஅஞ்சும்
பரவியதோ ரமுரிதனை பாண்டத்திலிட்டு

தேனென்ற ரத்தனமோன் பதும்வெவ்வேறாய்
சிறப்பாக டோலேகட்டி யெரித்துவாங்கி
கோனென்ற ரவிதனிலே யுலரப்போட்டு
கூட்டுநீ வெண்காரங் குடோரிதானே. (466)

குடோரியோடு குன்றிமணி குக்கில்பங்கு
கொழிஞ்சில்வேர் பிரண்டையோடு ஆமணக்கம்வித்து
திடோரியாம் வெளிக்காட்டா மணக்கம்வித்து
தேனோடு வெண்ணெய்வெல்லம் பழமும்போடு
தடோரியாஞ் சமபாகம் நிறுத்துக்கொண்டு
சாணுங்கிச் சாறுவுட்டுச் சாமமாட்டி
நடோரியாம் மவரத்தனம் பசரிக்கொண்டு
நலமான குகைமில்வைத்து வூதிடாயே. (467)

ஊதிடவே நவரத்னஞ் சத்துமாகும்
உத்தமனே கரடெடுத்து முன்போலூர
நாதிடவே மூன்றுதர மூதிப்பின்பு
நலமாகச் சோதித்துச் சத்தெல்லாமெடுத்து
வாதிடவே மித்திரத்தி லுருக்கிச்சாய்த்து
மகத்தான சூதத்திற் சாரணையேசெய்து
போதிடவே புடமிட்டு எடுத்துக்கொண்டு
பேய்மக்காள் பேரண்டபதம் நிமைக்குள்ளேபோடே.

போமென்ற சத்திலே தங்கமிட்டுப்
பேரான சூதமிட்டுக் கெந்தியிட்டு
வாமென்ற வாகையிற் செந்தூரித்துண்ணு
வயிரத்தி னொளிபோலே தேகமாகும்
காமென்ற சாவுபோய்யாங் கற்பகோடி
சமாதியிலே யிருந்துரைத்துச் சஞ்சரிக்கலாகும்
ஓமென்ற நவலோகங் கோடிக்கோடும்
உயர்த்தியாய் மாற்றதுவு மிருபதாமே. (469)

செம்பு மூலிகை.

ஆமென்ற மூலிகைக்குள் செம்புகேளு
அவுரியோடு தாமரைச் செம்பல்லி
போமென்ற புளியரணை உமரிகோவை
பிடாமுக்கி கொடுவேலி சிவப்புமாகும்

தேமென்ற செந்தீராய்க் கரியசாலை
சிறுகீரை பதினென்றுந் திடமாய்வாங்கி
வேமென்ற வெவ்வேறுய்ச் சாறுவாங்கி
விரவிய பாண்டத்தில் மூன்றுநாள்கேளே. (470)

சேம்பு-ச-மித்திரம்.

கேளப்பா வெண்கருவுங் குன்றிசீனங்
கேடியாகப் பொடிபண்ணிக் கூடப்போட்டு
வாளப்பா பாண்டத்திற் காய்ச்சும்போது
வகைநாலு மித்திரத்தை மருவிக்கேளு
தாளப்பா சாரமோடு யிந்துப்பின்மெழுகு
சார்வான வெண்ணெயோடு கூடவிட்டு
காளப்பா மேற்சட்டி கவிழ்த்துமுடி
கசகாமற் சீலைசெய்து மெரித்திடாயே. (471)

ஐமி திரம்.

எரித்திட்டுச் சாம்பலா யெடுத்துக்கொண்டு
இதமான சாம்பலுக்கு யெட்டிலொன்று
அரித்திடவே ஐமித்திரம் விபரங்கேளு
ஆவுநெய் வெண்காரம் வெல்லங்தேனுங்
குரித்திட்ட குன்றியோடு கூடயிட்டுப்பிசைந்து
குடோரிதான் பத்துக்கு ஒன்றுபோட்டு
திரித்திட்டு மூன்றுநா ளரைத்தபின்பு
சார்வான ரவிதனிலே காயப்போடே. (472)

போட்டுமே வில்லைகட்டிச் சரவிலையிலூது
பேரான மூலிகைதான் செம்புமாகும்
மாட்டுமே மித்திரத்தில் சாய்த்துக்கொண்டு
மருவுகின்ற சூதத்திற்சா ரணையேசெய்வாய்
காட்டுமே யிச்செம்பு தங்கமிட்டுக்
கனமான சூதமிட்டுக் கெந்தியிட்டு
வாட்டுமே வாலுகையிற் செந்தூரித்துண்ணு
மருவியதோர் நவலோக மாயிரத்துக்கொன்றே. (473)

ஈயமூலிகைகள்.

ஒன்றான மூலிகையி லீயங்கேளு
உத்தமனே பொன்னாங்கண்ணி சூரையோடுசீந்தில்
திண்ணான செருப்படியுஞ் சிறுபூளைவிழுதி
செப்பரிய முசுட்டையோடு முத்தெருக்கஞ்செவிதான்
விண்ணான வெள்ளைச்சா ரணையுடன்வெள்ளறுகு
விளங்குமுத் தாமணிதான் பதின்மூன்றுகேளு
தண்ணாக முன்போலப் பாவகமேசெய்து
சத்தெடுத்துச் சூதத்தில் தாக்கிடாயே. (474)

சுரூபமென்ற குளிகை.

தாக்கிட்டு யிப்படிதான் வரிசையாகச்
சமர்த்தாகச் சாரணைதான் செய்துக்கொண்டு
போக்கிட்டுப் புடமிட்டு யெடுத்தாயானால்
பேராக முன்னிருந்த யிடைதானிற்கும்
தூக்கிட்டு இப்படிதான் னிருபத்தொன்று
சுத்தமாய்ச் சத்துகளை யெடுத்துக்கொடுக்கில்
நோக்கிட்ட சுரூபமென்ற குளிகையாகும்
நொடிக்குள்ளே மூன்றுலகுஞ் சுத்தலாமே. (475)

சுத்தியே மூன்றுலகும் பாட்டர்தாமுஞ்
சோதித்து ஆயிரத்தெட் டண்டமெல்லாம்
அத்தியே அதிசயங்க ளெல்லாம்பார்த்து
அகத்தியர்தா னிருக்கிற மலைக்குமிப்பால்
நத்தியே யரசடியில் வீற்றிருந்து
நலமான பிள்ளைக்கு முபதேசித்து
முத்தியே மூன்றுலகுங் கீர்த்திபெற்று
மூச்சாட சமாதியிலே யுறைந்தார்காணே. (476)

உறைந்திட்டு யெழுபதுக முபதேசித்த
உத்தமாங் காலாங்கி ஐயர்க்கப்பா
நிறைந்திட்ட காலாங்கி ஐயர்தாமும்
நேருகின்ற பக்குவத்தி லேனையழைத்து

மறைந்திட்ட குளிகையோடு வாதங்காட்டி
மாசற்ற நிர்க்குணத்தின் வழியுஞ்சொல்லி
பறைந்திட்ட பதியினுட பண்புகாட்டிப்
பசுபாச மறிவித்துப் பாரென்றுரே. (477)

பாரென் றெனையழைத்துக் காலாங்கிதாமும்
பக்குவத்தி லறிவித்தார் பண்புள்ளானென்று
நேரென்று யெழுபதுகம் வாதம்பார்த்து
நிலையாத கருவையெல்லா நிலைக்கப்பண்ணி
ஏரென்ற யேழுகாண்ட முன்னேசொன்னேன்
ஏற்றவா மேளுநூற்றுச் சில்வானஞ்சொன்னேன்
நேரென்ற நிகண்டில்லை நம்முடையமரபில்
நிலையாது சாஸ்திரங் கணிர்மூடமாமே. (478)

நிர்மூட மாமென்றே சாஸ்திரங்களெல்லாம்
நிலைக்கவே நிகண்டொன்று செய்தேனப்பா
வர்மமெல்லாம் வெளியாகத் திறந்துசொன்னேன்
வாதத்தி னுற்பனங்கள் வழக்குஞ்சொன்னேன்
தர்மமா யுள்ளபடி திறந்துசொன்னேன்
சார்வான நிகண்டுக்கு வொப்புக்காணேன்
கர்மமெல்லாந் தனையகற்றிக் கற்பஞ்சொன்னேன்
காயசித்தும் யோகசித்துங் கருவாய்ப்பாரே. (479)

பரிபாஷைக் கருவுக்குத் திறவுகோல்.

பாரப்பா நிகண்டதுவும் பத்தேழுநூறு
பரிபாஷைக் கருவுக்குத் திறவுகோலாகும்
நேரப்பா அண்டத்தில் சாஸ்திரங்களெல்லாம்
நிரைநிரையாய்ச் சோதித்துக் கருவையுன்னி
சேரப்பா சிவகாமி சொல்லக்கேட்டுச்
சிந்தைமகிழ்ந் தையர்சொல்லைத் திறமாய்க்கேட்டு
கோரப்பா வாயிரத்து யேழுநூறும்
கோட்டினேன் குறிப்பெல்லாங் கூர்ந்துபாரே. (480)

பஞ்சபூத விபரம்

கூர்ந்துபஞ்ச பூதத்தின் விபரங்கேளு
கூரான தேவதைக்கு மைந்துபூதம்
தேர்ந்துநின்ற சிருட்டிக்கும் பஞ்சகர்த்தாள்
செயலான மனுஷனுக்கு மைந்துபூதம்
ஆர்ந்துநின்ற பறவைக்கு மைந்துபூதம்
அப்பனே யோனியெல்லா மைந்துபூதம்
வார்ந்துநின்ற வாதத்தி லைந்துபூதம்
வகையெல்லா மார்க்கமாய் மருவிக்காணே. (481)

பஞ்சபூதவர்ணம்

காணப்பா பிரிதீவிதான் மண்ணுமாச்சு
கலந்துநின்ற அப்பதுவுந் தண்ணீராச்சு
தோணப்பா தேயுவது நெருப்புமாச்சு
சுத்தமாம் வாயுவது காற்றுமாச்சு
ஆணப்பா ஆகாசம் விண்ணுமாச்சு
அறிந்துகொள்ளப் பிரிதிவியினிறம் பொன்னுமாச்சு
வீணப்பா அப்புநிறம் பளிங்குமாச்சு
மீளாத தேயுநிறஞ் செம்புமாச்சே. (482)

ஆச்சப்பா வாய்வுநிறங் கருப்புமாச்சு
ஆகாச நிறமென்ன புகையுமாச்சு
போச்சப்பா பிரிதியின்கூ ரேதென்னில்
பேரானமயி ரெலும்புதோல் சதையுமாகும்
நாச்சப்பா நரம்போடு வைத்துமாச்சு
நலமான அப்புவின்றேன் கூரேதன்னில்
பேச்சப்பா வெள்ளைநீ ரிரத்தமூளை
வெண்சதையா மச்சையோடு வைந்துமாமே. (483)

ஐந்தான தேயுவுடக் கூரேதென்னில்
ஆகாரந் துஞ்சல்பயம் சோம்பல்போகம்
உஞ்சான வாயுவுடக் கூரேதென்னில்
உடலோடு கிடத்தலா மிருக்கையாகும்

ஒஞ்சான நடத்தலோடு விருத்தலாகும்
உயர்கின்ற வாகாசக் கூறேதென்னில்
கஞ்சான காமமோடு குரோதம்லோபம்
காரணமா மேகத்தோடு ஆச்சிரியமாமே, (484)

ஆமேன்ற மலக்கூறு பிரிதீவியாகும்
அப்புவின்கூ றேதென்னி லமுரியாகும்
தேமென்ற தேயுவுடக் கூறேதென்னில்
சென்னீராம் நாதமாம் வாயுவுக்கூறு
மூமென்ற மூலப்பாலும் வாய்நீராகும்
மூர்க்கமாம் விந்துவுமா காசக்கூறு
வாமென்ற வஸ்துவென்றே யிவைகளைந்து
மகத்தான குருவாகு மருவிப்பாரே. (485)

சேந்தூரக் களங்கு.

மருவுகின்ற தங்கமது பிருதீவுமாகு
மகத்தான காரீயம் அப்புவாகும்
திருவுகின்ற செம்பதுவுந் தேயுவாகுஞ்
சிறப்பான யிரும்பதுவும் வாயுவாகும்
நருவுகின்ற நாகமது ஆகாசமாகும்
நலமான லோகமிது பஞ்சபூத
மருவுகின்ற லோகமிது வஞ்சுங்கூடில்
வஸ்துவுப்பு காவிக்கு மேகாதென்னே. (486)

ஏகாமற் சேந்தூரங் களங்கமெல்லாம்
எளிதான யேற்றமொன்று சொல்லக்கேளு
தாகாமற் றங்கத்தைத் தகடுதட்டித்
தனியான காவிதன்னைப் பழச்சாற்றாலரைத்து
வாகாமல் தங்கத்தின் மேலேபூசி
வளமாக நாலுதரங் காய்ச்சிப்போடு
தேகாமற் செம்புதனைத் தகடுதட்டிச்
சிறப்பான குன்றிமணி வேடியுப்புச்சேரே. (487)

சேரிதிலே சமனைகச் சீனந்தன்னைச்
சிறப்பான செம்புக்கு மூன்றிடையேயாகுங்
காரிதிலே கழுதையுட கற்றத்தாட்டி
கசகாமற் பூசியே காயவைத்து
பாரிதிலே கரியோட்டில் பழுக்கக்காய்ச்சிப்
பரிவான கழுதையுடக் காற்றில்தோய்த்து
ஓரிதிலே யேழுதரங் காய்ச்சிக்கொண்டு
எளிதாகத் தங்கத்திற் சமனுய்ச்சேரே. (488)

சேர்த்ததனை யிரும்பிடை வரப்பொடியைத்தான்
திறமாகப் பழச்சாற்றி லூரவைத்து
மூத்ததனை மூன்றும்நாள் கழுவிவாங்கி
மூர்க்கமாம் வெண்காரஞ் சமனுய்ச்சேர்த்து
ஆர்த்ததனைச் செவ்வல்லிக் கிழங்குசாற்றில்
அரைத்துமே குகையில்வைத் துருக்கிப்போடு
சார்த்ததனைத் தங்கத்தில் சமனுய்ச்சேர்த்துத்
தனிப்பின்பு காரீயம் பலத்தைவாங்கே. (489)

வாங்கியே குகையிலிட்டு வுருக்கிக்கொண்டு
வளமாகச் சாய்த்துவா கற்றாழஞ்சோற்றில்
ஏங்கியே யேழுதா முருக்கிச்சாய்த்து
இதமான தங்கத்தி னிடைதான்சேர்ப்பாய்
ஓங்கியே நாகமோரு பலத்தைவாங்கி
யுற்பனமா இலுப்பைநெய்யி லேழுதாஞ்சாய்த்து
தாங்கியே மங்கத்திற் சமனுய்ச்சேர்த்துச்
சாரித்து வைந்தையுந்தா னுருக்கிடாயே. (490)

உருக்கியதோ ரிடையெல்லாம் நிறுத்துப்பார்த்து
உணர்வாக வந்திடைக்கு வெள்ளிசமன்சேர்த்து
செருக்கியதோர் செந்தூரங் களங்குச்சுன்னங்
திரமான மேழுகோடு தயிலவகையெல்லாம்
பருக்கியே பாய்ச்சினு லுட்கொண்டுபழுக்கும்
பரிவாகப் புடஞ்செயந்தா னுகும்பாரு
தருக்கியே காவிக்கு முப்புக்கேகா
கனமான பஞ்சலோகக் கருத்துதானே. (491)

கருத்தாகச் செந்தூரங் களங்குதன்னைக்
கனமான நவலோகந் தீயச்சொல்லி
கருத்தாக சூத்திரத்திற் சுருக்கிச்சொன்னேன்
சூட்சமெல்லாம் நிகண்டுக்குள் திறந்துபோட்டேன்
வருத்தாகப் பிண்டமது வைந்துபூத
மண்டலமெலா மைந்தாச்சு யோனியெல்லாம்
பருத்தாக வைந்தாச்சு சராசரங்களெல்லாம்
பாரைத்து பூதமென்று பகுத்துப்பாரே. (492)

பகுத்துப்பா ரைந்தாலே யுருவுமாச்சு
பகர்கின்ற தத்துவமு மஞ்சாலாச்சு
தொகுத்துப்பார் வாதமது அஞ்சாலாச்சு
சூட்சத்தை யறியாவிட்டால் வாதம்போச்சு
பகுத்துப்பா ரஞ்சானல் வாதமாகு
மருவியது அஞ்சுவிட்டா லெல்லாம்பாழாம்
தகுத்துப்பார் சரக்குக ளிலையஞ்சாகச்
சாற்றுகிறேன் லவணவகை சார்ந்துபாரே. (493)

காரசாரப் பஞ்சபூதம்.

சார்ந்துபார் கல்லுப்பு இந்துப்போடுஞ்
சமரசமாய்ப் பிருதிவியின் கூறதாகும்
கூர்ந்துபார் சத்தியோடு நவாச்சாரம்ரண்டும்
குறிப்பாக வப்புவிட கூறதாகும்
தேர்ந்துபார் சவுட்டுப்பு வெடியுப்புரண்டு
தேயுவிட கூறென்றே செப்பலாகும்
வேர்ந்துபார் வெண்காரம் துரிசுரண்டும்
வேரான் வாயுவிட கூறதாமே. (494)

தாமென்ற பூரமோடு வழலைரண்டும்
தனித்ததொரு வாகாசக் கூறதாகும்
ஆமென்ற வைம்புலனைப் பிரித்துச்சேர்த்து
அறிஞ்செடுத் தால்வாத மிதிலடங்கிப்போகும்

தேமென்ற குருவுக்கு அஞ்சுவேணும்
சேந்தூரம் குருவுக்கு மஞ்சுவேணும்
காமென்ற கட்டினத்துக்கு அஞ்சுவேணும்
களங்குக்கு மெழுகுக்கு மஞ்சுதானே. (495)

பஞ்சகர்த்தா ளோடுங்கும் நிலைகூறல்.

அஞ்சான தேதன்று மயங்கவேண்டா
மருளான பஞ்சகர்த்தா ளாடும்கூத்து
பிஞ்சான பிருதிவிதா னப்புதனிலோடுங்கும்
பேரான வப்பதுவும் தேயுவினிலோடுங்கும்
திஞ்சான தேயுவது வாயுவினிலோடுங்கும்
சிறப்பான வாயுவிது விண்தனிலேயோடுங்கும்
வஞ்சான வாகாசஞ் சிவன்றனக்குளோடுங்கும்
வாதமது இம்முறைபோல் வழக்கம்பாரே. (496)

பாஷாண பஞ்சபூதம்.

வழக்கமாம் பஞ்சபூத பாஷாணம்
வகைசொல்வேன் மண்கூறு தொட்டியோடுசிங்கி
களக்கமாம் கார்முகியும் பவழப்புற்று
கடுந்தீ முறுகலோடு பிருதிவியின்கூறு
தளக்கமாம் கெவுரியோடு சங்கபாஷாணம்
தனித்ததோரு குதிரைப்பல் வெள்ளைப்பாஷாணம்
பளக்கமாம் குக்குடத்தின் சூடுகெந்தி
பாரிதற்கு அப்புவுடக் கூறுமாமே. (497)

ஆமென்ற தாளகமும் வீரம்கெந்தி
யரிதார மனோசிலையும் தேயுங்கூறு
போமென்ற புத்தோடு பஞ்சபட்சி
பேரிதான சரகண்ட ரத்தபாஷாணம்
தாமென்ற லிங்கமோடு அஞ்சுதானும்
தனித்துநின்ற வாயுவிட கூறதாகும்
காமென்ற பாஷாணச் சூதத்தோடு
கடிதான வாகாசக் கூறுமாச்சே. (498)

கூறுக ஐயஞ்சா யோடுங்காகின்ற
சரக்கிற்கூட்டினல் வாதமது கோடிக்கோடும்
காருகப் புடத்துக்குச் சீருதையா
கசக்கியே யெழும்பாமற் சாடிப்போகும்
வாருக வாதத்துக் கோடுக்கம்தப்பில்
வரிசையாய் வாதமது மண்ணுய்ப்போகும்
நீருகச் செந்தூரம் களங்கமாக
நிலவாமா யொன்றுக்கு ளோடுங்கும்பாரே. (499)

உபரச பஞ்சபூதம்.

பாரேன்ற வுபரசத்திற் பஞ்சபூதம்
பகரவே சிலாசத்து அப்பிரேககாந்தம்
பேரேன்ற பூநாகம் இராசவத்தம்
பிருதிவியின் கூறேன்றே பேசலாகும்
தானேன்ற சங்கோடு கோழிமுட்டை
தனித்தநா கரவண்டு கிளிஞ்சில்நண்டு
வாரேன்ற வப்பினிட கூறதாகும்
வாயேன்ற எலும்புயிந்திர கோபமாமே. (500)

கோபமா மயிலிரகு நிமளவெண்கலங்
கூறுகத் தேயுவிட கூறுமாகும்
தாமப்பா சாத்திர பேதியோடு
கல்நார்தளுக்கான கல்மதமு மன்னபேதி
வாபமா மீரோமமோடு வாய்வுக்கூறு
வாட்டமாம் வைக்கிராந்தம் துத்தத்தோடு
ஆபமா மலருதுவு நீரதிபாஷாண
மழகான சுக்கானுமா காசக்கூறே. (501)

கூறுகக் காரத்தி லஞ்சபூதங்
குறிப்பாக வோடுங்குகின்ற குறிப்பைப்பாரு
வாருகப் பாஷாணப் பஞ்சபூதம்
வகையாக வோடுங்குகின்ற வண்மைபாரு

வீருக வுபரசத்தில் பஞ்சபூதம்
விபரமாய்ச் சேருகிற விளக்கம்பாரு
தூருகச் செச்சூரம் களங்குசெய்து
திறமைபஞ்ச லோகத்திற் செய்துபாரே. (502)

பாரேன்ற பூதத்தி லொன்றுதப்பி
பலபலவாம் குணமாகும் வாதம்தானும்
நேரேன்ற வுன்னுக்குள் பஞ்சபூதம்
நிலைதப்பிக் காயமது நிற்கமாட்டா
தானென்ற சாத்திரத்தி லுன்னிப்பாரு
சரியாக காப்பேடும் கடையேடும்பாரு
நானென்ற வாதமெல்லாம் நொடிக்குள்ளாகும்
நட்பமெல்லாம் நிகண்டுக்குள் நுழைந்துபாரே. (503)

நுழைந்துபா ரண்டத்தின் குவடுதன்னில்
நோக்கான சித்தர்கள்தான் மெத்தவுண்டு
வளைந்துபா ரவரவர்கள் வணக்கமெத்த
மகத்தான வித்தையுண்டு வாய்திறக்கார்
குளைந்துபார் வஸ்துசுத்தி கற்பமீந்தால்
கோடிதான சந்தோஷக் குறிப்பாய்ப்பாரு
அளைந்துபா ருகிருந்து வஸ்துசுத்தியீய்ந்து
ஆனந்த மானபின்பு ஆண்மைகேளே. (504)

ஆனந்த கற்பம்.

ஆண்மையாம் கற்பமொன்று சொல்லக்கேளு
அப்பனே சடைக்கஞ்சா பலந்தானாறு
நாண்மையாம் நல்லதண்ணீர்க் குள்ளேபோட்டு
நலமாக வூறவைத்து மறுநாள்தானும்
ஊண்மையா முன்தண்ணி ரிறுத்துப்போடு
முத்துபோல் தண்ணீர்விட்டு மூன்றுதரம்கழுவி
பாண்மையாய்ப் பசுவின்பால் படிதானென்று
பதரும னல்லதண்ணி ரிரண்டுபடிவாரே. (505)

வார்த்துமே யடுப்பேற்றி யெரிக்கும்போது
வளமாக பசுவின்னெய் படிதான்வாரு
கோர்த்துமே குறுகியே கோதிக்கும்போது
கோட்டியே கோணிதனில் கிட்டிகட்டி
பார்த்துமே பாண்டத்திற் பிழிந்துவாங்கிப்
பதரும லாறவைத்து மேல்நெய்வாங்கு
ஏர்த்துமே தண்ணீரை யிறுத்துப்போட்டு
யித்தோடே யனுபான மியம்பக்கேளே. (506)

இயம்பக்கே ளபினிதான் பலந்தானஞ்சு
இயல்பான பசுவின்பால் படியஞ்சிற்போட்டு
கயம்பவே காய்ச்சியெல்லாம் கரைந்தபின்பு
கசகாமற் புரைகுத்தி யுறைந்தபின்பு
மயம்பவே மத்திட்டுக் கடைந்தவெண்ணெய்வாங்கி
வளமாக வுருக்கியே முன்னெய்யில்விட்டு
தயம்பவே சர்க்கரைதான் சேருமஞ்சு
சதுராவின் படிநாலு பாலிற்காய்ச்சே. (507)

காய்ச்சியே கரைந்தபின்பு வடிகட்டிக்கொண்டு
கனமான வஸ்துமொரு படியும்வார்த்து
பாய்ச்சியே பாகுபதத் திறக்கிவைத்துப்
பகர்கின்ற சுக்கோடு ஏலமாஞ்சில்
மீச்சியே மிளகோடு சாரப்பருப்பு
வெரிப்பான காமப்பூ பத்திரிசாதிக்காய்
தாச்சியே தாளிசப்பத் திரியுங்கோஷ்டம்
சார்பான அதிமதுரம் கசகசாவித்தே. (508)

வித்தோடு அமுக்கிருவால் மிளகுகிராம்பு
விபரமாய் வகைக்கிரண்டு பலமும்கூட்டி
புத்தோடு பொடிபண்ணிச் சூரணமாய்ச்செய்து
பேரான பாகிலிட்டுக் கிளறிக்கொண்டு
முத்தோடு முன்னெய்யும் கூடவிட்டு
முயற்சியாய்த் தேனுமொரு படியும்வார்த்து
அத்தோடு அடுப்பில்வைத்துப் பதத்திறக்கி
யாறவிட்டுப் பரணிதனி லடைத்திடாயே. (509)

அடைத்திட்டு நாதாக்க ளருகிருக்கும்போது
அடிபணிந்து பாக்களவு எடுத்துரைவாய்
உடைத்திட்டு மகிழ்ந்து வுள்ளேகொள்ள
ஓங்கியதோ ராறுதலம் வெளியாய்க்காணு
மடைத்திட்டு மதிதனிலே யமிர்தஞ்சிந்து
மாசற்ற சதகோலு பானுதோணும்
துடைத்திட்டே சிவன்தனிலே சேர்க்கப்பண்ணுஞ்
சுகசீவ முத்தனுய்த் தோணும்பாரே. (510)

பாரையா ஆனந்த மானபின்பு
பரிவாக நல்விசேஷஞ் சொன்னுயாயின்
நேரையா மனதிலுள்ள கருவையெல்லாம்
நிச்சயமாய்ச் சொல்லிடுவா ரறிந்துகொள்ளு
தூரப்பா மகாமேரு வடக்கிலுள்ள
சுகமான சித்தர்களைச் சொல்லக்கேளு
ஓரையா வுயரமது பனைமட்டாகும்
உற்றுநின்ற வயதினிட வுறுதிகேளே. (511)

சித்தருடைய வயது.

உறுதிமூ வாயிரமா மிரண்டுதானு
முற்றுநின்ற மகமேரு கிழக்கிலுள்ளசித்தர்
நிருதியா யுயரமது செப்பக்கேளு
நேரான பனையளவு முக்காலாகு
மறுதியாய் வயததுவு மேழுநூறுகு
மகத்தான சித்துண்டு குளிகையுண்டு
மிறுதியா மகமேரு மேற்குள்சித்தர்
மிடுக்கான வுயரமது அரைவாசிதானே. (512)

அரையான பனைமட்டு முயரமாகு
மைந்நூறு வயதாகு மாண்மைமேத்து
விரையாத வாதமுண்டு குளிகையுண்டு
மிடுக்கான மூலிகையும் பாஷாணமுண்டு

துரையான ஆதிரசக் கிணறுமுண்டு
சூட்சமாம் வித்தையுண்டு துடியோமேத்த
மரையான மகாமேரு தென்றிசையிற்கேளு
வாகான வுயரமது காற்பனையின்மட்டே. (513)

மட்டான வயததுவும் நூற்றிருபதாகும்
வாசிப்பார் வெகுநூல்கள் மார்க்கமேத்த
திட்டான பொதிகையினிற் சூழுகின்ற
சித்தர்கள்தான் தென்புறத்தில் தீக்ஷணமேத்த
கிட்டான குளிகையுண்டு கோடியவேகம்
கூறவிது வெகுபேர்க்குக் குறிப்புமேத்த
தட்டானை வலத்தில்வைக்கத் தாயார்தன்னைச்
சதாநித்தம் பூசிப்பார் தாயாளர்தானே. (514)

மடாதிபதிகள் பெயர்.

தானென்ற மடபதிகள் பெயரைக்கேளு
சாதகமாம் தக்ஷணத்தில் சின்மயமாந்தேவர்
தேனென்ற சனகாதிரு மாரரோடுஞ்
செப்பியதோர் வியாக்கிரமர் பதஞ்சலிதானுகும்
நானென்ற மூலவர்க்கம் நம்முடையவர்க்கம்
நலமான சேஷவானந்தநாதர்
தானென்ற கந்துகி நாதரோடு
கடிதான சவுண்டிக நாதராமே. (515)

நாதரோடும் கூர்மா னந்தமூர்த்தி
நலமான யோகவா னந்தமூர்த்தி
தீதரோடு திங்களா னந்தமூர்த்தி
செப்பரிய சாந்தவா னந்தமூர்த்தி
நீதரோடு ரிஷபவா னந்தயோகி
நித்தியாங் கைவர்தா னந்தமூர்த்தி
சேதரோடு சேகனவா னந்தயோகி
சூரியா னந்தரென்ற யோகியாமே. (516)

யோகியந்த போசித்தியா னந்தயோகி
    யுத்தமமாங் கவுண்டகா னந்தமூர்த்தி
நாகியாம் ருபவா னந்தமூர்த்தி
    நட்பமாம் கேசரா னந்தமூர்த்தி
மாகியாம் கேந்தவா னந்தமூர்த்தி
    மசாமாயை நாதரேன்ற மூர்த்தியாகும்
போகியென்ற மாய்கையா னந்தயோகி
    புகலரிய நித்தியா னந்தமாமே. (517)

ஆமென்ற மகாவிசுவா னந்தமூர்த்தி
    ஆத்தீக வுமையா னந்தநாதர்
சாமென்ற சமையவா னந்தமூர்த்தி
    தாயமத்த சருவா னந்தமூர்த்தி
தோமென்ற சுபகா னந்தமூர்த்தி
    சுத்த சைதன்யா னந்தமூர்த்தி
வாமென்ற வமிர்தவா னந்தமூர்த்தி
    மகத்தான சேகண்டியா நாதர்தாமே. (518)

ஆனந்த லட்சுமியா னந்தமூர்த்தி
    ஆண்மைகோண் டசுத்தவா னந்தமூர்த்தி
தேனந்த சுத்தவா னந்தமூர்த்தி
    செயம்கோண் டவந்தவா னந்தமூர்த்தி
கானந்த கேசரா னந்தமூர்த்தி
    கலந்துகின் றசம்பிரா னந்தமூர்த்தி
ஒனந்த வுலகையா னந்தமூர்த்தி
    உண்மையாம் பிரமவா னந்தர்காணே. (519)

காணப்பா திரிலோகா னந்தமூர்த்தி
    கடிதான ராட்சதா னந்தமூர்த்தி
வாணப்பா மலினவா னந்தமூர்த்தி
    மகத்தான பிரசண்ட வானந்தநாதன்
ஆணப்பா அணங்கவா னந்தநாதர்
    ஆனந்த வித்தியா னந்தநாதன்
ஊணப்பா வம்பிகா வானந்தநாத
    ருத்தமமாம் தம்பியா னந்தர்தாமே. (520)

தானென்ற மகானந்த மூர்த்தியோடு
சாந்தமாஞ் சுந்தரா னந்தமூர்த்தி
கானென்ற மாரனு னந்தமூர்த்தி
காடுதனிற் சஞ்சரித்த காலநாதர்
ஆனென்ற வடயவா னந்தநாத
ரதிகொண்ட விகாரவா னந்தநாதர்
பூனென்ற பூதவா னந்தநாதர்
புகழ்பெரிய சருவா னந்தர்தாமே. (521)

ஆனந்த வியோமவா னந்தரோடு
மண்டரண்ட சொரூபவா னந்தமூர்த்தி
கோனந்த கோரக்க நாதரோடும்
குற்றமிலா நிர்க்குணவா னந்தமூர்த்தி
மாநந்த வாசியா னந்தமூர்த்தி
மகத்தான கங்காள நாதமூர்த்தி
முனந்த பூரணா னந்தமூர்த்தி
புகழ்கொண்ட கமலவா னந்தர்காணே. (522)

காணப்பா வறுபத்து நாலாய்கின்ற
கனமான மடபதிகள் நாமமாகும்
பூணப்பா மரபுகளிற் சாத்திரங்கள்
வெவ்வேறு பேணியவர் சீஷவர்க்கம்கோடாகோடி
ஆணப்பா நூல்தனிலே யங்கங்கேகோடி
ஆட்டுகிற சாரணையோ குளிகைகோடி
வீணப்பா வேதைதனில் வித்தைகோடி
மிடுக்கான செந்தூரம் கோடியாமே. (523)

குரு வர்க்கம்.

கோடியென்ற குருவர்க்கம் கூறக்கேளு
கூரான நந்தியென்ற நாமம்நால்வர்
சீடியென்ற சிவயோக முனிதானென்று
திறமான பதஞ்சலியாம் வியாக்கிரமம்ரண்டு

நாடியென்ற மூலகுரு வோடேயெட்டு
நலமான நந்தியிட பிள்ளையெண்மர்
வாடியென்ற மூவரிட பிள்ளைகேளு
மாலாங்கர் கஞ்சமலைச் சித்தர்தாமே. (524)

ஆமென்ற பிரமனோடு இந்திரனுஞ்
சோமனைய னென்றகாலாங்கி ருத்திரனோடேழு
காமென்ற காலாங்கி மூர்த்திக்கன்று
காரியமா வறுபத்து நாலுசீஷர்
ஓமென்ற முதல்தீக்ஷரை போகரென்று
வுத்தமரா மறுபத்து மூன்றுபேர்கள்
தாமென்ற கஞ்சமலைச் சித்தருக்குச்
சாதகமா யைந்துபிள்ளை சீஷராச்சே. (525)

ஆச்சென்ற மாலாங்க மூர்த்திக்கப்பா
ஆண்மையா யோன்பதுபேர் சீஷராச்சு
எச்சென்ற இந்திரனும் பிரமன்சோம
னெழிலான ருத்திரர்க்குப் பிள்ளையில்லை
வாச்சென்ற நாலுதிக்கும் நாலுமூர்த்தி
மகத்தான கீர்த்திகொண்டார் மைந்தாகேளு
பாச்சென்ற பாட்டருட னெட்டுப்பேரும்
படிப்படியாய் நாலுதிக்கு நாலுநந்தியாச்சே. (526)

நந்தியென்ற அகண்டம்போல் நாலுதிக்குநின்றார்
நலமான பதஞ்சலியும் வியாக்கிரமர்கேளு
சிந்தியென்ற அம்பலத்தில் சேர்ந்துபோனார்
சிவயோக முனிதானு நெட்டாய்ச்சென்று
புந்தியென்ற பூரணத்திற் சேர்ந்தவாடி
பெரிதான மேருவிலே தாண்டிநின்று
ஒந்தியென்ற வுரைத்திடத்தில் வானோர்க்குள்ளே
யுத்தமமா மோன்பதுபேர் சீஷராச்சே. (527)

ஒன்பதுபேர் சீஷவர்க்கச் சீஷர்களைச்சொல்ல
உத்தமனே யிந்திரனு முளறிப்போட்டார்
கண்டதென்ற மூலகுரு வர்க்கஞ்சொல்லக்
கணக்கிட்டு முடியாது கரைகாணப்போகா

அன்பதென்ற வறுபத்து மூன்றுபேர்க்கு
மளவிட்டு முடியாது சீஷவர்க்கம்
நன்பதென்ற முதற்பிள்ளை கோங்கணர்தான்கேளு
நாற்பத்து ஏழுபேர் பிறகுதானே. (428)

மூலவர்க்க வேடம்.

தானான மூலவர்க்க வேடம்கேளு
சடையொன்று பிரம்பொன்று கடசபாரம்
ஊனான வுப்பினிட கேதைதானென்று
உயர்ந்திட்ட யோகமணி படிகவேட்டி
பானான படிகலிங்க பாதக்குறடோடு
பற்பமுத்தாளமாஞ் சேம்புருட்டுக் காதில்வேடம்
பூனான புலித்தோலும் புத்தகம் ருத்திராட்சம்
பிரபலமாம் திருமூல வர்க்கத்தோர்க்கே. (529)

திருமூல வர்க்கமென்றால் கேசரத்தில்
செப்பரிய மலைதனிலே சித்தரேல்லாம்
திருமூல வாக்கமென்று அடிபணிந்து
சொருபமணி கேட்பார்கள் கொடுக்கவேண்டாம்
திருமூல வர்க்கமென்றால் பானமிந்து
சொருபமணி செய்யுகிற திறமைகேட்பார்
திருமூல வர்க்கத்திற் சொருபமணியுண்டு
செப்பினாற் செய்வமென்பார் சித்தர்தானே. (530)

துருசு சத்துரு

தானென்ற துருசுக்குச் சத்துருவைக்கேளு
சவுடுதொட்டி யஞ்சனமு மிணங்கனுகும்
மாமென்ற சூடனொடு அப்பிரேகஞ்சீன
மடுக்குவெள்ளைப் பாஷாணம் கல்லுப்போடு
காமென்ற திரசவுடு மிருதாமுசிங்கி
காந்தமோடு இந்துப்பு நாகவங்கம்
வேனென்ற சவர்க்கார மிவைகளேல்லா
மிகையாகத் துருசுக்குச் சத்துருமாமே. (153)

துருசிமித்துரு.

ஆமென்ற துருசிக்கு மித்துருவைக்கேளு
அரிதாரஞ் சாரமோடு வெண்காரம்வீரம்
தீகின்ற கெந்தியோடு சூதம்பூரம்
சீலையோடு கெவுரியிட நிமிளையாகும்
பாமென்ற பள்ளையோடு கெவுரிலிங்கம்
பாருக்குள் துரிசிக்கு மித்துருவாகும்
போகின்ற வாதமெல்லா மிதுக்குள்ளாகும்
புரிசடையோன் சொன்னபடி போதித்தேனே. (532)

சாரச்சத்துரு.

போதித்த சாரத்தின் சத்துருவைக்கேளு
பெரிதான கல்லுப்பு இந்துப்புபடிக்கி
வாதித்த வளையலுப்பு இரும்புகாந்தம்
வங்கமோடு வண்டத்தோல் மடியுஞ்சுக்கான்
சேதித்த சிலைச்சுன்னங் காரீயம்தான்
சேரியகடல் நுரையுமப் பிரேகஞ்சவுடு
சாதித்த கிளிஞ்சில்முத லிவ்வகைகளெல்லாஞ்
சாரத்தின் சத்துருவாய்ச் சாற்றலாமே. (533)

சாரமித்துரு.

சாற்றலாஞ் சாரத்தின் மித்துருவைக்கேளு
தாளகமுஞ் சிலையோடு கெந்தகமும்காரம்
வேற்றலாம் வெடியுப்பு வீரம்லிங்கம்
விளங்குகின்ற காரீயம் கல்நாராகும்
நீற்றலாம் கெவுரியோடு நாகமோடுநிமிளை
நேரான வற்றமோடு செம்புவிதுவெல்லாம்
வீதலாஞ் சாரத்தின் மித்துருவேயாகும்
விபரமாய்ப் பார்த்தறிந்து வேதைபோடே. (534)

வெடியுப்புச் சத்துரு.

போடவே வெடியுப்புச் சத்துருவைக்கேளு
பேரான காரீயஞ் சவுடுகூடன்
வீடவே வெள்ளீயத் துருசுவெள்ளை
விபரமா யிரும்புசெம்பு காந்தவத்தம்

கூடவே சிலைதொட்டி கெந்திசிங்கி
    தீருமுருக லண்டோடு சுரைகெந்தியாகும்
மூடவே பொட்டிலுக்குச் சத்துருவாகும்
    புவனமுள்ளோர் பிரித்திதற்குள் சுன்னம்பாரே. ()

வெடியுப்பு மித்துரு.

பாரென்ற வெடியுப்பு மித்துருவைக்கேளு
    படிகியுட னிந்துப்பு கல்லுப்புகாரம்
நேரென்ற லிங்கமோடு மாவீரந்துத்தம்
    நிசமான தாளகமும் காந்தம்நாகம்
காரென்ற கடலினுரை நிமிளைவெள்ளை
    கம்பளியும் பழம்புளியும் ரோமமாகும்
வேனென்ற வெடியுப்பு மித்துருவாகும்
    மீருமல் சேர்த்தரைத்து விரவிடாயே. (536)

கல்லுப்புச் சத்துரு.

விரவிடவே கல்லுப்புச் சத்துருவைக்கேளு
    வீரமோடு வத்தமாஞ் சவுட்டுவில்லை
பரவிடவே சூடனொடு படிகியாகும்
    பாரமாங் காந்தமோடு இந்துப்பு
திரவிடவே சிங்கியோடு பவளப்புற்று
    சிலையுடனே பழம்புளியுஞ் சத்துருவாகும்
தரவிடவே சத்துருவால் தகர்த்துக்கொண்டு
    தாக்கியே மித்துருவா லெழுப்பிக்கொள்ளே. (537)

கல்லுப்பு மித்துரு.

கொள்ளவே கல்லுப்பு மித்துருவைக்கேளு
    கூரான பூரமோடு மிரும்புசெம்பு
கள்ளவே காரமோடு கெவுரிநாகக்
    கெந்தியோடு தாளகமும் நிமிளைவெள்ளை
அள்ளவே அப்பிரேகம் லிங்கம்பங்கம்
    அடங்காத கல்லுப்பு மித்துருவேயாகுந்
துள்ளவே வாதமிதிற் சொக்கிப்போச்சு
    சூதமிதிற் கட்டியே செந்தூரஞ்செய்யே. (538)

காரச்சத்துரு மித்துரு.

செய்யவே காரத்தின் சத்துருவைக்கேளு
சிலாசத்து புளியோடு அண்டமாகுங்
கோய்யவே சூடனுடு சுன்னவகையெல்லாஞ்
சூட்சமாம் பூரமோடு சத்துருவாகு
மையவே யுபரசங்கள் பாஷாணங்கள்
வளமான லோகங்கள் மற்றதெல்லாங்
கையவே காரத்தின் மித்துருவாகுங்
கணக்காக வுள்ளபடி கருதிப்பாரே. (539)

சீனசத்துரு மித்துரு.

கருதியதோர் சீனத்தின் சத்துருதான்
காரத்தின் சத்துருவுட ரண்டுமொன்றும்
பருதியதோர் பாஷாண யுபரசங்கள்
பாங்கான லோகங்கள் மற்றதெல்லாந்
திருதியதோர் சீனத்தின் மித்துருவாகுஞ்
சிவனுடைய வாதார மிறத்தவாறும்
நிருதியதோர் வாதமெல்லா மிதினலாகும்
நேர்ப்பாக வறிந்தவனே வாதியாமே. (540)

அரிந்தந்த வாரான சரக்குதன்னை
அதட்டியே சத்துருவா லரைத்துக்கொண்டு
ஒரிந்திந்த மித்துருவை யோக்கச்சேர்த்து
உறுதியாய்ப் புடம்போடச் சுன்னமாகும்
பிரிந்திந்த சுன்னத்தால் கோசபீசம்
பேரான வுபரசங்கள் கூட்டிச்சேர்த்து
நரித்திந்த நவலோகந் தன்னிலீய
நலமாக வேமமாம் நாடிப்பாரே. (541)

தங்கச் சத்துரு.

நாடிப்பார் தங்கத்தின் சத்துருவைக்கேளு
நாகமோடு நிமிளைகண்டா லிங்கமாகும்
நீடிப்பா ரிரணங்கனுடு கெவுரிவெள்ளை
நேரான சவுட்டுப்புத் தாளகமுஞ்சிங்கி

ஆடிப்பா ரப்பிரேகங்களஞ்சி மனோயிலையும்
அண்டத்தோல் குதிரைப்பல் சூதங்கேந்தி
கூடியபார் கோமுகங்காந்தம் பொன்னம்பர்
குறிப்பான சவ்விரஞ் சத்துருவுமாமே. (542)

தங்க மித்துரு.

ஆமென்ற மற்றதெல்லா மித்துருவாகும்
அதட்டியே சத்துருவால் கொன்றபின்பு
வேமென்ற மித்துருவை யொக்கச்சேர்த்து
விரவியே யூதிடவே சுன்னமாகுந்
தாமென்ற தங்கமது நீறினுக்கால்
சகலமெல்லாங் கண்டுண்டு தயங்கும்பாரு
கோமென்ற வாதத்திற் கோசபீசம்
குடியிருந்த லோகமெல்லா மேமமாமே. (543)

சூதச் சத்துரு.

ஏமமாஞ் சூதத்தின் சத்துருவைக்கேளு
எழிலான சிங்கியோடு கெவுரிவெள்ளை
கோமமாங் குதிரைப்பல் சத்திச்சாரங்
கூர்மையாம் வெடியுப்பு யிரும்புகாந்தம்
நாமமாஞ் சூடனொடு பொன்னம்பூரம்
நலமான கற்சவுடு நிமிளைபூநீறு
வாமமாஞ் சூதத்தின் சத்துருவாகும்
வளமான கோசமென்றே வகுக்கலாமே (544)

சூதத்தின் மித்துரு.

ஆமென்ற சூதத்தின் மித்துருவைக்கேளு
அப்பிரேக நாகமோடு காரீயம்வங்கந்
தேமென்ற சீலையோடு கெந்தகமும்வீரஞ்
செயலான தாளகமுந் தொட்டிவெள்ளி
வாமென்ற செம்போடு துரிசிசாரம்
வழக்கமாம் வெண்காரம் அஞ்சனக்கல்துத்தந்
காமென்ற தீமுருவல் கடம்பவளப்புற்று
கருதியதோர் சூதத்தின் மித்துருவாமே. (545)

இரும்புச்சத்துரு மித்துரு.

ஆமேதா னிருப்புக்குச் சத்துவைக்கேளு
அப்பிரேகம் வென்காரம் அண்டத்தோடு
வேமேதான் வெண்கலமும் நிமிளைவங்க
மிகையான கிளிஞ்சியோடு திராருங்கேந்தி
சாமேதாள் சாரமோடு சினைசவ்வீரங்
தயங்காத சிங்கியோடு கெவுரிவெள்ளை
போமேதான் சிலாசத்து பூநீருகும்
புவியிதனி லிரும்புக்குச் சத்துருவென்னே. (546)

என்னவே யிரும்புமித் துருவைக்கேளு
ஏற்றமாம் வெள்ளியோடு கெவுரிநாகங்
கன்னவே காந்தமோடு செம்புபூரங்
கனமான பூநாகம் ராசவர்த்தகங்
தன்னவே தங்கமோடு கெந்திசெம்பு
தயங்காத மயூரத்தின் செம்புசூடன்
பன்னவே யிரும்புக்கு மித்துருவேயாகும்
பாரிந்தப் படியாகுங் காந்தத்துக்கே. (547)

நாகச் சத்துரு.

காந்தமாம் நாகத்தின் சத்துருவைக்கேளு
கனமான கிளிஞ்சியண்டங் கல்லுப்பாகும்
பாதமாம் வேடியுப்பு படிகாரம்வங்கம்
பகர்கின்ற தங்கமோடு திராவும்வெள்ளி
வேந்தமாம் வெங்கலமும் நண்டோவீரம்
மிருதாரு மபினியோடு பிளகுவெள்ளை
நாந்தமாம் வளையலுப்பு அன்னபேதி
நாகத்தின் சத்துருவாய் நாட்டலாமே. (548)

நாகமித்துரு.

நாட்டவே நாகத்தின் முத்துருவைக்கேளு
நலமான அப்பிரேக யிரும்புகாந்தம்
நீட்டவே சிலாசத்து நிமிளைசெம்பு
நேரான கெவுரியோடு சூதங்கெந்தி

பூட்டவே பூநாக மயூரச்செம்பு
பெருமையாங் கருநாகஞ் சாரமோடுஞ்
சூட்டவே நாகத்தின் மித்துருவேயாகுஞ்
சூட்சமெல்லாஞ் சத்துருவின் மித்துருவாலாச்சே. (549)

காரீயச் சத்துரு.

ஆச்சப்பா காரீயச் சத்துருவைக்கேளு
அயக்காந்தம் நிமிளையோடு ராசவர்த்தம்
நாச்சப்பா கிளிஞ்சியண்டம் நண்டுமாகும்
நத்தையோடு கெவுரிகெந்தி நற்சுன்னங்கள்
காச்சப்பா அப்பிரேகம் வெடியுப்போடு
கல்லுப்பு கல்நாருஞ் சாத்திரபேதி
ஏச்சப்பா யிவ்வவைக ளீயச்சத்துரு
இதயமான மித்துவை மியம்பக்கேளே. (550)

காரீய மித்துரு.

இயம்பவே நாகமோடு மயூரச்செம்பு
இதமான பூநாகம் செம்பும்வெள்ளி
வயம்பவே வங்கமோடு சூதமாகு
மகத்தான கடிசெல்லாந் தவளையாக்குந்
தயம்பவே கல்மதத்தைத் தகர்த்துச்சாடுஞ்
சாங்கமாய்க் களங்கைகள்ளி யுள்ளேவாகுஞ்
வியம்பவே வெள்ளனையுங்கள் ளனையுங்காட்டு
மிடுக்கான தருநாகத் தாண்மைதானே. (551)

வெள்வங்கம்.

தானென்ற வங்கத்தின் மித்துருவைக்கேளு
தளுக்கான காரீயஞ் சூதங்துத்தந்
தானென்ற மூன்றுக்கு முறவேயாகுஞ்
சாரகா ரங்கள்முத லுபரசங்கள்
நானென்ற நவலோகம் பாஷாணத்தில்
நணுகினல் நூளாகுங் கெடுமித்திரமாகும்
வானென்ற வாதமுறைை வகையிற்கொன்று
வளமான செந்தூர மாகிர்கேளே. (552)

சேம்புகளைத் தாக்கக் கிளங்கு.

சேந்தூர மாகினல் பதினாறுமாற்றுஞ்
சேப்பமா மதனிலே வேதையாகுங்
கந்தாரஞ் சேம்புருகில் கருநாகம்நிமிளை
கடியவங்கஞ் சிங்கியோடு வெள்ளையுடன்கெவுரி
பூந்தாரப் பூமாது பஞ்சபட்சி
புவிபுகழுந் தோட்டியோ டஞ்சனக்கல்கேந்தி
சேந்தூரக் களங்குகளைச் சேம்பிலீய
சேப்பமாய் போருமீயஞ் சிதறுந்தானே. (553)

சிதறியே மேற்கருக்கும் புத்துப்போலாஞ்
சேப்பமாங் காரியம் வைத்துவூத
குதறியே கறிபோலே கருகிப்போகுங்
குறிப்பாகப் பார்த்தேல்லாம் வேதைப்போடு
உதறியே சாஸ்திரத்தை யூணிப்பாரு
ஒன்றேடே வொன்றேடு முற்பனத்தைப்பாரு
அலறியே யழுதாக்கால் வாதமாமோ
ஆராய்ந் தறிந்தறிந்து மேல்லாம்பாரே. (554)

வெள்ளிக்காகக் களங்கு.

பாறேன்ற மதியுருகில் வேள்ளீயம்நாகம்
பரிவான கேந்தியோடு நிமிளைகாந்தந்
தீரேன்ற திமிருக்கல் கேவுரிபஞ்சபட்சி
சேயமான கம்பியுப்பு சீனத்தசாரங்
கோரேன்ற குதிரைப்பல் பவளப்புற்று
கோடிதான களங்கேல்லாம் வேள்ளிக்காகா
வானேன்ற மற்றமற்றக் களங்கதேல்லாம்
வண்மையா யாகுதேன்று மத்திடீரே. (555)

அயத்துக்காக களங்கு.

மதித்திட்ட அயமுருகில் கேந்தியோடுசிலையும்
வண்மையாந் தாளகமும் நிமிளைசிங்கி
விதித்திட்ட வேள்ளையோடு வீரஞ்சாரம்
விளங்கமா வைக்கிராந்தங் குக்குடத்தின்கேந்தி

உதித்திட்ட வஞ்சனமு மிணங்கனோடு
உறுதியாஞ் சுரைகேந்தி குதிரைப்பல்லு
கதித்திட்ட களங்கிட்டால் கரியாய்ப்போகுங்
காரியமா மற்றதெல்லாங் கருதிப்பாரே. (556)

கருநாகத்துக்காகக் களங்கு.

கருதிப்பார் கருநாக முருகிற்கேளு
கடிதான நிமிளையோடு சிலைதான்கேந்தி
அருதிப்பார் அப்பிரேகங் கேவுரியோடு
அஞ்சனமுங் கோமுகமுங் கேவுரிவெள்ளை
திருதிப்பா ரீயத்திற் சேரிலிந்தக்களங்கு
சிதைத்தடித்துக் கெடுத்தழிக்குஞ் சிறந்தவர்னமெல்லா
மருதிப்பார் மற்றதெல்லா மித்துருவாக
வர்னமது வுண்டாகும் வளமாய்ப்பாரே. (557)

வளமான வெண்கலமும் பித்தளையுந்திராவு
வண்மையா முன்முறைபோல் விரும்பித்தாக்கா
விளமான வெண்மையாய்க் குருவுமாகு
மேனியுமோ தங்கமய மாகும்பாரு
தளமான சத்துருவு மித்துருவுந்தாக்கத்
தகர்ந்துடைந்து போற்குணமாய்த் தவளமுரும்
இளமான கடிதான லோகத்துக்கெல்லாம்
இனத்தோடே சேர்ந்ததுமே யிசைத்திடாயே. (558)

இனந்தவறில் கடிதோடு மயற்றுப்போலாம்
இழுத்துரைக்கில் வழவழக்கு முரையிலூரும்
வனந்தவறில் கலிப்பெடுக்கும் வால்மிளகும்
வரிசையாய் லோகமெல்லா மடித்தேநிற்கும்
உனந்தவறில் ஈயமிட்டு வூதினுக்கால்
உத்தமமாம் லோகமெல்லா முதிர்ந்துபோகும்
பனந்தவறில் வாதிகளைப் பாங்காக்கோள்ளும்
பகுத்தறிந்தோர் வாதியென்று பகரலாமே. (559)

தேர் மகிமை.

பகரவே சாரமது தேர்தானுகும்
பரிவான துரிசியோடு கல்லுப்புரண்டும்
நகரவே தேருக்கு அஞ்சுருவாணி
நலமான காரமது வண்டிலாச்சு
திகரவே சீனமது வளையமாகுஞ்
சிறப்பான சவர்க்காரங் குத்துக்காலா
மிகரவே யிணங்கனது வடமுமாச்சு
இசைந்தசட்டஞ் சத்தியென்ற சாரந்தானே. (560)

தானென்ற யெவாச்சாரஞ் சாற்றக்கேளு
சம்பிரமாய்த் தேரிலலங் காரமாச்சு
பாறென்ற பண்ணையது கொடியாடையாச்சு
பரிவான பூரமது வுயர்நாட்டுங்கழிதான்
ஊனென்ன்ற வுபரசங்கள் வடத்துக்காளாச்சு
உயர்த்தியாம் பாஷாணங் கொடுங்கையாச்சு
தேனென்ற சிகரமது வீரமாச்சு
தேர்ப்பாகன் கெவுரியென்று செப்பலாமே. (561)

செப்பவே தேரினுட வுருளையோடில்
திரும்பவே உருளைக்குள் ளெண்ணெய்வார்க்க
உப்பவே மிருகத்தின் கொழுப்பாமெல்லா
முருளைதா னுடுதற்கு என்ணெயாகும்
அப்பவே சூதமது அரசனுகும்
அரசனுக்குத் தேவிகெந் தகமுமாச்சு
உப்பவே தங்கமது தேருக்குளுஞ்சலாகும்
உயர்த்தியோடு தாளகத்திரண்டு பக்கங்கேளே. (562)

கேளுநீ யீயமொடு வங்கநாகங்
கெடியான விரும்போடு நாலுமாச்சு
கேளுநீ மால்தேவி திரையுமாச்சு
சிறப்பாக நிமிளையது மெத்தையாச்சு

காளநீர் சிலையதுவுந் தலைக்காணியாச்சு
சமரசமாஞ் சுண்ணங்க ளெல்லாமாச்சு
சூளநீ சூதமென்ற யிராசாதானுந்
துரிசாகத் தேர்விட்ட சூட்சம்பாரே. (563)

உப்பு புளி சரக்கு

சூட்சமாய்ப் புளியுப்புச் சொல்லக்கேளு
சுகமாக மனுஷன் மலம்புளியேயாச்சு
மோட்சமா மூத்திரமு முப்பையாச்சு
முத்தமாம் புளியுப்பு மூர்க்கமேத்த
கூச்சமாம் நிஷிகமென்று கூட்டமாட்டார்
கோசமா மூலத்தில் பிரகோபமாகி
தீட்சமாய்ச் சேரித்தஉப்புப் புளியுமாச்சு
சிவமான புளியுப்புத் திறமாய்ப்பாரே. (564)

பாறென்ற வேடியுப்பு உப்புமாகும்
படிகாரம் புளியாகும் பண்பாய்ப்பாரு
நேரென்ற கல்லுப்பு உப்புமாகும்
நீங்காத புளியதுவும் பழம்புளிதானுகும்
தூரென்ற சூடனது உப்புமாகுந்
துரிசியது புளியாகுஞ் சூட்சம்பாரு
காரென்ற கடனுரைதான் உப்புமாகுங்
கற்சுண்ண நீறதுவும் புளியுமாமே. (565)

ஆமென்ற சூதமது உப்புமாகும்
அழகான கெந்தியது புளியுமாகுங்
காமென்ற காந்தமது உப்புமாகுங்
காடியது புளியாகுங் கண்டுகொண்டு
ஏமென்ற யிரும்பதுவுங் உப்புமாகும்
கரிகாலன் எண்ணெயது புளியுமாகுந்
தோமென்ற தொட்டியது உப்புமாகுஞ்
சுக்கமாம் புளியரணை புளியுமாமே. (566)

ஆமென்ற பேதியது உப்புமாகும்
அழகான பொன்னம்பர் புளியுமாகுஞ்
சாமென்ற மாங்கிஷத்தின் பேதிஉப்பு
தயங்காத கல்மதந்தான் புளியுமாகும்
வேமென்ற வீரமது உப்புமாகு
மிடுக்கான புளியாரைப் புளியுமாகும்
ஓமென்ற அப்பிரேகம் உப்புமாகும்
உத்தமனே காய்ச்சரக்கு புளியுமாகும். (567)

ஆகுமே கெவுரியது உப்புமாகும்
அழகான புளிமாங்காய்ப் புளியுமாகும்
வேகுமே வெண்ணையது உப்புமாகு
மிடுக்கான பனங்கள்ளு புளியுமாகும்
வாகுமே வைக்கிராந்தம் உப்புமாகு
மஞ்சளென்ற நிமிளையது புளியுமாகுந்
தாகுமே தங்கமது உப்புமாகுந்
தயங்காத சிலையதுவும் புளிமாகும்
நாகுமே நாகமது உப்புமாகும்
நலமான பூரமது புளியுமாமே. (568)

புளியாகும் நாதமென்ற சுரோணிதந்தான்
பேரான விந்துவது உப்புமாகும்
புளியாகும் வெண்காரஞ் சாரந்தானும்
பேர்பெரிய உப்பாகு பேணிப்பாரு
புளியாகுந் தேவியென்ற சத்திதானும்
பெருமையாஞ் சிவந்தானு முப்புமாகும்
புளியாகும் அண்டத்தில் மஞ்சளென்றகருதான்
பெருமையாம் வெண்கருவும் உப்புமாச்சே. (569)

உப்பாகுங் கிளிஞ்சியின் மேலினோடு
முள்ளசதைதான் புளியென்றே உணர்ந்துபாரு
உப்பாகுஞ் சங்கென்றே யுரைக்கலாகும்
உருட்சியாஞ் சதைதானும் புளியமாகும்

உப்பாகும் பச்சையென்ற பூரந்தானு
முயர்ந்திட்ட யிந்துப்பு புளியுமாகும்
உப்போடு புளிசேர்ந்து உரிசையாகும்
உப்பென்று புளியென்று முரைத்துப்பாரே. (570)

பதினெட்டுப் புராணச்சரக்கு.

பாருநீ புராணமாம் பதினெட்டுச்சரக்கும்
பரிவான விபரமெல்லாஞ் சொல்லக்கேளு
கோருநீ கெவுரிகெந்தி சிலைமால்தேவி
கோடும்வீரஞ் சிங்கியோடு லிங்கம்வெள்ளை
பூருநீ தொட்டியோடு பொன்னினம்பர்
புகழ்கின்ற பரியோடு கோழிகெந்தி
நீருநீநிமிளையோடு ராசவர்த்தம்
நெடிதான கார்முகியுங் குதிரைப்பல்லே. (571)

பல்லோடு பஞ்சபட்சியே நருமநாத்தொட்டி
பதினெட்டுப் புராணமாய் நிறைந்தசிவசத்தி
கல்லோடு களங்குமண்ணு சுண்ணம்பண்ணு
கனகமிட்டுச் செந்தூர மெழுகுபண்ணு
நல்லோடு நவலோக மெட்டியோடும்
நலமான சரக்கெல்லா மிதினிற்கட்டு
மல்லோடு சூதமது யிதிலேசொக்கு
மகத்தான குளிகையுமா மாட்டிப்பாரே. (572)

விந்துநாதச் சரக்கு.

ஆட்டிப்பா ரப்பிரேகஞ் சத்திநாதம்
ஆண்மையாஞ் சூதமது விந்துமாகும்
பூட்டிப்பார் பூநீறு சத்திநாதம்
பேரான சூடனது விந்துவாகும்
நீட்டிப்பார் நிமிளையது சத்திநாதம்
நேரான வெள்ளையது விந்துவாகுங்
கூட்டிப்பார் பூநாகம் சத்திநாதம்
கூரான விந்துவது வீரமாச்சே. (573)

ஆச்சப்பா திரிகுணசல் சத்திஞதம்
அதிகமாங் கட்டுரைதான் வித்துவாகும்
நீச்சப்பா லிங்கமது சத்திஞதம்
நேரான கல்லுப்பு விந்துவாகும்
ஏச்சப்பா யிரும்பதுவுஞ் சத்திஞதம்
எவச்சாரம் விந்துவென்றே யியம்பலாகும்
நாச்சப்பா நாகவங்கஞ் சத்திஞதம்
நலமான பூரமது விந்துமாமே. (574)

ஆமென்ற செம்புசத்தி ஞதமாகும்
அப்பனே சிலாசத்து விந்துவாகும்
ஓமென்ற காந்தமது சத்திஞதம்
உற்பனமாங் கல்மதந்தான் விந்துவாகும்
வாமென்ற நாதத்தில் விந்துசேர்க்க
மாருதம்போல் வாதமெல்லாங் கைக்குள்ளாகும்
காமென்ற நாதவிந்தால் சடமுமாச்சு
கருதியதோர் சித்தியெல்லாம் நாதவிந்தாலாச்சே. ()

பூஞ்சபூத செயநீர்.

விந்தாக பஞ்சபூதத்தி னுடவகையை
விபரமாய்ச் சேர்ப்பதற்கு விந்தைகேளு
பிந்தாகப் பிரிதிவியின் கூர்கல்லுப்பு
பேரான யிந்துப்பு ரண்டுமோச்சு
சந்தாகச் சலக்கூறு சுத்திசாரம்
தனித்ததொரு நவாச்சாகிரம் ரண்டுமோகும்
சிந்தாக வகைக்குரண்டு பலமுங்கூட்டிச்
சிறப்பாக மூத்திரமு மலமும்போடே. (576)

போடவே முன்சொன்ன சரக்குச்சரியாய்ப்
பேரான அமரிமலம் நிரையக்கூட்டி
போடவே பிரிதிவியின் கூர்மலமுமாச்சு
பேரான அப்புவின்கூர் அமுரியாச்சு

நாடவே நாற்சாம மரைத்தபின்பு
    நலமாக வப்புசத்தை வைத்துக்கொண்டு
சாடவே சவுட்டுப்பு வேடியுப்புரண்டுந்
    தணற்கூரு துரிசியோடு காரம்ரண்டே. (577)

ரெண்டாக வகைக்கிரண்டு பலமுங்கூட்டி
    நேரான தேயுவோடு வாய்வைக்கூட்டி
கண்டோடு கல்வத்தில் பொடித்துக்கொண்டு
    காரமாம் நாதமதுதேயுக்கூரு
வண்டோடு வாய்நீர் முலைப்பால்தானும்
    வாயுவிடக் கூராகு மதிளுலாட்டி
முண்டோடு முன்மருந்தோ டொக்கக்கூட்டி
    முனிவான ஆகாசஞ் சேர்க்கக்கேளே. (578)

கேளப்பா சவர்க்காரம் பூரமிரண்டுங்
    கெடியான வாகாசக் கூருமாச்சு
நீளப்பா சவர்க்காரஞ் சுண்ணமாக்கி
    நேர்சமனுய்ப் பூரத்தை யொக்கப்போட்டு
வாளப்பா வகைக்கிரண்டு பலமெடுத்து
    மருவியதோர் விந்துவிஞ லரைத்துக்கொண்டு
மீளப்பா முன்மருந்தோ டொக்கப்போட்டு
    விரவியரைத் தெண்சாமம் வில்லைசெய்யே. (579)

செய்துமே கலிலிட்டு மேல்கால்மூடி
    சிதையாமல் சீலைசெய்து காயவைத்து
பைதுமே பத்தெருவில் புடத்தைப்போட்டு
    பரும்பீங்கான் றனிலிட்டுப் பணியில்வைப்பாய்
ஐதுமே யாறுபோற் சலமுமாகும்
    அர்க்கான குப்பிதனி லடைத்துப்போட்டு
வெய்துமே வீரத்தின் பொடிதான்தூவி
    விபரமினிச் சொல்லுகிறேன் விரைந்துகேளே. (580)

சொல்லென்ற தொட்டியோடு சிங்கிரண்டுஞ்
    சிறப்பான பிரிதிவியின் கூறதாச்சு
கெல்லென்ற கெவுரியோடு குதிரைப்பல்லும்
    கெடியான அப்புவிடக் கூறதாச்சு

கல்லென்ற விதுநாலும் வெவ்வேருகக்
காரணமாஞ் சேயநீரி தூரவைத்து
முல்லென்ற மூன்றுநா ளானபின்பு
முயற்சியா யிருசாமஞ் சுருக்குப்போடே. (581)

சுருக்கிட்டுப் பொடிபண்ணி நாலுசாமம்
சுத்தமாய்ப் பீங்கானி லெடுத்துவைத்து
குருக்கிட்ட கெந்தகமு மரிதாரந்தான்
கூரான தேயுவுட குறிப்புமாகும்
நிருக்கிட லிங்கமது வாயுவுக்கூறு
நேரான சிலையதுவுஞ் மொக்கச்சேர்த்து
நொருக்கிட்ட சேயநீரி லூரவைத்து
முயற்சியா யிருசாமஞ் சுருக்குப்போடே. (582)

போட்டுமே பொடிபண்ணி முன்பொடியிற்சேர்த்துப்
பீங்கானும் பாணிதனில் பதனம்பண்ண
சூட்டுமே சூதத்தைச் சுத்திபண்ணி
சுருக்கிட்டுச் சேயநீரில் நாலுசாமஞ்
சாட்டுமே பொடிநீரைக்குச் சமனாய்ச் சேர்த்துத்
தயங்காமல் வாய்நீரு முலைப்பால்விட்டு
நாட்டுமே நாதமோடு சுக்கிலமும்வார்த்து
நாலுநா ளரைத்தபின்பு வில்லைபண்ணே. (583)

பண்ணியே யுலரவைத்துப் பாங்கைக்கேளு
பாங்கான கற்காவியப்பிரேகம்ரண்டு
பொன்னியே பிரிதிவியின் கூறுமாகும்
பேரான சங்கோடு முட்டையோடும்
சென்னியே யிதுநாலும் பொடியாய்ப்பண்ணித்
தியங்கவே அப்புவிடக் கூறுமாச்சு
வெண்ணியே வெண்கல்லு நிமிளையோடு
மேலான தேவியுடக் கூறுமாச்சே. (584)

கூறுன கல்நாருஞ் சாத்திரபேதி
குறிப்பான வாயுவுடக் கூறுமாச்சு
தாரான விதுநாலுஞ் சமனாய்ச்சேர்த்துத்
தாக்கியே பொடிபண்ணி முன்பொடியிற்சேர்த்து

தூரான துத்தமோடு வைக்கிராந்தம் ரண்டுஞ்
சுயமாக வாகாசக் கூறுமாச்சு
ஈரான விதுரண்டும் பொடியாய்ப்பண்ணி
யிசைவாக முன்பொடியி லோக்கப்போடே. (585)

ஒக்கவே யரைத்தெல்லா மமுரியாலே
யுலரவைத்து வில்லைக்குக் கவசம்பண்ணி
சிக்கவே யுலரவிட்டு சீலைசெய்து
சிறப்பாக வஞ்செருவிற் புடத்தைப்போடு
அக்கவேவைந்துபுடம் போட்டெடுத்து
அசையாமல் மேல்கவசம் வாங்கிப்போட்டு
தக்கவே பார்த்தாக்கால் களங்கமாகுஞ்
சார்கின்ற லோகத்தில் நூற்றுக்கோன்றே. (586)

ஒண்ணான மாற்றதுவும் பத்துமாகும்
உறுதியாய் வாதத்தி லோளிப்புமில்லை
நண்ணான நூல்தனிலே வேகுநூலுண்டு
நாதாக்க ளோளிப்பாகச் சோல்லிப்போட்டார்
முண்ணான நிகண்டுக்குள் வெளியாய்ச்சோன்னேன்
முடிவான வாதமிது மூர்க்கமேத்த
திண்ணான காலாங்கி நாயர்தாமுஞ்
செப்பியதோ ருபதேசந் திறந்திட்டேனே. (587)

திறந்திடா திருந்தாக்கால் பாவமென்று
செப்பினே னிகண்டுக்குள் வெளியாய்த்தானு
மறந்திடா வுபதேசப் பொருளையெல்லா
மார்க்கமாய் வழியோடு வண்மைசோன்னேன்
பறந்திடாப் பஞ்சீவ கரணமாகப்
பார்த்தபடி பாடினேன் பாரிலோர்க்கு
இறந்திடாச் சித்தர்மய மாகவென்று
எழுதினே னேட்டுக்குள் ளேழிற்றுனே. (588)

தானென்ற நூல்தனிலே நாதாக்கள்சோன்னார்
சமர்த்தாக மறைப்போருளாய்ப் பாடிப்போட்டார்
கானென்ற காலாங்கி நாயகர்தாமுங்
காரணமா முபதேசங் கருத்தாய்ச்சோன்னார்

பானேன்ற பஞ்சகர்த்தா ளில்லாவிட்டால்
படைத்தழிக்க ரட்சிக்கப் பக்குவமும்போதா
ஆனேன்ற வண்டபிண்ட சராசரங்களேல்லா
மைந்துபேர் கூடினு லெல்லாமாமே. (589)

அல்லாமா மைந்துக்குள் ளாகவேணு
மறுபத்து நாலுசித்தி சைதாலாகும்
எல்லாமா மொன்றுக்குள் ளொடுங்கிப்போகு
மேற்றமாம் பராபரமு மொன்றுனுப்போல்
செல்லமாஞ் சிதம்பரத்த லொடுக்கினுப்போல்
சிறப்பான வாதமெல்லாஞ் சிதம்பரத்தாகும்
பொல்லாமை யில்லாமல் நன்மார்க்கமாகிப்
புஞ்சைபயாங் கோபத்தைப் போக்கிப்போடே. (590)

போக்கிட்டு மவுனமா யிருந்துக்கொண்டு
பேரான மூலத்திற் கருத்தைப்பூட்டி
நோக்கிட்டு வாறுதல மேறிப்பாரு
நட்பமெல்லா நண்மைணிமையாய் நோக்கிப்பா
தேக்கிட்டு கற்பமுண்டு காயசித்திபண்ணு
சிகாரவெளிப் போகாமல் மதியிலேற்று
தாக்கிட்டு வஸ்துவைத்தான் சமாதியிலேநில்லு
கந்திரனி லமுர்தத்தைச் சாப்பிடாயே. (591)

சாப்பிட்டு வழலையைத்தான் முன்னேபண்ணி
சமரசமா யுப்பாலே சூதத்தைக்கட்டி
சீப்பிட்டுச் செந்தூரம் பண்ணித்தின்னு
செயலான காயமெல்லாஞ் சித்தியாகும்
வாப்பிட்டு வாதத்தை வரிசையாக
வளமாக யான்சொன்ன முறைபோல்பாரு
ஆப்பிட்டு அஞ்சாக விசைந்துபாரு
அட்டமா சித்தியெல்லா மதின்பின்பாரே. (592)

பாரப்பா குளிகைக்கு யிந்தவீரம்
பாச்சாட்டற் குளுகைக்கு முடுக்கோயில்லை
வாரப்பா மனோவேகம் போகமாட்டார்
மாட்டுகிற சரக்கெல்லா மருவிடாது

காரப்பா சந்திரனிற் குளிர்ச்சியாலே
சஞ்சரிக்க வொட்டாது நடுக்கல்காணுங்
தூரப்பா தமருக்குள் புக்கியோடச்
சுத்தமமாம் வீரத்தைச் செய்திடாயே. (593)

வெடியுப்பு திராவகம்.

செய்திடவே திராவகத்தைச் சொல்லக்கேளு
சிறப்பான வெடியுப்பு நூறுபலமாகுங்
கொய்திடவே சீனமது நூற்றுப்பத்து
குறிப்பான காரமது பலந்தான்பத்து
கைதிடவே கல்லுப்பு பலமும்பத்து
கனமான விந்துப்பு பலமுமைந்து
பெய்திடவே பூநீறு பலமுமைந்து
பேரான சவுட்டுப்பு பலமுமஞ்சே. (594)

அஞ்சோடு சவர்க்காரம் பலமுமைந்து
அடுக்கான வளையலுப்பு பலமுமைந்து
கிஞ்சோடு கெந்தியுப்பு பலமுமைந்து
கெடியான வழையுப்பு பலமுமைந்து
தஞ்சோடு சந்தியென்ற சாரமைந்து
சார்பான துரிசியது பலமும்பத்து
பிஞ்சோடு வன்னமென்ற பேதிபலமைந்து
பேரான வமுரியுப்பு பலமுமஞ்சே. (595)

அஞ்சான நாயுருவி யுப்புவைந்து
அடுக்குவெள்ளைப் பாஷாணம் பலமுமூன்று
கெஞ்சான கெவுரியது பலமுமூன்று
கேடில்லா தாளகமும் பலமுமூன்று
வஞ்சான சிலையதுவும் பலமுமூன்று
வகையாக விதுவெல்லாங் கல்வத்திட்டு
விஞ்சான வெள்ளைச்சா ரணையின்சாற்றால்
விளங்கவே மூன்றுநா ளரைத்திடாயே. (596)

அரைத்திட்டு அடிகனத்த தோண்டியிலேபோட்டு
அழகான பால்தன்னை மேலேமூடி
திரையிட்டு யடுப்பேற்றி யெரிப்பாயானால்
ஜலம்வீழ்கு மூக்காலே பீங்கான்வைத்து

வரைத்திட்டு திராவகத்தை வாங்கிவாங்கி
வளமான வரக்கேன்ற குப்பியிலேயடைத்துவைத்து
உரைத்திட்டு திராவகத்தை மேத்தவாங்கி
யுறமான வரக்கேன்ற குப்பிதனில்வையே. (597)

3-செயநீர்.

வைத்தபின்பு செயநீர்தான் யோன்றுகேளு
வாகான சாரமது முப்பதாகுங்
கைத்தபின்பு வேடியுப்பு வீரங்கேந்தி
காரியம் லிங்கமோடு தாளகமுஞ்சிலையுங்
கைத்தபின்பு சிலாசத்து கேவுரிவேண்காரஞ்
சாயமாம் வத்தமோடு செம்புநாகம்
நேய்த்தபின்பு நிமிளையோடு சூதமிவையெல்லாம்
நேர்ப்பாக பலமிரண்டு கூடக்கூட்டே. (598)

கூட்டியே கல்வத்திற் போடியாய்ப்பண்ணி
கோழிமுட்டை வேண்கருவு மேருக்கம்பாலுஞ்
சூட்டியே சமபாகஞ் சேர்த்துக்கோண்டு
சுத்தமாய்க் கலக்கிரண்டுஞ் சேருவோன்றாய்
பூட்டிடே பீங்கானுக் குள்ளேவைத்து
பேருமையா மண்டநீர் பலந்தானேன்று
காட்டியே நீருக்குட் கலக்கிவைத்துக்
கலங்காமல் மூன்றுநாள் தேளிவைவாங்கே. (599)

வாங்கியே மூன்றுநாள் கல்வத்தாட்டி
வளமாக வில்லைசெய்து காயவைத்து
தேங்கியே மேற்கவசஞ் சேப்பக்கேளு
சீனமோடு விந்துப்பு யிரும்புவங்கந்
தாங்கியே காந்தமோடு கிளிஞ்சிசுக்கான்
சமரசமா யண்டோடு அப்பிரேகஞ்சவுடு
ஓங்கியே கடனுரைதான் வகைக்குரண்டுபலந்தான்
உற்பனமாய்க் கல்வத்திற் போடியாய்ப்பண்ணே. ()

பண்ணியே வழரிவிட்டு மூன்றுநாளரைத்துப்
பாங்காகப் புடம்போட்டு யேடுத்துக்கோண்டு
ஒண்ணியே வழரிவிட்டு அரைத்துக்கோண்டு
உணர்த்திட்ட வில்லைக்குக் கவசம்பண்ணி

கண்ணியே சாய்விட்டுச் சீலசெய்து
காரியமாய்ப் பத்தெருவில் புடத்தைப்போட்டு
அண்ணியே அஞ்சுதரங் கவசத்தோடே
அதட்டியே புடம்போட்டு யெடுத்திடாயே. (601)

எடுத்திடவே சாரமது குருவுமாகும்
இசைவாகப் பொடிபண்ணிப் பனியில்வைப்பாய்
அடுத்திட்டு வாறுபோல் செயநீராகும்
அழகான நீரிலே வீரம்போட்டு
அடுத்திட்டு குப்பியிலே யடைத்துவைத்து
அதன்பிறகு செய்கின்ற வாண்மைகேளு
தடுத்திட்டுத் தங்கமது பலந்தானென்று
சருகுபோல் ரேக்கதுவும் பலந்தானென்றே. (602)

தங்கத்தில் ரசமேக்க.

ஒன்றான ரேக்கதனைக் கல்வத்திட்டு
உறுதியாய் வீரமது பலந்தானென்று
தின்றான வொக்கவிட்டுத் திராவகத்தைவார்த்து
சிறப்பாக நாற்சாம மரைத்தபின்பு
கன்றான கல்வத்தைச் சாய்த்துவைக்கக்
கலங்தெல்லாஞ் சூதமாய்க் கழன்றுவீழும்
பின்றான பிட்சதனில் திராவகத்தைவிட்டுப்
பிசகாமல் நாற்சாம மரைத்திடாயே. (603)

அரைத்திட்ட சூதமெல்லாம் வாங்கிக்கொண்டு
அதன்பின்பு சுயமான அரைப்பொடியும்பலந்தான்
உரைத்திட்டு வொருபலந்தான் வீரம்போட்டு
ஒக்கவிட்டுத் திராவகத்தா லரைத்துமுன்போல்
திரைத்திட்டுச் சூதத்தை வாங்கிக்கொண்டு
செயமாக முன்னின்ற சூதநீரைவிட்டு
நரைத்திட்டு நாகமொரு பலத்தைவாங்கி
நயமான தகடுதட்டிக் கல்வத்திற்போடே. (604)

கல்வத்தில் வீரமொரு பலத்தைப்போட்டு
கடிதான திராவகத்தா லரைத்துநாற்சாமம்
கல்வத்தில் சூதமெல்லாம் அரைத்துவாங்கிச்
சுத்தமாய்ப் பலம்நிறுத்துக் கூடவிட்டு

பல்வத்தில் காரீயம் பலந்தான்வாங்கி
பஞ்சுபோல் தகடுதட்டிக் கல்வத்திற்போட்டு
வில்வத்தில் வீரமொரு பலமும்போட்டு
மிடுக்கான திராவகத்தா லரைத்திடாயே. (605)

அரைத்திட்டுச் சூதமெல்லாம் வாங்கிக்கொண்டு
ஆகின்ற சூதத்தில் பலம்நிறுத்துவிட்டு
இரைத்திட்டு யிரும்பினுட அரைப்பொடியும்பலந்தான்
ஏற்றமாம் வீரமொடு பலமும்போட்டு
நரைத்திட்டு நாற்சாமந் திராவகத்தாலாட்டி
நலமான சூதம்வரும் வாங்கிக்கொண்டு
உரைத்திட்டு ஒருபலந்தா னெக்கவிட்டு
உயர்கின்ற வைங்கையுந்தான் வேறேவையே. (606)

வேறான காந்தமது பலந்தான்பத்து
மிடுக்கான அப்பிரேகம் பலந்தான்பத்து
கூறான நிமிளையது பலந்தான்பத்து
குறிப்பான வத்தமது பலமும்பத்து
தாறான சாத்திரபேதி பலமும்பத்து
தளுக்கான விதுவைந்தும் பொடியாய்ப்பண்ணி
தூறான சீலைதனில் கிளிபோற்கட்டி
சுத்தமாய் வாழையுடக் கிழங்கில்வையே. (607)

கிழங்கில்வைத்து பட்சமொன்று வூரியபின்னெடுத்து
கெடியாக வுலரவிட்டு வெண்ணெய்குன்றி
பிழங்கில்வைத்த பொரிக்காரம் புரசம்வித்து
பெரிதான யெலியாலம்பால் விட்டரைத்து
முழங்கில்வைத்து வகைக்கைந்து பலமுங்கூட்டி
மூன்றுபங்காய்ப் பண்ணிவைத்து ஒருபங்குதானும்
வழங்கில்வைத்த மருந்தோடே வூரவைத்து
மறுநாள்தான் சரவுலையி லூதிடாயே. (608)

ஊதியே சத்தெல்லா மெடுத்துக்கொண்டு
உருகின்ற கரட்டோடே மருந்துகூட்டி
ஆதியாம் அண்டத்தின் குகையில்வைத்து
அழகான ஐந்தாறு சீலைசெய்து

வாதியாஞ் சரவுலையில் வைத்துமேதான்
வாகாசத் தீமூட்டித் தீபங்காட்டி
சாதியே சத்துருக்கு மருந்துகூட்டி
தயங்காமல் குகையிலிட்டு வுருக்கிடாயே. (609)

உருக்கியே பலமைந்து நிறுத்துக்கொண்டு
உறுதியாம் வீரமது பலமுமைந்து
நருக்கியே கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
நலமாகத் திராவகத்தில் ரண்டுநாளரைத்து
துருக்கியே சூதத்தை யெடுத்துக்கொண்டு
தோடுசாக நின்றுக்கால் மறுபடியுமரைத்து
பருக்கியே சூதத்தை யெடுத்துக்கொண்டு
பலமைந்து நிறுத்துமே வொக்கப்போடே. (610)

ஒக்கவிட லிங்கமது பலந்தான்பத்து
உறுதியாங் கல்லுப்பு பலமுமைந்து
மிக்கயிட்டு வேப்பிலையும் பலமுமைந்துபோட்டு
மிடுகியரைத் தோருசாமம் பொடியாய்ப்பண்ணி
தக்கயிடச் சட்டிக்குள் நடுவேவைத்து
சந்தில்மேல் சட்டிமல் லாத்திமூடி
திக்கயிடச் சந்துக்குமண் பிலக்கச்செய்து
சிறப்பாக மேற்சட்டிக்குள் தண்ணீர்வாரே. (611)

வார்த்துமே யடுப்பேற்றி யெரிநாற்சாமம்
வற்றவற்ற மேற்சட்டி தண்ணீர்வாரு
போர்த்துமே யாசவிட்டு யெடுத்துப்பார்த்தால்
புகழாக மேற்சட்டி தனிலேபற்றி
கோர்த்துமே கரிபோல மணிமணியாய்நிற்குங்
கசகாமல் வாங்கியெல்லாங் கையால்தேய்க்க
பார்த்துமே சூதமதுசி வந்துகொண்டு
வலைபோல சுத்தரச மாகுங்காணே. (612)

காணிந்த சூதத்தை யொக்கவிட்டுக்
காரணமாஞ் சாரநீர் சுருக்குப்போடு
ஆணிந்த வயக்கரண்டிக் குள்ளேவார்த்து
அசகாமல் நாற்சாமஞ் சுருக்குப்போடு

பூணிந்த பீங்கானி லெடுத்துவைத்து
பேரான திராவகத்தை விட்டுநீற்ற
காணிந்த காளான்போற் பொருமிப்போகுங்
கசகாம லெடுத்துமே பீங்காணில்வையே. (613)

வைத்தபின்பு துரிசியது பலந்தானெட்டு
வாகான சாரநீர் தன்னிற்றோய்த்து
நைத்தபின்பு ரவிதனிலே யேழுநாள்போடு
நலமாகக் காயையிலே நாட்டங்கேளு
வெந்தபின்பு நிமிளையோடு காரஞ்சூத
மேன்மையாங் கெந்தியோடு சிலைதான்பூரம்
நெய்த்தபின்பு நிமிளையோடு தாளகமுந்துத்தம்
நேரான கெவுரியோடு லிங்கமாமே. (614)

ஆமென்ற நாகமோடு பனிரண்டுந்தான்
ஐங்காசி யிடைதூக்கிக் கல்வத்திட்டுச்
சாமென்ற சாரநீர் விட்டுவாட்டி
தயங்காமல் நாற்சாம மரைத்துமைபோல்
காமென்ற சட்டிக்குக் கவசம்பண்ணிக்
கடுரவியில் வைத்திட்டு மூன்றுநாள்தான்
ஏமென்ற யிணங்கனோடு அப்பிரேகஞ்சூட
னியல்பான கல்லுப்பு அஞ்சனகற்சவடே. (615)

சவட்டோடு யிந்துப்புப் படிகாரங்காந்தஞ்
சாங்கியமா சிங்கியோடு மாங்கிஷபேதி
அவட்டோடே அன்னமென்ற பேதிவங்கம்
ஆண்மையாங் கடனுரையும் வகைக்கோர்பலந்தான்
மூவட்டோடு மூத்திரத்தை விட்டுவாட்டி
முயற்சியா யதன்மேலே கவசங்கட்டி
கேவுடோடு கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்துக்
கேட்டியாய் நால்சாம மெரித்திடாயே. (616)

எரித்திடவே துரிசியது குருவுமாகும்
எழிலான பீங்கானில் வைத்துக்கொண்டு
தரித்திடவே சாரமது பலந்தானைந்து
சாரநீர் தனிற்றேய்த்துக் காயப்போட்டு

கரித்திடவே கடுரவியி லேழுநாள்போடு
காய்ந்தபின்பு வெண்காரந் தாளகமுஞ்சிலையும்
லிரித்திடவே வெடியுப்பு வீரங்கெந்தி
மிடுக்கான காரீயங் கெவுரியாமே. (617)

கெவுரியோடு நாகமது ராசவார்த்தங்
கெடியான செம்போடு நிமிளைசூதம்
அவுரியோடு அரைப்பலந்தான் கல்வத்திட்டு
ஆதியாஞ் சாரநீர் தன்னலாட்டி
நவுரியோடு நாற்சாம மரைத்தபின்பு
நவாச்சாரக் கட்டிக்குக் கவசம்பண்ணி
மூவரியோடு மூன்றுநாள் காயவைத்து
முயற்சியாய் மேற்கவசஞ் செய்யக்கேளே. (618)

செய்யவே படிகியோடு துரிசிகாந்தஞ்
செப்பமா யிரும்புவங்க மிந்துப்போடு
நையவே நண்டோடு கிளிஞ்சிசுக்கான்
நலமான கட்னுரைய முட்டையோடும்
ஐயவே அப்பிரேகஞ் சவடுகைக்கு
அரைப்பலந்தா னமுரிவிட்டு அரைத்துக்கொண்டு
பெய்யவே யதன்மேலே கவசங்கட்டிப்
புளிபரணி சாம்பலுக்கு ளமுத்திடாயே. (619)

அமுத்திட்டு தீயெரிப்பாய் நாலுசாமம்
ஆரவிட்டு யெடுத்துப்பார் தந்தம்போலாம்
பிமுத்திட்டுப் பீங்கானி லெடுத்துவைத்து
பொட்டிலுப்புப் பலமைந்து பருங்கம்பிவாங்கி
தமுத்திட்டுச் சாரநீர்க் குள்ளேதோய்த்து
தயங்காம லேழுநாள் ரவியிற்போடு
இமுத்திட்ட ராக்கால மோட்டிவைத்து
எளிதான நெருப்படுக்க வைத்திடாயே. (620)

அடுக்கவைத்து யிந்துப்புக் கல்லுப்புச்சீனம்
ஆரமாம் வெண்காரம் லிங்கம்வீர
மடுக்கவைத்து மால்தேவி கெந்திதுத்தம்
வாள்நாகங் கடனுரையும் நிமிளையதுவெல்லாம்

சடுக்கவைத்துப் பொடிபண்ணி சாரநீர்விட்டுத்
தயங்காமல் நாற்சாம மரைத்தபின்பு
உடுக்கவைத்த கம்பிக்கு மோவ்வோன்றுய்க்கட்டி
யுறுதியாம் ரவிதனிலே காயப்போடே. (621)

காய்ந்தபின்பு சவட்டோடு சூடன்வங்கம்
கனமான யிரும்போடு காந்தந்தானும்
தேய்ந்தபின்பு செம்போடு காந்தம்வர்த்தஞ்
சிலகேந்தி தோட்டிசிங்கி யண்டத்தோடு
வாய்ந்தபின்பு வமுரிவிட்டு நாற்சாமமரைத்து
வாதியாங் கவசமேற் கவசம்பண்ணி
போந்தபின்பு பிரண்டையேன்ற சாம்பலுக்குள்
பிசகாம லெடுத்ததுமே யடுப்பிலேத்தே. (622)

ஏத்தியே யிருசாமந் தீயைவிட்டு
இதமாக வாரியபின் னெடுத்துப்பாரு
மேத்தியே வெள்ளெலும்பு போலாமுப்பு
மிடுக்கான பீங்கானில் பதனம்பண்ணி
காத்தியே கல்லுப்பு பலமும்பத்து
கனமான பாக்குபோ லுடைத்துக்கோண்டு
சாத்தியே சாரநீர் தண்ணீரிற்றேய்த்து
சமரசமாய் ரவிதனிலே காயப்பேடே. (623)

காயவே யேழுநா ளானபின்பு
கனமான யிரும்போடு பூரஞ்செம்பு
தோயவே கெந்தியோடு கெவுரிநாகஞ்
சோல்லான காரமோடு நிமிளைவெள்ளை
ஆயவே அப்பிரேகம் லிங்கம்வங்கங்
அடங்காத தாளகமும் வகைக்குஅரைப்பலந்தான்
பாயவே யமுரிவிட்டு மூன்றுநாளாட்டி
பக்குவமா யுப்புக்குக் கவசங்கட்டே. (624)

கட்டியே காயவிட்டு அப்பாற்கேளு
காரமாம் வீரமோடு சவுட்டுவில்லை
வட்டியே வர்த்தமோடு படிகிசூடன்
வளமான காந்தமோடு அன்னபேதி

இட்டியே யிந்துப்பு சிங்கியோடு
யேத்தமாம் வகைக்குஅரைப் பலந்தான்கூட்டி
பட்டியே பழம்புளிதான் பலமும்நாலு
பாங்காக வுரலிலிட்டு யிடித்திடாயே. (625)

இடித்திட்டு அதின்மேலே கவசங்கட்டி
யெரிபுடங் கவசத்தையுடை யாமற்போடு
படித்திட்டு முதற்புடந்தான் பத்தெருவிற்போடு
பாங்காக ஐயஞ்சா யேற்றிப்போடு
தடித்திட்டு யெடுத்துப்பார் தந்தம்போலாம்
சார்பான கரியில்நின்று ஆடும்ஆடும்
பிடித்திட்டுப் பீங்கானி லெடுத்துவைத்துப்
பேரான சீனமது பலமுமஞ்சே. (626)

அஞ்சான சாரநீர் தன்னிற்றேய்த்து
ஐந்துநாள் ரவிதனிலே காயப்போட்டு
நெஞ்சான நிமிளையோடு அப்பிரேகங்காந்தம்
நேரான யிரும்போடு நாகம்வங்கம்
மஞ்சான வகைக்குஅரைப் பலந்தான்கூட்டி
வளமான வழுரிவிட்டு நெகிழவாட்டி
தெஞ்சான சீனத்திற் கவசங்கட்டிச்
சிறப்பான ரவிதனிலே காயப்போடே. (627)

காய்ந்தபின்பு நண்டோடு சுக்கான்கல்லு
கற்பூர சிலாசத்து கிளிஞ்சிசங்கு
ஒய்ந்தபின்பு சுன்னமா யூதிக்கொண்டு
வுறைந்திருந்த கவசத்தின் மேலேகட்டி
பாய்ந்தபின்பு பத்தெருவில் ஐந்துபுடம்போட்டு
பக்குவமா யெடுத்துமே பீங்கானில்வைத்து
சாய்ந்தபின்பு சவர்க்காரஞ் செய்யக்கேளு
தவனமாம் பூநீறு படிதான்பத்தே. (628)

பத்தான பூநீற்றைப் பாண்டத்திற்போட்டுப்
பாலையர மனுஷனுட வழுரிதானும்
நித்தான ரண்டுபத்து படிதான்வார்த்து
நேர்ப்பாகத் தட்டியே கலக்கிப்போட்டு

கத்தான கற்சுண்ணம் படிதானைந்து
கனமான பாண்டத்தி லளந்துபோட்டு
சித்தான வமுரிபடி பத்துவார்த்து
சிறப்பாகக் கலக்கியே வேறேவையே. (629)

வேருன கல்லுப்பின் சின்னத்திற்பாதி
விரைந்துவோரு பாண்டத்தி ல்ளந்துபோட்டு
ஆருன வமுரிபடி யைந்துவார்த்து
அதட்டியே கலக்கிவைத்து மூன்றுநாள்தான்
நாருன நாலாநாள் தேளியவைத்து
நலங்காம லேந்துநாள் தேளிவிறுத்துவாங்கி
மூருன மூன்றையுமே கூடவிட்டு
மீருமலடுப்பேற்றி யேரித்திடாயே. (630)

அடுப்பேற்றி யேரித்திடுவாய் கமலம்போல
அடிதனிலே பத்ராமலகப்பை கோண்டுவாங்கு
துடுப்பேற்றித் திரளுகிற பக்குவத்தில்
திலதமாம் நல்லேண்ய் படிதான்வாரு
படுப்பேற்றி யேறித்துமே பதத்தில்வாங்கிப்
பரப்பான சட்டியிலே யூதிப்போடு
கடுப்பேற்றி யாறவிட்டுக் கத்திகோண்டுசீவி
கனமான நேல்லுப்போற் காயப்போடே. (631)

காய்ந்தபின்பு பாக்குபோற் சீவிக்கோண்டு
கனமான மல்லிகையி னிலைபரப்பி
சாய்ந்தபின்பு சவர்க்கார மதிலேவைத்து
சாங்கமா யிலைமூடிச் சீலைக்குள்வைத்து
நேய்ந்தபின்பு நேல்லில்வைத்து மேற்சட்டிமூடி
நேராகப் புழுங்கையிலே யாவிவேளிவந்தால்
பாய்ந்தபின்பு பதமேன்று பப்புறத்தேவாங்கிப்
பாங்கான ரவிதனிலே காயப்போடே. (632)

காய்ந்தபின்பு முன்போலே சீவலாக்கிக்
கணக்காக மூன்றுதர மவித்தேடுத்து
தேய்ந்தபின்பு சீயக்கா யிலைக்குள்வைத்துச்
சிறப்பாக மூன்றுதர மவித்துப்போடு

ஒய்ந்தபின்பு ரவிக்குள்ளே யுலரவைத்து
உரப்பான சீலதனிற் கிளிபோற்கட்டி
ஆய்ந்தபின்பு கற்சுண்ணங் கட்டிக்கொண்டு
அயத்தகட்டில் தமருமோரு நூறுபோடே. (633)

போட்டபின்பு பூவமென்ற பழத்தைவாங்கிப்
பிசைந்துநன்று யமுரிதனிற் கோதிக்கவைத்து
வாட்டபின்பு மட்டான வாயகண்டபாண்டம்
வளமான கற்சுன்ன மரைவாசிவிட்டு
கேட்டபின்பு கிளிதன்னை யதன்மேல்வைத்துக்
கெட்டியாய்க் கற்சுன்னத் தாலேமூடி
ஆட்டபின்பு தமரிட்ட அயத்தால்மூடி
யமுரிதான் காய்ச்சினத்தால் விட்டுநீற்றே. (634)

நீற்றியபின் மேற்சட்டி மூடிப்போடு
நீங்காம லாறியபின் காயவைத்து
மாற்றியபின் மறுசீலக் குள்ளேவைத்து
மயங்காமல் கற்சுண்ணத் தாலேமூடி
போற்றியபின் முன்போலே விட்டுநீற்றுப்
பேராகப் பதினைன்று தரந்தானப்பா
சாற்றியபின் சவர்க்காரந் தன்னைவாங்கித்
தளராமற் காயவிட்டுத் திராவகத்தைவாங்கே. (635)

திராவகத்தா லரைத்துமே வில்லைகட்டிச்
சிறப்பாக ரவிதனிலே காயவைத்து
மராவகத்தா லிலையோடு மல்லிகையின்வேரு
மருவநன்று யிடித்துமே பூச்சாற்விட்டு
சராவகத்தாற் சட்டியிலே பாதிவைத்துச்
சவர்க்கார வில்லைதனை யதன்மேல்வைத்து
மிராவகத்தால் மேலுமந்த இலைவேரும்வைத்து
மேற்சட்டி மூடியே சீலசெய்யே. (636)

செய்தபின்பு இருபதேரு வடுக்கிப்போட்டுத்
திறமாக ஆறவிட்டு வில்லைவாங்கி
செய்தபின்பு சீயக்காய் கோண்டுவந்து
திறமான எலுமிச்சம் பழச்சாற்விட்டு

செய்தபின்பு மைபோல நெகிழரைத்துத்
திராவகத்தா லரைத்துமே வில்லைசெய்து
செய்தபின்பு சீயக்காய் தன்னில்வைத்துத்
திறமாக மேல்மூடிப் புடத்தைப்போடே. (637)

புடம்போட்டுப் பூவமென்ற பழத்தைவாங்கிப்
பேரான விரைதள்ளிப் பழச்சாற்விட்டு
வடம்போட்டு மைபோலே நெகிழரைத்து
மறவாதே முன்வில்லை திராவகத்தாலரைத்து
முடம்போட்டு சட்டிதனில் கீழுமேலு
முயற்சியாய் நடுவாக மருந்தைவைத்து
நடம்போட்டு நாற்பதெரு வடக்கிப்போடு
நலமாக ஆறவிட்டு எடுத்துக்கொள்ளே. (638)

எடுத்தபின்பு கடுங்காரஞ் செயநீர்குத்தி
யிழுத்தரைத்து லேசாக வில்லைகட்டி
அடுத்தபின்பு காயவைத்துப் பொடியாய்ப்பண்ணி
யண்டோட்டிற் குள்வைத்துப் புடத்தைப்போடு
மடுத்தபின்பு கடுங்காரச் செயநீர்குத்தி
மறவாம லேசாக வில்லைகட்டி
தொடுத்தபின்பு சுண்ணும்பு முப்பும்நேரே
தூளாகப் பொடிபண்ணி யதுக்குட்போடே. (639)

போட்டபின் பாறவிட் டெடுத்துவாங்கிப்
பின்புமே கடுங்காரச் செயநீர்குத்தி
நீட்டபின்பு அரைத்துநன்ருய் மெழுகுபோலே
லேசாக வில்லைதட்டிக் காயவைத்து
பாட்டபின்பு பஞ்சசுண்ணக் குகையில்வைத்துப்
பக்குவமாய்ப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
ஆட்டபின்பு கடுங்காரச் செயநீராலரைத்து
ஐந்துசுண்ணம் தனிவைத்து எரித்திடாயே. (640)

எரித்திடுவாய் நாற்சாமம் கமலம்போல
இதமாக ஆறவிட் டெடுத்துப்பாரு
விரித்திடுவாய் வெங்நீருஞ் சவர்க்காரந்தான்
வேதையிலே சொல்லவேன்ருல் நாவோஇல்லை

மரித்திடுவா யென்போற்கு மார்பிலாணி
மகத்தான சித்தியெல்லா மிதற்குள்ளாச்சு
பிரித்திடுவாய் பீங்கானி லெடுத்துவைத்துப்
பெருங்குருவாஞ் சவர்க்காரம் பலமும்ரண்டே. (641)

ரெண்டோடு சாரமது சமனாய்ச்சேர்த்து
நேரப்பா நாற்சாம மாட்டிப்பின்பு
முண்டோடு முட்டையுட னோட்டில்வைத்து
முயற்சியாய்ப் பத்தெருவிற் புடத்தைப்போடு
பண்டோடு பீங்கானில் பனியில்வைக்கப்
பலபலெனச் சேயநீராம் வீரம்போட்டு
கன்டோடே வெள்ளையென்ற பாஷாணத்திற்குக்
கசகாமற் சுருக்கிட்டுக் சுட்டிப்போடே. (642)

கட்டியதோர் வெள்ளையைப்போற் கெவுரிபண்ணு
கடிதான கெந்தகத்தைக் குதிரைப்பல்லை
தட்டியதோர் தாளகத்தை மனோசிலையைப்பண்ணிச்
சமர்த்தாக அப்பிரேகவெண் சருவாலனைத்து
ஒட்டியதோர் வெவ்வேறாய்க் சவசம்பண்ணி
யுமிக்குள்ளே புடம்போட்டு எடுத்துக்கோள்ளு
எட்டியதோர் சவர்க்காரச் சுன்னம்ரண்டும்
இந்துப்பு பலம்ரண்டு சாரம்ரண்டே. (643)

சாரமொடு மூன்றையுந்தான் பொடியாய்ப்பண்ணி
தயங்காதே கடுங்காரச் சேயநீர்குத்தி
பாரமொடு நாற்சாமம் நெகிழவாட்டிப்
பக்குவமா யகலிலிட்டுப் புடத்தைப்போடு
தூரமொடு பீங்கானில் பனியில்வைக்கச்
சுருதியாஞ் சேயநீராம் பீங்கானில்வார்த்து
பூரமொடு சூடனையுஞ் சமபாகமாகப்
பிரித்துமே வெவ்வேறாய்ப் பீங்கானில்வையே. (644)

வைத்துமே சேயநீரும் பூரம்தானும்
வரிசையாய்ச் சமனாக நிறுத்துவிட்டு
நெய்த்துமே நிழலில்வைத்து மூன்றுநாள்தான்
நேர்ப்பாக ரவியில்வைத் தைந்துநாள்தான்

போய்த்துமே புரண்டதுவு முப்புமாகும்
பேரான வூமையென்ற சிப்பியிலேவைத்து
தோய்த்துமே சுண்ணும்பு சீலைசுற்றித்
துப்புரவா மணல்மறைவில் புடத்தைப்போடே. (645)

புடம்போட்டு எடுத்தாக்கால் பூரஞ்சூடம்
பெருங்குருவாஞ் சுண்ணமுமாம் பேணிப்பாரு
விடம்போட்ட சுண்ணத்தால் வேதைகோடி
மிடுக்கான கடனுரையைக் கற்சுண்ணநீருல்
அடம்போட்டு அரைத்தூது சுண்ணமாகு
மழகான கற்பூரச் சீலையின்மேலே
கடம்போட்டுக் கற்சுண்ணம் கவசங்கட்டிக்
கரியில்வைத் தூதிடவே சுன்னமாமே. (646)

சுன்னமாங் கல்நாரிப் படியேயூது
துடியான கெருடபச்சை யிப்படியேயூது
அன்னமா மண்டோட்டைப் பழச்சாற்றி
லரைத்தடை போலே லேசாகவில்லைதட்டி
கன்னமாங் கரியோட்டி லப்பியூதிக்
கரடான பவழத்தைச் சுண்ணம்பண்ணு
முன்னமாய் வீரத்தை வைப்பதற்கு
மூர்க்கத்தைச் சொல்லுகிறேன் முறையாய்த்தானே. ()

வீரவைப்பு.

தானென்ற சாரத்தின் கட்டிரண்டு
தயங்காதே வெடியுப்புக் கம்பிரண்டு
கானென்ற கடலுப்புக் கட்டிரண்டு
கலங்காத சீனத்தின் கட்டிரண்டு
தேனென்ற சவர்க்காரச் சுண்ணம்ரண்டு
திறமான பவழத்தின் சுண்ணம்ரண்டு
வேனென்ற சூடனிட சுண்ணம்ரண்டு
மேன்மையாம் பூரமென்ற சுண்ணம்ரண்டே. (648)

ரேண்டோடு கற்பூரச் சிலையின்சுண்ணம்
நேர்ப்பான கல்நாரின் சுண்ணம்ரண்டு
அண்டோடு சுண்ணமது ரண்டுபலமாகும்
ஆணமாங் கடனுரையின் சுண்ணம்ரண்டு

பண்டோடு அன்னமென்ற பேதிபலமிரண்டு
பாங்கான பொன்னம்பர் பலமும்ரண்டு
தண்டோடு சத்தியென்ற சாரம்ரண்டு
தயங்காத சிங்கியது ரண்டுபலமாமே. (649)

ஆமென்ற தொட்டியது பலமும்ரண்டு
அஞ்சனக்கல் பலம்ரண்டு துத்தம்ரண்டு
ஏமென்ற இந்துப்புப் பலமும்ரண்டு
ஏற்றமாங் கெந்தியது பலமும்ரண்டு
தாமென்ற தாளகமும் பலமுமரண்டு
தயங்காத சிலையதுவும் பலமும்ரண்டு
கோமென்ற குதிரைப்பல் கெவுரிவெள்ளை
கோடிதாக ஒரோன்று பலமும்போடே. (650)

போட்டெல்லாம் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணிப்
பேரான திராவகத்தா லஞ்சுநாளாட்டி
பாட்டெல்லாம் கரும்பீங்கான் தன்னிலிட்டுப்
பக்குவமாய்ப் பொடிபோலே வறுத்துக்கொண்டு
ஆட்டெல்லா மரைவாசிக் குப்பிக்கிட்டு
அழகான வாலுகையின் மேலேவைத்து
தீட்டெல்லாங் கமலம்போல் தீயைமூட்டிச்
சிறப்பாக ஏழுநாள் நாற்சாமந்தானே. (651)

ஏழுநா ளானபின்பு தீயைமாற்றி
யிதமாக ஆறவிட் டெடுத்துப்பாரு
வாழுநாள் மாதளம்பூப் போலாம்வீர
மகத்தான வருணன்போ லடியில்நிற்கும்
தாழுநாள் சவாதிட்டு மத்திச்சுக்கொண்டு
தடவியே நவலோகத் தகட்டின்மேலே
வீழுநாள் விளக்கதினல் காய்ச்சினுக்கால்
மிடுக்கான மாற்றதுவு மைம்பதாமே. (652)

ஐம்பதென்ற பரித்தகட்டில் பூசிவாட்ட
அருணன்போற் சிவப்பாகும் ரவியுமாகும்
துன்பமென்ற துய்யானி லாயிரத்துக்கொன்று
சூட்டினு லிருபத்தைந்து மாற்றும்

தன்பதேன்ற குளிகைக்கு இந்தவீரம்
தாக்கேன்ற சரக்கேல்லா முள்ளேகோள்ளும்
நன்பதேன்ற சாரணைக்கு மிந்தவீரம்
நாட்டாட்டாற் கேவனவழி நாடாதேன்னே. (653)

நாடாத பேர்களுக்கு வாதமேன்ன
நலமான சித்தியேன்ன குளிகையேன்ன
ஊடாத யோகத்தி லுறுதியேன்ன
உயர்ந்திட்ட குண்டலியி னேற்றமேன்ன
சூடாத பூவுக்கு வாசனைதானேன்ன
சுத்தசை தன்யத்தில் தாக்கமேன்ன
தேடாத சாத்திரத்திற் கருக்களேன்ன
சேயவீரம் விட்டாக்கால் குளிகைபோமே. (654)

போகாத வழலையினுற் போக்குகோடி
பேரான வுப்பிலே வித்தைகோடி
எகாத துரிசியினுற் குளிகைகோடி
யேற்றமாஞ் சாரத்தாற் கட்டுக்கோடி
தேகாத சீனத்தாற் சுன்னங்கோடி
சேப்பரிய கேவுரியிற் சேந்தூரம்கோடி
பாகாத பாஷாண ரசிதவித்தை
பகர்கின்ற தாளகத்தா லேமமாமே. (655)

ஏமமாஞ் சவ்வீரம் பலந்தானுென்று
ஏற்றமாம் நாகமது பலந்தான்மூன்று
சேமா நாகத்தைத் தகடுதட்டிச்
சிறப்பான வாய்நீரால் வீரத்தையரைத்து
நாமமாம் நாகமேன்ற தகட்டிற்பூசி
நலமான ஒட்டிலிட்டுப் புடத்தைப்போட
பூமமாம் போருமியது சுண்ணமாகும்
போக்கான நவலோக மாயிரத்திற்கோன்றே. (656)

ஒண்ணுன அயச்சல்லி பலமுநாலு
உணர்வான வேண்காரம் பலமுநாலு
விண்ணுன வீரமோரு பலமும்போட்டு
மிடுக்கான மாதளையின் பாலைவிட்டு

கண்ணான ரவிதனிலே காயப்போடக்
கலங்தோன்ருய் மெழுகாகும் குகையிற்போட்டு
தெண்ணன சில்லிட்டு உருக்கினுக்கால்
சீறியதோர் நாகமுமாய்ச் செயமுமாமே. (657)

செயமான நாகத்தாற் சூதம்கட்டும்
செந்தூரம் பண்ணினுற் கோடிக்கோடும்
தயமான தங்கமது பலந்தானுலு
தகடுதட்டி வீரமது நாலுக்கொன்று
வயமான வாய்நீரா லரைத்துப்பூசி
வச்சிரமாங் குகைதன்னி லுருக்கிப்போட
நயமான நாகமுமாய் ஆயிரத்திற்கோடும்
நணுகினுற் சூதமது கட்டிப்போமே. (658)

போமென்ற வீரத்தின் பூநாகஞ்சீனம்
போட்டல்லோ வாய்நீரால் மத்தித்துக்கொண்டு
பாமென்ற டலகைதான் றகட்டின்மேலே
பரிவாக வேபிய்ச்சு ரவியிற்போடு
ஏமென்ற வேழுநா ளானபின்பு
எடுத்துமே யஞ்சுசுன்னக் குகையில்வைத்து
ஓமென்று ஊதவே சுன்னமாகு
முயர்ந்தகுரு முறையிதுதா னுன்னிப்பாரே. (659)

உன்னியந்த குருவாலே சூதம்கட்டு
மூட்டியே சத்துகளை விரவிச்சேரு
மன்னியே யரையேழும் கலந்துபோகு
மாசற்ற நிர்க்குணத்தின் வழியுந்தோன்றும்
திண்ணியே சிலம்போசை காதிற்கேட்குஞ்
சிவசிவாவென் றிழைக்கிற் பரமும்தோன்றும்
பன்னவே பரிபாஷைக் கருவெல்லாம்தோற்றும்
பராபரத்தாய் முன்வந்து பாசிப்பாளே. (660)

பாசித்த குருவெடுத்து விராலியிலைக்கிட்டுப்
பண்பாக விடித்துநன்ருய்ச் சாறுவாங்கி
தூசித்த வங்கத்தை யுருக்கிச்சாய்க்கத்
துய்யனு மிருபத்து அஞ்சுமாச்சு

கோசித்த வெண்கலத்தை யுருக்கிச்சாய்க்கக்
குடிலம்போம் ரசிதமாம் பதினுருகும்
சேஷித்த இரும்புதனைக் காய்ச்சித்தோய்க்க
க்ஷணத்திலே ரத்தாருய்ச் சிதைந்துபோமே. (661)

சிதைந்துநின்ற அதரேடுத்துக் காரம்கூட்டிச்
சீக்கிரமா யுருகையிலே யீயமாகுங்
கதைந்துநின்ற காந்தமது ஈயமாகுங்
கல்லோடு வுபரசமுமீயமாகும்
பதைந்துநின்ற பாஷாண மீயமாகும்
படிப்படியாய் லவணமெல்லாஞ சத்துமாகும்
புதைந்துமே நவலோக முற்றும்போகும்
போக்கான வீரத்தா லாடுமாட்டே. (662)

ஆட்டான வீரத்தாற் போக்குச்சோல்ல
அரனலு முடியாதே ஆத்தாள்காணுள்
பூட்டான செயவீரம் விட்டாயானல்
பேரண்ட மதமெல்லாம் போகமாட்டா
மாட்டான மாருதத்தி லிடியிற்குள்ளே
மயக்கியே தள்ளிவிடு மாண்டுபோவாய்
தீட்டான குளிகை தீபனமோஇல்லை
செயலான சத்தெல்லாங் தேகிட்டிப்போமே. (663)

தேகுட்டியே சத்தெல்லா முட்கோள்ளாதே
சிற்றண்டம் பேரண்டம் போகமாட்டா
மகுட்டியே மாருதத்திற் சுழட்டிப்போடும்
மனோவேக மோடாமல் மக்கினமுமாகும்
பகுட்டியே பரிசிக்கில் வேதையில்லை
பண்பான சுரூபமென்ற பரிநாமம்போச்சு
அகுட்டியே செயவீர மனைத்தாயானல்
அறுபத்து நாலுசித்து மாடலாமே. (664)

சித்திக்கச் சிவப்பான நவாச்சாரத்தைச்
செப்புகிறேன் தெரிசிக்கில் வேதையாக
நத்திக்க நவாச்சாரம் பலந்தான்பத்து
நலமான வெலியாலம் பாலிலாட்டி

வெத்திக்க அரைத்தரைத்து வெயிலிற்போடு
மிரளாதே யேழுநா ளரைத்தரைத்து
பத்திக்க காய்ந்தபின்பு பொடியாய்ப்பண்ணிப்
பாத்திரத்தில் வைத்தபின்பு பாரங்கைக்கொள்ளே. ()

பாங்கான கல்லுப்பு படிகியிந்துப்பு
பாரமாம் வளகிலுப்பு இரும்புகாந்தம்
வாங்கானவெங்கமென்ற சுண்ணமோடு
மடிஞ்சுக்கான் சுண்ணமொன்று அண்டச்சுன்னம்
தேங்கான கிலாசத்துச் சுண்ணமோடுஞ்
செப்பரிய கடனுரையு மப்பிரேகம்சவுடு
நீங்காத காரியச் சுண்ணமோடும்
நெகிழ்ச்சியாங் கிளிஞ்சிலென்ற சுண்ணந்தானே. (666)

சுன்னந்தான் வகைக்கிரண்டு பலமேகூட்டி
தூளாகப் பொடிபண்ணி தொட்டியிலேபோட்டு
முன்னந்தான் முன்சாரப் பொடிமேல்வைத்து
மேல்தோண்டி வைத்தல்லோ மண்ணைப்பூசி
அன்னந்தா னடுப்பேற்றி யாறுசாமம்
ஆடவே தீயிட்டு ஆறுசாமம்
தன்னந்தான் சாரம் மேலேயேறி
தனித்ததோரு தோண்டியிலே நிற்கும்பாரே. (667)

தோண்டியிலே நிற்கின்ற சாரத்தானை
துப்புரவாய் மயிர்கொண்டு இப்பால்வாங்கி
காண்டியிலே கல்வத்தி லிதனைப்போட்டு
கடிதான மாதளையின் பாலாலாட்டி
நாண்டியிலே ரவியிலிட்டுக் காயவைத்து
நலமான முன்தோண்டி மருந்தின்மேல்வைத்து
மீண்டியிலே மேற்றோண்டி வைத்துமண்செய்து
மிடுக்காக வடுப்பேற்றி யெரித்திடாயே. (668)

எரித்திட்டு அறுசாம மானபின்பு
இதமாக ஆறவிட்டு இப்பால்வாங்கி
அரித்திட்டு ஆதளையின் பாலாலாட்டி
ஐந்துதர மிப்படியே பதங்கமேற்று

பரித்திட்டுப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
பாங்கான சூதமது பலமும்பத்து
தரித்திட்டுத் தங்கமது அஞ்சுபலமுமாகுந்
தன்னியத்தின் பாலாலே யரைத்திடாயே (669)

அரைத்திட்டு நாள்மூன்று பொடியாய்ப்பண்ணி
பரைவாசி காசயென்ற மேருக்கேற்றி
வரைத்திட்டு வாலுகையின் மேலேவைத்து
வரிசையாய்ப் பதினறு சாமந்தீப்போட்டு
திரைத்திட்டு ஆறவிட்டு எடுத்துப்பாரு
சிவந்தெழுந்த சூரியன்போல் நிறமுமாகும்
பரைத்திட்டு பீங்கானும் பரணிக்குள்வைத்துப்
பக்குவமாய் மூடிவைத்துப் பாங்கைக்கேளே. (670)

பாங்காக வெள்ளிடைதான் பாலிலுண்ணு
பத்தியமாய் மண்டலந்தா னுண்டாயானல்
நீங்காத நோயெல்லாம் நீங்கிப்போகும்
நீலத்தாறு தலத்தினிற்கு மட்சரமுந்தோன்றும்
தூங்காமல் நித்திரையும் பசியும்போகும்
சுக்கிலந்தான் மேலேறுங் கீழோடாது
ஆங்காத வடுக்கோடு பதமும் காணும்
அந்தரத்தின் மீனெல்லாந் தோன்றும்பாரே. (671)

பாரிந்த சாரத்தின் பேரேதென்னில்
பைகம்பச் சாரமென்று மிதற்கேபேரு
ஏரிந்த வேகம்பச் சாரமென்றுபேரு
ஏற்றமாந் தத்தையிட மூக்கென்றும்பேரு
ஆரிந்தச் சாரத்தின் முடிவைக்காண்பார்
அரனலு முடியாது ஆத்தாள்காணுள்
தாரிந்த ராமதேவ ரிதினுட்டல்லோ
சதுரயுக மாட்டியல்லோ கரைகாணுரே. (672)

கரைகாணுச் சாரத்தை யாயிரத்திற்கொன்று
காட்டிடவே கனகமது பதினருகும்
துரையான சூதத்தைத் கரண்டிக்குள்வார்த்துச்
சூட்சமா யெலுமிச்சம் பழச்சாறுவிட்டு

பரையான சாரத்தைப் பொடித்துத்தூவப்
பாரமா யானையைப்போல் வீறிட்டுச்சாகும்
திரையான சூதத்தை மணியாப்பண்ணிச்
சிவம்பண்ணச் சித்தியெல்லாங் கணத்திலாமே. (673)

ஆமிந்த மணிதனுக்கு நாலிலொன்று
ஆடகமாம் தங்கத்தை யுருகையிலேயீய
நேமிந்த ரண்டுமொன்று யுருகும்போது
நீட்டிடுவாய் சூதயிடை சுத்தியானநாகம்
காமிந்த நாகவிடை காரீயம்போடு
கண்திறந்து ஆடையிலே கெந்திபோடு
நேமிந்த செய்யப்பட்ட களங்குமாகும்
சேர்ந்த நவலோகத்தி லாயிரத்திற்கொன்றே. (674)

காசி சாரவைப்பு.

ஒன்றான காசியென்ற சாரவைப்பு
உறுதியிது கட்டினமாம் வேதையாகும்
பன்றான பூநீரு பதக்குவாரி
பெரிதான பாண்டத்திற் போட்டபின்பு
கன்றான கழுதையிட கத்தந்தானும்
கணக்காக இருதூணி யளந்துவாரு
மூன்றான மூன்றுநாள் கலக்கிவைத்து
முயற்சியாய் நாலாநாள் தெளியவாங்கே. (675)

வாங்கியே பாண்டத்தில் விட்டுக்காய்ச்சி
வற்றியே குழம்பான பதத்திற்கேளு
தேங்கியே சீனமொரு பலந்தானஞ்சு
சிறப்பான வெடியுப்பு பலந்தானஞ்சு
பாங்கியே யிம்முறைதா னூர்க்குக்கிட்டும்
பற்றற்ற தேகிகட்குக் கிட்டுமேப்பா
தாங்கியே சாரமொரு பலந்தானஞ்
சாரித்துப் பொடிபண்ணிக் குழப்பிப்போடே. (676)

போட்டுமே திரளநன்றாய் வற்றக்காய்ச்சிப்
பொடிபண்ணிக் காசியென்ற மேருக்கேற்றி
வாட்டுமே வாலுகையின் மேலேவைத்து
வளமான தீப்போட்டு நாலுசாமம்

ஆட்டுமே ஆறவிட்டுப் புடத்தைவாங்கி
அடுக்கடுக்காய்க் காசியென்ற சாரமாகும்
கூட்டுமே கட்டினமாங் குருவுமாகுங்
கோள்ளையோ கோள்ளையிதில் வாதந்தானே. (677)

தானென்ற காரமது பலந்தானஞ்சு
சமர்த்தான சாரமது பலந்தானஞ்சு
கானென்ற கல்வத்தி லிதணைப்போட்டுக்
கடுங்கார நீர்விட்டு அரைத்தேன்சாமம்
தேனென்ற தெல்லுப்போல் வில்லைபண்ணிச்
சிறக்கவே மணல்மறைவில் புடத்தைப்போட்டு
பானென்ற பனியில்வைக்கச் சேயநீராகும்
பாங்கான நீரினிட பருவம்கேளே. (678)

பருவமா நீர்தனிலே வீரம்பூரம்
பணவிடைதான் பொடிசெய்து கலக்கிக்கொண்டு
உருவமாம் தூரிசியது தோய்த்துத்தோய்த்து
உரப்போடு ரவிதனிலே தினந்தானேழு
துருவமாஞ் சூடனது காசுஅஞ்சு
சுறுக்கான வீரமது காசுஅஞ்சு
நருவமாம் நாரும்பு காசுஅஞ்சு
நலங்கரைத்துத் தூரிசியின்மேல் பூசிடாயே. (679)

பூசியே யுலர்ந்தபின்பு கற்சுண்ணச்சீலை
பிசகாமற் சேர்த்திட்டு காயவைத்து
வேசியே வெள்ளீயங் குகையில்வைத்துருக்கி
மிடுக்காய்நீ தோய்த்திடுவா யேழுதரந்தான்
தூசியே பத்தெருவிற் புடத்தைப்போட்டு
துப்புரவாய் வாங்கியே கவசந்தன்னை
கூசியே யெடுத்துப்பார் குருவாய்நிற்கும்
கோடிமட்டுங் தொந்தமே யேறும்பாரே. (680)

ஏறியதோர் குருவெடுத்து விராலியிலைக்கிட்டு
இடித்துவைத் தொருசாமம் பிழிந்துகொண்டு
ஆறியதோர் சட்டிதனி லடைவாய்வார்த்தா
லாதியாஞ் சூதமது சுத்திசெய்துகொண்டு

கூறியதோர் பலம்நிறுத்துக் கூடவிட்டுக்
கோடிதான அடுப்பேற்றி யெரித்தாயானல்
தூரியதோர் தோசையைப்போல் வெண்ணெயாகுந்
துப்பரவா யெடுத்துருட்டித் தண்ணீரிற்போடே. (681)

போட்டுமே சூடனுட தீயில்வாட்டிப்
பேரான வெண்ணெய்குத்தி கரண்டிதனிலுருக்கி
தாட்டுமே சாரணையைச் செய்தாயானல்
சங்கவரை நிமைக்குமுன்னே தாண்டியோடுந்
தாட்டுமே தங்கமிட்டு கெந்தியிட்டுச்
சாங்கமாய் வாலுகையில் செந்தூரித்துண்ணு
கூட்டுமே கோடியுகங் காயந்தானுங்
கொடுத்திடவே நவலோகம் ஆயிரத்துக்கொண்ணே.

ஒண்ணான குருவுக்கு ஒப்பேதென்னில்
உற்றவட வாக்கினிதா னேன்றபேரு
திண்ணான திரிபுரத்தை யெரித்தோனென்றுஞ்
சிறந்த சூலாயுத பாணியாகும்
பண்ணான பஞ்சாக்கினி ருத்திரனென்றும்
பாதிபதாஸ் திரமென்ற பரமனென்றும்
விண்ணான மேதினிக்குக் குருவுமென்றும்
வேதாந்த குருவென்றும் விளம்பலாமே. (683)

சாரவைப்பு.

ஆமென்ற சாரத்தின் வைப்புக்கேளு
ஆனையோடு குதிரையுட வமுரிதானுங்
காமென்ற கழுதையோடு ஆடுமோடு
காயத்தின் முரியோடு ஒட்டைக்கூட
வேமென்ற வமுரியெல்லா மொன்றாய்ச்சேர்த்து
வேடியுப்புச் சூடனது சீனங்கூட
ஏமென்ற வமுரிக்குள் ளேட்டிலொன்றகூட்டி
யேற்றமாம் பாண்டத்தி லெரித்திடாயே. (684)

எரித்திட்டுப் புட்டுப்போற் பொடியாப்பண்ணி
யிதமாக வாய்குவிந்த பாண்டத்திற்போட்டு
அரித்திட்டு அரைவாசி மட்டும்போட்டு
அசங்காமல் சில்லிட்டுச் சீலசெய்து

பரித்திட்டு அடுப்பேற்றி யைந்துநாள்தான்
பாங்கான கமலம்போல் தீயைப்போடு
தரித்திட்டு ஆறவிட்டு வுடைத்துவாங்கிச்
சாரமது பலகைபோ லிருக்கும்பாரே. (685)

இருக்கிறதோர் சாரமது யேதாற்கட்டும்
ஏற்றமா மிணங்கனு லேளித்திற்கட்டுங்
தெருக்கிறதோர் சீனத்தின் சுண்ணத்தாற்கட்டு
செப்பரிய துரிசியினீர் சுண்ணத்தாற்கட்டு
மருக்கிறதோர் வங்கமென்ற சுண்ணத்தாற்கட்டு
மகத்தான நிமிளையென்ற சுண்ணத்தாற்கட்டும்
அருக்கிறதோர் வாதமெல்லா மிதினலல்லோ
ஆச்சரிய மிதைக்கட்ட வெல்லாஞ்சாமே. (686)

வேடியுப்பு வைப்பு.

சாமென்ற வேடியுப்பு சாற்றக்கேளு
தனியான வூசரத்தின் வேகத்தாலே
பாமென்ற மண்ணதுவு முதிர்ந்துபூப்போல்
பாழாக நிலத்தினிற்கு மண்ணைவாரி
கோமென்ற குருதுகட்டிப் பாண்டந்தன்னிற்
கோட்டியே மண்ணதனில் தண்ணீர்குத்தி
ஆமென்ற தெளிவையெல்லாங் காச்சக்காச்ச
அம்புபோ லுப்பாத மப்பால்வாங்கே. (687)

வாங்கியே வுப்பென்ற தண்ணீர்நாலு
வளமாகப் பாண்டத்தி லளாங்துவிட்டு
தேங்கியே கோதிக்கவிட்டு வடிகட்டிக்கொண்டு
தேசிச்சாற் மோருமே கூடவிட்டு
ஆங்கியே யடுப்பில்வைத்துப் பொங்காமற்காய்ச்சி
அப்பெடுத்து ஒலைதனிற் குத்திப்பாரு
நீங்கியே யுறைந்தாக்கால் பதமென்றுவாங்கு
நேராக ஐந்துதரங் காய்ச்சிடாயே. (688)

அஞ்சுதரங் காய்ச்சிடவே கம்பியாகும்
அறிந்திதனைச் சுண்ணம்பு செய்யக்கேளு
பிஞ்சுதிரப் பழம்புளியும் பலந்தான்பத்து
பேரான வேடியுப்புப் பலந்தான்பத்து

நஞ்சுதிரம் நையவே சேர்த்திடித்து
நலமான புதுசட்டிக் குள்ளேவைத்து
பஞ்சுதிர வேடியிடவே சாமமோன்று
பத்தியே யெரிந்துமே சுண்ணும்பாமே. (689)

சுண்ணத்துக் கிடைக்கிடைதான் வேடியுப்புசேர்த்துத்
துவளவரைத்துப் பழச்சாற்றால் நாலுசாமம்
உன்னத்துக் குலரவைத்து வில்லைபோல
வுமதியா யெரியிட்டு வுடைத்துவாங்கி
விண்ணத்துக் கிடைக்கிடைதான் வேடியுப்புகூட்டி
மீராமற் பழச்சாற்றால் நெகிழரைத்துத்
தன்னத்துச் சாமமோன்று யெரியிட்டுவாங்கிச்
சமர்த்தாகப் பத்துவிசை நீறச்செய்யே. (690)

செய்தபின்பு வேடியுப்புச் சுண்ணந்தானுந்
திறமாக வேகுசுருக்குச் செப்பப்போகா
பைதபின்பு பலத்துக்குக் காசிடைதான்கூடன்
பண்பான சாரமோரு காசுபோடு
கைதபின்பு கல்லுப்புக் காசிடைதான்போடு
கனமான சீனமோரு காசுபோடு
தோய்தபின்பு துரிசியது சுட்டுப்போடு
துரிசான பூநீறு காசுபோடே. (691)

போட்டெல்லாம் பழச்சாறு விட்டுஆட்டிப்
பேராக நாற்சாம மரைத்தபின்பு
நீட்டெல்லாங் குகையிலிட்டுச் சீலைசெய்து
நேர்ப்பாகப் புடம்போட்டுச் சுண்ணமாகும்
பூட்டெல்லாம் பீங்கானில் பனியில்வைக்கப்
பெருமையாஞ் செயநீராம் போக்கைக்கேளு
பாட்டெல்லாம் பாஷாணஞ் சுருக்குப்போடப்
பதையாமற் கட்டிப்போம் பண்பாய்ப்பாரே. (692)

பாரப்பா நாகவங்கஞ் சாயக்கட்டும்
பரிவான அயந்தானு முருகியாடுங்
காரப்பா காரமது சத்தாய்ப்போகுங்
கடிதான வுபரசங்கள் மிருதுசத்தாம்

வேரப்பா வேடியுப்புச் செயநீர்தானு
　　மிடுக்காகும் வாதத்துக் குறுதிமேத்த
சூரப்பா சூட்சமெல்லா மிதினுலாகு
　　மஞ்சுண்ணம் புத்துரைக்கெல்லாஞ் சூட்டிப்பாரே. ()

சூட்டியதோர் நிகண்டுக்குள் கருவெல்லாஞ்சொன்னேன்
　　சூட்சமாம் பெயரையெல்லாந் துறந்துசொன்னேன்
பூட்டியதோர் காயசித்திக் கடுத்தகர்ப்பம்
　　பேரான கடைமருந்து பெயரையெல்லாந்
தீட்டியதோ ரம்புக்குள் கூர்மைபோல [ன்
　　சேகச்சாலத் தொழிலையெல்லாந் திறமாய்ச்சொன்னே
வீட்டியதோர் விடுவித்து வெளியாய்ச்சொன்னேன்
　　வேதாந்த நட்பம்போல் விரவிக்கேளே. (694)

சுக்கின் பெயர்.

சுக்கினுட பெயர்தனையே சொல்லக்கேளு
　　சுண்டியா மகாஅவிழ்தம் விசுவமாகும்
உக்கினுட நாகரமா மபேட்சமாகும்
　　உக்கிரமாங் கரபத்திரஞ் சிருங்கிப்பேராங்
தக்கினுட தாத்திரகஞ் சாதகமுமாகுஞ்
　　சாங்கமாம் உரைப்புமாய் கசப்புமாகும்
பக்கினுட திரிதோஷ மணியுமாகும்
　　பரிபாஷை நாமமெல்லாஞ் சுக்குக்காமே. (695)

மிளகின் பெயர்.

மிளகினுட பெயர்தனையே மொழியக்கேளு
　　முதிர்ந்துநின்ற திரைபோக்கி மரிசியாகும்
வளகினுட வல்லசமாங் தீட்சணமுமாகு
　　மகத்தான தூவினமா மசியமாகுங்
குளகினுட மூஷணமாம் பத்துவநேஷ்டங்
　　கோலகமாஞ் சரபந்த நிதியமாகும்
வளகினுட வாதத்தை யறுக்குகின்ற
　　மகத்தான மிளகுக்கு நாமமாமே. (696)

திப்பிலியின் பெயர்.

திப்பிலியின் பெயர்தனையே செப்பக்கேளு
தீட்சண தண்டுலமாங் கிருஷ்ணமாகும்
பிப்பிலியா மாகதியாஞ் சலபமாகும்
பெருத்த சவுண்டிசியாம் உபகில்லியமாகும்
வப்பிலியாம் வயதேகி கோலநாமம்
வாதகுன்மந் திரிதோஷன சனியுமாகுங்
கப்பிலியாங் கோழைதனை யறுக்குஞ்சூரன்
கருதியதோர் திப்பிலியின் பெயருமாமே. (697)

திப்பிலி மூலத்தின் பெயர்.

திப்பிலி மூலப்பெயரைச் செப்பக்கேளு
சிறந்ததே சாவரமென்று மூலமென்று
பிப்பிலி மூலம் நறுக்குமூலமாகும்
பேரான கிரந்திகமாங் கண்டுமூலங்
கப்பிலி மூலங் கோலமாகுங்
கடுகிரந்தி மூஷ்ணமாங் காகானிறமுமாகு
மப்பிலி மூலம் வாதஞ்சனியுமாகு
மருவுந் திப்பிலிமூலப் பேருமாமே. (698)

ஆனைத் திப்பிலியின் பெயர்.

ஆனைதிப் பிலிப்பெயரை யறியக்கேளு
அதிகமாந் தசியபலஞ் சமுத்திஷ்டமாகுஞ்
சேனையாஞ் சிரைபதிகேசப் பிப்பிலியாகுஞ்
செப்பிய தோர்கரிகண்ரவி கபாலமுமாகும்
வானையாந் தங்கத்தின் கிருஷ்ணமுமாகு
மகத்தான கிருதிமாச சோக்கணமுமாகுங்
கானையாங் கபமறுக்குங் குடோரியாகுங்
குடோரியாகுங் கருதிய வானைத்திப்பிலி பேருமாமே.

செவ்வியத்தின் பெயர்.

செவ்வியத்தின் பெயர்தனையே செப்பக்கேளு
செவ்விகமாங் கோலவல் லீசமாகும்
அவ்வியமாங் கெந்தாநா கோலியுமாகும்
ஆர்க்கமாங் கண்டீரங் கஷேணியாகுஞ்

சிவ்வியமாங் திமிரகத்து மதீரனுகுஞ்
சிலேட்டுமேத்தைப் போக்குகின்ற திறமானுகும்
வவ்வியமாம் வந்தகோப சமனியாகும்
வகுத்துரைத்து செவ்வியத்தின் பேருமாமே. (700)

சித்திர மூலத்தின் பேயர்.

சித்திரமூலப் பெயரை செப்பக்கேளு
சித்திரகோடி சோதி காந்தமுமேயாகும்
பத்திரமாம் பகப்பாதி பாவிபாளி
பாசகோ தருண வக்கினியுமாகும்
குத்திரமாஞ் சுவாலினி வாளாச்சிகையுமாகுங்
கோடியதக வினோதத்தால் பட்சமாகும்
பத்திரம் படிபாடக்குச் சுபமுக்காகும்
பண்பான சித்திரமூலப் பேருமாமே. (701)

கருப்பு சித்திரமூலத்தின் பேயர்.

நீலநிறக் கோடிவேலி நிகழ்த்தக்கேளு
நேயமாங் கானத்திற் கருவியாகும்
ஆலகால விஷத்தி னிறமுமாகும்
அடங்காத தணலியாங் கனலியாகுஞ்
சீலமாஞ் சிலமண்கள் பேதிச்சியாகுஞ்
செயலான காயங்கள் சணத்திற்சித்தி
காலமாங் கானகத்திற் கருப்பியாகுங்
கருத்திருக்குங் கோடிவேலி நாமமாமே. (702)

அசமதாகத்தின் பேயர்.

அசமதாகத்தின் பெயரை யறையக்கேளு
அசமோதம் வாணிதிப் பியகமுமாகுந்
துசமோத வசுவனுங் கோக்கிற்கேந்தன்
தீட்சரட் சணவாத கபசமனியாகும்
புசமோதங் குன்மத்தைப் போக்குகின்றேன்
பேரான தீபினியாம் புசவானுகுந்
திசமோதஞ் சடத்துக்குள் திகிரிபோக்கி
செப்பியதோர் ஓமத்தின் பெயருமாமே. (703)

புளியின் பேயர்.

புளியினுட பெயர்தனையே புகலக்கேளு
பெரிதான திர்திருணியினுட சாம்பல்மாகும்
அளியினுட வம்புலி சஞ்சாசுக்கிலக
மறிந்தமாம் பகுதிபத்திரா கனச்சாவாகும்
களியினுட கனச்சாய மிலேமிமலமாகுங்
காதுல மாந்த பூரமாகுங்
களியினுட சீருகமாந் தம்மில்பூசங்
கண்டுரைத்த நாமமெல்லாம் புளியின்பேரே. (704)

கோருக்காப் புளியின் பேயர்.

கோருக்காயின் புளிதனையைக் கூறக்கேளு
கோடுஞ்சக்கிர் வீரியமாம் வேக்காவாகும்
அருக்காயி நாமிலோமலம் பீசாமலமாகும்
அடுக்கான சத்தசத் பேதியாகும்
உருக்காயின் தீபனமாம் ருசிகரமுமாகு
முப்புக்கு முறுதியாஞ் சுண்ணமானேன்
நருக்காயி னரைமீறி கபவாதமறியா
னுமமெல்லாங் கோருக்காயின் புளிக்குமாமே. (705)

சீரகத்தின் பேயர்.

சீரகத்தின் பெயர்தனையே செப்பக்கேளு
செயலான துத்தசாம் பலமுமாகு
மோரகத்தி மித்தியஞ்சியமை சாட்சியாகு
மிடுக்கான உபகும்பம் பீரமாகுங்
காரகத்தின் காளிகா சாபஞ்சியாகுங்
கடிதான குஞ்சிக்கா பிரத்திவிகாயாகுங்
தாரகத்தின் பித்தனு சனியுமாகுங்
தளுக்கான சீரகத்தி னுமமாமே. (706)

கருஞ் சீரகத்தின் பேயர்.

கருஞ்சீரகப் பெயர்தனையே கருதக்கேளு
காளி கோளச்சை தினியுமாகுங்
குருஞ்சீரங் கிருஷ்ணசா சீதுவாகுங்
கோடிதான குலக்கினி சோபகுஞ்சியாகுங்

தருஞ்சீரஞ் சாணிக்காரணி யாணியாகுந்
தயங்காத கால்சீர கழுமாகும்
பருஞ்சீரம் பலவர்த்தனந்தி தோஷணமாகும்
பாடியதோர் கருஞ்சீரக நாமமாமே. (707)

சதகுப்பியின் பெயர்.

சதகுப்பிப் பெயர்தனையே சாற்றக்கேளு
சதாகுவையா சதபுட்பா கதிராவாகு
மதகுப்பை வாக்குபசப்பி யென்னலாகு
மகத்தான காராவி கணிகாசமாகுஞ்
சிதபுஷ்பி சிக்குயத்திக்ஷா மாதவிப்பாகுஞ்
சிலேட்டுமத்தை வாதத்தைத் துரத்துந்தீரன்
சுதகுப்பை சுதவரியாம் விரணம்போக்கி
சொல்லியதோர் சதகுப்பைப் பேருமாமே. (708)

காட்டு சதகுப்பையின் பெயர்.

காட்டுசத குப்பையுடப் பெயரைக்கேளு
கானகத்திற் காலேய கிச்சிலியாகும்
நாட்டுசத குப்பைக்கு சக்களவனாகும்
நலமான சாகினியாஞ் சீரேவாயாகும்
பூட்டுசத குப்பையாந் திரிதோஷணமாம்
புகழான நேத்திரத்தின் விரணம்போக்கி
மூட்டினுட விஷத்திற்குத் தீரனாகு
மூர்க்கமாஞ் சதகுப்பைப் பேருமாமே. (709)

வெந்தயத்தின் பெயர்.

வெந்தயத்தின் பெயர்தனையே விரும்பிக்கேளு
மேந்தியாம் தாரபத்தி யாதுவாகும்
விந்தயமாஞ் சிரேபரி சித்திரவாகு
மீருத சாலேபச் சாலமாகும்
சித்தயமாம் சிவாமதானு யமுனாசித்தி
சிறப்பான உலுவாவாங்க சப்புமாகும்
அத்தயமாஞ் சயரோ வரமுமாகும்
அறிந்துரைத்த வெந்தயத்தி னுமமாமே. (710)

கோத்து மல்லின் பெயர்.

கோத்துமல்லிப் பெயர்தனையே கூறக்கேளு
குணமான தனியாவாங் குசும்பரியாகும்
வித்துமல்லி தானணியாகம் வித்துன்னகமுமாகும்
விளங்கியதோ ருள்ளியதே காயிருகதியகேந்தம்
கத்தமல்லி காபிபோ ஷணமுமாகும்
தணிகாள காபிரவா ணிசமுமாகுங்
குத்தமல்லி குலத்தும்பா சுவாசாக்கினிநாசி
கூறியதோர் நாமமெல்லாங் கோத்தமல்லிக்காமே. ()

வசம்பின் பெயர்.

வசம்பினுடைப் பெயர்தனையே வகுக்கக்கேளு
வசோக்கிர கெந்தாவாங் கோலோமியாகுந்
தசம்பினுட சேடிலோவாங் கிராசரோமசமாம்
தசீரணமாம் விசமித்தியாடின காந்தமாகும்
அசம்புவன்னி ஆசுவேதவதிகம் வத்தியம்பியாகு
மார்க்கமாம் விசாமாத்திரி பங்குராதி
துசும்பு சுக்குலகந்தங் கிரிமியரியாகுஞ்
சொல்லியதோர் நாமமெல்லாம் வசம்பின்பேரே. ()

கடுக்காயின் பெயர்.

கடுக்காயின் பெயர்தனையே கருதக்கேளு
கடிதான ரோகிக்குப் பண்டிதனுகு
மடுக்கானின் னரிதகிவை மவைதியாகு
மையனும் வையவித்தாவாம் பிராணதாதாகும்
படுக்காயின் பத்தியாம்சய மிருதாவாகும்
பண்பான பிரபன்ன மோகாவாகுந்
திடுக்கான தீபனி பாசனியாகுஞ்
சேர்ந்த வரித்தாயென்று யோகமாமே. (713)

மோகனும் பூதனுபி யாதவாகு
மிடுக்கான சேதமிசிறை பாசியாகும்
பாகமாம் பஞ்சசா லவணவரச்சியாகும்
பண்பான ரைசகிசிவா வேன்றுவாகும்

வாகமாம் வனத்துற்கி வனத்திற்குக்குடோரி
மதுர்பாசி வாதனு சனியுமாகுங்
காகமாங் கபத்தினு சனியுமாகுங்
கருதியதோர் பேரெல்லாங் கடுக்காய்க்காமே. (714)

ஆமென்ற கடுக்காய்க்கு வுற்பத்திகேளு
ஆதிசிவ னமிர்தந்தான் கடையும்போது
தேவென்ற தேவர்க்கு விஷ்ணுதானுஞ்
சிந்தைமகிழ்ந் தமிர்தமங்கை யுதவும்போது
பாமென்ற பகுந்தளித்து கையைவீசிப்
பண்பான தெறித்ததுளி யேழுகாயாய்ச்சு
பாமென்ற வேழுவகைக் கடுக்காய்க்குள்ளே
பாங்கான குணமெல்லாம் பகரக்கேளே. (715)

பகரவே விசயனென்றும் ரோகணியென்றும்
பாங்கான பிருதீவியென்றும் அமுர்தந்தானென்றுங்
திகரவே சிவந்திதிரி விருதாவென்றுஞ்
சேப்பமாம் பையனே டேழுமாகும்
விகரவே விசயனுட வுற்பத்தி தானும்
விந்திய தேசந்தனிலே பிறக்கும்பாரு
கதருகாவே ரோகணியென்னுங் கடுக்காய்தானுங்
கன்னிமா குமரிதனி லுதித்ததாமே. (716)

ஆமேதான் பிருதிவிதான் பிறக்கின்றதேசம்
அழகான சவுஷேட்டிர தேசமாகும்
வாமேதா னமுர்தமென்றுங் கடுக்காய்தானும்
மகத்தான காசியென்ற தேசத்திலாகுங்
தேமேதான் சீவந்தி பிறக்கின்றதேசஞ்
சிக்கான காடுகளி லுற்பத்தியாகும்
வாமேதான் திரிவிருதை மால்தனிலேபிறக்கு
மகத்தான அப்பையைந்து பொதியமலையாமே. (717)

மலையான விசையன்றனை தன்னிறமேகேளு
மார்க்கந்தான் பேய்ச்சுரைக்காய் போன்றிருக்கும்
உலையான ரோகணிதானல் வதுராய்த்தோணும்
உத்தமமாம் பிருதிவியின் மேல்தோல்மெல்லியதாம்

அலையான வமுர்தமென்னுங் கடுக்காய்தானும்
அழகாகச் சதைபோலே போன்றிருக்கும்
திலையான சிவந்திப்போன் னிறமாய்க்காணும்
திரிவிருதை பஞ்சவர்ன மாகும்பாரு. (718)

ஆகுமே அடையந்தான் கறுப்புமாகும்
அடிக்குமே வாதத்தை விசையன்தானும்
வேகுமே ரோகணிதான் சன்னிதனக்காதி
விடுவிக்கும் பயித்தியைத்தை பிருதிவிதானும்
சாகுமே சிலேட்டுமங்கள் அமுர்தாவுக்கு
தகத்துமே மூலத்தை சிவந்திதானும்
எகுமே விரணங்கள் திரிவிருதைக்குத்தா
னிடுக்கமெல்லாந் தீர்ந்திடுமே அமையக்கேளே. (719)

நெல்லிக் காயின் பெயர்.

நெல்லிக்காய் பெயர்தனையே நிகழ்த்தக்கேளு
நேயமாம் ரசபலமாம் சீதுபலமாகுந்
தல்லிதாத் திரிப்லமாஞ் சிவமுமாகும்
சமமான ஆமலகி திருஷியபலமாகும்
வில்லிக்காய் சிரிபலமாம்மே வசமுமாகும்
விளங்கியதோர் பஞ்சாக்ஷர வருஷிபலமாகுந்
தெல்லிக்காய்த் திரிதோஷ சமனியாகுஞ்
செப்பியதோர் நெல்லிக்காய்ப் பேருமாமே. (720)

தான்றிக் காயின் பெயர்.

தான்றிக்காய் பெயர்தனையே சாற்றக்கேளு
சாங்கமாம் விபிதகமாம் கருஷபலமாகும்
ஊன்றிக்காய் வசந்தோட சங்கிலித்துருமமாகும்
ஓங்கியதோர் பூதவா கனியுமாகும்
பூன்றிக்காய் பூதவிருட் சத்துவாகும்
போக்கான லட்சுமிகா சனியுமாகு
ஈன்றிக்காய் யிமதேசியம் குஷ்டக்கினியாகும்
இயம்பியதோர் தான்றிக்காய்ப் பேருமாமே. (721)

### கடுகின் பெயர்.

கடுகினுடப் பெயர்தனையே கருதக்கேளு
காரமாம் ஆசுசிரா சிகாமற்பூசி
விடுகுனுட விறச்சார்த்தி சருப்பமாகும்
மிடுக்கான தீட்சணகேந்தித் தீட்சணமாகுஞ்
சடுகுனுட சவகமாஞ் சுங்கமாகுந்
தயவத்தார்சோடசமாய்த் த ஏனியமாகுங்
குடுகினுட கிருஷ்ணகிரு ஷப்பமாகும்
கூறியதோர் நாமமெல்லாங் கடுகுக்காமே. (722)

### வெண் கடுகின் பெயர்.

வெண்மையாங் கடுகினுட விபரங்கேளு
மிடுக்கான கிராணவேத நாவுமாகுங்
கண்மையாங் கடுகேந்த கருஷபமாகுங்
கண்டுகினம் ரச்சிதா பலமுமாகுந்
திண்மையாங் கேவுரசித்தா ரத்தமாகுஞ்
சிலுக்கான பூதநா சனமுமாகுந்
துண்மையாம் தூபலே பனமுமாகுஞ்
சூலையாம் வெண்கடுகின் சூட்சந்தானே. (723)

### மஞ்சளின் பெயர்.

மஞ்சளுட நாமத்தை மருவிக்கேளு
மயக்கியதோர் அரித்திரர் வாம்பதிகாவாகும்
கஞ்சளுட கவுரிவர்ன நரவதியாகும்
கனகம்போல் வர்ணிநீர்த் தீசமாகும்
விஞ்சளுட விலாசிநீ விஷகிநாசமாகு
மிடுக்கான துரஞ்சிதிர வகமாமீது
துஞ்சளுட விரணஅரி மேகசமனுகும்
துக்குமாங் தேகவர்ணி மஞ்சள்பேரே. (724)

### மரமஞ்சளின் பெயர்.

மரமஞ்சள் பெயர்தனையே மருவக்கேளு
மகத்தான பிதசங் தனமுமாகும்
அரமஞ்சள் அன்னியமாங் தாருவாகும்
அரித்திரா சங்கிதீஷ்ட காஷ்டமுமாகும்

வீரமஞ்சள் வித்திரிகம் நிசாதாரமாகும்
விரணரிசி பசனிட்ட மேகம்போக்கி
தூரமஞ்சள் சுவாசத்தைத் தூரத்துஞ்சூரன்
கோல்லியதோர் மரமஞ்சள் பேருமாமே. (725)

அதிவிடையத்தின் பெயர்.

அதிவிடையப் பெமர்தனையே அறையக்கேளு
அதிவசா சுக்கிலகேந் தமுமேயாகும்
பதிவிடையம் பங்குரா விசுவாசமாகும்
பகர்கின்ற ஞேயமாமசியாங் கேந்தாவாகும்
விதிவிடையம் விஷபாகாச்ரிங்கி சோடமாகும்
விளங்கியதோர் அதிசாரசுரச மரபிமாகும்
நிதிவிடையஞ் சத்திவிஞ சனியுமாகும்
நேயமா மதிவிடயப் பேருமாமே. (726)

கடுகு ரோகணியின் பெயர்.

கடுகுரோ கணிப்பேரைக் கருதக்கேளு
கசம்பான கசக்கிராங்கி துயமாவாகும்
குடுமியாம் பித்தரச ரோகணியுமாகும்
கிருஷ்ணபேதா கண்டிருக நாமுநாவாகும்
அடுகுசகலா தினிஅசோக ரோகணியாம்
ஆமக்கினி தித்தரோ கணியுமாகும்
விடுவிஷதா அரியரம் பித்தக்கினியாகும்
விளங்கியதோர் ரோகணியின் விபரமாமே. (727)

மஞ்சிஷ்டியின் பெயர்.

மஞ்சிஷ்டிப் பெயர்தனையே வழுத்தக்கேளு
மஞ்சிஷ்டா கால மேஷமாகும்
சஞ்சிட்டி சமங்காலிக சாரணியுமாகுஞ்
சமரசமாம் ரத்யட்டி நேமமாகும்
வஞ்சிட்டி வத்திர பூஷணமுமாகும்
மஞ்சுகா குமாரீசம் பாண்டியாகும்
நஞ்சிட்டி ரத்தாங்கி ரத்னுகி
நாமமெல்லா மஞ்சிட்டிப் பேருமாமே. (728)

சிறுதேக்கின் பெயர்.

சிறுதேக்கின் பெயர்தனையே செப்பக்கேளு
 சேயமான கேரந்த டசாகஞ்சமாகும்
டருதேக்கு பரங்கிய பதுமியாகும்
 பாங்கான பிராமண யட்டீகமாகும்
அருதேக்கு அங்கார வல்லியாகும்
 அழகான சுக்கிரமா தாகமாகும்
கருதேக்கு சாசக்கினி ப்ரபாவமாகுங்
 காட்டியதோர் சிறுதேக்கு கணக்குமாமே. (729)

கிச்சிலிச் கிழங்கின் பெயர்.

கிச்சிலியின் கிழங்குப்பேர் கூறக்கேளு
 கேடியான சுதாதரளி கேந்தமூலா
தச்சிலியின் சுந்திரன் சந்திகேந்தா
 சங்கிதா துரவிதே யாதுவாகும்
பிச்சிலியின் பிருதுபல ரசிகரவுமாகும்
 பிரளயமாஞ் சன்னிக்குக் குடோரியானேன்
கச்சிலியின் கடுவிரண தாக்னியாகும்
 கண்டுரைத்த கிச்சிலியின் கணக்கதாமே. (730)

கற்கடக சிங்கியின் பெயர்.

கற்கடகச் சிங்கியின்பேர் கருதக்கேளு
 கடுசிரிங்கம் குளிங்காவாம் கடுக்காய்ப்பூவாம்
வற்கடகம் வக்கிராசம் மகாகோஷாவாகும்
 வாரங்கி கஞ்சந்திராசம் விஷநாசமாகு
மற்கடகம் மறதசா வனசாவாகு
 மருவியதோர் அதிசார பந்தியாகும்
நற்கடகந் துவர்ப்பான பச்சைவர்ணி
 நாமமெல்லாம் கற்கடகச் சிங்கியாமே. (731)

அதிமதுரத்தின் பெயர்.

அதிமதுரப் பெயர்தனையே அறையக்கேளு
 அட்டிக தரகமாம் வீதமாகு
மதிமதுர மாமதுரா சிரவமாகும்
 வல்லியேன்ற மதுகமா மட்சிமயமாகும்

நிதிமதுரஞ் சிரிதரோ மயமுமாகும்
சிறப்பான காஷ்டமென்ற மதுரமாகும்
பிதிமதுரம் பித்தனு சனியுமாகும்
பேசியதோ ரதிமதுரப் பேருமாமே. (732)

காா்போக வசிரியின் பெயர்.

காா்போக வரிசியின்பேர் கருதக்கேளு
கனமான வாகுசிசோம ராசியாகும்
தூர்போக சுவலியபி சோமவல்லி
துடியான வயலுக்கு சங்கிருஷ்ணபலமாகும்
பார்போக பலாமிரு தாசைவபூதி
பண்பான சிலேஷ்மநா சனியுமாகும்
தார்போகம் கிருமிகளைத் தகர்த்துச்சாடுந்
தயங்காத கார்போகத் தன்மையாமே. (733)

அரத்தையின் பெயர்.

அரைத்தையிட பெயர்தனையே அறையக்கேளு
ஆண்மையாம் ராசினுவா மசாசியாகும்
உரத்தையாம் உத்தாவாம் சிரேங்கியாகும்
உண்மையா மாசாமநாசை வயத்தமாகும்
துரத்தையாம் சுகந்தமூலா திரசமாகும்
திரிதோஷ வாதகா சக்னியாகும்
கரத்தையாங் கபவுதா நாசனியுமாகுங்
கண்டுரைத்த பேரெல்லா மரத்தைக்காமே. (734)

வாய்விளங்கத்தின் பெயர்.

வாய்விளங்கப் பேர்தனையே மருவிக்கேளு
மருவியதோர் வேண்ணுச்சில் விரையுமாகுந்
தாய்விளங்கஞ் சந்து அந்தீசமாகுந்
தயவான தீக்ஷணதண் டுலவுமாகும்
கேய்விளங்கங் கிருமிக்குங் கிருமியாணி
கெடியான யிருகவாக் னியுமாகும்
மாய்விளங்க மாந்தியத்தை மறுக்கின்றேனும்
வண்மையாம் வாய்விளங்கப் பேருமாமே. (735)

வாலுழுவை யரிசியின் பெயர்.

வாலுழுவைப் பேர்தனையே வழுத்தக்கேளு
மகத்தான தேசவதி சோகுவாகுந்
தேலுழுவை தேச்சுவாணி தேசனிதலையாஞ்
செப்பரிய அசுவத்தின் வலக்கலாவாகு
மாலுழுவை மகாசனி செங்கோல்வித்து
மகத்தான சரசோதி வாகுடையாளாகும்
பாலுழுவை சாதக சத்திவாணி
பாடியதோர் வாலுழுவை பண்புமாமே. (736)

சிறு வாலுழுவையின் பெயர்.

சின்னவா லுழுவையின்பேர் செப்பக்கேளு
செயலான கங்குணிசு ஜோதிஷ்பதியாம்
கன்னமாஞ் சுவானுபிலே பீசமாகுங்
கடியலவ னேத்தகந் தூரமழுவுமாகும்
பன்னமாங் கசப்பியா மதிசாக்னியாகும்
பாண்டு தானு சனியாம் விரோசனியுமாகும்
முன்னமாங் கடிவிரண ஆரியாகும்
மூர்க்கமாஞ் சின்னவா லுழுவைப்பேரே. (737)

பெருங்காயத்தின் பெயர்.

பெருங்காயப் பேர்தனையே பேசக்கேளு
பேரான இங்குரா மடமுமாகும்
அருங்காய மதியுக்ரம் சந்துக்கினமுமாகு
மாதாளி பூதனு சனியுமாகும்
சுருங்காயஞ் சூபதூ பனமுமாகுஞ்
சீரணமாங் கேந்தவா கிலமுமாகும்
நருங்காயம் அந்திகுணம் சூலைநாசனியாம்
நாட்டியதோர் பெருங்காய நாமமாமே. (738)

சேங் கோட்டையின் பெயர்.

சேங்கோட்டைப் பேர்தனையே செப்பக்கேளு
செயமாக்கிக் காயத்தைச் சித்தியாக்கி
காங்கோட்டை மூலிகையைக் கருப்புமாக்கி
கடியவல்லாத் திமிருதருஷமாகும்

தாங்கோட்டை தாபனுக் கினியுமாகுந்
தகனஆரிஷக் குரோணிவீர் தருவுமாகும்
ஆங்கோட்டை அக்னிமுவா நாவுமாகும்
அதியமாஞ் சேங்கோட்டைப்பேருமாமே (739)

கங்குட்டத்தின் பேர்.

கங்குட்டப் பேர்தனையே கருதிக்கேளு
காகவா லுகமேன்றுங் கங்குட்டமாகும்
நங்குட்டம் ரங்கநா யகமுமாகும்
நலமான ரேசகமாம் புலகமாகும்
எங்குட்ட மிருத்திய சோதனமுமாகு
மேற்றமாங் காங்குட்ட முமேயாகும்
விங்குட்டம் விளங்கா வாய்விரண
அரியாகு மிச்சமாங் கருங்குட்டப்பேருமாமே. (740)

அரக்கின் பேர.

அரக்காகும் பேர்தனையே அறையக்கேளு
அதிகமாம் பலாசமாம் லாடசாவாகும்
கிரக்கான கிருமி போஷணமுமாகும்
கேடியான திந்ததித் தசியமாகும்
சரக்கான சதக்கினு கண்டூமூலாஞ்
சஞ்சமாஞ் சீதலைத் தகமுமாகும்
புரக்கான பூதசுர நாசினியுமாகும்
பேரான வரக்கினிட பெயருமாமே. (741)

தாளிச பத்திரியின் பேர்.

தாளிசப் பத்திரிக்குப்பேர் சாற்றக்கேளு
சாட்டுவலா கச்சதா பத்ரமாகும்
பாளிசம் பத்ரிதா ளீசமாகும்
பத்ர கேந்தச்சதா மலகியாகும்
நீளிசமா நீஞ்சுகோதா பத்திராட்டியம்
நிச்சயமாஞ் சுவாச காசக்கியாகும்
தேளிசஞ் சிரோவத்தி ரவிசோதனியுமாகுஞ்
செப்பியதோர் தாளிசத்தின் திறமைதானே. (742)

தமாலப் பத்திரியின் பேர்.

தமாலப் பத்திரிக்குப்பேர் சாற்றக்கேளு
சாட்டுவலா கச்சதா பத்திரமாகும்
வமாலதச் சேதனம் வக்கிரமங்கன்
மருவுகின்ற ரோமந்தா பரசங்குவாகும்
புமாலபத் திரிசுவாச காசக்னியாகும்
பெரிதான தீபனமாம் லகுவாதநாசி
சிமாலபத் திரங்கண்டு வஸ்திலவுபசாரி
செப்பியதோர் தமாலபத்திரிச் செய்தியாமே. (743)

சிறுநாகப் பூவின் பேர்.

சிறுநாகப் பூப்பேரைச் செப்பக்கேளு
செயமான ஒமகாஞ் சனமுமாகும்
நருநாகப் புட்பியர்த்த புட்பியாகும்
நாக கேசரமா மூர்க்கமாகும்
தருநாகஞ் சாம்பியம் நாக்கிஞ்சலக்கம்
சாம்பூந்தம் ஆடகம்பீத கேசரமாம்
உறுநாகம் யோகமே சங்கேயாகும்
உரைத்தசிறு நாகப்பூ வுண்மையாமே. (744)

ஏலத்தின் பேர்.

ஏலத்தின் பேர்தனையே யியம்பக்கேளு
ஏற்ற ஏமத்திரவசகா தேவமாகும்
தூலமாஞ் சூடகங் கோலாக்கி
துல்லியாந்திரிபுடா திருதிவேர் துடியுமாகும்
வாலமாம் வச்சிரதேந் தரசமாகும்
வளமான பிரோச்சிய தேசபத்திரி
காலமாங் காரணிகச்ச புடாவுமாகுங்
காரியமா மேலத்தின் கணக்குமாமே. (745)

கிராம்பின் பேர்.

கிராம்பினிட பேர்தனையே கருதக்கேளு
கடலடியின் புட்பமாங் காருக்குளம்பு
திராம்புதே வஞ்சும்மல வங்கமாகுஞ்
சிகரகே வலமாகும் சிவசந்தனப்புட்பமாகும்

வராம்பு வாகிரசம்பம் ஸ்ரீபுட்பமாகும்
வாருற்ற சின்னியா மருவுபரங்கிச்சி
தராம்புதா கசமணிசீ தளமாஞ்சத்தி
சதிரான கிராம்பென்றுஞ் சாற்றலாமே. (746)

சடாமாஞ்சின் பேர்.

சடாமாஞ்சின் பேர்தனையே சாற்றக்கேளு
தபசுவினி சடாமாஞ்சாத் தினியுமாகுந்
தடாமாஞ்சி பிசாசின்றன் னளினமாதா
தாக்கான சடாபூத சடாகிருஷ்ணுவாகும்
புடாமாஞ்சி பூதகே சனியுமாகும்
புகழான பேசிவா சுகையுமாகும்
நடாமாஞ்சி ரத்தபித்த சமனியாகும்
நாட்டினதோர் சடாமாஞ்சி நாமமாமே. (747)

கேந்த மாஞ்சலியின் பேர்.

கேந்தமாஞ் சலியின்பேரைக் கூறக்கேளு
கேந்தமாஞ் சீதுவாம் பூதகோசீ
சந்தமாஞ் சடாசுமிருதா ரோமச்சத்தி
தாகமாங் தோஷத்தி சமனியாகும்
விந்தமாம் விஷவநா சனியுமாகு
மிகுந்த சீதளசத்தி சுகந்தமாட்சி
திந்தமாந் திந்தகிஷா வக்னியாகுஞ்
செப்பியதோர் கேந்தமாஞ் சில்பேராமே. (748)

கோட்டத்தின் பேர்.

கோட்டத்தின் பேர்தனையே கூறக்கேளு
குருதுபலம் பாகசஞ்ச மஞ்சமாகும்
கூட்டமாங் குட்டரோ கக்னியுமாகும்
கிளோவியாதி வாத்தியுவா சீரமாகும்
வாட்டமாம் வாமங்க வுபேரமாகும்
வண்மையாம் பாரிபா வியகமாகும்
தீட்டமாந் திரிதோஷ சமனியாகும்
செப்பியதோர் கோட்டத்தின் பேருமாமே. (749)

மெழுகி ன் பேர்.

மெழுகினிட பேர்தனையே விரும்பிக்கேளு
மேதுவான சித்தகமாம் விகசேசிதக
மழுகினிட மதுசிட்டமது ஷதமுமாகு
மதுசேஷ மதனதது மதுகமாகும்
ஒழுகினிட மாட்சிகா சிரயமாகும்
உருக்கினமா முபகாரி விரணமாகும்
கழுகினிட மெழுகாகும் பேருதன்னைக்
கண்டுரைத்த படியெல்லாங் கருதிப்பாரே. (750)

குங்கிலியத்தின் பேர்.

குங்கிலியத்தின் பேர்தனையே கூறக்கேளு
மொழுமையா மாழச்சுவாலிலைஞ் சாரமாகும்
கிங்கிலிய மதன்காண காரளபமாகுங்
கேடிதாகச் சுவாலிலைஞ் சாதுவாகும்
எங்கிலியும் பாடச தூபாக்னியாகு
மேற்றமாம் நிதியோபம் வல்லபமுமாகும்
விங்கிலியம் விரணகோப சமனியாகு
மிடுக்கான குங்கிலியப் பேருமாமே. (751)

குக்குலின் பேர்.

குக்குலிட பேர்தனையே கூறக்கேளு
குக்குலா காலனிரி யாசமாகும்
கக்குலிட சாடாவாங் கவுசியாகுங்
கனமான தஞ்சிசிவேர் துத்தகோம
மக்குலிட மைசாட்சிபல குஷமுமாகு
மாசற்ற வுருக்கினத்துக் காதியாகும்
சுக்குலிட சூலநா சனியுமாகுஞ்
சூட்சமாங் குக்குலிட நாமமாமே. (752)

குந்திருக்கத்தின் பேர்.

குந்திருக்கப் பேர்தனையே கூறக்கேளு
குருக்காரோ தூமிரபா னீசமாகும்
பிந்திருக்கம் பிண்டோபின்னி யாகமாகும்
பேரான டீட்சணகேந் தஞ்சமாகுந்

துந்துருக்கஞ் சுகந்திபலோ யுதகமாகுஞ்
சூதான சோனிடாட் சசியுமாகு
முந்துருக்க முருந்தபா லிந்தமாகு
முயற்சியாங் குந்திருக்க மூர்க்கலாமே. (753)

கஸ்தூரியின் பேர்.

கஸ்தூரி பேர்தனையே கருதக்கேளு
கானகத்தில் காமிருகங் கோமிருகமாகும்
நத்தூரி நாபிமிரு காண்டமாகும்
நலமான மச்சாரவேத முகரியாச்சு
மத்தூரி மக்கேந்தம் வேணிகாவா
மத்தான கஷேிணியாம் வாச்சனியுமாகும்
வத்தூரி வக்ரசா ரப்பியாகு
மகிழ்ச்சியாங் கஸ்தூரிப் பேருமாமே. (754)

கருப்பு அகரத்தின் பேர்.

கருப்புஅகரப் பேர்தனையே கருதக்கேளு
கனத்தபிர வாங்தோகங்கிரு மித்துவாகும்
குறிப்புக்கிருட்டி னகருசியாம் நேமநாற்
சுகமாதுங் கோவிசுவருபமாங் தகருயோக
மருப்புகு திரிதோஷணங் கலுசினித்தம்
வாதகப அரமாகுஞ் சுருதிநேத்திரம்
நருப்புமாங் கல்லியமாங் குட்டநாசனியாம்
நாட்டியதோர் கருப்பனிட பேருமாமே. (755)

கோரோசனையின் பேர்.

கோரோசனைப் பேர்தனையே கூறக்கேளு
குரோசனப் பீங்கான பீங்காவாகும்
கோரோச கேவுதமி கேவுயுதுவாகுங்
கேவுரிபிண்டா மாமைத்திய ரோசனையாகு
மரோயமங் கினியந்தி திரியாசத்த
மாசற்ற வித்தாரருசி ராஞ்சியுமாகும்
பேரோச பித்தநா சனியுமாகும்
புகழ்கின்ற கோரோசனைப் பேருமாமே. (756)

குங்குமப்பூவின் பேர்.

குங்குமப்பூப் பேர்தனையே கூறக்கேளு
குங்குமமாம் ருதிரமுமாம் ரத்தமுமாகும்
அங்குவப்பூ வண்ணியகிரத் தஞ்சபித்தன்
மழுகாகாலை யிரசாரு பதிலீகஞ்
சங்குமப்பூ சங்கோசம் பிரமபிசுணமாகும்
சயரோக சிரரோக விரணசிதுவாகும்
கங்குமப்பூ காயகாந் திதமுமாகும்
காரியமாம் குங்குமப்பேர் கருதலாமே. (757)

சந்தனத்தின் பேர்.

சந்தனத்தின் பேர்தனையே சாற்றக்கேளு
சாந்தமாங் கெந்தகெந்த சாரஞ்சமாகும்
பந்தனத்தின் மலையசோ பத்ரதிரிவாம்
பாங்கான சுவேதசந்திர காஞ்சமாகும்
நந்தனத்தி னரோதிர போக்யமாகும்
நலமான பத்திசிரி அரிசந்தனமாகும்
சிந்தனத்தின் சீதகாந்தி லர்ப்பணமாகுஞ்
செப்பியதோர் சந்தனத்தின் பேருமாமே. (758)

செஞ் சந்தனத்தின் பேர்.

சேவப்பான சந்தனத்தைச் செப்பக்கேளு
சீதசா ரங்குசந் தனமுமாகும்
புவப்பான ராசிதம்லோகி தாசந்தானம்
பிரமமாம் பீதசந் தனமுமாகும்
பவப்பான பந்திராங் காஞ்சனமுமாகும்
பண்பான நித்திஷ்ட மதுவாதுகீத
மவப்பான மந்தாரம் பாரிசாத
மருவியசெஞ் சந்தனத்தின் மார்க்கமாமே. (759)

சாதிக்காயின் பேர்.

சாதிக்காயின் பேர்தனையே சாற்றக்கேளு
சாதிய லஞ்சாதிச் சியமுமாகு
மாதிக்காய் சாஹூரம்மால் தீபலமாம்
மதசவுண் டஞ்சாதி சூகமமுமாகும்

காதிக்காய் கப்பிலினீ துரைச்சியாகும்
கடுக்காயின் கிரிதான்பல் லழகிஆகும்
சூதிக்காய் கிரக்கணி பித்தனுகுஞ்
செப்பினதோர் சாதிக்காய்ப் பேருமாமே. (760)

சாதி பத்திரியின் பேர்.

சாதிபத்திரிப் பேர்தனையே சாற்றக்கேளு
சாதிகேவு பத்தியின் ரசுவமாகும்
வாதிமத் திரியின்மல காயாயாகும்
வாரிதியோர் குடிச்சிவா சனையாங்கன்னி
தாதுதத் திரியின்சைவ பிரத்தாவாகுஞ்
சாதினீ கபத்திநா சனியுமாகும்
நாய்நத்திரி லாகிரியாஞ் சுக்கிலவிருத்தி
நவுஞ்சாதி பத்திரியி னுடமாமே. (761)

பாக்கின் பேர்.

பாக்கினிட பேர்தனையே பகரக்கேளு
பலசு மிருதம்பூக பலமுமுத்து
சிக்கினிட சிக்கணவக் கணஞ்சமாகுந்
தீபமாம் பல்லுக்கு வெளியுமாகும்
ஆக்கினிட கோண்டரள மழகுமாகும்
ஆக்கைக்கு விரோசனமாம் பித்தமாகும்
கோக்கினிட லட்சுமியின் விலாசமாகும்
நிகரில்லாப் பாக்கினிட நாமமாமே. (762)

தூணி யாங்கிஷத்தின் பேர்.

தூணியாங்கிஷப் பேர்தனையே சொல்லக்கேளு
சுத்தநுவிட நேயமாம் வன்னிசூட்சங்
தாணியாங் கஞ்சாரடி தயிலமீதஞ்
சத்தசோது பலமாஞ் சிரணரோமஞ்
சூணியாங் கஞ்சுபச் சதமாம்ரோமஞ்
சுளுக்கான வெளுப்புடன் சிவப்புபோன்மை
வாணியாங் கபவாத அரங்குட்டநாசனியாம்
வகுத்ததெல்லாந் தூணியங் கபிசறுமாமே. (763)

சேவ்வேள்ளின் பேர்.

சேவ்வேள்ளிப் பேர்தனையே சேப்பக்கேளு
சிறந்தகா லேகமாம் பீதசாரம்
நவ்வள்ளி அமாத்திரியம் பலதுசந்தனமாம்
நலமான அரன்பிரசா தனமுமாகும்
புவ்வள்ளி அமலமாம் பீதவர்னம்
பீதசோ கபசூரம் பித்தபாண்டு
பவ்வள்ளி பார்பதிதான் தீர்த்தமாடிப்
பரந்தசேவ் வள்ளியத்தின் பண்புமாமே. (764)

கடை மருந்து.

பாடினேன் கடைமருந்தின் பண்புதன்னைப்
பரிவாக வறுபத்து நாலுமாகும்
மூடினேன் முத்துப்போல் பேருக்கிக்கோத்தேன்
மூடனுக்குந் தேரியவேன்று மோழிதப்பாமல்
தேடினே னின்னதேன்று ஆர்க்குக்கிட்டேந்
தேர்ந்திடவே கடைச்சரக்கை எடுத்துரைத்தேன்
நீடினே னிகண்டுக்துள் நேர்மையாக
நேர்ப்பாகச் சோன்னபடி நினைவாய்ப்பாரே. (765)

பார்த்திட்ட சுக்கினுற் சருவரோகம்
பண்பான மிளகுக்குவாத நாசனியாம்
ஏர்த்திட்ட திப்பிலிதான் சிலேத்துமத்துக்காதி
எளிதான மூலந்தான் சுரத்துக்காதி
கார்த்திட்ட கரியனுட திப்பிலியினலே
கனமான சன்னிதனக் காதியாகுஞ்
சேர்த்திட்ட சேவ்வியந்தான் திமிருக்காதி
சித்திர மூலந்தனக்குச் சுரங்கள்போமே. (766)

போமேதான் கருத்திருக்குங் கோடிவேலிக்கி
பேரான சூதந்தான் கட்டிப்போகும்
ஆமேதா னேமமது அக்கினியுண்டாக்கும்
ஆண்மையாம் புளிதன்னு லுப்புக்கட்டுங்

கோமேதான் கோறுக்காயின் புளிதனக்குக்
 கூர்மையாம் வெடியுப்புக் கட்டிப்போகுந்
தேமேதான் சீரகந்தான் பித்தத்தையறுக்குஞ்
 சிறந்தகருஞ் சீறந்தகருஞ் சீரகத்துக்கிருமிபோமே. (767)

போமென்ற சதகுப்பை யுதரவாதம்போம்
 புகழ்கின்ற கானகத்தின் சதகுப்பைதன்னால்
கோமென்ற குட்டங்கள் கடிகள்போகுங்
 குணமான வெந்தயந்தா னெரிவுபோக்கும்
தேமென்ற கொத்துமல்லி சிலேத்துமத்தையறுக்குஞ்
 சிறப்பான வசம்புதான் கிராவணத்துக்காதி
காமென்ற கடுக்காய்த்தண்டி கற்பமாகுங்
 கருதியதோர் நெல்லிக்கா யூஷ்ணம்போமே. (768)

நெல்லியோடு தான்றிக்காய் சுவாசம்போக்கும
 நேரான கடுகுக்குச் சூலைபோகும்
வில்லியோடு வெண்கடுகு குட்டம்போகு
 மீறினதோர் மஞ்சளது மந்தம்போகு
மல்லியதோர் மரமஞ்சள் சுவாசத்தையறுக்கு
 மயக்கியதோ ரதிவிடயங் கிராணிபோக்குங்
கல்லியதோர் கடுகுரோ கணியினாலே
 களிம்பற்று மலம்நெகிழ்ச்சி யாகும்பாரே. (769)

பாரென்ற மஞ்சிட்டிரத்த பித்தஞ்சாடும்
 பகரமாஞ் சிறுதேக்கு வாதசுரம்போக்குங்
கோரென்ற சிச்சிலியின் கிழங்குதன்னால்
 கேடியான தலைவலிதான் சாடிப்போகுங்
காரென்ற கற்கடகச் சிங்கிதானுங்
 கடுப்பான அதிசாரங் கட்டிப்போகு
மாரென்ற அதிமதுரந் தோஷத்தையறுக்கு
 மார்க்கமாங் கார்போக ஆண்மைகேளே. (770)

கேளப்பா விஷங்குட்டம் நாசமாகுங்
 கேடியான அரத்தைக்குச் சுவாசம்போக்கும்
வாளப்பா வாய்விளங்கம் புழுக்கள்மாயும்
 வாலுழுவை யரிசிக்குக் குட்டந்தீருங்

தேளப்பா சிறியவா லுழுவையென்றால்
சிறப்பான தயிலத்திற் கெந்திகட்டும்
நீளப்பா பெருங்காயந் தீபனமுண்டாக்கும்
நெடிதான் சேங்கோட்டைக் கடிவிஷங்கள்போமே.

விஷந்தீருங் கருங்குட்ட விரணந்தீரு
மேதுவான வரக்குக்கு அத்திசுரம்போகும்
விஷம்போகுந் தாளிசபத்திரி தனக்கு
மேலிரப் சிலேத்துமமும் சுவாசம்போகும்
விஷம்போகும் தமாலபத் திரிதனக்கு
மிகைப்பினமாஞ் சிலேத்துமமுஞ் சுரமும்போகும்
விஷம்போகு மேலுந்தான் தினவுபோகும்
வேகமாங் கிராம்பினுட மேன்மைகேளே. (772)

மேன்மையாஞ் சுரங்களோடு சன்னிதோஷ
மிடுக்கான வதிசாரம் பித்தம்போகும்
வேன்மையாஞ் சிறுநாகப் பூதனக்கு
வெறிப்பான பித்தமோடு வாதந்தீருந்
தான்மையாஞ் சடாமாஞ்சில் மேகத்தையறுக்குந்
தனிக்கெந்த மாஞ்சிலிதா னீரைக்கட்டுங்
கோன்மையாங் கோட்டமது தாபம்நீங்குங்
கெடியான மெழுகாலே விரணம்போமே. (773)

விரணம்போங் குங்கிலியங் குக்கலுக்கு
மீறியதோர் சூலைபோங் குந்திருக்கம்
திரணம்போந் தலைவலி பீனிசங்கள்போகுஞ்
சுவேதமாங் கூகைநீர் பிரமியங்கள்போகுங்
கரணமாங் கத்தூரி ராசவசியங்கருப்பு
அகரவென் பதுவாதத் தைப்போக்குங்
குரணமாங் கோரோசினைதானுள் விரணம்போக்குங்
குங்குமப்பூச் சிரசில்நிற்கும் வாதம்போமே. (774)

வாதமாஞ் சந்தனந்தா னாஷ்டினத்தைத்தீர்க்கு
மருவியதோர் சிவப்பான சந்தனந்தாண்
நீதமாந் தாகத்தைப் போக்குவிக்கு
பேரான சாதிக்காய் வலுவுண்டாகும்

பாதந்தான் பத்திரிக்குப் பரவுஞ்சுக்கு
பாக்குத்தான் பல்லுக்கு ஒளிகொடுக்கும்
வேகந்தான் தூளியங்கள் வெள்ளைக்கட்டு
மிரண்டுகேவ் வாளியந்தான் மூச்சுப்போமே. (775)

போமென்ற கடைமருந்தின் குணங்களெல்லாம்
பிரித்துவெவ் வேருய்ப் பேராய்ச்சொன்னேன்
ஆமென்ற கடைமருந்து பிலன்கள்செய்ய
அதிற்கொடுக்குங் குருபற்ப ஆண்மைகேளு
பாமென்ற மரும்மாண்ட மஞ்சுக்குள்ளே
பருத்த வேப்பிலைதான் பாதிப்போட்டு
நாமென்ற நல்லதண்ணீர் கலந்தான்வார்த்தி
நாட்டியே யடுப்பேற்றி யெரித்திடாயே. (776)

எரித்துமே யறுசாமம் போங்காமற்று
னீரெட்டுக் கொன்ருகக் காய்ச்சிக்கொண்டு
அரித்துமே ஐந்தையுந்தான் வடிகட்டிக்கொண்டு
அடிகனத்த பருஞ்சட்டிக் குள்ளேவார்த்து
கரித்துமே மூன்றுதரந் தெளிவிறுத்துக்
கருத்துடனே சட்டிவாய்ச் சீலைசெய்து
பிரித்துமே யடுப்பேற்றித் தீபம்போலப்
பேராக நீர்வற்ற யெரித்திடாயே. (777)

எரித்திடவே சூதமது குருவுமாகும்
இதமாக வழித்தெடுத்துக் கல்வத்திட்டு
விரித்திடவே வேப்பிலையின் கியாழத்தாலாட்டி
வில்லைபண்ணி அப்பிலாஞ் சாம்பற்குள்ளே
பிரித்திடவே புதுஅகலில் வைத்துமூடி
பிலக்கவே மண்செய்து காயவைத்து
நரித்திடவே நாற்படதெரு வடுக்கிபிபோடு
நலமான குருவாகும் நயந்துபாரே. (778)

பாரென்ற குருவெடுத்து நவலோகத்தூட்டப்
பரிவாக மாற்றைர்து காணுங்காணும்
நேரென்ற விக்குருவை கடைமருந்திற்சேர்த்து
நிரைதானும் பணவிடைதா னுள்ளேகொள்ளு

நாரென்ற நோயெல்லாந் தவிடுபொடியாகும்
நோக்கவிந்து பத்தியமா யுளளேகொள்ள
காரென்ற காயசித்தி கடிதிலாகுங்
கடைமருந்தின் தேப்பையினி கருதிக்கேளே. (779)

கடைமருந்தின் தொகுப்பு.

கேளப்பா சுக்கினேடு மிளகோடொக்கக்
கேடியான திப்பிலியுந் திப்பிலிமூலம்
ஆளப்பா ஆனைத்திப் பிலியுமாகும்
அழகான செவ்வியமாஞ் சித்திரமூலங்
காளப்பா கருங்கோடு வேலியினேடொக்கக்
தனத்தசம தாகமோடு புளியுமாகுங்
கோளப்பா கோறுக்கையின் புளியினேடு
குணமான சீரகமுங் கருஞ்சீரகமுமாமே. (780)

ஆமென்ற சதகுப்பை காட்டுசதகுப்பை
அதீதமாம் வெந்தயமுங் கோத்துமல்லி
வாமென்ற வசம்போடு கடுக்காய்நெல்லி
மகத்தான தான்றிக்காய் கடுகுதானும்
வேமென்ற வெண்கடுகு மஞ்சள்மரமஞ்சள்
மிடையான அதிவிடையங் கடுகுரோகணிபு
மாமென்ற மஞ்சிஷ்டி சிறிதேக்கோடு
மகத்தான கிச்சிலியின் கிழங்குமாமே. (781)

கிழங்மோடு கற்கடகச் சிங்கிதானுங்
குளிர்ச்சியாம் அதிமதுரங் கார்போகவித்து
அழங்கோடு அரத்தைதான் வாய்ளிளங்கம்
ஆண்மையாம் வாலுழுவை யரிசியாகுங்
திளங்கோடு சின்னவா லுழுவைகாயஞ்
சேங்கோட்டை கங்குட்ட மரக்குமாகுங்
தளங்சோடு தாளிசபத்திரி தானேன்ப
தமால பத்திரியோடு சிறுநாகப்பூவே. (782)

நாகப்பூ யேலமாங் கிரும்புசடமாஞ்சி
நற்கேந்த மாஞ்சிலோடு மேழுகுகோஷ்டங்
கூகப்பூ குங்கிலியங் குந்திருக்கங்குக்கில்
கூகைநீர் கஸ்தூரி கருப்புக்காயாகும்

பாகோடு கோரோசினை குங்குமப்பூவோடு
பாரமாஞ் சாதிக்காய் யிருதேவதாரம்
சாக சாதிப்பத்திரி பாக்குத்தானுந்
தனித்தூணி பிசினியாம் சேவ்வள்ளியாமே. (783)

ஆமென்ற கடைமருத்தின் றேதுப்பைசான்னே
னறுபத்து நாலினுட பெயரைச்சோன்னேன்
கோமென்ற குருபற்ப முறையைச்சோன்னேன்
கோடுக்கின்ற வயணமோடு குணமுஞ்சோன்னேன்
காமென்ற காயகித்திக் கடுத்தமூலி
கலந்துநின்ற பெயரையேல்லாங் கருவாய்க்கேளு
தேமென்ற சிவகாமி சோல்லக்கேட்டு
சேப்பினேன் வடமோழியைத் திறந்துதானே. (784)

மூலிகையின் வகுப்பு சீந்திலின்பெயர்.

சீந்திலுட்ப் பெயர்தனையே சேப்பக்கேளு
திறமான சேஞ்சியா வமுர்தவல்லி
கூந்தலேன்ற குண்டலியா விசலியாதாடக்
குணமாசை வேரற்று சோமவல்லி
வீந்திலேன்ற சின்னருகஞ் சிவந்தியாகும்
விருதலதா பை தேவ னிறமிதாகும்
வாந்திமது பரனவிசலி யாகுமாகு
மருவியதோர் சீந்திலுட மார்க்கமாமே. (785)

மருளின் பெயர்.

மருளினுடப் பெயர்தனையே வமுத்தக்கேளு
மஞ்சியரக் கக்குரியான் மலைக்குஞ்சாரஞ்
சரளான தான்கட்டுச் சாரையான
தணப்பியதோர் வீரியண்ண சனப்புக்குஞ்ச
முரளினுட முருவா மதுரசாதேவி
முனிவான தனுசோணி மோரடாவான்
திரளினுட சிறுபாணி சீருற்றபாணி
சேப்பியதோர் மருளினுடச் சேயலுமாமே. (786)

சிறுகாஞ்சோறியின் பெயர்.

சிறுகாஞ்சோறிப் பெயர்தனையே செப்பக்கேளு
சுணைச்சியாப் பிரசோவாமி வாசிவாகுங்
குருகாத னெங்தோபால் புத்தரோகங்
குண்மையாங் தூரா மூலாசமாகுங்
கருகாத கண்டகமுததி ராரந்தகாட்சி
யாந்துயர் வாதக மூலமாகுஞ்
சுருகாத சுவாச காசக்கினியாகுஞ்
செப்பியதோர் காஞ்சோறியின் றிறமுமாமே. (787)

பெருங்காஞ் சோறியின் பெயர்.

பெருங்காஞ் சோறிப்பெயரைப் புகலக்கேளு
பெருமையாங் தம்பிர மூலியாகுங்
துருகவே தூராம்ப மயனமாகும்
பெருஞ்சுணச்சி தூரகதமாம் பாசமாகும்
அருங்கயவா சனமது பரிசனுகு
மடங்காத தாகனு சனியுமாகும்
உருங்கவே யோகஉத்தி பித்தசுசசமணியாம்
உரைத்தபெருங் காரியுட வண்மேயாமே. (788)

ஆடா தோடையின் பெயர்.

ஆடாதோடைப் பெயரை யறியக்கேளு
அழகான வாசாவாஞ் சிங்கபாணி
வீடாத விரஷவா சாசமாகு
மேன்மையாஞ் சிங்கிகா வாடயூஷா
பீடாத சிங்கிடுகி பிந்துமாதா
பெரும்பித்த சிலேத்தும அக்கினியுமாகுஞ்
சாடாத க்ஷேயருற்ற சுத்திசுரசமணிசமாசமா
மாடாதே ரடைத் தண்மையாமே. (789)

கருங்காலின் பெயர்.

கருங்காலி தன்பேபரைக் கருதக்கேளு
தண்டகியால் பத்திரா சனமுமாகும்
நருங்காலி ரத்தசா ரச்சமாகும்
நலமான காயத்திரிதந்த தாவணியாங்

தருங்காலி குஷ்டக்கினி சிங்கசல்லியமாங்
 தாங்கியதோர் ரோமவிருட்சக் குடிலகண்டகமாம்
உருங்காலி மோகவிருட்சங் கசப்பியாகும்
 உண்மையாங் கருங்காலி மூர்க்கமாமே. (790)

வெண் கருங்காலின் பெயர்.

வெண்கருங் காலிப்பேர் விளம்பக்கேளு
 மிகையான சோம்வலக் கலமுமாகும்
இண்கரும் நிதித்துருஞ் சுவேதசார
 மிடுக்கமாங் காரமாங் குசுண்டமாகும்
குண்கருங்குங் பந்தககோ ருணர்வாசங்
 கோடிதான சமிவிருட்ச சோமசாரங்
கண்கருங் கதிரச வேதசாஸ்திர
 கருமான வெண்கருங் காலின்பேராமே. (791)

வேம்பின் பெயர்.

வேம்பினுடப் பெயர்களையே விரும்பிக்கேளு
 மிடுக்கான பிசுமந்தம் நிம்பவாகும்
ஆம்பான அரிஷ்டமாஞ் சருதோபத்திரி
 அழகான பிரபத்திரம் பாரிபத்திரமாங்
தாம்புய மனேயவ னேஷ்டமாகுஞ்
 சாகாத மூலிதான் பழங்காயாகும்
தாம்பான சுத்தித்த சூதபற்பம் தத்தமாம்
 தத்தமாம வேம்பினுட தூய்மையாமே. (792)

பெரிய வேம்பின் பெயர்.

பெரிய வேம்பின்பெயரைப் பேசக்கேளு
 பெருமையுள்ள மகானிம்பர் மிருத்திரோகங்
கரியவிஷ முஷ்டிகா காண்டமாகுங்
 கரோமியசோஷரமே வசம்புமாகுங்
கரியதோர் கெஜபுஷ்பின் கரிகோநிம்பாங்
 கேடியான ரத்தச்ச வாகையாகுங்
தரியதோர் சத்தபரி யாயமாகுஞ்
 சாற்றியதோர் பெருவேம்பின் றண்மையாமே. (793)

நில வேம்பின் பெயர்.

நிலவேம்பின் பெயர்தனையே நிகழ்த்தக்கேளு
நித்தார கோஷாச்சா கண்டதித்தங்
கிலவேம்பு கிராதித் தமமுமாகுங்
கிரார்த்தகமாம் பூனிம்பர் சாதிதீர்த்தங்
கலவேம்பு கயிராதோ யேமசனமாகுங்
கட்சிமா நிம்பாகு ராமசேனமாகுங்
குலவேம்பு சிலேஷ்மாதி சோபக்கினியாகுங்
குணமான நிலவேம்பின் கூறதாமே. (794)

சர்க்கரை வேம்பின் பெயர்.

சர்க்கரை வேம்பின்பெயரைச் சாற்றக்கேளு
தாதுமற்ற வண்டியாஞ் சிதானிம்பாவாம்
அக்கரமா மலையதுவுஞ் சர்க்கரைபோற்காணும்
அழகான நிம்பிச்சி மதுரவல்லி
துக்கரையாஞ் சூதமது சணத்தில்கட்டுஞ்
சீறியதோர் நாகத்தை யமர்த்திக்கோல்லும்
உக்கரையாங் காயத்தை உகாந்தவரையிருத்தும்
உண்மையாஞ் சர்க்கரை வேம்புருதியாமே. (795)

கோரைக் கிழகின் பெயர்.

கோரை கிழகின்பெயரை கூறக்கே
குருவித்தகனே ராசிக் கெருகமாகும்
நாதேயங் கண்ட முத்தாசியாம்
நலமான மம்புதா முத்தாவாகும்
வாரையுட வராஸ்தாகாங் கேயமாகு
மகத்தான பித்தசூணு சனியுமாகுங்
தாரையட சிலேத்துமத்தின் சனியுமாகுஞ்
சாற்றினதோர் கோரையுட தக்மையாமே. (796)

பற்பாடகத்தின் பெயர்.

பற்பாடகப் பெயர்தனையே பகரக்கேளு
பற்படி கோத்த மகண்டகமுமாகும்
நற்படிக வந்தித்தோ னரைதிரையுமில்லா
னலமான சீதப்பிரிய சூட்சுபத்திரி

திற்பட்க திரிஷணக்கி நாபாஞ்சமாகும்
திரிதோஷ மகராச வேணுமாகுஞ்
சிற்படகச் சீதனச த்தியாகுஞ்சிறங்
திட்ட பற்படகத்திறமையாமே. (797)

வெட்டி வேரின் பெயர்.

வெட்டிவேர் பெயர்தினையே விளம்பக்கேளு
வெறியா இமிருபோம் வாரீகேசாம்
உட்டிவே ருதிச்சியம்வா தஞ்சலமாம்
உற்பனமாம் வாரிதோரஞ் சுமாகும்
வட்டிவேர் வாதுகஞ் சலமுமாகும்
வாங்திசுரத் தாகனு சனியுமாகும்
சட்டிவேர் கண்டுகுஷ் விசர்த்தியாகுங்
காரியாம் வெட்டிவேர் கணக்குமாமே. (798)

இலாமிச்ச வேரின் பெயர்.

இலாமிச்சம் வேர்தனையே யியம்பக்கேளு
ஏற்றமாம் உசிரமாமபை யஞ்சேவியம்
நலாம்பிச்சம் நாதசலசய முமாகும்
நலச்சமா மீரளமலகு மூலம்
அலாம்பிச்சம் அவதான முதிர்ச்சியாகும்
அதாவெட்ட காபதே கசிரவச்சிரம்
பிலாமிச்சம் பிங்கமானஞ் சகாஞ்சம்
பெருமையா மிலாமிச்சம் பேருமாமே. (799)

பேய்ப்புடலின் பெயர்.

பேய்ப்புட்லின் பெயர்தனையே பேசக்கேளு
பிரோத்தபாண்டுட் கருச்சத்தியாகும்
பாய்ப்புடல் பாண்டுபல குலகமாகும்
பான்மையாங் கேளுசி சந்தனமுமாகும்
காய்ப்புடல் கடுதித்தகாச்சக முமாகுங்
கசப்பான ராசவர்ன மிருதபலியாகுங்
தாய்ப்புடல் தாகபித்த சமனியாகுஞ்
சமரசமாம் பேய்ப்புடலின் றண்மையாமே. (800)

வட்டத்திருப்பியின் பெயர்.

வட்டத்திருப்பிப் பெயரை வழுதக்கேளு
வரிதித்தர பாடிலா மாலபத்திரி
அட்டமாம் அம்பஷ்ட யஷ்டபாடாவன
தித்தாவார் தேவிதிரி கூராசாம்
நிட்டமாம் நிராதேவி திரிவற்சோவாம்
நேர்மூலனி தரியாம் பாபசேதி
சுட்டமாஞ் சுராதிசா ரக்கியாகுஞ்
செப்பியதோர் வட்டத்திருப்பிச் செயலுமாமே. (801)

குமிளின் பெயர்.

குமிளினுடைப் பெயர்தனையே கூறக்கேளு
குமுதாஸ்த கடபலசோம வலகச்சம்
வமிளினுட மகாகும்பா வகும்பிசமாகு
மாசற்ற பத்திரா பத்திரவதியாகுஞ்
சிமினிடை சிரிபரணி குலமேகாதி
துஷ்டமா கிரகணி பாண்டுரோமா
அமனினுட வாக்கினி கபங்கள்நாசனியா
மறிந்துரைக்குங் குமினினுட வாண்மையாமே.

பெருங்குமிளின் பெயர்

பெருங்குமிளின் பெயர்தனையே புகலக்கேளு
பெருமையாம் பம்மாரி சருவதோபத்திரா
பருங்குமிளி பதுபரணி காஸ்மரியாகும்
பத்திராவதி சோமவால் காக்கும்பிக்
கருங்குமிளி கார்கிருஷ்ணர் வந்திகாவராங்கி
கனமான மகாரம்பா கட்பலாவாகும்
திருங்குமிளி சிறுபரணி கெம்பாரியாகுஞ்
செயலான பெருங்குமிளின் சேதியாமே. (803)

தேவாரத்தின் பெயர்.

தேவாரத்தின் பெயர்தனையே செப்பக்கேளு
தேவதா ரஞ்சுமிரு தேரதாருவாகுந்
தாவசா ரங்காக சலமுமாகுஞ்
சமரகுந் தயவான சிகாந்தரவாகும்

பாவதா பத்திரதா பிந்ததாரு
பத்திரமாந் தாருவுந்திர தாருமாகும்
பூவதா யூதிகாஷ்டமு மாகும்
பெருமையாம் தேவதாரப் பெயருமாமே. (804)

பேய்ப்புல்லின் பெயர்.

பேய்ப்புல்லின் பெயர்தனையே பேசக்கேளு
பூதலத்தி லககந்திரி குணஞ்சமாகுங்
காய்ப்புல்லு கடுஷணஞ்ச பூதிகம்ரோசி
காரமாம் விஷத்திரணு துவியாம்கந்தி
மாய்ப்புல்லுங் கம்பமா முரம்பமாகு
மாசற்ற விருத்துரோகஞ் சனமுமாகும்
வேய்ப்புல்லு விழுதிசூ லக்கினியாகும்
விளம்பியதோர் பேய்ப்புல்லின் விபரமாமே. (805)

வேளையின் பெயர்.

வேளையுடப் பெயர்தனையே விரும்பிக்கேளு
வெண்மையாம் பாஷாண பந்தனியாகும்
காளையுட் கட்டச்சி மாங்காளியாகுங்
கருதியதோர் பிராகேந்தா வாஸ்தாவாகும்
ஊளையுட வுலுவாச கேந்தியாகும்
உறுதியாம் பற்பரி கரப்பன்காதில்
தாளையுட சுரசபிருத வாதபூதனியாஞ்
சமரசமாம் வேளையுட் தண்மையாமே. (806)

பிரஸ்னிபரணியின் பெயர்.

பிரஸ்னி பரணிப்பெயரைப் புகலக்கேளு
பிரஸ்னியென்ற பரணியாம் பிரதஸ்பரணி
கரஸ்னியாங் கலசீதா ரக்கிராவாகு
கால்திரண லாங்கூலி யெனலேயாகும்
கோரோஸ்னியாங் குரோஸ்டகபு காசிகாவாகுங்
கிருமியோரு சுவாசகா கக்கினியாகுங்
துரஸ்னியாங் தோணுதச் சனியாகுஞ்
சொல்லியதோர் பிரஸ்பரணி செயலுமாமே. (807)

கண்டங்கத்திரியின் பெயர்.

கண்டங்கத்திரி பெயர்தனையே கருதக்கேளு
கண்டங்காரிப் பரத்தின் பஞ்சாவாகும்
பிண்டகா பிரவதினி தித்திகாவாம்
பிரசோதி னிராஷ்டிகா காரளிகாவாகுந்
திண்டகா சிங்கினிஸ் காத்திவிருக்கி
செப்பரிய வார்த்தாகி கண்டரிவாகு
மூண்டகாசு வாசகா சக்கினியாகு
முயர்க்கண்டங் கத்திரியின் மூர்க்கமாமே. (808)

சிறுவழுதலையின் பெயர்.

சிறுவழு தலைப்பெயரைச் செப்பக்கேளு
செழுமையாம் பிரகதியாங் கூலிசிங்கி
பெரிதான பண்டாகி பெருமுத்திரிகாலாம்
பெருமையாந் தித்தகா ருஷ்டிகெற்சி
வறுமையாம் வார்த்தாகி துஷ்பிரதச்சணியா
மாதினியா கசிரிகா தாலவாகுங்
கருதியாங் காந்தவிஷா தாமகந்தி
கங்சுஷ்மாஞ் சிறுவழுதல் கருத்திதாமே. (809)

பெருவழுதலையின் பெயர்.

பெரியவழு தலைப்பெயரைப் பேசக்கேளு
பெருமையா மூலசா மூலனுவாங்
குரியவே கெற்பாச்சன் வார்த்ததாச
கூடவார் தாகினி திசமுமாகுஞ்
சரியவே சண்டகெற்பிரியாங் காமுமாகுஞ்
சாத்தரிய லட்சுண கெந்திரதூதிசஞ்
சூரியவே சுனலேதே காண்டகாரி
சூட்சமாம் பெரியவழு தலையுமாமே. (810)

வில்வத்தின் பெயர்.

வில்வத்தின் பெயர்தனையே விருப்பிக்கேளு
வில்வகற் கடநீல மலிகமாகும்
வல்லவாத சாரபீத பலமாகு
மகத்தான விருதிகேந்தகசா பலியுமாகும்

சொல்லியதோர் வனமூலி யிதற்குப்பேராஞ்
சிரேஷ்டமா மருந்திற்கு ஆதியாகும்
கில்லிகீரே லூஷ்ணமாங் கேந்தகற்பம்
கேடியகூ வளையினீன் கீர்த்தியாமே. (811)

முன்னையின் பெயர்.

முன்னையிட பேர்தனையே மொழியக்கேளு
மூர்க்கமா மக்கிமந்தோ க்கியாகு
மன்னையா மந்தான தக்காரியாகும்
வண்ணிமங் தோரணிவை சந்தியாகும்
தின்னையாஞ் சிறுபரனி கேந்தபத்திரஞ்
செழுமையாங் கேந்திவிருட் சோகமாகும்
குன்னையாஞ் சித்திராக்கினிநர் மாணியாகும்
குரியான முன்னைப்பேர் கூறலாமே. (812)

கழற்கொடியின் பேர்தனையே கருதக்கேளு
காலவிருங் திப்பாடலோத் தாரவாகும்
குழக்கொடியாங் கும்பிகா தாம்பிரபுஷ்பி
கூரான சாரிவசந்தநூ திச்சமாகும்
பழக்கொடியாம் பாடலார்சேதித்தாவாம்
பாங்கான கோபக்கிதமா ருதியுமாகுஞ்
சுழக்கொடியாஞ் சோபநா சனியுமாகுஞ்
சொல்லுதரத்த நாமெல்லாங்கழற் கொடியுமாமே. ()

வெள்ளையாங் கழற்கொடியின் விபரம்கேளு
வெளுப்பியாஞ் சுவேதகிற தோஷமாகுங்
கள்ளையாம் காஷ்டாவாங்கப் பாடலாகுங்
கடியதோர் சாசைவஞ்சு வேதகும்பி
துள்ளையாங் குளோரமுட்சி பலப்பாழாகும்
கோடிதான கிஞ்சிகோபக் குருதுவாகும்
பள்ளையாம் வெள்ளைக்கழற் கொடியின்பேரைப்
பகர்ந்துரைத்த நாமமெல்லாம் பண்பாய்ப்பாரே. ()

கோட்டையாங் கரந்தைப் பேயர் கூறக்கேளு
குணமான சிரவணிமுண் மணியுமாகும்
பிட்டையாம் பீட்சுரி வேண்சீஷமாகும்
புத்திரசீதா பரியபிரா சித்தாவாகும்

தட்டையாந் தனியாது ரோசனிதாவாகுந்
தமனியமாம் புஷ்பகோரித் தாருவாகும்
கிட்டையாங் கிரந்தினி சமனியாகும்
கேடியான கரந்தையிட கீர்த்தியாமே. (815)

நாறுகின்ற காந்தையிட நாமங்கேளு
நாகரீக மானசுகந் தினியுமாகும்
தேறுகிற வாசனையாம் குளத்திதானுஞ்
சிவன்முடிமே லிருக்கின்ற செல்விதானும்
தாறுகின்ற மாசித்த கன்னியாகுந்
தாக்கான பரிமளிதான் தாகநாசனியாம்
பேறுகின்ற போக்கமா மூலச்சியாகும்
பெருமையாம் நாறுகின்ற கரந்தையாமே. (816)

நன்னாரிப் பெயர்தனையே நாட்டக்கேளு
நாறுகின்ற காரியா கோபவல்லி
கன்னாரி கன்னியா கிருஷ்ணவல்லி
காசுமரி பத்திரசந் தனியுமாகுஞ்
சின்னாரி சிங்கார தோஷியாகுஞ்
சிரரோக நாசனியா மதுளியாகும்
பொன்னாரி காளபுட்ப முமேயாகும்
பெருமையாம் நன்னாரிப் பேருமாமே. (817)

பேய்ப்பீர்க்குப் பேர்தனையே புகலக்கேளு
பேச்சியாந் தேவதா ளீசமாகும்
காய்ப்பீர்க்கு கார்கிதி கசப்பியாகுங்
கடியவிஷ ஆவேணி சந்திரகாயாங்
திப்பீர்க்குத் திலர்தத்துக் குறுதியாகுஞ்
செயங்கொண்ட வேகத்தின் னுக்காயாகு
மாய்ப்பீர்க்கு வாதரோ கரியுமாகு
மருவியதோர் நாமமெல்லாம் பேய்ப்பீர்க்காமே. (818)

தின்னுகிற பீர்க்கினிட திறமைகேளு
தீக்காயா மிருதங்க பலமுமாகும்
கோன்னுகோ சாத்யமாம் கிருதசித்திரக்குணங்
கடைந்த சூரியனை யறியப்பண்ணி

மன்னுமகா சாலினிபீத புட்பிவக்கிரந்
தந்தா மார்க்க மலினவல்லி
உன்னுகின்ற பீர்க்கினிட நாமமெல்லா
முறுதியாய்க் கண்டறிந்து உரைசெய்தேனே. (819)

பழுபாகற் பெயர்தனையே பகரக்கேளு
மங்கமாம் கற்கோடா டகியுமாகு
மங்கமாம் காசா லினியுமாகு
மகத்தான நாகதம னியமுமாகும்
வேங்கமாம் விஷவாத நாசனியுமாகு
மிடுக்கான நாகத்துக் குருவேயாணி
மங்கமாம் பழுபாகல் நாமத்திற்கு
வகுத்தறிந்த நாமமிது வண்மையாமே. (820)

முள்வெள்ளரியின் பேர்.

முள்வெள்ளரிப் பேர்தனையே மொழியக்கேளு
மூர்க்கனுங் கடுசுந்து யுசம்புரோதம்
தள்வேள் ளரித்தாவணி மூத்திரபாலா
தாக்கடா பீசமகம் பித்தநாசம்
கள்வெள்ளரிக் காரீயச் செந்தூரியாகும்
கன்மூத்திரக் கிரீச்சனத்துக் காதியானேன்
நின்வெள்ளரிப் பெயருதன்னை நிறுத்தியல்லோ
நிச்சயமாய்ப் பார்த்தறிந்து நிகழ்த்தினேமே. (821)

நிலவுகாய்ப்பேரின்பேர்.

நிலவுகாய்ப் பேர்தனையே நிகழ்த்தக்கேளு
நிச்சயமாய் சத்துக்குக் காலன்காலன்
உலவுகா யுருக்கினத்திற் காதியானேன்
உத்தமமாம் விரைத்தயில ரோகசமனியாகும்
அலவுகா ஆவதற்கே துண்டாகினி
யழகான ரத்தபுட் பழமேயாகும்
நலவுகாய்ச் சாமரங் காரியாகும்
நாட்டியதோர் பேரெல்லாம் நிலவுகாய்க்கே. (822)

வெள்ளைக் கிலுகிலுப்பையின் பேர்.

வெள்ளையென்ற கிலுகிலுப்பை விபரங்கேளு
மிடுக்கான புட்பிரச தித்தாவாகும்
வெள்ளையென்ற வாமியாம் கப்பித்தானும்
வெருவியதோர் பஞ்சபட்சி வாசியாகும்
உள்ளையென்ற உருக்குக்குக் குடோரியாகு
மோங்கியதோர் நாகத்தி னுயர்பெந்தத்தி
தள்ளையென்ற விஷகரிகுஷ்ட நாசனியாஞ்
சாற்றியதோர் கிலுகிலுப்பை நாமமாமே. (823)

கோவையின்பேர்.

கோவையிட பேர்தனையே கூறக்கேளு
குவட்டினுரு கன்னியாங் குருணலயனுய்மத்தி
மாவைமண மழுங்கியமாதாம் புரத்தியாகு
மதுபக்குகடு மதுப்பிபோத நாசனியாம்
ஆவையண லயவல்லி அதரம்பழத்தி
அடங்காத கடுதும்பி மகாசிராவி
பூவைசூத கத்தியாம் வெள்ளைப்பூவி
பேரான காமமெல்லாங் கோவைப்பேரே. (824)

தித்திப்புக்கோவையின்பேர்.

தித்திப்புக் கோவைப்பேர் செப்பக்கேளு
சீரான பிம்பிதான் ரத்தபாலா
துத்திப்புத் துண்டியாங் கோயிலாவாங்
துயமான ஒஷ்டாம்பம்பலம் கோபமாகும்
அத்திப்புச் சூதபங் தனியுமாகு
மழகான தாம்பிர வல்லியாகு
முத்திக்கச் செம்பியா மதூரியாகு
மூதண்ட தித்திப்புக் கோவையாமே. (825)

கொன்றையின்பேர்.

கொண்ணையிட பேர்தனையே கூறக்கேளு
கொடிதான கன்னிகை ராசவிருட்சம்
அண்ணைசிரு தமாலிகை ஆரோக்யசிம்பி
ஆர்க்குவதங் தீர்க்கவே பலமுமாகும்

தண்ணைசது ரங்குளம் தீர்க்கமூலி
சம்புவக்கு பொற்சாமங் கடுக்கையாகும்
பண்ணாட முடியீசன் கோடிமுடிசமாகும்
பாடியதோர் பேரெல்லாங் கொண்ணையாமே. (826)

எலிச்செவியின்பேர்.

எலிச்செவியின் பேர்தனையே யியம்பக்கேளு
ஏற்றமாந் தீரவந்தி சம்பரியாகும்
நிலிசசெவி நியக்குரோத மூஷிகாயாம்
நேமியாம் புத்திரிசி யேணியாகும்
அலிச்செவி ஆகுக்க றணியுமாகு
மழகான பிரமேகசட ரோக்கியமாகும்
பலிச்செவி ப்ரட்டையாங்கிருமி நாசனியாம்
பாடியதோர் நாமமெல்லா மெலிச்செவிக்கே. (827)

சதிரக்கள்ளியின் பேர்.

சதிரக்கள்ளி யின்பேரைச் சாற்றக்கேளு
சதுர்முக வேதியா முள்ளுச்சூலி
அதிரதுத் தன்னியமகா விருட்சமாகு
மடங்காத கரத்திதான் ரசபத்திரமாகும்
கதிரமாம் கண்டீர வச்சிரதுண்டம்
கனமுனியாம் கூடச்சித் திரியுமாகும்
வதிரமாம் வாதாக்கினி கடூரியாகும்
வழுத்தியதோர் பேரெல்லாஞ் சதுரக்கள்ளிக்கே. (828)

சிவதையின் பேர்

சிவதையிட பேர்தனையே செப்பக்கேளு
சியாமத்திரி வரணுசிரா மதுராவாகும்
பிவதையாங் கோலாபம்பித லாபமாகும்
பேரான சங்ரகா ளிந்தியாகும்
கவதையாங் காலமே ஷியமுமாகும்
கசப்பான திருவிருதாநீல கோபியாகும்
விவதையாம் விரோசனி பீலிக்கினியாகும்
விளம்பியதோர் பேரெல்லாஞ் சிவதையாமே. (829)

நாயுருவியின் பேர்.

நாயுருவிப் பேர்தனையே நாட்டக்கேளு
நலமான அபாமார்க்கங் கேசரியாகும்
தீயுருவி சிலகாரஞ் சிவந்தநாயிருமாஞ்
சேரமணிக் கருதுதான் பிரத்தியபுற்பம்
காயுருவிக் கடுந்தணல் கார்த்தியாகும்
கரபிப்பிலி சிகரிதுச் சிரமுமாகும்
தாயுருவிக் காரத்தில் காரந்தானுஞ்
சாற்றியதோர் நாயுருவிப் பேருமாமே. (830)

செப்புச்சதுரக்கள்ளியின் பேர்.

செவந்தசதுரக் கள்ளிப்பேரைச் செப்பக்கேளு
திண்டிர ராட் சசிவந்த பாலியாகும்
கவத்தான கத்தினில் வாசியாகுங்
கடியதோர் சதுர்முகன் ரத்தபாலி
மவத்தமாம் பாஷாணத் தூபம்போக்கி
மருவியதோர் நாகத்தைப் பேதமாக்கி
சிவத்ததோர் கண்டகி தானுமாகும்
சிவந்த சதுரக்கள்ளி நாமமாமே. (831)

சாரணையின் பேர்.

சாரணையின் பேர்தனையே சாற்றக்கேளு
தளுக்கான விருட்சிவாய்த் திரமுமாகும்
வாரணையாம் வருஷாபூசு வேதமாகு
மகத்தான கடிலகம் தீர்க்கபத்திரம்
வீரணையாம் விசாகியாம் ரத்தவிருத்தி
மிடுக்கான பிளகாரி புனுனவியாகும்
பூரணையாம் பூகிபத் திரமுமாகும்
பேரான சாரணையின் பேருமாமே. (832)

மூக்குரட்டையின் பேர்.

மூக்குரட்டைப் பேர்தனையே மொழியக்கேளு
மூர்க்கமாம் புரணவஞ்சு வேதபத்திரம்
நாக்கிரமா மூலாட்டி னுடிகாவாம்
நலமான வருஷாபூ விரோசனுவாம்

தாக்கிரமாங் தத்தாரு மண்டலாத்திரமாகும்
தயங்காத வருஷகே துச்சமாகும்
யூக்கமாம் பூரித்தியசூல நாசனியாம்
யுவரான மூக்குரட்டைப் பேருமாமே. (833)

செம்முள்ளியின் பேர்.

செம்முள்ளிப் பேர்தனையே செப்பக்கேளு
செயமான சயிரியஞ் சகசமாகும்
அம்முள்ளி பிதானிரத் தாணியாகு
மடுக்கான பீதகாண் டகமுமாகும்
கும்முள்ளி குரவக மிருதமாகுங்
கோடிதான போதனு வாக்கியாகும்
வம்முள்ளி வாதரோக சமனியாகும்
வகுத்துரைத்த செம்முள்ளிப் பேருமாமே. (834)

சிற்றுமுட்டியின் பேர்.

சிற்றுமுட்டிப் பேர்தனையே செப்பக்கேளு
சிரேயாவாங் காதாவத்திய புட்பிரமாம்
பத்தமாம் பலாசாதி பலாவுமாகும்
பனிகான விருடியபி ரோத்தாவாகும்
இத்தமா மிருசிய கேந்தாசைவபூரி
யேற்றமா மாத்தபித்த அரியுமாகுஞ்
சத்தமா மட்சியஅரி தோஷாக்கினியாகுஞ்
சாற்றியதோர் சிற்றுமுட்டிப் பேருமாமே. (835)

பேராமுட்டியின் பெயர்.

பேராமுட்டிப் பேர்தனையே பேசக்கேளு
பேரான மகாபலா வருஷபுட்பத்
தாராமுட்டி தாவத்தியலி காசுமிருதாஞ்
சகதேவி சகபிதா பீதபுட்பி
ஏராமுட்டி யிருதுபலாய் சூட்சயோகவல்லி
யேளிதான வத்திரசுர மிருத்துரோசி
ஆராமுட்டி சுங்கத்தின் தாகம்போக்கி
ஆண்மையாம் பேராமுட்டி நாமமாமே. (836)

பாலையின் பேர்.

பாலையிட பேர்தனையே பகரக்கேளு
பண்பான சீவந்தி சிவனியாகு
மாலையா மங்களியஞ் சிவர்த்தனியா
மதயாசஞ் சாகசிரேஷ் டமுமாகும்
தாலையாஞ் சோகலே சிரிங்கிவிர்த்தி
சஞ்சீவ கரணியங் குலவிவிஷயஞ்
சாலையாஞ் சருவதோ ஷாக்னியாகுஞ்
சாற்றியதோ பேரெல்லாம் பாலையாமே. (837)

திருநாமப் பாலையின் பேர்.

திருநாமப் பாலையின்பே ரறையக்கேளு
சீரான யிருசுவாங் கபசாவாகும்
குருநாமப் பயசியாகூச் சீர்ஷமாகுங்
குணமான சிரங்கரடி மதுரோவாகும்
அருநாமஞ் சிவதாசு வர்க்கபுட்ப
மழகுகேடு காமாலையத் திசுரநாசி
பெருநாசி பவீத்ரோக சமனியாகும்
பெருமையாம் திருநாமப் பாலைப்பேரே. (838)

குடசப்பாலையின் பெயர்.

குடசப்பாலை யின்பேரைக் கூறக்கேளு
குடசோவாம் விரசகங்கும் போவச்சம்
கிடசமாம் கிரிமல்லி மல்லிகாபுட்பி
கீர்த்தியாம் இட்சுவிருட் சாடமாகும்
கடசமாம் கைத்தித்த காஷாவிருட்சம்
கனத்தாதி சாரவிஷ நாசமாகும்
பிடசமாஞ் சீதளாதி ருஷ்ணுதிசாரி
பேசியதோர் குடசப்பாலைப் பெருமாமே. (839)

விஷபாலையின் பெயர்.

விஷபாலை பேர்தனையே விரும்பிக்கேளு
வேகமாம் பலானித சினேந்திரநாசன்
குஷபாலை குளங்கத்தா வற்சகனும்
கூரான பீசானி ரோத்தபத்திரா

கஷ்பாலை கலிங்கச்ச சுபத்திரமாகும்
கரேமாம் திரிதோஷசமனியாகும்
துஷபாலை துன்னும்பா சூலாக்கினியாகுஞ்
சொல்லியதோர் விஷபாலை பேருமாமே. (840)

பழமுண்ணி பாலையின் பெயர்.

பழமுண்ணி பாலையின்பேர் பகரக்கேளு
பலாத்தியட்ச மடக்கந்தம் பிரியதரிசனமாம்
நிழபாலை ராசாதனம் க்ஷீரசுக்கிரம்
நிசாதனம் வானப் பிரியமாகுஞ்
சழமாலை சாகாமிரு கலகப்பிரியமாகுஞ்
சயமான சிடசீரி காடசத்திரி
கிழபாலை சிலேஷ்மவதி காரியாகுஞ்
செப்பியதோர் பழமுண்ணி பாலையாமே. (841)

நறிப்பயறின் பேர்.

நரிப்பயறின் பேர்தனையே நவிலக்கேளு
நலமான சார்வரிச தபத்திரியாம்
இரிப்பயறு இந்திர ரவியுமாகு
மிருசியப் பிரோத்தாதி பிந்திரமாகும்
கரிப்பயறு தகண்டசக வீரியாடி
கனமான வெகுபுத்திரி சையுமாகு
மரிப்பயறு மகாபுருஷ வதந்தாச
மருவியதோர் நரிப்பயறின் மார்க்கமாமே. (842)

முதியார் கூந்தலின் பேர்.

முதியார்கூந் தலின்பேரை மொழியக்கேளு
முதுந்துபிர சாரினி சுப்பிரசாரஞ்
சதியான சாரசேர் சாரலோச்ச
சாருவர்ணி ராசவலா பத்திரபர்ணி
பதியான பதாகிலா வீரியசோஷணி
பகந்தர விரணகுஷ்ட அரியுமாகும்
நிதியான வுபயுத்தா நிலாக்கினத்தி
நேர்முதியார் கூந்தலிட நேர்மையாமே. (843)

### வெள்ளையா மணக்கின் பேர்.

வெள்ளையா மணக்கினிட விபரம்கேளு
வெண்மையா மேரண்டஞ் சதுரசுக்கிலம்
திள்ளையாஞ் சித்திரகேந்தருவ அத்தஞ்
சிறிதான ஆமண்டோ தீர்க்கமண்டலம்
பிள்ளையாம் பிடமபச்சோரு பகச்சமாகும்
பெருமையாம் தருநேரவியாக்ர பர்னகமாம்
உள்ளையாம் உருக்குக்கு மித்திரமாகு
மோங்கியதோ ராமணக்கின் பேருமாமே. (844)

### சிவப்பா மணக்கின் பேர்.

சிவந்தவா மணக்கின்பேர் சொல்லக்கேளு
சிவப்பியாம் ரத்தவே ரண்டமாகு
மவத்தான மகாபஞ்சாங்குல சமிர்தமாகு
மகாபத்திரி அத்தியா மாதியாகும்
உவத்தான உருபகம் ருத்திரன்பத்திரம்
ஒளியான லிங்கத்தி னுயர்பேந்தத்தி
சுவத்தான சூலாத விருத்தியாகுஞ்
சொன்ன சிவந்த வாமணக்கின் சுரூபமாமே. (845)

### மாதளையின் பேர்.

மாதளையின் பேர்தனையே வழுத்தக்கேளு
மகத்தான தாடிமங்குட் டினமுமாகுஞ்
சாதளையாஞ் சடிபஞ்சு வாதுதம்மி
லம்சதக்கான ரத்தபித்த பீசகமுமாகுஞ்
சூதளையாஞ் சுக்கிலேஷ்டஞ் சுகவல்லபமாகுஞ்
சுடரான அரோசிகநா சனியுமாகும்
பூதளையா ருண்டகிற் புட்டியாகும்
பேரான மாதளையின் பேருமாமே. (846)

### கொம்மட்டி மாதளையின் பேர்.

கொம்மட்டி மாதளையின்பேர் கூறக்கேளு
கெடியான கேசரிபல பூரமாகும்
பம்மட்டி புரப்புரோத்தம் மருகற்கடியம்
பரிவான பீசபூ ரணமுமாகும்

மம்மட்டி மதுப்பரணி வர்த்தமானமுமாகு
மகாபல மாதுலங் கமமுமாகுஞ்
சம்மட்டி சத்திஅரோசிக நாணியாகுஞ்
சாற்றியகோம் மட்டிமா தளையின்பேரே. (847)

விளாவின் பேர்.

விளாவினிட பேர்தனையே விரும்பிக்கேளு
மிடுக்கானகபி தேத்தந்தி கந்துவாமே
துளாவினிட கிராகிபலசுகந் தகமுமாகுஞ்
சூதானஅட சாமுத்தி பலமுமாகும்
திளாவினிட சிற்பாகிகஷப் பிரிவுமாகுஞ்
சீரான சுவாசகா சாக்னிபோக்கி
வளாவினிட வாசனிதாக நாசனியாகும்
வகுத்துரைத்த நாமமெல்லாம் விளாவின்பேரே. (848)

சர்க்கரையின் பேர்.

சர்க்கரையின் பேர்தனையே சாற்றக்கேளு
சறகரோ தாதுமது சியண்டியாகுஞ்
சிற்கரை யதிதசததி ராசியாகுஞ்
சியமான சுப்புராசி தாபலாவாம்
விற்கரைத்த பீத்தாக் கினியுமாகும்
விதிதான மதுராச்சி தாகசனியாம்
உற்கரை உருக்கது மித்திரமுமாகு
மோங்கியதோர் சர்க்கரையின் பேருமாமே. (849)

கரும்பின் பெயர்.

கரும்பினிட பேர்தனையே கருதக்கேளு
கற்சடா கவஞ்சா இட்சுவாகும்
பரும்பான பவுண்டிற்க மரசாளாகும்
பதமான வேணுகி சகமுமாகும்
அரும்பான அன்னீய தங்கமாளிசியம்
அழகான திட்சுயோ ரிட்சுவாகும்
திரும்பான திட்சுரட் சாளிகாடாஞ்
செப்பியதோர் கரும்பினிட செயலுமாமே. (850)

வெள்ளைக்கரும்பின் பெயர்.

வெள்ளையாங் கரும்பினிட விபரங்கேளு
வேளுப்பான காகச்சி யாகாகாண்டம்
கள்ளையாம் காகேட்சி தானுமாகும்
கடிதான இட்சுவாம் குட்சுரகாண்டஞ்
சள்ளையாஞ் சட்சைவேர் கூவேயாகுஞ்
சதிரான அதிச்சவ விஞ்ஞேயாவாம்
பிள்ளையாம் அம்வீரிய காரியாகும்
பேசியதோர் வெண்கரும்பின் பேருமாமே. (851)

அமுக்கராவின் பெயர்.

அமுக்கராவின் பேர்தனையே அறையக்கேளு
அசுவகேந்தா வாசியாங் கேந்தாவாகும்
வமுக்கரா வராக அக்ரணிவாசியாம்
வரிசுபிர தாகம்பு தானுகாவாங்
துமுக்கரா துற்கியாம் பாரிசாதா
துயமான சுபாவல்லி பலாபலியாங்
தமுக்கரா தாவியதா ணுபரியாகுஞ்
சாற்றியதோ ரமுக்கராப் பேருமாமே. (852)

பிரமியின் பெயர்

பிரமியுட குணப்பெயரைப் பேசக்கேளு
பேரான சாதளா சத்சாரா
பரமியாம் பகுபேதா சற்மகாசா
பண்பான விமலாம லாளாவாகுங்
திரமியாஞ் செருதனில் சிறுக்கியாகுஞ்
சியமான உதிரமல நாசனியாகுங்
கரமியாம் பெருத்தசம் பிராணியாகுங்
காட்டியதோர் பிரமியுடப் பெயருமாமே. (853)

பூனைக்காஞ் சொரியின் பெயர்

பூனைக்காஞ் சொரிப்பேர் பேசக்கேளு
பேரான மற்கடிதூ ரவிக்கிரங்
கானையாங் கட்சுரா பிரசுப்பிரியங்
கடிதான அருஷபிகு புத்தாவாஞ்

சானைக்காங் கரஞ்சுலோ கண்டுரோசகு
சண்ட மற்கடியுந் தானுமாகுந்
தானைக்காந் துட்டப்பிராண ஞசனியாகுஞ்
சாற்றியதோர் பூனைக்காஞ் சோரிப்பேரே. (854)

பூனைக்காலின் பெயர்.

பூனைக்கா லிப்பேரை புகலக்கேளு
பேரான மற்கடியு வாத்துமபுத்தாங்
கானைக்கா கண்டுராகபி கச்சுராவாங்
கடிதாக காமத்தை களையப்பண்ணி
நானைக்கா கண்டுகரி ரத்தபித்தாணி
நலத்ததோர் விருஷ்ண அரி வாதனுசன்
சூனைக்காஞ் சுக்கிலத்தை விருத்தியாக்கி
சொல்லிய பூனைக்காலிப் பேருமாமே. (855)

சிறுபூனையின் பெயர்

சிறுபூனைப் பேர்தனையே செப்பக்கேளு
செயமான பாஷாணப் பேதியாகுஞ்
சறுபூனை சங்கிசிலாபே தாசுமபேதஞ்
சைவோப பேத்ததுன வம்பியாகும்
நறுபூனை நாகத்தின் சத்துருவேயாகும்
நலமான வுப்புசத்தை நாசமாக்கிச்
சுறுபூனைத் திரிதோஷ யரியுமாகுஞ்
செப்பியதோர் பேரெல்லாஞ் சிறுபூனைக்காமே. (856)

பெருங்குமிழின் பெயர்.

பெருங்குமிழின் பேர்தனையே பேசக்கேளு
பேரான பம்மாரி சருவதோபத்திரா
கருங்குமிழி காசுமரி பதுபறணியாங்
காபத்திரா வதிசோம வலக்காவாகுங்
குருங்குமிழி கும்பிகா குணஷ்ணவந்தி
குமுதபத்திர மகாரம்பா கடபலாவான்
திருங்குமிழி சிறுபரணி பத்திரபறணி
சீரான பெருங்குமிழி னுமமாமே. (857)

மந்தாரையின் பெயர்.

மந்தாரைப் பெயர்தனையே வழுத்தக்கேளு
மகத்தான கோவியதா ரோதகுத்தா
தந்தாரை தாமிரபுற பீசமாகுந்
தரித்ததோர் மகாயமன பத்திரமாகுங்
குந்தாரை ரோகனு மிரிகாவாகும்
ருகமாங் கஷாயசிய தீர்த்தமாகுங்
கெந்தாரை கண்டமால விரணம்போக்கி
கிரியதோர் மந்தாரைக் கீர்த்தியாமே. (858)

கோக்கிறகின் பெயர்.

கோக்கிறகு மந்தாரை கூறக்கேளு
கூரான காஞ்சினிபடு வறணஞ்சி
அக்கிறகு அயிமவதி யேமதுத்தா
அழகான பேர்னகெற்பி சுவர்ணக்ஷீரி
மக்கிறகு யிமாவதி யேமகாரி
மாசற்ற தித்தாச காஞ்சனியாகும்
பக்கிறகு பால்ஆட கத்தியாகும்
பரவியதோர் கோக்கிறகின் பேருமாமே. (859)

அழிஞ்சிலின் பெயர்.

அழிஞ்சிலென்ற பேரினுட ஆண்மைகேளு
ஆதியா மங்கோலங் தெரிசினியாகும்
பொழிஞ்சிலென்ற போகுனல்வித் தூணியாகும்
புகழான சீவினி யிந்திரசாலி
கொழிஞ்சிலென்ற கோலினிற நிஷ்டோவாகுங்
கூரான தீர்க்கமூ லகமுமாகும்
பிழிஞ்சிலென்ற பித்தசத்தாம் பிரபலமாகும்
பேசியதோர் அழிஞ்சிலுடப் பேருமாமே. (860)

பாகலின் பெயர்.

பாகலுடப் பெயர்தனையே பகரக்கேளு
பழுப்பான கெந்திரகாண் டகடுகோலாம்
வேகலென்ற வெஞ்சனுங் கடுனுபாசம்
விளக்கமாங் காரவல்லி சோமவல்லி

ஊகலென்ற பாஷாண ஊரல்போக்கி
உண்மையாங் காதுணம் உண்பனவாகுந்
தூகலென்ற தூஷசோப னுவுமாகுஞ்
சொல்லியதோர் பாகலுட சூட்சமாமே. (861)

காட்டாத்தியின் பெயர்.

காட்டாத்திப் பேர்தனையே கருதக்கேளு
காச்சாத்திர ஆசுமந்த கஸ்துவாகுங்
கோட்டாத்திக் குசவிசா மிலக்கபத்திரங்
குணமான தோயாஞ் சுபத்திரமாகுஞ்
சாட்டாத்தி தாத்திகடு ருஷணைசங்
கடிதான அதிசார சாந்தியாகு
மூட்டாத்தி மூலசலர் சயமுமாகு
முயற்சியாங் காட்டாத்தி னுமமாமே. (862)

சாளஞ்சோதி விருட்சத்தின் பெயர்.

சாளத்தின் பேர்தனையே சாற்றக்கேளு
சாளமாஞ் சினேகிதா நுசமுமாகும்
ஊளமாம் யூதிகரஸ் டமுமேயாகும்
ஒளிவான தீபவிருட் சமுமேயாகு
மாளமா மாரீச பத்திரமுமாகு
மகத்தான பீத்ததரு மோதியாகுஞ்
சூளமாஞ் சோதிவிருட் சமுமேயாகுஞ்
சொல்லியதோர் சோதிவிருட்சப் பேருமாமே. (863)

முசு முசுக்கையின் பெயர்.

முசுமுசுக்கைப் பேர்தனையே மொழியக்கேளு
முதுங்தேயு வாலுகமா லூகமாகும்
அசுஅசுக்கை அரியின்வா லூகமாகும்
அழகான பச்சைநிலக் கொடியுமாகுந்
துசுதுசுக்கைச் சுணையானக் கொடியுமாகுஞ்
சுணையான ரெத்தனிறப் பழமுமாகும்
பிசுபிசுக்கைப் பித்தனு சனியுமாகும்
பேரான முசுமுசுக்கைப் பேருமாமே. (864)

ஏழிலைப் புன்னையின் பேயர்.

ஏழிலைப் புன்னுடைய யேற்றங்கேளு
யேத்தமாஞ் சகலசத்தப் பரணியுமாகுஞ்
சுழிலமாஞ் சுத்திலப் பரணியாகுஞ்
சுபரணிதாச புத்தச்ச குச்சமாகுந்
தழிலையாஞ் சாலமலி பத்திரமுமாகுந்
தாவான புஸ்தபலைத்த மனேயிருத்தி
திழிலையாந் திரிதோஷ சமனியாகுஞ்
செப்பியதோர் யேழிலைபுன்னை ஞமமாமே. (865)

கீழாநெல்லியின் பெயர்.

கீழாநெல் லிப்பேரைக் கிளரக்கேளு
கிளர்ச்சியாந் தமாலகா தமரளீதி
மாழாதமா லந்துமா லினியர்மாதா
மலகிதிச வித்வேஷ மாகும்பாரு
பேழாத பெருபுத்திராதர பலாவாம்
பெருமையாம் பூதாத்திரி பெருவிரியகாவாங்
காழாத காமாலை நிவர்த்தியாகுங்
காட்சியாங் கீழாநெல்லிக் கணக்குமாமே. (866)

கருங்கொள்ளின் பெயர்.

கருங்கொள்ளின் பேர்தனையே கருதக்கேளு
கடிதான சடச்சியங்க சாதவுமாகுந்
திருங்கொள்ளு சிவப்பிரோத்தா குளிர்திகாவாந்
தேவான குலாலிலோ வச்சதாவாங்
குருங்கொள்ளு குலிலேச குலுத்திகாவாங்
குலுத்திகாயிவாப் பிரோத்தத்தனேத்தி பூஷணியாங்
திருங்கொள்ளு சிந்ததியோசி தாசமியமாகுஞ்
செப்பியதோர் கருங்கொள்ளின் செயலுமாமே. (867)

தேத்தான் கொட்டையின் பெயர்.

தேத்தான்கொட் டைப்பேரைச் சேப்பக்கேளு
தெளிவான ததகமா மேந்திளீயுந்
தாத்தான தயிலவாரிப் பிரசாதனமாந்
தண்ணீரையுஞ் சேறையுந் தான்வேராக்கி

ஊத்தான உடலினீர் முத்தாளாகும்
உயர்கின்ற னேத்திரரோ காக்கினியாகு
மாத்தான தீபங் திருஷ்ணமேக
மருவியதோர் தேத்தினுட மரபுமாமே. (868)

தகரையின் பேயர்.

தகரையுடப் பேர்தனையே சாற்றக்கேளு
சக்கிரமத் ததத்துவே கேசதத்தாம்
புகரையாம் பிரபுன்னுட தாவரமாகும்
பேரான பலாவரதே தூடகமாகுங்
குகரையாங் கேசோள சேபக்கினமாசுங்
குபக்கினஞ்சஞ் சாவாமே வர்னமாகும்
பகரையாங் குஷ்டனு சனியுமாகும்
பாடியதோர் பண்பேல்லாங் தகரையாமே. (869)

ஊமத்தையின் பேயர்.

ஊமத்தைப் பேர்தனையே யுரைக்கக்கேளு
உகையான தூத்தூர கஸ்துதோவாங்
தூமத்தைத் தூத்துரோ தேவதாளி
துன்மத்த காமதன மாதுலாவாங்
காமத்தைக் காஞ்சனு வயமுமாகுங்
கண்டுவிர ணுபதங் காஞ்சனியாங்
தேமத்தைச் சேம்பிச்சிலா கிரிச்சியாகுஞ்
சேப்பியதோர் ஊமத்தைச் சேயலுமாமே. (870)

சேவகனுர் கிழங்கின் பேயர்.

சேவகனுர் கிழங்கின்பேர் சேப்பக்கேளு
சேயமான கலிகாலி தாதுவாகும்
வாகவனுர் வாரினீ விகலாகேற்பம்
வாதினீ லாகலி யக்கினியாகு
மாவகனுர்த் தசாடேட்சிபுட் டீகமார்க்கி
மகத்தான கேர்ப்பாத கினியுமாகுங்
காவகனுர் காகனு சனியுமாகுங்
கனவிஷஞ் சேவகனுர் கிழங்குமாமே. (871)

கரியாலங்கண்ணின் பெயர்.

கரியாலங் கண்ணின்பேர் கருதக்கேளு
கனப்பிருங்க பிருங்கார சகமுமாகும்
அரிஆலத் திருமாலின் கண்ணனுகும்
ஆர்க்கவே பிருங்கயே வசமுமாகுந்
திரிசால கேசரஞ் சனமுமாகுந்
திரிபுரத்தைத் தீயிட்டோன் மைந்தனுகும்
வரிசாலே வதனமாம் பூடுமோகு
மாசற்ற சரியாலங் கண்ணியாமே. (872)

பொற்றலேக் கையாந்தகரையின் பெயர்.

பொற்றலேக்கை யாந்தகரைப் புகலக்கேளு
பொர்ப்பூவிச செங்தூரத் தாதியானுள்
சிற்றலேவல்லியாஞ் செங்கோடி சீதானுகுஞ்
சேர்ந்துநின்ற வாசனியாம்பொன் னிறச்சியாகும்
நற்றலேதேவி யாஞ்சிவந்தகரி சாலேயாகும்
நாறுகின்ற தேகத்திகர்ப் பத்தியாகுங்
கற்றலேச் செம்பிச்சிக காயசித்தி
கனமான பொற்றலேயின் காட்சியாமே. (873)

எருக்கின் பெயர்.

எருக்கினுடப் பெயர்தனேயே யியம்பக்கேளு
யேகயிட்சி காசுகலாவி க்ஷீரம்
பருக்கினுட பாணுசதா புஷ்பமாகும்
பரிதியாஞ் சூரியானஞ் சீரமாகுஞ்
சருக்கினுடச் சம்பல க்ஷீரப்பிரனே
சிசாலேப் போடபாலேக் காரவீகி
திருக்கினுட கிருமினு சனியுமாகுஞ்
செப்பியதோ ரெருக்கினுடச் செயலுமாமே. (874)

வெள்ளெருக்கின் பெயர்.

வெள்ளெருக்குப் பேர்தனேயே விரும்பிக்கேளு
மேலான ராசார்க்கவச ரோப்பியமாகு
மள்ளெருக்கு மந்தார கெணபதிதூப
மாசற்ற சதாபுஷ்பி யோகாஷ்டீல

திள்ளெருக்கு சுவேததுசு மோபியாகுந்
தீர்க்கபுஷ்பச் சதாபுஷ்பி தானுமாகும்
பள்ளெருக்குப் பாசுபதா சைகாஷ்டீலா
பாடியதோர் வெள்ளெருக்குப் பண்புமாமே. (875)

மணித்தக்காளியின் பெயர்.

மணத்தக்கா ளியின்பேரைவழுத்தக்கேளு
மகத்தான காகமா சீயுமாகுந்
குணத்தக்கா ளிக்குட்டி தக்காளியாகுந்
கூரான தணலாத்திப் பாலனேக்காத்தாள்
கணத்தக்காளி காகசிகு வாசவாகுந்
கடுரசத்தி நிறமான பழத்தியாகும்
பணத்தக் காளீசுர ஞசியாகும்
பண்பான மணத்தக்காளிப் பேருமாமே. (876)

கருந்தக்காளியின் பெயர்.

கருந்தக்காளிப் பேரைக் கருதக்கேளு
கருங்காக மாசிகா சாதுவாகு
மருந்தக்காளி காமாத்திரா சமூலமாகு
மகத்தான சலாதுவாச மாகியாகுந்
குருந்தக்கா ளிக்குஷ்டக் கினிப்பலாவாந்
கூரான கற்பகமா ரிசாவாகுந்
துருந்தக்கா ளிச்சூதத்தை பேந்தம்பண்ணி
சொல்லியதோர் பேரெல்லாங் கருந்தக்காளிக்கே. ()

குண்டுமேணியின் பெயர்.

குண்டுமணி தன்பேரை கூறக்கேளு
குறித்த சூடாமணி சீதபாகி
கண்டுமணி கருத்தநிற மலச்சியாகுந்
கடியசேங் குன்றிதான் மலைக்குருவியாகும்
நிண்டுமணி நிரத்தக்கண் காரியாகும்
நேரான நஞ்சிச்சி வெளுப்பியாகும்
உண்டுமேணி உச்சாடன் தாகுஞ்சாவாம்
ஓங்கியதோர் குண்டுமேணி உண்மையாமே. (878)

பெரியமுள்ளிங்கியின் பெயர்.

பெரியமுள் ளங்கிப்பேர் புகலக்கேளு
பேரான மூலகஞ் சகமுமாகும்
அரணியஞ்ச பத்திகா சாரமேஷம்
அரிதான நீலகண்ட மகாகண்டமாகும்
உரியருசி யஸ்திதங் தகமுமாகும்
உக்கிரமா மூலகஞ் சூதனுசன்
திரியதித் தோஷனு சீக்கிரவீரணு
செப்பியதோர் பெரியமுள் ளங்கியாமே. (879)

சின்னமுள்ளங்கின் பெயர்.

சின்னமுள் ளங்கிப்பேர் செப்பக்கேளு
செந்தசா ணுக்கியமா மூலகஞ்சாணு
சன்னசா லேயமாம் ருசமமாகுஞ்
சமனுன சுரோதமகடு கம்மிகிரா
வின்னவிஷ் ணுக்குப்புத்தமா மதந்தா
விளக்கான ஆடகமா மூலந்தித்த
முன்னமுத் திரகிருஷ்ண சனியுமாகு
மூதண்டச் சின்னமுள் ளங்கியாமே. (880)

ஆத்துமுள்ளங்கியின் பெயர்.

ஆத்துமுள் ளங்கியுட ஆண்மைகேளு
அழகான அமூத்தமூலகஞ் சானியாகும்
நீத்துனிற திஷ்டந்த வசங்கசிதுவாம்
நேரான தேகமது கஞ்சுவேத
மாத்துமச்ச ஞகாகங் தகமுமாகு
மருவியதோர்க் காரிய தோஷம்போக்கி
சேத்துமக் கேந்தியதைச் சுத்தியாக்கிச்
சீரியதோர் ஆத்துமுள் ளங்கியாமே. (881)

முருங்கையின் பெயர்.

முருங்கையுடப் பேர்தனையே மொழியக்கேளு
முனிவான சிக்குரு அரிதசாகஞ்
இருங்கையாம் நிதிகோமல் மூலகமாகும்
எழிலான அவடஞ்சக்கிர மொத்தஞ்சியா

மிருங்கையாம் பீரோத்த மூலபரணி
மூர்க்கமாங் கடுதிசோ ஷணமுமாகும்
அருங்கையாம் விஷதோஷக் கினமுமாகும்
அறிந்துரைத்த ஞமமெல்லா முருங்கையாமே. (882)

புனல்முருங்கை காட்டுமுருங்கை கசப்பு முருங்கையின் பெயர்.

காட்டினுட முருங்கைப்பேர் கருதக்கேளு
கனமான மதுசிக்குரு கிருஷ்ணகெந்தா
பாட்டினுட சிக்குருபகுள வல்லபமாம்
பவளத்துவ மதிஷ்ணகெந் தத்தித்தாவாஞ்
சீட்டினுட சுவேதகசுவேத மருசோவாஞ்
சிராஞத்த பஞ்சன சுமிர்தமாகும்
நாட்டினுட ஞகந்தை ஞசமாக்கி
நாட்டியதோர் புனல்முருங்கை ஞமமாமே. (883)

துளசியின் பெயர்.

துளசியுடப் பேர்தனையே சொல்லக்கேளு
சுரசந்து கிருஷ்ண சக்கிரபாணி
நளசிசுமஞ் சரிபூதப் பிரியாஞகை
மதாசுரங் கெந்தபுஷ்ப பத்திரி
சுளகிராட் சகிகெவுரி சுராதியாகுஞ்
சுயமான பூதக்கினியுத மஞ்சரியாங்
தெளசிவெகு மஞ்சரிதேவ துந்துமியாஞ்
செப்பியதோர் பேரெல்லாந் துளசியாமே. (884)

கருந்துளசியின் பெயர்.

கருந்துளசி பேர்தனையே கருதக்கேளு
கனமான திவைகுண்டங் குடோரிவஸ்து
குருந்துளாய் க்ஷீத்திரபர ஞதிகெந்த
தாகிருஷ்ணர்ச் சகாளாமால் காரளாகி
மருந்துளாய் மாலுக்கு கிருஷ்ணமாலு
மகத்தான செம்பீரக்கா பத்திரச்சும்
தெரிந்துளாய்ச் செந்தூரத் தாதியான
சிறப்பான கருந்துளசிப் பேருமாமே. (885)

நீர்த் திப்பிலியின் பெயர்.

நீர்த்திப் பிலிப்பேரை நிகழ்த்தக்கேளு
நேர்ந்த சல்லிப்பி லியமிவாகும்
தார்ப்பிசா ரதாதோயப் பிலியாகுந்
தண்மைமது சியாதனீமது சிரகேந்தா
வாப்பிலாங் கலீசகுலா தினியாகும்
நலமான சவப்பிப்பிலி காதித்தாவா
மாப்பியாங் கபவாதனு சனியாகு
மருவியதோர் சலப்பிப்பிலி மார்க்கமாமே. (886)

வெள்ளுள்ளின் பெயர்.

வெள்ளுள்ளி தன்னுடைய விபரங்கேளு
மேதினிக்குள் ரசோனுல சுனேலிஷ்டோம
மள்ளுள்ளி மதுகியகேந்தங் கௌஷதமாங்
காகந்தோர் சோனேர்தியாகுங் கிரஞ்சங்
தள்ளுள்ளி ரசோனேமி சோருட்சாவாகுந்
தளுக்கான குலமார்ச்சக்ஷி யந்தியாகுந்
திள்ளுள்ளித் திபத்திரமாஞ் சனியுமாகுஞ்
செப்பியதோர் வெள்ளுள்ளிச் செயலுமாமே. (887)

ஈருள்ளியின் பெயர்.

ஈருள்ளிப் பேர்தனையே யியம்பக்கேளு
ஏத்தமாம் பலானடு யேட்சமாகுந்
தூருள்ளி சுகந்தோமுகத் தூஷணமாகுஞ்
சுத்தியா மாசோனு பலண்டுமாகுந்
தாருள்ளித் தாக்காமத்த சுமிர்தமாகுந்
தளுக்கான பலாண்டுஸேத்து குணச்சனியோபி
மாருள்ளி மதுக்காமங் கடிகரோபி
மகத்தான யீருள்ளி மாற்கமாமே. (888)

நோச்சிலியின் பெயர்.

நோச்சிலுடப் பேர்தனையே னுகரக்கேளு
னேயதான் சித்துவா சுமிர்தமாகும்
புச்சியாஞ் சிரந்துகச்சிந்து பவுரகமாம்
பூர்த்தியாம் னீலப்புஷ்ப பூவேயாகும்

நிச்சியாஞ் சீதசகோனிக் குண்டியாகும்
நிலகந்த கழுமேசே பாலகானி
நச்சியாம் பூ..கே கீசமாகும்
நவண்ணதா நொச்சி லுட னுமமாமே. (889)

கருநொச்சிலின் பெயர்.

கருநொச்சின் பேர்தன்னையே கருதக்கேளு
கருப்பியாங் கோடியனிரக் குன்றிதானுங்
குருநொச்சில் கோபியாங் கடப்பூவீச்சி
கூரான காயத்தை வேதிச்சியாமே
தருநொச்சி சட்டைகக்கினல சித்தியாகி
சணத்திலே லோகவே திச்சியாகும்
உருநொச்சில் உக்கிரம்கா சத்தியாகும்
உசத்தியாங் கருநொச்சில் னுமமாமே. (890)

வாழையின் பெயர்.

வாழையுடப் பெயர்தன்னையே வழுத்தக்கேளு
மகத்தான ரம்பாவா கதலிமோசா
வீழையாம் விருந்தபுட்ப மரபலாவா
மிகையான காஷ்டிலா வாயுதானி
தூழையாஞ் சுகுமரங் தீர்க்கபத்திரங்
தூரிதமாம் அஸ்தி விஷாணிகாவாகும்
நாழையாம் ரத்தபித்த ரசனியாகும்
நாட்டியதோர்வாழையுடப் பேருமாமே. (891)

தென்னை மரத்தின் பெயர்.

தென்னமரப் பேர்தன்னையே செப்பக்கேளு
செழுமையாம் னரிகே ளாரமாதுங்
துன்னமா ரசகந்த சுதுங்கமாதுங்
தூரசகோ சமுமாங் திருடபலமாகும்
நன்னமா மலதாவிருட் சோபலாலாம்
நாரியாங் தெட்சணத் திரமுமாகும்
வன்னமாஞ் சுவாது சீதளமுமாகும்
வகுத்துரைத்த தென்னமரப் பேருமாமே. (892)

பனைமரத்தின் பெயர்.

பனைமரத்தின் பேர்தனையே பகரக்கேளு
பண்பான திரணராச முமேயாகுங்
குனையான கிருஷ்ணகேந்த கிருஷ்ணகாயா
கூரான தலதாலப் பிராஞ்சுதீர்க்கந்
தினையான கிரிபீச குலிரமாகுஞ்
சீர்பாகி துரரோகதீர்க்க தண்டாம்
நினையான லேகபத்திர பகற்பலியாம்
நிட்சயமாம் பனையினுடைப் பேருமாமே. (893)

நிலைப்பனையின் பெயர்.

நிலைப்பனையின் பேர்தனையே நிகழ்த்தக்கேளு
நேரான விருஷ்டிச்ச விஷ்ணுசேனு
வலப்பனை வாரா கிருஷ்ணகாப
மதுரிவாஞ் சவுதூரிகாயட் சகாந்தா
முலப்பனை முன்கோல வேருதனுமாகு
முசலியாப் பூமியின் பனையுமாகுங்
கலப்பனை கானகத்தின் தூத்தியாகுங்
கதித்தெழுந்த னிலைப்பனையின் பேருமாமே. (894)

வெள்ளைக் காக்கணவின் பெயர்.

வெள்ளைக் காக்கணப்பேரை விளம்பக்கேளு
வெளுப்பான அசுவக்குரசு வேதப்புஷ்பி
துள்ளையாஞ் சுவேதவாகிரி சரணிகாவாஞ்
சூட்சமாங் கட்பேசு வதனுமாசம்
பள்ளையாம் பாரசிதா சுவேததித்தா
பாங்கான வீரோசனி தனிக்கேயா
தள்ளையாங் கர்மசங்கள் தகர்த்துச்சாடி
சாற்றியதோர் வெள்ளைக்காக்க ணனுமாமே. (895)

முடக்கோத்தானின் பெயர்.

முடக்கோத்தான் பேர்தனையே மொழியக்கேளு
முனிவான ரத்தபாதி யாவுமாகும்
படக்கோத்தான் பாபீரோத்தா விசுவகேந்தி
பாங்கான கிரிவாத்தியம் அங்கபாதி

மடக்கோத்தான் மண்டலகா ரகமுமாகு
மகத்தான அங்கபதி பூதனுகும்
விடக்கோத்தான் விஷஅந்திர வாதனுசி
விளம்பியதோர் முடக்கோத்தான் விபரமாமே. (896)

சேம்பையின் பெயர்.

சேம்மையுடைப் பேர்தனையே செப்பக்கேளு
சியமான பலாகோண்டா சூட்சுமமூலா
அம்பையென்ற அரிதாக பயாசுமிருதா
ஆண்மையாம் விந்தாசஞ் செயந்தியாசமாகுஞ்
சோம்பையாஞ் சுமதாசா பாரசிதாவாஞ்
சூட்சமாம் விரணஅரி சூலனுசனி
தம்பையாஞ் சலயபத்தினி சதிரியாகுஞ்
சாற்றியதோர் பேரேல்லாஞ் சேம்பையாமே. (897)

சங்கங்குப்பியின் பெயர்.

சங்கங்குப்பியின் பெயர்தனையே சாற்றக்கேளு
சதிரான சங்கபுஷ் பிகமுமாகுங்
கங்கமாங் கம்புபுஷ் பிகமுமாகுங்
கனமான சங்கஆ சங்கமூலி
சிங்கஆ சிரிஷிசங்க குசுமோவாகுஞ்
சீரான பெத்தியாவன வாசினியாஞ்
தங்கமாம் கேந்தகத்தை தயிலமாக்கிச்
சாற்றியதோர் சங்கபுஷ்ப னுமமாமே. (898)

சிறுகீரையின் பெயர்.

சிறுகீரைப் பேர்தனையே செப்பக்கேளு
சீரான தண்டுலிய கசந்தோஷம்
பருகீரைப் பண்டுலி தண்டுலியாம்
பாங்கான சிண்டுரி தண்டுபீச
மேருகீரை மேதனு தோகனுவா
மிடுக்கான பாஷாண கோபம்போக்கி
தருகீரைத் தாதிசா ரக்கினியாகுஞ்
சாற்றியதோர் சிறுகீரைப் பேருமாமே. (899)

போரும்பிலின் பெயர்.

போரும்பிலுடப் பேர்தனையே புகலக்கேளு
பேரான காசமா தாரியாகு
மரும்பிலென்ற மர்த்தசகா சாரியாகு
மகத்தான கர்க்கசத்த தாவுமாகுங்
கரும்பிலென்ற கால்விருந்தி காயித்தியுத்தங்
காச்சுவா வாச்சியமர கதமுமாகுஞ்
சிரும்பிலென்ற சிசிரயேவச் சமுமாகுஞ்
செப்பியதோர் போரும்பிலுடச் செயலுமாமே. (900)

கருப்பருகின் பெயர்.

கருப்பருகின் பேர்தனையே கழரக்கேளு
கனிலுருவர் மிருதாசி யமாவாகு
மருப்பருகு மலங்கரித்த தத்தாவாகு
மகத்தான சதபருவ சுருதாவாகுங்
குருப்பருகு தாவிரியா சீதவல்லி
குடவங்குரன் தன்னுடைய சிகையுமாச்சு
திருப்பருகு சிதாலதா மணக்கிழத்தி
செயமான கருப்பருகின் செயலுமாமே. (901)

வெள்ளெருகின் பெயர்.

வெள்ளையென்ற அறுகின்பேர் விபரங்கேளு
வெளுப்பான சுவேததூர வாருகோபாங்
குள்ளையென்ற சுவேதகந்தா லோழியாகுஞ்
சிதாலதா சக்கிரவீரிய ணந்தாவாகும்
பள்ளையென்ற பாரதவிது ரந்தாவாகும்
பாங்கான சிலேத்மேத்தைப் பக்குவம்பண்ணி
சள்ளையென்ற க்ஷயஅரி தாகனுகி
சமரசமாம் வெள்ளையென்ற அருகின்பேரே. (902)

பவழம் அருகின் பெயர்.

பவழமா மருகினுடப் பாங்கைக்கேளு
பக்குவமாக் கேந்தத்தூரு வாறுஆகுங்
கேவழமாங் கேந்தாளி திப்பிரமச்சி
கேடியான க்ஷிதாரிசம் வன்னினுளி

கவழமாக் களாபச்ச வாருணியாங்
கனமான சதுலாட் சகமுமாகுங்
குவழமாங் கஷாயாணி சிலேஷ்மமார்ரணி
கூறியதோர் பவழமாம் அருகின்பேரே. (௯03)

புளியாரையின் பேயர்.

புளியாரைப் பேர்தனையே புகலக்கேளு
பேரான ஆமிலிகா சுக்கலிகாவாங்
துளியாரை சுக்கிலா சுக்கிலாசாமா
சுதகவா தத்திகா அம்புலிகாவாங்
திளியாரை திந்திருணி சிஞ்சாபீலி
தேகத்தில் மாதோஷம் நீக்கியாகுந்
தளியாரைத் தரிகத்தை யடக்கியாகுஞ்
சாற்றியதோர் புளியாரைத் தன்னின்பேரே. (௯04)

தாமரையின் பேயர்.

தாமரையின் பேர்தனையே சாற்றக்கேளு
தண்மையாங் அரவிந்தம் நளினம்பத்மம்
பூமரைபுஷ் பனுங்குசே சயஞ்சீருகம்
புண்டரீக் கியதாமா மாணிசுக்கிலம்
நாமரை ராசிவசத்தி பதிர்ந்தான்
நாமானி சுக்கிலபூ ருவாணியோசங்
தேமரைக் கமலமாம் பீசப்பிரசூதஞ்
தேய்த்தும்பை சுரகரி கிருமிநாச
சீரான கிருஷ்ணஹரி துருமமாகும்
நாய்த்தும்பை காயத்தும்பை நீண்டதும்பை
நலமான பேய்த்தும்பை நாமமாமே. (1064)

பேய்க்கோள்ளின்பெயர்

பேய்க்கோள்ளின் பெயர்தனையே புகலக்கேளு
பேரான கல்லெல்லாஞ் சத்தாக்கியாகும்
தோய்க்கோள்ளுஞ் சுணையுறு கானமாகுந்
தோல்புகடச் சித்தியாந் தேகசித்தி
காய்க்கோள்ளு கணையுறு கோத்துமாகுங்
கசப்புறுகோள்ளுமா மதக்கானந்தான்
மாய்க்கோள்ளு மணையுறு மூக்குமாகு
மகத்தான பேய்க்கோள்ளின் மார்க்கமாமே. (1065)

பேய்க்கடலையின்பெயர்.

பேய்க்கடலைப் பெயர்தனையே புகலக்கேளு
பேயான வோங்குரு தந்தியாகும்
ஒய்க்கடலை யோமுகுநீர்க் கடலையாகு
மோங்கார வெறிச்சியாம் செய்ச்சிந்தியாகும்
ஆய்க்கடலை சுணச்சியாஞ் சுடகத்தியாகும்
அரியபோன் மேனிச்சி ஆதாளச்சி
கேய்க்கடலை கெந்தகத்தைத் தயிலமாக்கி
கெடியான பேய்க்கடலைக் கீர்த்தியாமே. (1066)

பேய்த்துவரையின்பெயர்.

பேய்த்துவரைப் பேருடைய பெருமைகேளு
பேயான கசக்குகின்ற துவரையாகுங்
காய்த்துவரை கடியதோர் சுணையோனாகுங்
கண்பிசைந்து அழுகின்றோன் வெறியோனாகும்
பாய்த்துவரைப் பசந்ததோர் துவரையாகும்
பருஞ்சுறு நாரியா பேரிசவேதி
தூய்த்துவரை சூதபங் தனியுமாகுஞ்
சூட்சமாம் பேய்த்துவரைச் சொரூபமாமே. (1067)

அழுகண்ணியின் பெயர்.

அழுகண்ணிப் பெயர்தனையே யறியக்கேளு
அழுகின்ற குமரிதான் வரிச்சியாகும்
ஒழுகண்ணி யோங்குநல கண்ணியாகும்
உருண்டதோர் மண்டலியா முயர்ந்தசத்தி
நழுகண்ணி நாகம்போல் படமமுக்கிதானும்
நாகத்தைச் செந்தூரம் பண்ணியாகுந்
துழுகண்ணி சூதபங் தனியுமாகுஞ்
சொல்லாத அழுகண்ணிச் சூட்சமாமே. (1068)

தொழுகண்ணியின்பெயர்.

தொழுகண்ணிப் பேருடைய சூட்சங்கேளு
சூட்சமாங் குன்றிபோல் செடிச்சியாகும்
நழுகண்ணி நறுக்கிடவே கூடியதோர்கொடிச்சி
நலம்பிசிந்து கூடுகின்ற புணர்ச்சியாகும்
விழுகண்ணி வேகுகாமிச் சூருணியாகும்
வேண்டியதோர் வசிகரி திலதியாகுந்
தழுகண்ணி தாம்பூர நிர்த்தாளியாக்கி
சமரசமாங் தொழுகண்ணிப் பேருமாமே. (1069)

முடவாட்டின்காலின்பெயர்.

முடவாட்டின் கால்பேரை மொழியக்கேளு
முகடான மலைக்காலாஞ் சிலைக்காலாகும்
நிடவாட்டின் கல்க்காலாங் தலைக்காலாகும்
நிலைக்காலா முடக்குக்கால் நீட்டுகோலாங்
திடவாட்டின் திணியான சிலைக்காலாகுந்
திருட்டுக்கா லுஞ்சக்கால் செப்பக்காலாம்
மடவாட்டு மலையினுடை மூலைக்காலாகு
மருவியதோர் முடவாட்டுக் காலுமாமே. (1070)

நாகசிங்கியின் பெயர்.

நாகசிங்கிப் பெயர்தனையே நவிலக்கேளு
நவநீதச் சீறியதோர் கொடிச்சியாகும்
பூவைகிங்கி பொருமுகச் சுணச்சியாகும்
பொழுக்கு முன்பிடிக்கில் துமமியாகுந்

தாகசிங்கி தாதுக்கள் பந்தனியுமாகுந்
தண்ணீரின் தடாகத்தில் தரிக்குஞ்செவ்வி
பாகசிங்கி பகரமாங் குறத்தியாகும்
பாடியதோர் நாகசிங்கிப் பண்புமாமே. (1071)

இருப்பவலின் பெயர்.

இருப்பவலின் பெயர்தனையே யிசையக்கேளு
இருளான கானகத்தில் மருக்கொழுந்தாகும்
புருக்கொழுந்து புத்தாகைச் சமட்டியாகும்
புண்ணியமாம் பருங்கானல் கன்னியாகு
மருக்கொழுந்து மாவிலிடக் கட்டியாகு
மகத்தான காயசித்தி யுப்புநீக்கி
உருக்கொழுந்து காரியச்செங் தூரியாகு
மோங்கியதோ ரிருப்பவலி னுமமாமே. (1072)

பொன்மத்தையின் பெயர்

பொன்மத்தைப் பெயர்தனையே புகலக்கேளு
பொன்னான கிற்தியாம் பொற்புவியுமாகுஞ்
சின்மத்தைச் சிங்கமும் போலக்காய்க்குஞ்
சியமான தத்தூரச் சிறிக்கியாகும்
என்மத்தை யேமத்தை தங்கத்தியாக்கு
மேழிலான காரிய பந்தனியாகுங்
கன்மத்தை கசப்பியாங் காயசித்தியாகுங்
காணியாம் பொன்மத்தைப் பேருமாமே. (1073)

கருப்பூமத்தையின் பெயர்.

கருப்பூமத்தைப் பெயர்தனையே கருதக்கேளு
கறுப்பான கிருஷ்ணபுஷ்ப பீசமாகுந்
திருப்பூமத்தை திரிபுட்ப திருஷ்ணதுத்தூரந்
திருடான மோகினி நிலத்ததூரி
முருப்பூ மத்தைசித் திச்சியாகு
மூர்க்கமாம் லகிரிச்சி கிருஷ்ணதாரி
நருப்பூமத்தை நாதத்தை செந்தூரியாகும்
நாடியதோர் கருப்பூமத்தை காமமாமே. (1074)

நச்சுப்புல்லின் பேயர்.

நச்சுப்புல் பெயர்தனையே நவிலக்கேளு
நற்சாந்த செந்தேர்ப்பை சிவப்பிவேர்தான்
மச்சுப்புல் மணிமகுடப் பருவதத்தில்வாசி
மாசற்ற சூதத்தை மணியாய்ப்பண்ணி
அச்சுப்புல் வவ்வண்ணக் கோல்லியாகும்
ஆகாத விஷத்திதான் ரேணசிசோதி
தேச்சுப்புல் தேகத்தில் சட்டைகக்கி
சித்தியாம் நச்சுப்புல் நாமமாமே. (1075)

நான்முகப்புல்லின்பெயர்.

நான்முகம்புல் பெயர்தனையே நவிலச்கேளு
நலமான தீயாங்கஞ்ச மனகெந்தமாங்
காண்முகங் கங்குணம்பூ மிசங்குண்மாங்
கடிதான சூலநாயம் விந்துசித்திரம்
பூன்முகம் பூதேக்கேங் தகமுமாகும்
புதுமையாஞ் சாத்தியசாங் தகமுமாகும்
மான்முகமாங் தத்துக்கு டோரியாது
மரபெல்லாம் நான்முகப் புல்லுமாமே. (1076)

காவட்டம்புள்ளியின் பெயர்.

காவட்டம் புல்பெயரைக் கருதக்கேளு
கானகத்தில் புல்லாகுங் கடினியாகும்
பூவட்டம் புத்திரினோர் சிறிவக்குண்ணி
யமபூச காஞ்சிகமாம் வாசினியாகுங்
தீவட்டஞ் சித்திராதிசித்திரப் பாலக்கிஞ்சி
யமாலாதி ரணபோ கிஷமுமாகும்
நாவட்டம் நாகசேங் தூரியாகும்
நாமமெல்லாங் காவட்டம் புல்லுமாமே. (1077)

சுணங்கவிருட்சத்தின்பெயர்.

சுணங்கவிருட்சப் பெயர்தனையே சொல்லக்கேளு
சுணங்காயக் குட்டிசூழ் குலச்சியாகும்
விணங்கமாஞ் சுவானமே தினிவிருட்ச
மிதுக்காக குலச்சி தான்முலச்சி

அணங்கமா மாதார யோகசித்தி
யனலுக்கு ளசையாத சூதகத்தி
சணங்கமாஞ் சட்டைகக் கிசம்புவாசி
தமனியாஞ் சுணங்கவிருட்சத்தின் பெயருமாமே. ()

எருமைச்சானியின் பெயர்.

எருமைகணைச் சான்பெயரை யியற்றக்கேளு
ஏமனு மேதக விருட்சமாகுந்
தருமையா மெய்க்கிடவே விருட்சமாகுஞ்
சாதகப் பாலினு யாந்தாயாகும்
ஒருமையா மோத்தகக் காலியாகு
முயர்சூத நாகபந் தனியுமாகும்
அருமையயாக் கைதனைச் சித்தியாக்கி
யறிந்தயெரு மைகணைச்சா னுண்மையாமே. (1079)

ரோமவிருட்சத்தின்பெயர்.

ரோமவிருட் சப்பேரி னுறுதிகேளு
ரோமமாஞ் சுருனியாநோக் குடலசல்லியங்
தேமமா மதியிலிடச்சுருள் நாரியாகுஞ்
சித்தியாங் கருமயிராஞ் சித்தவித்தை
தூமமாஞ் சுதபந் தனியுமாகுந்
தூரான வேருக்குள் பாஷாணசித்தி
ஓமமா மொருகோடிக்குள் காயசித்தி
யுண்மையாம் ரோமவிருட்சப் பேருமாமே (1080)

செந்தாபோவையின் பேர்.

செந்தாடு பாவைப்பெயர் செப்பக்கேளு
சிவந்தகதிர் திறத்திதான் ரத்தப்பாலி
தந்தாடு தவுந்ததோர்க் குளச்சியாகுஞ்
சாதிலிங்க நிவாத்தியாங் கெந்திசெம்பி
பந்தாடேப் பாஷாண சித்தியாகும்
பலாபத்தி பரிச்செம்பி பணத்தியாகுங்
கந்தாடு காயந்தான் சிணத்தில்சித்தி
கடியசெந் தாடுப்பாவைப் பேருமாமே. (1081)

முண்டினி விருட்சத்தின் பெயர்.

முண்டினி விருட்சப்பெயரை மொழியக்கேளு
முண்டினிகண் டினிமொட்டச்சி கோபக்கன்னி
காரணியாம் பாலினி பரிசவேதி
விண்டினி வெள்ளிதனைப் பெற்றகன்னி
வெண்காய சித்திச்சி வெறுமைபோக்கி
துண்டினி தூம்புறவே திச்சியாகுஞ்
சொல்லியதோர் முண்டினியின் சூட்சமாமே. (1082)

சாயாவிருட்சத்தின் பெயர்.

சாயாவிருட் சப்பெயரை சாற்றக்கேளு
தன்னிழல் காஞ்சியாங் தர்மதேவி
பூயபோகா நிழல்புண்ணியங் தரியாம்
பேரான சூரியனில் சாயாதேவி
வாயவா காயநிலைத் தமறுமொழி
பேசாதான் மாசற்றசூதபங் தனியுமாகுஞ்
சாயாசா காவிதியை யீரிந்தாயார்
சாயாத விருட்சத்தின் பேருமாமே. (1083)

கருநெல்லின் பெயர்.

கருநெல்லிப் பெயர்தனையே கருதக்கேளு
கானகத்து நெல்லிதா னீலன்தானு
மெருநெல்லி மேகம்போல் வளர்ந்தகன்னி
விருத்தாதான திண்ணபெயர் பாலையாக்கி
கருநெல்லி நாழிகையில் காயசித்தி
நவலோகப் வேதிச்சி நறைமாறிச்சி
அருநெல்லி ஆதிக்க மானசீலி
அடங்காத கருநெல்லி நாமமாமே. (1084)

கல்லாரையின் பெயர்.

கல்லாரைப் பெயர்தனையே கருதக்கேளு
கல்முகப் பிரமமாங் காரணியாகுஞ்
செல்லாரை செயல்முக்க கரந்தையாகுஞ்
சிறுமலைக் குறத்தியாஞ் செல்வியாகும்

வெல்லாரை நான்முசவே தியனுமாகும்
வெளுத்தகோட் டரசிதான் சூதவெள்ளி
உல்லாரை யூழிவரை கிருத்தியாகு
மோங்கியதோர் கல்லாரைப் பெயருமாமே. (1085)

கலைச்செம்பின் பெயர்.

கலைச்செம்பின் பெயர்தனையே கருதக்கேளு
கானகத்தில் கோவடுறு செம்புமாகும்
கோலைச்செம்பு கோடுமேலை பறைச்சியாகுங்
குவட்டிலுறு சாமைசா தகமாம்பாங்கி
நிலைச்செம்பு நிலைடுறுகை கனகியாகும்
நெடியதோரு மாதங்கி நெருப்பியாகுந்
துலைச்செம்பு சூதத்தைத் தூளியாக்கிச்
சொர்ணமாங் கலைச்செம்பின் சூட்சமாமே. (1086)

கல்லறளியின் பெயர்.

கல்லறளி யின்பெயரைக் கருதக்கேளு
கல்லினுட விஷக்காந்தை கடியசெம்பு
குல்லறளி குவட்டினிலச் சுந்தரியுமாகுங்
கூர்மையாய்ச் செம்பதனைக் குருவாய்ப்பண்ணி
மல்லறளி மாலிங்க வாகினியாகு
மகத்தான விஷகாளி மாபேந்தத்தி
சுல்லறளி சூதத்தை தோசையாக்கிச்
சுயம்பான கல்லறளி சூட்சமாமே. (1087)

மூவிலைக் குருந்தின் பெயர்.

மூவிலைக் குருந்தின்பெயர் மொழியக்கேளு
முழுச்சூத வயிரியா மூர்க்கியாகும்
காவிலைக் கருநீலக் குருந்துமாகுங்
கடிவிஷக் கிழங்குதான் கசப்பியாகு
மாவிலை வருநீலச் சூலியாகும்
வச்சிரக் குருந்துமாக் காயபேதி
கேவிலைக் கிழங்குமாங் கெடிச்சியாகுங்
கீர்த்திமூ விலைக்குருந்தின் பேருமாமே. (1088)

முத்திருக்கஞ்சேவியின் பேயர்.

முத்திருக்கஞ் சேவியினுட மூர்க்கங்கேளு
மூனையான வெழுத்தாணிப் பூடுமாகும்
எத்திருக்கு மெழுகின்ற கதிரியாகும்
யேத்தமா சைக்குக் குடேரியாகும்
வத்திருக்கு வாதசித்த பத்திரியுமாகு
மகாகாமி மாயத்தி வஞ்சியாகுஞ்
சுத்திருக்கு சூதத்தை பற்பமாக்கி
சுயமான முத்தேருத்தின் பேருமாமே. (1089)

சேந்திராவின் பேயர்.

சேந்திராப் பேயர்தனையே சேப்பக்கேளு
சிவப்பிதான் கசக்கின்ற கொடிச்சியாகும்
உந்திரா யுயர்ந்ததோர் தொடிச்சியாகு
மூறுகண்கள் நாசனி சகட்டிச்சியாகும்
நந்திரா நலச்சேம்பி நாகச்சேம்பி
நல்கின்ற காரியச் சேம்பியாகும்
பந்திராய காயத்தைப் பவளமாக்கி
பறக்கின்ற சேந்திராய்ப் பண்புமாமே. (1090)

சேம்பல்லியின் பேயர்.

சேம்பல்லிப் பேயர்தனையே சேப்பக்கேளு
சேயமான சூதபற் தனியுமாகும்
பம்பல்லி பயிரேரித்த பாவியாகும்
பாங்கான குடிலியாஞ் சிறுமியாகும்
நம்பல்லிநா கரசகேந்தி மாரணியாம்
நமனுடைய கற்பத்தி நாதத்தியாகுந்
தம்பல்லி தாளகச்சேந் தூரியாகுஞ்
சார்ந்தவிழ்ந் நாசனிசேம் பல்லியாமே. (1091)

சேவ்வகத்தின் பேயர்.

சேவ்வகத்திப் பூண்டின்பேயர் சேப்பக்கேளு
சேயலான அழகியாள் சிவப்பியாகுஞ்
சவ்வகத்தி சந்திரன்தங் கச்சியாகுஞ்
சாந்ததுவா தேசிபத் திரியுமாகு

முவ்வகத்தி முனிதன் பத்திரியுமாகு
முப்பியாங் குணிலியா முழக்கியாகுந்
துவ்வகத்தி துரிசிசேங் தூரிபற்பி
சொல்லியதோர் செவ்வகத்தி சூட்சமாமே. (1092)

நீலஞ்சோதியின்பெயர்.

நீலஞ்சோதிப் பெயர்தனையே நிகழ்த்தக்கேளு
நீலநிறக் காளியாஞ் சோத்திரகன்னி
ஆலஞ்சி யழகான கறுப்பியாகு
மதியநிற நீலப்பூ கோடியகல்ப்பி
தூலஞ்சி துநிசாகுஞ் சூதகபற்பி
சித்தருண்ணுங் கல்பத்தி சூட்சியாகும்
வாலஞ்சி தேகத்தின் வருத்தநீக்கி
மகிரியாம் நீலஞ்சோ திப்பேராமே. (1093)

நிலக்கடம்பின்பெயர்.

நிலக்கடம்பின் பெயர்தனையே நிறையக்கேளு
நேர்மையாம் பாலனும் விருத்தனனேங்
குலக்கடம்பு குல அலோலமட்பூசங்
குணமான கதம்பகந்தோ யச்சலாலஞ்
சலக்கடம் புசமோநீ பங்காரபேத்தஞ்
கங்கையாம் விஷகாரி விஷனியாகு
மலக்கடம்புங் காவிரண நீக்கியாகு
மாசற்ற நிலக்கடம்பின் வண்மையாமே. (1094)

புறங்கை நாரியின்பெயர்.

புறங்கைநா ரிப்பெயரைப் புகலக்கேளு
பேரான விஷமுட்டி கடுத்தச்சமாகுஞ்
சுருங்கையாஞ் சுவேதமுஷ்டியு மாகுஞ்
சோரிசிரங்கு கிருமியரி நாசியாகுங்
கிறங்கையாங் கேசமுஷ்டி தானுமாகுங்
கேடியான க்ஷபாகுவா கேந்திசேம்பு
விறங்கையாம் வேளுப்பியாம் ரோமமுஷ்டி
மேன்மையாம் புறங்கைநா ரிப்பேராமே. (1095)

பூதணத்தின் பெயர்.

பூதணத்தின் பெயர்தனையே புகலக்கேளு
பேரான ராக்கிரணஞ் சிறங்கரோகிஞ்
சாதனங்குஞ் சவிதரஞ் சத்தபோதஞ்
சமரசமாம் பாலாங்கம் பூமியாலம்
காதணக்கு காஞ்சிகசா சணமுமாகுங்
கடிதான பூதிகா புத்திரவஞ்சரி
சீதணக்கு பூத கேசியுமாகுஞ்
செப்பியதோர் பூதணத்தின் பேருமாமே. (1096)

செருந்தியின் பெயர்

செருந்தியுட பெயர்தனையே செப்பக்கேளு
செயலான மூஷகரி மோட்சகத்தி
சருந்தியாஞ் சணகேந்த சார்விருட்சஞ்
சாசியா மூஷக்கச் சேதியாகுங்
கருந்தியாங் காஷைக் கயுமாகுங்
கைகை ஆ வர்த்தனி பாலியாகும்
மருந்தியா மயிலிறகு சத்தியாகு
மார்க்கமாஞ் செருந்தியுட வண்மையாமே. (1097)

கோத்தானின்பெயர்.

கோத்தான் பெயர்தனையே கூறக்கேளு
குணசாலி யனந்தியாங் தீர்க்கியாகு
முத்தான மூலச்சி சமுத்திராங்தோய்
மொழியான வாசகி சூட்சுமவல்லி
வத்தான வல்லிகாப் பிரியமுகாவல்லி
மகத்தான வல்லிகாப் பிரியமுகாவல்லி
வித்தான விரணரோ பிணியுமாகும்
விஷ்ணுபரி கோத்தான்றன் விபரமாமே. (1098)

வறட்சுண்டியின் பெயர்.

வறட்சுண்டின் பெயர்தனையே வழுத்தக்கேளு
மாசற்ற சதபத்திரா சமிபத்திராவாங்
கறட்கலி காரிகாகமக் காரியாகுங்
கடியதோ ராத்தலோகித புஷ்பியாகும்

வறட்கிரத் திகாரிகார்த்த பத்திரி
வளமான சூதபந்தனி யீயபற்பி
அறட்சுண்டி யதிகார நாசனியாய
மறிந்துரைத்த வறட்டி னுமமாமே. (1099)

ஆமிறத்தின்பெயர்.

ஆமிறத்தின் பெயர்தனையே யறையக்கேளு
ஆமிறமாங் கானகச் சூதமாகுஞ்
சாமிறமாஞ் சக்கார குரகுலுவாகுந்
தகோநாம பலாகேந்த பத்திராவாகு
மூமிறமா மவைசனி மோகினியாகு
முதுமையாம் பித்தளையை யேமமாக்கி
காமிறமாங் கற்பிணி காயசித்தி
கனமான ஆமரத்தின் காட்சியாமே- (1100)

கட்மோப்பெயரின்பெயர்.

கட்டுமோப் பெயர்தனையே கருதக்கேளு
கானகத்தில் கிருதாமிரதா சூரணமாகுங்
கெட்டுமோ கண்டுலத்தி கெந்தபீசகமாங்
கெடியான பலாமலச்சம் ஆமிறவிருட்சங்
குட்டிமாங் கோவிந்தைகத் தியதேநாமங்
கூறுன அயத்திலிடச் சேம்பியாகும்
பட்டிமாம் பழத்தோலிற் கேந்திசேம்பி
பாடியதோர் கட்டுமோப் பண்புதாமே. (1101)

அம்பளங்காயின் பெயர்.

அம்பளங்காய்ப் பெயர்தனையே யறையக்கேளு
ஆற்கமாம் வேடியுப்புக் கட்டுமாகும்
யிம்பளமாஞ் சூரமாம்பி தாளம்பட்டர்
பெகுபுத்திரி மாசிகாசக சீறியாகும்
நம்பிளம்பி றதிசச்சாரி பிசுகேந்திரவாம்
நலமான பாஷ்பிகா அம்பிகாவாங்
கம்பளங் கபவாத நாசனியாகுங்
கனமான அம்பளங்காய் காட்சியாமே. (1102)

புனம்புளியின் பெயர்.

புனம்புளியின் பெயர்தனையே புகலக்கேளு
பெருமையா மிலாதகம் பீதநகமாகுங்
கனம்புளிக பிருதோமிற வாடகமாகுங்
கபிந்திரியக துஷரோத்து கவுபீதமாகும்
உனம்புளி கல்லுப்பை யுறுதியாக்கி
யுயர்வான சாரத்தைப் பேத்தமாக்கி
தனம்புளி தாகத்தைமா ருதத்தைப்போக்கி
கார்பெல்லாம் புனம்புளியின் றண்மையாமே. (1103)

இதனையின் பெயர்.

இதனையுட பெயர்தனையே யியம்பக்சேளு
ஏற்றமாம் நந்திவிருட்சம் பிரரேசுகிசம்
பிதனையாஞ் செயவிருட்சம் பிறகலைப்பதியுமாகும்
பேரியகாங் தளகங்கு போகமாகுங்
கதனையாங் கஸ்தூரி செயனுகஸ்து
காளகச் சபமான கன்னியாகுந்
திதனையாங் திரிதோஷ சமனியாகுஞ்
செயமான யிதனையுட சீருமாமே. (1104)

தும்பியின் பெயர்.

தும்பியுட பெயர்தனையே துதிக்கக்கேளு
தும்பரிசி திசாரகங் தானுமாகு
மிம்பரி மிறஷ்டபங் தனமுமாகும்
விபூறசனி விகரணிவிப் பிரணியாகுந்
தம்பரி சாரணி ரோபஞ்சனியாந்
தண்மையாம் வாதபித்த சமனியாகும்
அம்பரி யரிதாரவி பூதிச்சியாகும்
ஆண்மையாங் தும்பியுட அதிகமாமே. (1105)

சிறுதும்பியின் பெயர்.

சிறுதும்பிப் பெயர்தனையே செப்பக்கேளு
திந்துகங்கா திந்துகங் தானுமாகும்
கறுதும்பி காகமதுபிலுகமாகுங்
காகேந்து ராதிந்திகங் தானுமாகும்

வறுதும்பி வாதகோ பனமுமாகு
மகத்தான குருபக்குவ மதுரியாகுஞ்
சறுதும்பி சாதிலிங்க மயினியாகுஞ்
சாற்றியதோர் சிறுதும்பித் தண்மையாமே. (1106)

சோனகப் பூவின்பெயர்.

சோனகப் பூப்பெயர்தனையே சொல்லக்கேளு
சுப்பிரகா சக்கிணங் கவுடியாகுந்
தேனகப்பூ தேவிலதா வருஷாத்திரமாகுஞ்
செம்மைசெம்மை யாகாசி காலகுவுமாகும்
வானகப் பூவதுசி சிரசாலாபி
பசுனுமாலாலி பிராமணி பஞ்சமுஷ்டி
சானகப்பூ சமுத்திராதா தேவிபுத்திரி
சாதிலிங்கம் யினிமையாஞ் சோனகப்பூவே. (1107)

பம்பந்திராயின் பெயர்.

பம்பந்திராய் பெயர்தனையே பகரக்கேளு
பலபத்திரா வாருணி கிருத்திருணி
கிம்பகிரிதாக் கிறஷாசற்ம சாகுவாகுங்
கேடியான தித்தமாரனி காவுமாகும்
வம்பமாம் வாதலா சத்தலாமேதா
வதிதகா சேனகியச னுகாவாகும்
விம்பமாம் விமியளா விமாளவளாவாம்
மேன்மையாங் திராயந்தி பம்பந்திராயாமே. (1108)

பேய்த்திம்மட்டியின் பெயர்.

பேய்த்திம்மட்டிப் பெயர்தனையே பேசக்கேளு
பேரான யிந்திரவாருணி கர்னியேஷா
காயான கேவாட்சி கெச்சிபிரடியா
கனியான விசலியா சகைவப்பிரோத்தா
மீயமிறு காதிநீ மதுரியாகு
மிடுக்கான பாஷாணங் காய்க்குள்கட்டு
மாயமது ராலகுமா சாரவாமி
மமருவியதோர் பேய்த்திம்மட்டி வண்மையாமே. ()

பெருங்கம்பியின் பெயர்.

பெருங்கம்பியின் பெயர்தனையே பேசக்கேளு
பெரியகம் பில்லகோ ரசனிகோவாம்
நருங்கம்பி ரத்தமகோ ரத்தவர்ணகமாம்
நலமான மனசிலா பூர்ணபலமாகுஞ்
சருகம்பி சந்திரகற்க சபத்திரகமாகுஞ்
சரசமாஞ் சுவாதுதித் தமுமேயாகுங்
கருங்கம்பி கபவாத பித்தகுலமக்கினி
கடியதோர் பெருங்கம்பி காட்சியாமே. (1110)

மறுதுடரியின் பெயர்.

மறுதுடரிப் பெயர்தனை வகுக்கக்கேளு
வத்தாங்திரி விருஷகேந் தமுமேயாகு
முறுதுடரி மோமகச்ச கலாத்திரசமாகு
முனிவான ஆமிறபக தச்சமாகுங்
கறிதுடரி கதிதவிஷ கந்திசபத்திரி
கபசூல யிறுத்துரோக சிலேற்பனுசி
வறிதுடரி வக்கிராந்த சவணையாக்கி
மதிப்பான மதிதுடரி மார்க்கமாமே. (1111)

தாளியின் பெயர்.

தாளியுட பெயர்தனையே சாற்றக்கேளு
சதார்த்தா ரத்தவிந்து சன்னியாகும்
லாளியாம் லட்சுமிசபத்திர சேனநியாம்
லட்சுமி துபிச்சிலா ராபிமேத்தியா
கூளியாம் அலட்சுமினு சனியுமாகுங்
குறுவிலட் சுமிதத்துவ காலதாவா
தூளியாந் திரிதோஷ சமனியாகுஞ்
செப்பியதோர் தாளியுட சூட்சமாமே. (1112)

நறுந்தாளியின் பெயர்.

நறுந்தாளிப் பெயர்தனையே நவிலக்கேளு
லட்சுமண புத்திரரேன நீயுமாகு
மறுந்தாளி சிவப்பியாம் விந்துச்சமாகு
மகத்தான கத்தாசி லேட்சபனுகி

உறவந்தாளி யுபரசத்தின் தோஷம்போக்கி
வுன்மத்தஞ் சோகைபாண்டு ரோகஞசி
குறவந்தாளி கோழைதனைப் போக்கியாகுங்
கூறியதோர் நறுந்தாளிக் குணமுமாமே. (1113)

தேவதாளியின் பெயர்.

தேவதாளிப் பெயரை செப்பக்கேளு
சீமுதிகி விதிபுஷ் பரசமாமிங்
காவகோத்த பாரசனி காசைவமாகுங்
கனவிருந்த கோசரத கித்தாவாகுஞ்
சாவதாச காதேவா வர்க்கபாதி
சரசமாம் விரைத்தயிலஞ் சூதங்கட்டும்
நாவதாங் நவலோகங் களிம்புபோகும்
நலமான தேவத சளிப்பேராமே. (1114)

நாகதாளியின் பெயர்.

நாகதா ளிப்பெயரை நவிலக்கேளு
நல்லசீ தேவியெனும் புஷ்பியாகும்
பாகமாம் பணுமகுடச் செல்வியாகும்
பவழநிறச் சாத்திதான் பாஷாணச்சேம்பி
சூதமாஞ் சோரசேங் தூரியாகுங்
துடியான விஷத்துக்குச் சூரனுகும்
யோகமாங் குண்டலிக்குள் காயசித்தி
யுண்மையாம் நாகதா ளிப்பேராமே. (1115)

பேய்ச்சுரையின் பெயர்.

பேய்ச்சுரையின் பேர்தனையே பேசக்கேளு
பெரிதான யிட்சுவாகு மட்சத்திரியும்
வாய்ச்சுரை வார்மயா தும்பியாகு
மாசற்ற மிரகபலா மண்டிபலவாம்
நாய்ச்சுரை ராசபுத்திரி தித்தபீசா
நலமானகடு காலாபரத்து துஞ்சாவாங்
காய்ச்சுரை தயிலத்தில் கண்டர்வெள்ளை
கசப்பான பேய்ச்சுரையின் காட்சியாமே. (1116)

பேய்ப்பீர்க்கின் பெயர்.

பேய்ப்பீர்க்கின் பெயர்தனையே புகலக்கேளு
பெரியகோ சாதகி கிருதசித்திரா
சாய்ப்பீர்க்கு சாலினி கிருதவேதனுவாஞ்
சாசுதித்தா பலிகா குச்சமாகுங்
காயப்பீர்க்கு கதம்பகங் கச்சமாகுங்
கனமான விரைத் தயிலங் தாதுகட்டுந்
தீய்ப்பீர்க்குத் திரிதோஷண வினசியாகுஞ்
சீரான பேய்ப்பீர்க்கின் செயலுமாமே. (1117)

சற்பாடசியின் பெயர்,

சற்பாட்சிப் பெயர்தனையே சாற்றக்கேளு
சர்ப்பகேங் தாசன குலியுமாகும்
சுற்பாட்சி சுகந்தாதோ சீதகேந்திகாவாஞ்
சுசைவமாஞ் சற்பசுகங் தாசமாகுங்
தற்பாட்சி தாசலித பத்திரிகாவாங்
தாக்கான நாகுலி கடுதித்தாவாம்
அற்பாட்சி யண்டத்தை மயினமாக்கி
அதிதமாஞ் சற்பாட்சி யாண்மையாமே. (1118)

இறுசுவசற்பாட்சியின் பெயர்.

இறுசுவசற் பாட்சிப்பெயரை யியற்றக்கேளு
எழிலான அன்னியம்கா சுகாந்தாசமாகுங்
கேறுசுவ கேசநாகுலிசு வாகாவாகுங்
கேடியான சற்பாட்டு சேதியாகும்
அறுசுவகதிதா அபுத்தா அண்டமயின
அடங்காத விரணரோ கினியுமாகும்
கறுசுவகி றுமிதோஷ நாசனியுமாகுங்
கேடியான யிறுசுவசற் பாட்சியாமே. (1119)

விட்ணுகரந்தையின் பெயர்.

விட்ணுகரந்தி யின்பெயரை விளம்பக்கேளு
விகாசுமிர்தம் நீலபுஷ்ப பாசமாகுங்
விட்ணுவாஞ் சுசிதளாக ஷாயதித்தா
விளங்குசீ தளதீபனி ருசியுமாகுங்

கிட்ணுவாங் கிருத்தாக விஷஞ்சுரநாசி
கேடிவெள்ளைப் பூவதனில் சூதங்கட்டும்
புட்ணுவாம் புராணசுரநா சனியுமாகும்
பேரான விட்ணுகாந்திப் பேருமாமே. (1120)

நாகபலையின் பெயர்.

நாகபலைப் பெயர்தனையே நவிலக்கேளு
நாகபலா கரகந்தி காறுணுவாங்
காகபலை காங்கேரி விசுவதேவா
கனமான அதிபலா நாகபலாவிரஷியாம்
மாகபலை மஷ்டபலா சஷாத்திரிசல்லியா
மகத்தான ரோமசிமது பாகிகாவாம்
லாகபலை ரத்ததண்டாதா ரருமிகாவாம்
நாகபந் தனியான நாகபலையாமே. (1121)

நீர்க்கடம்பின் பெயர்.

நீர்க்கடம்பின் பெயர்தனையே நிகழ்த்தக்கேளு
நேர்மையாங் கலியாணி லோசனஞ்சாடி
தார்க்கடம்பு கதம்போனி சுளோம்புகமாகுங்
கயித்திய தேசலசம்பு நாதேயச்சம்
பிர்க்கடம்பு பிரகிரதி தாகஷயமாகும்
பெருமையாம் வீரத்தைப் பெந்தம்பண்ணீ
நார்க்கடம்பு ரசகுருவாம் நமனுங்கற்பம்
நாடியதோர் நீர்க்கடம்பின் பேருமாமே. (1122)

கிளிமூக்கின் பெயர்.

கிளிமூக்கின் பெயர்தனையே கிளத்தக்கேளு
கேண்மையாங் கத்தியாச் சுகநாசனியாம்
சுளிமூக்கு சூட்சமநாளு காவுமாகுஞ்
சுகநாசா பலாசேதி சத்தாவாகும்
மளிமூக்கு மாதித்தா மதுராவாகு
மனேசிலையை மெழுகாக்கு மாரகியாகும்
களுமூக்கு காயசித்தி கற்பாந்தச்சி
காட்சியாங் கிளிமூக்கின் கணக்குமாமே. (1123)

ஈகையின் பேயர்.

ஈகையுட பேர்தனையே யியம்பக்கேளு
யெழிலான ஆதாரி கதம்பபுஷ்பி
காகையாங் கடபீமஆசு வேதாவாகுங்
கடம்பா ராகாசயி தாளியாகுங்
கேகையாங் கயகதிர் வல்லியாகுங்
கேந்தகபிப் பினியான் கேடிச்சுவாகும்
பாகையாம் பாண்டுரோக விநாசனியாகும்
பாடியதோர் ரீகையுட பண்புமாமே. (1124)

நறுவிளியின் பேயர்.

நறுவிளியின் பெயர்தனையே நவிலக்கேளு
நற்சீத உளத்தாளோ சேலுசிலேற்பமாம்
பறுருளிப குசார பூதவிருட்சம்
பாண்மையாங் கடம்புதா குற்சிதமாகும்
சிறுவிளி யெலுசா லோபமாகுஞ்
சேம்மையா லோலேக சாடகமாகுங்
தறுவீளிதாம் பரபற்பஷப் பசமாகுஞ்
சாற்றியதோர் நறுவிளியின் சாங்கமாமே. (1125)

புளிவஞ்சியின் பேயர்.

புளிவஞ்சிப் பெயர்தனையே புகலக்கேளு
பேரான சதவேதிர சாமிலமாகும்
வெளியவஞ்சி வேதசா மிலாமிலமாகும்
வீமசக் கிரவீரிய கோவிதையாகுங்
களிவஞ்சி கச்சுதாசி லேட்டுமபலமாகுங்
காரணமாஞ் சூதத்தைக் கட்டியாக்கி
குளிவஞ்சி காரகுபல சத்தாவாங்
கூறிய புளிவஞ்சிக் குணமுமாமே. (1126)

சிறுகல்லூரியின் பேயர்

சிறுகல்லூ ரிப்பெயரைச் செப்பக்கேளு
சினத்திலே கல்லுப்பைக் கட்டிப்போகும்
தறுகல்லு தாவாக்னி பிறுஞ்சோமசியாதாக்கி
னயிமாமி லட்சுகிற சித்தாகமாகுங்

திறுகல்லு தீபகோத் திறுகண்டுக்கினங்
திஷனேடு ஷணுபகுபுத்தி பாதியாகும்
உறுகல்லு வுலோகத்தைச் செந்தூரமாக்கி
யுயற்சியாஞ் சிறுகல்லூரிப் பேருமாமே. (1127)

வெட்பூலாவின் பெயர்.

வெட்பூலாப் பெயர்தனையே விளம்பக்கேளு
வெந்த சூடாமணி சூதபாகி
சிட்பூலா சிகண்டியாங் கிருஷ்ணரத்தி
சுவேதகாம் போசனிது வாங்கிஷியாகும்
பட்பூலா வேதபாகி பகுப்பிசாவாம்
பாகிசாணு பகுபுத்திர சிகண்டியாகும்
அட்பூலா அதிசார நாசனியுமாகு
மடங்காத வெட்பூலா வாண்மையாமே. (1128)

நீர்ப்பூலாவின் பெயர்.

நீர்ப்பூலாப் பெயர்தனையே நிறையக்கேளு
நீலகாம் போசிபூ லாசமாகுங்
கூர்ப்பூலா கிருஷ்ணவாக் கியபியாகுங்
கேடியான பூர்வோத தானவனுமா
நேர்ப்பூலா நிதானிநா மானியோசி
நேர்மையாம் வாதபித்த பிரசமனியாகுஞ்
சார்ப்பூலா சட்சுசியா சிவேதபூலாகஞ்
சமூலத்துவம் நீர்ப்பூலா நாமமாமே. (1129)

தலைச்சூடுவள்ளியின் பெயர்.

தலைச்சூடு வள்ளிபெயர் சாற்றக்கேளு
தாயான யீசுவரி நாகதமனியாங்
கலைசூடு காபாலி தற்பகேந்தி
காபால மிதிசோசி யசிரோ மூலமாகுந்
துலைசூடு சூதபங் தனியுமாகுஞ்
சிலைமெழுகாம் லிங்கமது மெழுகுமாகும்
பலைசூடு பாஷாண மெழுகுமாகும்
பாடியதோர் தலைச்சூடு வள்ளிப்பேரே. (1130)

பிர்மதண்டின் பெயர்.

பிர்மதண்டின் பெயரை புகலக்கேளு
பிரத்தியமாம் புஷ்பியாம் பிர்மதண்டி
வர்மதண்டு வனமாலி வாராகிகாவா
மகத்தான அவாரமுகி கதிதாசத்தை
நர்மதண்டி ரசகுருவாமா சபந்தனியாம்
நற்சாதி லிங்கத்தைக் குருவேயாக்கி
திர்மதண்டி தித்தாசா கிருமியரியாகுஞ்
செப்பியதோர் பிர்மதண்டின் செயலுமாமே. (1131)

பொடுதலையின் பெயர்.

பொடுதலையின் பெயர்தனையே புகலக்கேளு
போட்களம்போ டரிகிஷம நாகசிங்குவாம்
நடுதலட்சுமி ரசாயணி சைவமாகும்
நலமான தோஷக்கின குன்மநாசனியாம்
தடுதலைபோட் டார்சேதித் தாவாஞ்
சலமான கிரகணி தீபனமாகும்
பிடுதலை பிலிகநாகோ தாரநாசி
பேரான பொடுதலையின் பேருமாமே. (1132)

கோடாசூரியன் பெயர்.

கோடாசூரிப் பெயரைக் கூறக்கேளு
குணமான ஆராஞ்சீ தளாவாகும்
கூடமாங் தேவகெந்தா குறக்கற்றமாகுங்
கோடாசரி நிருதிதா வித்துப்பின்ன
நீடமாம் வாதபித்தறிச் சயசூதனியாகும்
நிசமான கிருமியாம் விரணசோதனமாம்
வாடமாம் வாதபித்த நாசனியுமாகு
மருவியதோர் கோடாசூரிப் பேருமாமே. (1133)

இடுகொள்ளின் பெயர்.

இடுகொள்ளின் பெயர்தனையே யியற்றக்கேளு
ஏற்றமாஞ் சட்சுகியாய பலாக்கினேயா
குடுகொள்ளு பிரசாதா தானுமாகுங்
குலாவிலோ சங்கிதா கும்மகாரி

மடுகோள்ளு மலபகா குலத்திகாலா
மகத்தான வுபரசங்கள் சத்துமாக்கி
நடுகோள்ளு நற்காந்த பற்பமாக்கி
நலமான யிடுகோள்ளி நாமமாமே. (1134)

காட்டுக்கோள்ளின் பெயர்.

காட்டுக்கோள் பெயர்தனையே கருதக்கேளு
கானகத்தில் னுகந்தான் மேதோவாகுங்
கூட்டுகோள்ளு சூதகி லயிக்காவாகுங்
கூர்ந்த நயனுமயக் கோடிச்சியாகும்
ஈட்டுகோ ளிலைச்சாற்றில் சத்தெல்லாமாகு
மெழிலான கோள்காற்றில் பாஷாணச்சுத்தி
வேட்டுகோள் வேர்சாற்றில் நவலோகசுத்தி
விளம்பியதோர் சாட்டுக்கோள் விபரமாமே. (1135)

பேய்க்கரும்பின் பெயர்.

பேய்க்கரும்பின் பெயர்தனையே புகலக்கேளு
பேயிட சுவாளிகாசி யாக்காண்டேசு
வாய்க்கரும்பு வயத்ததா காங்கமாலா
மாதாபை சாசோட்சிச கத்தியதேவாம்
காய்க்கரும்பு கடுபாக்க பாபகமாகுங்
காப்பாங்கர் பற்றம்ப முமேயாகும்
பூய்க்கரும்பு பிரபமாக வாசசைவம்
பேயான பேய்க்கரும்பின் பேருமாமே. (1136)

தீன்பூவின் பெயர்.

தீன்பூவின் பெயர்தனையே செப்பக்கேளு
தேவதா ஙர்மானியா னிசமுமாகும்
பூன்பூங்கார் சங்கர புஷ்பமாகும்
புண்ணியமாஞ் சுவர்ச்சகபுஷ் பமுமேயாகுங்
தேன்பூவாம் வராலுகங் தேவதாரு
செயமான முதத்தைப் பேந்தம்பண்ணி
ஆண்பூவா மதிசார நாசனியாகு
மறிந்துரைத்த தின்பூவி னுற்கமாமே. (1137)

கிருமிசத்துருவின் பெயர்.

கிருமிசத் துருப்பெயரைக் கிளறக்கேளு
கிளர்ச்சியாம் அசகேந்தா கர்ப்புஷ்பமாகும்
பருமியாம் பஸ்தகேந் தாசமாகும்
பாங்கான கேற்பார பூதிகிடோ
சருமிகிற கேந்தசை வோத்தாபாஞ்சம்
சமாம் போடகி தாசமாகும்
வருபோம் வன்னிதீ பனமுமாகும்
வகுத்துரைத்த கிருமிசத்துரு மார்க்கமாமே. (1138)

பேய்த்தும்பட்டின் பெயர்.

பேய்த்துமட்டிப் பெயர்தனையே புகலக்கேளு
பேரான அன்னியேந்திர வாரினியாம்
வீயத்தியமாம் விசாலாது மகாபாலாம்ரோத்தா
விசையாத்துமாட் சாசித்தரபா லாத்திரமாகும்
பூய்த்தியாம் புசித்திரபுசா சாவுமாதஞ்
புதியதாஞ் சிவேதபுஷ்பா மிருகாட்சிசம்
நாய்த்தியா நாகதந்தி லிங்கபந்தி
நாடியதோர் பேய்த்துமட்டி நாமமாமே. (1139)

காய்ப்பாகலின் பெயர்.

காய்ப்பாகல் பெயர்தனையே கருதக்கேளு
காகோட்சி தேவிவங் தியாவாகும்
மாயாண மனோக்கியா குமாரிகாவா
மகத்தான நாகாசி நாகதமணியாம்
வியானவிஷ கண்டகி நீகதாவா
விக்கினே யாயக்கிருத மணியுமாக்கும்
பூயான பூதப்பிர்மா தனகன்னியா
பிறசாசை வாகாயப்பாகல் பேருமாமே. (1140)

தும்புருவின் பெயர்.

தும்புருப் பெயர்தனையே சொல்லக்கேளு
தும்புரத் தோசே சவுரோவாகும்
வம்புவாச்ச சாணுரேச னீசமாகும்
வலக்கத்தீட் சணபலோ தீட்சணபத்திரா

மம்புரு மகாமுனி மாருதசூல
மகத்தான அபந்ததிரா மாருதசூல
நிம்புரு கிருமிக்கினே மாருதசூலங்
கேடியானதும் புருப்பேர் கீர்த்தியாமே. (1141)

நிலகுரோசனையின் பெயர்.

நிலக்குராப் பெயர்தனையே நிகழ்த்தக்கேளு
நேரபூமி குரவகங் குச்சமாகும்
கலக்குரா கவுசிரர் சீதமஞ்சரியாங்
கனமான சித்திதமுங் தாமேயாகும்
புலக்குரா பித்தளாயி னுறல்போக்கி
பேரான போட்டுலுப்பு சேந்தூரியாகு
மலக்குரா வாதபித்த னுசமனியாகு
மருவியதோர் நிலக்குரு வண்மையாமே. (1142)

பூவமாமரத்தின்பெயர்.

பூவமா மரப்பெயரை புகலக்கேளு
புன்னுகஞ் சைவலங் கேசவரிஷ்டம்
பீவபிற புன்னுகம் பூகமேவசமாம்
பெருமையார்விசாலஞ்சம் விஷபசரித்திரம்
சீவமாஞ் சிரஷகம்பூ தந்தித்தஞ்
செயமான விஷகரங்க டோகேபி
காவமாங் காட்சிய முகத்தியாகுங்
கடியபூ வந்திரமரப் பேருமாமே. (1143)

பலாவின் பெயர்.

பலாவினுட பெயர்தனையே பகரக்கேளு
பனசமாங் கண்டகிபலா சுவர்க்கமாகும்
பெலாவான பெருகுகண்டமகா சுவாதுவாகி
பேரான மூலபலோயபூர கேந்தியாகுஞ்
சிலாவான சீர்பலா சோச்சோசமாகுஞ்
செம்மையாம் பயித்திய விகா சனியுமாகுங்
கலாவான கபவிஷா பகமுமாகுஞ்
கடியதோர் பலாவினுட காட்சியாமே. (1144)

முட்பலாவின் பெயர்.

முட்பலாப் பெயர்தனையே மொழியக்கேளு
முயற்சியா மரிபுஷ்பம் பாரிசாதம்
அட்பலா அட்சவிருஞ் சத்தியாகு
மழகான பாரிசாதத்தி தகடுவாகும்
விட்பலாவி ஷக்கினகண்டு சூலசிதுவாகு
மேன்மையஞ் சுவாதுரசா யனமுமாகும்
நட்பலா வாதகப விருத்தியாகும்
நாடியதோர் முட்பலா நாமமாமே. (1145)

வன்மரையின் பெயர்.

வன்மரையின் பெயர்தனையே வதுக்கக்கேளு
மகாவிருட்ச சித்திரகத் தீட்சணமாகுஞ்
சின்மரை சித்திரஆ ரகமுமாகுஞ்
சித்திர சாரத்தை வசமுமாகும்
பின்மரை பூச்சரா கோகரிவிருட்சம்
பூதக விருட்சமாஞ் சித்தகோரதம்
கன்மரைகடு தீட்சணபகப விஷாபகமாம்
கடியவன் மரையினுட காட்சியாமே. (1146)

தணக்கின் பெயர்.

தணக்கினிட பேர்தனையே சாற்றக்கேளு
சாந்தகல புங்ககா சச்சமாகும்
பணக்கான பாண்டுபுத்ரிகா தணசியாகும்
பாங்கடு காசைவவா தாளாவாகும்
கணக்கான கபவிநா சனியுமாகும்
கடியதோர் விஷசூல குஷ்டக்னியாகும்
பணக்கான பாஷாண பற்பியாகும்
பாடியதோர் தணக்கினிட பண்புமாமே. (1147)

இசங்கின் பெயர்.

இசங்கினிட பேர்தனையே யியற்றக்கேளு
எழிலான காரிணிதந்த பாளினியாம்
குசங்கான குண்டலி தீர்க்கபத்திரி
குணமான சதுக்கினி சத்பீதக்னி

லசங்கான லாவனிமிருத குண்டலியாம்
நலத்தகடு திரிதோஷண காச்சுவாசாக்னி
சிசங்கான சிரிங்கசிய விஷவேகக்னி
செப்பியதோ ரிசங்கிட சீருமாமே (1148)

வேள்வேலின் பெயர்.

வேள்வேலின் பேர்தனையே விளம்பக்கேளு
மேதச்ச அரிமேத சத்வசாரம்
சள்வேலாஞ் சைவகட்ப லாவுமாகும்
சமரசமாங் காளகந்தச் சுபத்ரம்
கள்வேலாஞ் சரபாரி கந்தச்சுபத்திரங்
கஷாயதித் தக்கபாவி சரபகாவாம்
முள்வேலா முகரோகே பூசிதமாகு
முயற்சியாம் வேள்வேலின் மூர்க்கமாமே. (1149)

கருவேலின் பெயர்.

கருவேலின் பேர்தனையே கருதக்கேளு
கருமகா மேதோரி மேதோச்சமாகும்
குருவேலாங் கிருஷ்ணபிறட் சோதியாகும்
குருவாகும் தீமுறுகல் பழுவுக்குள்ளே
சருவேலாஞ் சரபாரி பசுகச்சை
கஞ்சத்தித புன்னுக கந்தமாகுஞ்
சிறுவேலாஞ் சிலேத்மபித்த சமனியாகுஞ்
செப்பியதோர் கருவேலின் சீருமாமே (1150)

காஞ்சிரையின் பெயர்.

காஞ்சிரையின் பேர்தனையே கருதக்கேளு
கனவிதுலோ வந்துலோ பினுலோவாகும்
நாஞ்சிரைந்தி கூலபிந்து தாலியாகும்
நகத்தியதே சத்தபரியா வாசமாகும்
தீஞ்சிரை தித்தகோவிந் துசரமாகும்
தீன்கபனி மரத்தினம் பிறத்திசையாயாகும்
சீரைஞ்சி யர்க்கபித்த சமனியாகுஞ்
சீர்கிருமி காஞ்சிரையின் பேருமாமே. (1151)

வேம்பாடலின் பேயர்.

வேம்பாடல் பேர்தனையே விளம்பக்கேளு
விளக்க மாமியகஞ் சூரியவல்லிசம்
ஆம்பாட லாதித்திய வல்லியாகு
மழகான சேம்பச்சி யயச்சேம்பச்சி
தூம்பாடல் சூரியவல்லி பிணியுமாகும்
துஷ்டவிரண கண்டமாலை நாசியாகுஞ்
சிம்பாடல் சீதளாவிரண ரோகினியாகுஞ்
செப்பியதோர் வேம்பாடல் சேயலுமாமே. (1152)

மலையாற்றின் பேயர்.

மலையாற்றின் பேர்தனையே வகுக்கக்கேளு
மகாவிஷ்ணு கோவிந்தார்ச் சகததானம்
குலையாற்றி குண்டலத்தாம் பிரபுட்பகமாகும்
குற்றுல கச்சகரி கோமகாயம்
யலையாற்றி மளபத் திரகமாகும்
அசங்கிருகி விரணசோ தகமுமாகும்
கலையாற்றி கண்டமாலா குதாப்பிரசமனங்
கருதியதோர் மலையாற்றின் கணக்குமாமே. (1153)

சடைச்சியின் பேயர்

சடைச்சியின் பேர்தனையே சாற்றக்கேளு
சகஆவ ரதனிவிந்து கவினியாகும்
படைபாண்டி பீதபீ லுகமுமாகும்
பண்பான சரமாங்க ராத்தபுஷ்பா
மடைமகா சுவாவீதி சோசியதேவா
மாதாவா னிரசேதித் தானுமாகுஞ்
சிடைசீத சுரதோஷண சனியாகுஞ்
செப்பியதோர் சடைச்சியிட சீருமாமே. (1154)

கப்புசடைச்சியின் பேயர்

கப்புச்சடைச்சி யின்பேரைக் கருதக்கேளு
கனக ஆவர்த்தினி சரமாரங்கா
நப்புசடை ரத்தபுஷ் பீசமாகும்
நலமான மோன காயசித்தி

அப்புசடை யரவினிட விஷத்துக்காதி
யரிதார பந்தனிசேந் தூரியாகும்
துப்புசடை சூலகடி விஷங்கள்போக்கி
சுயகப்பு சடைச்சியிட சூட்சமாமே. (1155)

சமனத்துவத்தின் பெயர்

சமனத்துவயப் பேர்தனையே சாற்றக்கேளு
தாந்ததத் பற்பினி பீசமாகும்
பழனத்துவ பாண்ரோங்கத் தபோதனமாம்
பரமமாங் கிரிபுத்திரி புண்டரீகோமு
மமனத்துவ முனிபுத்திர கேந்தியோவாகு
முனிசேதி பிறகீர்த்தி பிரமசடாவாகும்
இமனத்துவ கோயிறுத்தியிற் கேந்தகாஷ்டா
வேழிலான சமனத்துவ ஏற்றமாமே. (1156)

சதுகமரத்தின் பேர்.

சதுகமாம் பேர்தனையே சாற்றக்கேளு
சதுகார சன்னிகா கிருஷ்ணசதுவாகுஞ்
சதுகமாஞ்சே ரனிசைவசம் வர்த்தாவாஞ்
சதுகாசி சகவத னிதியுமாகுஞ்
சதுகசி சிராத்தாதோ ஷக்னியாகுஞ்
சாரமது கட்டியே தளுக்குமாகுஞ்
சதுகமாங் காயசித்தி கணத்திலாகுஞ்
சடமிறுகுஞ் சதுகத்தின் றன்பேராமே. (1157)

மாஞ்சரோகணியின் பெயர்.

மாஞ்சரோக ணிப்பெயரை மருவக்கேளு
மாஞ்சரோ கணியதிரு சாசமாகும்
சாஞ்சரம் கார்கப்பிர கீர்த்திதாவாஞ்
சமச்சமாங் கஷாயக்கிமாயிணம் வர்ணியாகும்
லாஞ்சமா மாத்தபித்தஞ் சமனியாகும்
நாகசேந் நூரிச்சி காயசித்தி
பாஞ்சமாம் பாண்டுவிஷ கரியுமாகும்
பாடியமாஞ் சரோகணிப்பேர் பகரலாமே. (1158)

மூங்கிலரிசியின் பெயர்.

மூலங்கிலரி சியின்பெயர் மூர்க்கங்கேளு
முள்ளான வாஞ்சிகோவே ணுசபலாகும்
தீங்கில்லாத் திரணகேது சதிகாகமாகும்
துச்சார துக்கசா ரச்சமாகுஞ்
சாங்கிலா சூகபதுவார காரமுகமாகுஞ்
சகாரமார கீசகச்சைவம கரோவாவாம்
வீங்கிலாம் பிருத்தீயு யீசமுமாகும்
வெண்மையா மூங்கிலரிசிப் பேருமாமே. (1159)

மூங்கிற்குருத்தின் பெயர்

மூங்கிற்குருத் தான்பெயரை மொழியக்கேளு
முனிவான வஞ்சக ரீருட்சோவாகும்
லாங்கிருத்து விதாகிவாத பித்தாளாவாம்
நலமான திரணத்துவ சேர்யவபலமாகும்
தீங்கிர தேசத்தி திதமுமாகும்
திறமான வேணுவக் கடுபுகியாகும்
ஊங்கிர விதிரவிலா சனியுமாகு
மொளிமூங்கிற் குருத்திட வண்மையாமே. (1160)

செவ்விரகின் பெயர்.

செவ்விறகின் பெயர்தனையே செப்பக்கேளு
சிவப்பான வர்னவான கஷ்டஞ்சமாகும்
வெவ்விறது வேதனுலே பனதூம
மிகையான சுருபகாஷ்டத்தூ மஞ்சமாகும்
ருவ்விறகு குருபதாரு காந்தகாஷ்டம்
உருக்குதனைச் செம்பாக்கி யுயர்வேதிச்சி
துவ்விறகு துல்கண்டகம் தானுமாகுஞ்
சுயம்பான செவ்விறகின் சூட்சமாமே. (1161)

செம்மரத்தின் பெயர்.

செம்மரத்தின் பெயர்தனையே செப்பக்கேளு
செயமான ரோகிதகோ கிதமுமாகுஞ்
சம்மரஞ்ச தாபுட்பிலி நாபமாகுஞ்
சமமான ரோகிதோவாதி தச்சபாகா

மம்மரத்த கோத்தபுட் பகமாங்காரி
மருவுநாகஞ் செம்பாக்கி நளினவேதி
பம்பரம் பாண்டுரோ பிரமமேசனி
பாடியதோர் செம்மரத்தின் பண்புமாமே. (1162)

கருமருதின் பெயர்.

கருமருதின் பெயர்தனையே கருதக்கேளு
கனமான பாசியஞ்சி லேத்மபாசம்
கருமருது பாசிகா தீர்க்கபாசிபத்து
வசுகஸ்திர நரம காளியாகும்
குருமருது குஷ்டமாம் பாண்டுநாசி
குணுக்குரு துத்தத்தையே சவளமாக்கி
அருமருது அதிகாய சித்தியாகு
மடங்காத கருமருதி னுண்மையாமே. (1163)

ஒருக்கோம்பின் பேர்

ஒருக்கோம்பின் பெயரினிட வுண்மைகேளு
வுகமான இத்திவாவி ரோணிதமாகும்
புருக்கோம்பு புட்பமஞ்சரி கேகதிசமாகும்
புயதிறக்க சுருந்தச்ச தாசைவமாகும்
கருக்கோம்பி கற்கடகாலி காவுமாகும்
காரீயச் செம்பியாங் கனகவல்லி
ஒருக்கோம்பி கருக்கம் பியிலுமாகு
முற்றதொரு கோம்பின்பே ருண்மையாமே. (1164)

நீர்விளாவின் பேர்

நீர்விளாப் பேர்தனையே நிகழ்த்தக்கேளு
நிலைமையாந் துருபேர்விள விரச்சமாகும்
கார்விளா காஞ்சனஞ் சூதமார்க்கமாகும்
கன்னியன் மோகன வாமனச்சைவம்
கீர்விளா கிருமிகுஷ்ட விஷபாகமாகும்
கெடியான கபித்தகஞ் சவ்வீரமயினி
ஈர்விளா யிக்காணு யதாத்தித்தம்
ஏற்றமா மருசிகரம் நீர்விளாவே. (1165)

கழுதைமான்புள்ளியின்பேர்.

கழுதைமான் புள்ளிப்பெயர் கருதக்கேளு
கற்பூஷோ மருவகங்கா பத்திரமாகுஞ்
சுழுதைமான் சாரத்தும கஞ்சுட்சும்பி
சுகந்தஞ்ச சத்தபரியா யவாசகமாம்
புழுதிமான் பிரதிசிஆகா சவிகாசனியம்
பேரான பாஷாணஞ் சாற்றில்கட்டும்
வெழுதைமான் வேர்சாற்றில் வெளுக்குமரிதாமம்
வெள்ளிச்சி கழுதைமான் புள்ளிமாமே. (1166)

நேயமரத்தின் பேர்.

நேயமரப் பேரினிட நேர்மைகேளு
நேரான அரிம்பிரியங் தயிலபாணி
சீயமம சினேதபற்குண சுபகோவாகுஞ்
சிரசான இங்குவிருட்ச சமரசமாகுஞ்
சூயமம சுரத்திருமஞ் சினேககாஷ்டஞ்
சூதசேங் தூரியாஞ் சுயம்பியாகும்
வாயமம வன்னப்பிரசக தனியுமாகு
மருவியதோர் நேயமரப் பேருமாமே. (1167)

பொன்வண்ணச்சாலியின் பேர்.

பொன்வண்ணச் சாலிப்பேர் புகலக்கேளு
பொற்பத்ம பத்திர சுலானுபாகு
சுன்சூரண கெற்பந்தி ராதிதாவாஞ்
சுக்கிராத செனநீ லட்சுமிவர்னம்
கன்கில்சங் ததாவர்னி யாட்டியாசங்
கனமான சாரடி கெருடப்பிரியாகும்
கன்வர்ன சாதிலிங்க மயினிஆகும்
தனிச்சூத வயிரியாம் பொற்சாலியாமே. (1168)

செழுமலர்க்கொன்றையின் பேர்.

செழுமலர்க் கொன்றைப்பேர் செப்பக்கேளு
சியாமரஞ் சூரவிதளா மூலதேசியம்
சழுமலர் சுதித்தகடு ருட்சாசியா
மாசமதுலம் விஷாபகா சூலகாமா

மழுமலர்பா ளிந்திகோ தாக்னியாகு
மசத்தகடுக் கையாங் காயசித்தி
நழுமலர் ராசாவர்த்த சத்துமாகும்
நாடியதோர் செழுமலர்க் கோன்றையாமே. (1169)

பெருமலர்க்கோன்றையின் பேர்.

பெருமலர்க் கோன்றைப்பேர் பேசக்கேளு
பேரான மகரசியா மாகண்டகாக்கியர்
விருமலர் விதிகாயந்திம் பகண்டகமா
மேன்மையாங் குருத்துவேகா பிறகதசியாமா
நருமலர் நாகரி சுங்கபுட்பிரி
நல்காய சித்திச்சி விஷக்னியாகும்
புருமலர் பூச்சாற்றில் பாஷாணமயினி
பேரான பெருமலர்க் கோன்றையாமே. (1170)

ஓமையின் பெயர்.

ஓமையிட பேர்தனையே யுறுதிகேளு
வுகமான சோமல்லி மகாவிருட்சம்
ஓமையாம் ரோகிண்மகா வல்கலமாகு
முகமாண் கட்பல்ச் சேதிகாவா
மேன்மையாம் விஷகரக்கஷா பச்சுவாதுமேற்ற
பிறச்சமன சங்கிராகி ராகியாகும்
ஊமையாம் யோனிதோஷ நிவர்த்தியாகு
முண்மையா மோமையிட பேருமாமே. (1171)

சிறுநீலியின் பேர்.

சிறுநீலிப் பேர்தனையே செப்பக்கேளு
செயமான வுப்பூதக் கேசருகாசம்
பருநீலிசை வேர்ப்பிரச பத்திரகமாகும்
பண்பான யாவற்றரசை வாக்கியேசம்
தருநீலித் தைவசா சயாபகாவாம்
தருதித்தா சோஷஞசகடு சுவாசமாகும்
அருநீலியம் விஷ்டோமயச் செம்பியாகு
மழகான சிறுநீலிப் பேருமாமே. (1172)

உதிமாரியின் பெயர்.

உதிமாரி யின்பெயரை யுணர்த்தக்கேளு
உகமானய புஷாவாம் விபுஷாவாகும்
விதிரியாம் விசிரகேந்தா விகிந்திகாவாம்
விஷக்கினிய பராதுவச் சபலமாகும்
கதிரியாம் கட்டுவேங்கா வாங்கிஷாசி
கடுதித்தோ குலக்கினி கண்டாபற்பி
குதிரியாங் குருவாக்கி குணசாலிக்கி
கூறியதோ ருதிமாரிப் பேருமாமே. (1173)

புளிநரளைக்கிழங்கின் பேர்.

புளிநரளைக் கிழங்கின்பேர் புகலக்கேளு
பொருமியதோ ரம்மிலிகா யாசுமிர்த்தமாகும்
கிளிநரளைக் கிரகணிய பேர்கிதேகம்
மேகிபால்குந ரத்தியூஷ்டினக் கபவாதக்னி
தளிநரளை சத்தியோ தத்தாதி
தேகிருசாங்கமாம் வேடியுப்புத் தம்பியாகும்
திளிநரளை செம்பினிட வூறல்போக்கி
செப்பியதோர் புளிநரளைச் சீருமாமே. (1174)

பேய்க்குமட்டியின் பெயர்.

பேய்க்குமட்டிப் பேர்தனையே பேசக்கேளு
பேயான பிததாதிசர சோதநீசம்
தீயான திரிதோஷன சிரங்கிதாவாஞ்
செங்கிரந்த விரணசோ தனியுமாகுஞ்
சூயானசோ போதாபா ராருட்சாவாஞ்
சுணையான காய்க்குள்ளே பாஷாணங்கட்டும்
வேயான வேர்ச்சாற்றில் செம்புசுத்தி
மிடுக்கான பேய்க்குமட்டி விபரமாமே. (1175)

சுண்டைக்காயின் பேர்.

சுண்டைக்காய்ப் பேர்தனையே சொல்லக்கேளு
சுணையான பித்தளம்குரு விஷ்டமாகும்
கண்டைக்காய் கடிகிபலம் பிதித்தஞ்சமாகும்
கப்பித்த யரந்தித்தம் இருத்தியகுஷ்டம்

ருண்டைக்காய் ருசியரஞ் சுராபகமாம்
 ருத்திரோக சுவாசகா சக்னியாகும்
தோண்டைக்காய்த் தோட்டிதனைப் பற்பமாக்கி
 சுண்டைக்காய் தன்னுடைய சூட்சமாமே. (1176)

காரெள்ளின் பெயர்.

காரெள்ளுப் பேர்தனையே கருதக்கேளு
 காரியப் போசனு பாணியாகும்
தீரெள்ளு பாஷாண மயினியாகும்
 தீமதா கிருஷ்ணபலி யாகும்துரனும்
பீரெள்ளு பீசானும் தாட்டியமாகும்
 பேரான வசிகரி திலதியாகும்
மாரெள்ளு பாஷாண மயினியாகும்
 மருவியதோர் காரெள்ளு மார்க்கமாமே. (1177)

பீதரோகணியின் பெயர்.

பீதரோ கணிப்பெயரைப் புகலக்கேளு
 பேரான திருஷ்டிப் பிரசாதனியாம்
வீதமாம் விஷமசா தனியுமாகும்
 வீரணசோ பகயரா ருட்சாவாகும்
நாதமா மர்த்தப்பிர சாதனியாகும்
 நலமான கண்ணுக்குக் குளிர்ச்சியாகும்
தூதமாந் தூதமாந் தூர்திவிட்டிப் பார்வையாகும்
 சொல்பீத ரோகணியின் சூட்சமாமே. (1178)

கோடிநெல்லியின்பெயர்.

கோடிநெல்லிப் பேர்தனையே கூறக்கேளு
 கோடியசிறு காலவின்னு பாண்டச்சமாகும்
மிடிநெல்லி மிருகவின்னுத்தை வசமுமாகு
 மிக்கான மூலாவாம் தண்டபாணி
மடிநெல்லி மாஷபத்திரி திர டாஞ்சமுமாகு
 மாசற்ற சூதத்தை மணியாய்ப்பண்ணி
கடிநெல்லி காயசித்தி கண்ணுக்கேற்றுர்
 கற்பமாம் கோடிநெல்லி கணக்குமாமே. (1179)

சின்னுருகையின் பேயர்.

சின்னுருகைப் பேர்தனையே செப்பக்கேளு
சின்னருகா மகரகண்ட விஷாதிணியாகும்
போன்னருகா பேகுச்சிரித்திரா ஷண்டரூபா
பீரோத்த பரியாயமே வசமுமாகும்
துன்னருகா துராணுமோ தரமானுக
சுவாசட் சயகாசு அற்பமுமாகும்
உன்னருகா வுபசங்கள் தயிலமாகி
யுற்பனமாஞ் சின்னருகா வுறுதியாமே. (1180)

ஆவாரையின் பேயர்.

ஆவாரைப் பேர்தனையே அறையக்கேளு
ஆண்மையா மேகமாகி மேகசத்துரு
ரீவாரை ரிகசிரோணிச காசகாவாம்
நியமமாஞ் சுவர்னபுட் பாதமாகும்
காவாரை கதம்பதட் பஞ்சலியாங்
கனகமாஞ் சாகுலி தட்வோடஞ்சம்
பீவாரை பீதபுட்பிமதி சோதியதேவா
பேருமைசரு வந்திரகமா வாரையாமே. (1181)

காட்டுக்கருணையின் பேயர்

காட்டுக்கரு ணைப்பேரைக் காணக்கேளு
காகாப்பாம் விகாயிருத்திய மவனசூரணஞ்சங்
கூட்டான குதாங்குரான் சிலேத்மகேணு
கிருமிகேடி யானபாஷாணப் பற்பியாகும்
கேட்டான கெந்தகத்தைத் தயிலமாக்கி
கிளர்ந்தெழுந்த செம்பினிட வூறல்போக்கி
தீட்டான கிரதனிவிகா ரானகாசான்
திறமான காட்டுக்கருணைச் சேயலுமாமே. (1182)

ருதந்தியின் பேயர்

ருதந்தியிட பேர்தனையே செப்பக்கேளு
ருண்மையாஞ் சருவவுஷத் தாசியாகும்
நதந்தியாஞ் சிவேதாதி வர்னகமாகும்
திரிதோஷத் ததியாச னடேக்கமாகும்

முதந்தியா மூலேச்சா கிரஞ்சலமாகு
முனிவான விந்துற்ற மூர்க்கமாகுஞ்
சதந்தியாஞ் சாதிலிங்க மயினியாகுஞ்
சமரசமாம் ருதந்தியிட தண்மையாமே. (1183)

ஆதளைக்காயின் பெயர்

ஆதளைக்காய்ப் பேரினிட ஆண்மைக்கேளு
அழகான பலந்தித்த மதனேர்பவ்வம்
காதளைக்காய் கபாநீலோத் தீமனமாகும்
கனலாக்னி காரிமர்த்த தோஷனுவாம்
சூதளைக்காய் சுரதோஷ நிவர்த்தியாகுஞ்
சுயம்பான சூதசேந் தூரியாகும்
பாதளைக்காய் பாஷாண தோஷம்போக்கி
பரவியதோ ராதளைக்காய்ப் பண்புமாமே. (1184)

நரிமுருக்கன்பேர்.

நரிமுருக்கன் பேர்தனையே நவிலக்கேளு
நலமான ரோகிதக பாரிசாதம்
பருமுருக்கு ரத்தபுட் பகமுமாகும்
பதோரார்த்த தூஷணப்பி கைவிருத்தி
கிரிமுருக்கு கிருமியற்பா சனமுமாகும்
கேண்மையாம் பவனுபக்கேடியுமாகும்
அரிமுருக்கு அயச்சேந்தூரி தானுமாகு
மழகான நரிமுருக்கி னுண்மையாமே. (1185)

கிளிமுருக்கின்பேர்.

கிளிமுருக்கின் பேரினிட கேண்மைகேளு
கேணிகாயஞ் சூட்சுமநாளிசமுமாகும்
நளிமுருக்கு நாளிகாதி காக்கியாசியாசம்
நாளிகா சுகனுபலா சேதியாகும்
துளிமுருக்கு துங்கபத்திராதிரி பத்திரமாகுஞ்
சுகநாசாய் மாதித்தா மதுராவாகுஞ்
சுளிமுருக்கு ரசாயனி சூதபந்தனியாஞ்
சொல்லியதோர் கிளிமுருக்கின் சூட்சமாமே. (1186)

நேபத்திகையின் பேர்.

நேபத்திகையின் பேர்தனையே நிகழ்த்தக்கேளு
நேரான கிரமா மூலபத்திரம்
சபத்திகை சணபுட்ப மிருதுபலமாகுஞ்
சமனமான கிரந்திகம் தீட்சணசாரம்
வபத்திகை வக்கண் டகமுமாகும்
வாதத்துக் குயிரான வுப்புக்கட்டு
குபத்திகை குஞ்ச கிவமுமாகும்
கேடியனே பத்திகையின் பேருமாமே. (1187)

மாஞ்சிபத்திரியின் பேர்.

மாஞ்சிபத் திரிப்பெயரை வழுத்தக்கேளு
மத்தசா ணேயகம்அயச் சோடமாகும்
துஞ்சியாஞ் சுகபுட்பம் சுகசதமாகுஞ்
சுதனுச்சு அரிதஞ்ச பரிதஞ்சிரணம்
குஞ்சியாம் ரோமகந்து ரந்துவச்சியம்
குதக்குமமாந் தங்கத்தைச் செந்தூரியாக்கி
மெஞ்சியா மேத்தஞ்ச குஷ்டந்துவாகு
மேன்மையா மஞ்சிபத்திரிப் பேருமாமே. (1188)

நாய்வேளையின் பேர்.

நாய்வேளைப் பேர்தனையே நவிலக்கேளு
நலமான பீதபத்த பரிகோபத்தம்
காய்வேளை கெந்தபூதி மயூரகமாகும்
கபரிபற பரிதுங்கி காப்புஷ்பாசம்
சூய்வேளை சூலபீங்காசக சீனியாகுஞ்
சுறுக்கான திட்சணங்க குஷ்ணகானவிதமாம்
கூய்வேளை குணமாஷ்டில் நாசனியாகுங்
கூரான நாய்வேளைக் குணமுமாமே. (1189)

பச்சைநாயின் பேர்.

பச்சைநா பிப்பெயரைப் பகரக்கேளு
பண்பான குருவுக்கு ஆதியாகும்
துச்சையாம் பஞ்சுநா பிஞ்சமாகுந்
துடியான பியூஷமிருதம் விஷ்டமாகும்

வெச்சையாங் கிழங்கவுங் கருப்பியாகு
மிடுக்கான கருநாபி சூதங்கட்டும்
நச்சையாம் நால்சாதி கருப்புமிச்சம்
நாடியதோர் பச்சைநாபிப் பேருமாமே. (1190)

மாகாளியின் பேர்.

மாகாளிப் பேர்தனையே வழுத்தக்கேளு
மார்க்கமாங் காளானு சாரிபந்தாத்தி
சாகாளி பலத்தாங்திரி சாரிபாவா
ணுசந்த ஞேறபல பிறிதாரிகாவாம்
காகாளி சாரதா சகப்போடர்வாங்
காஷ்டமாஞ் சாரிபா கண்டாவெள்ளை
நாகாளி நாகசெங் தூரியாகும்
நாட்டியதோர் மாகால நற்பேராமே. (1191)

தாளிப்பனையின் பேர்.

தாளிப்பனைப் பேர்தனையே சாற்றக்கேளு
சாராயிந்தா ளிதும்ன தாளியாகும்
கேளிப்பனை கிருதானி திரணபுட்பி
தெளிவான பெருகாதோ மிருதுபலமாகுங்
கூளிப்பனை கூடடாகி சிரபலமாகுங்
குணமான பச்சைபோய் வெள்ளையுராவாள்
மாளப்பனை மகாசித்தி ரசாயனமுமாகு
மகத்தான தாளிப்பனை மார்க்கமாமே. (1192)

விருத்தியின் பெயர்.

விருத்தியிட பேர்தனையே விளம்பக்கேளு
விருத்திசத் துடியாவ நேதுஷ்டியாகும்
இருத்தியென்ற இலைச்சாற்றி லீயங்கட்டு
மேற்றமாங் காமுறவித் திருச்சியதேயாம்
நருத்தியென்ற வேர்சாற்றில் நாகங்கட்டும்
நலமான பூசாற்றில் சூதங்கட்டும்
நருத்தியென்ற சமூலத்தில் காயசித்தியாகும்
நாட்டணிய பேரையெல்லாம் விருத்தியாமே. (1193)

ஓரிதழ்த்தாமரையின் பேயர்.

ஓரிதழ்த்தா மரைப்பேரி னுறுதிகேளு
வுற்பத்து மரசிதாரவிங் தாசமாகுஞ்
சாரிதழ்ச்சாரடி பத்தம சாரணியாங்
தண்மையாஞ் சாரதிலட்சுமிரேஷ்டா
தூரிதழ்ச்சு புஷ்கார சாதிசார்கேந்தஞ்
சமரசமா மூலேதிசோச் சியதேயாகும்
ஆரிதட் டாயிஷ்ய தாரணியாகு
மடைந்தவோ ரிதழ்த்தாமரைப் போராகுமன்றே(1194)

நீர்முள்ளியின் பேயர்.

நீர்முள்ளிப் பேர்தனையே நிறையக்கேளு
நியமமாஞ் சிறகால கண்டாவாகும்
வார்முள்ளி வக்கிராங்கிட் சாரகத்தியமாகு
மகத்தான கோகிலாட் சமரசமாஞ்
சாரமுள்ளி சதபருவா பருவமாலி
தயிலமாங் கண்டயித் தியபியாகும்
நார்முள்ளி செஞ்சட்சு கோகிலமாகும்
நற்பாண்டு சமணிநீர் முள்ளியாமே. (1195)

வெள்ளைநீர்முள்ளியின் பேயர்.

வெள்ளைநீர் முள்ளிப்பேர் விளக்கக்கேளு
வெண்பூவாஞ் சாறுதனில்சூதங்கட்டும்
தள்ளையாஞ் சமுலத்தில் தாம்பிரவெள்ளை
சதபருவாசுவேத மூலிகையுமாகும்
குள்ளையாஞ் சுவேதகோகிலா மட்சமாகுங்
குருபற்பமாக்குவிக்குங்குணத்தியாகும்
பள்ளையாம்பாஷாணப்பங்தனியாகும்
பாடியதோர்வெள்ளைநீர்முள்ளியாமே (1196)

இந்நூற்பெருமை கூறுகின்றார்.

சொன்னோமே நாமிந்த நூலுக்குள்ளே
சுருதியாம் லவணவகைப் பெயருஞ்சொன்னோம்
மின்னேகே ளுபரசத்தின் சத்துசொன்னோம்
மேன்மையாம் பாஷாணப் போக்குஞ்சொன்னோம்

அன்னேகே ளாதியந்த முடிவுஞ்சொன்னேம்
அப்பனேசொர்னமூலி யனந்தஞ்சொன்னேம்
மன்னேகேள் சத்துருமித் துருவுஞ்சொன்னேம்
மாகோடிசா மூலிவகை யறைந்திட்டேனே. (1197)

அறைந்திட்டே னிந்நூலின் கருக்கடைதன்னில்
அனந்தமாம் பெருமூலிப் போக்குச்சொன்னேம்
துறைந்திட்டேன் வடமொழியி லனந்தஞ்சொன்னேம்
தொகுத்தபெயர் சனுக்கிரக மனந்தங்கோடி
முறைந்திட்டேன் பாகவத மொழியனந்தம்
முறையுடனே வப்பிரஞ்சன மனந்தங்கோடி
திறைந்திட்டே நாலுவித பாஷையாலே
திறமுடனே போகரிஷி மொழிந்தார்தாமே. (1198)

சித்தர்களுக்குவணக்கங்கூறுகின்றார்.

மொழிந்துமே சித்தருக்குச் சரணஞ்சொல்வேன்
முனையான காலாங்கி சரணஞ்சொல்வேன்
அழிந்திட்டேன் சனகருக்குச் சரணஞ்சொன்னேன்
அப்பனே நந்திக்குஞ் சரணஞ்சொன்னேன்
வழிந்திட்டுச் சோதிமா முனிவர்பாதம்
வகையுடனே தொழுது சரணஞ்சொன்னேன்
குழிந்திட்டுக் கும்பமுனி சரணஞ்சொன்னேன்
கூறியதோர் கொங்கணர்க்குச் சரணமாமே.

சரணமாஞ் சட்டைமுனி தொழுதேன்பாதம்
சாற்றியதோர் தன்வந்திரி சரணஞ்சொன்னேன்
சரணமாம் நந்தீசர் தொழுதேன்பாதம்
சற்குருவின் றிருமாலுக் கடிமைசொன்னேன்
சரணமாஞ் சிவவாக்கியர் தொழுதேன்பாதஞ்
சனக்கிரகர் கமலமுனி சரணஞ்சொன்னேன்
சரணமா மிடைக்காடர் பாதம்போற்றி
தனியான மச்சமுனி தொழுதேன்பாரே

பாரப்பா யூகிமுனி பணிந்தேன்பாதம்
பரிவுடனே வரரிஷியைத் தொழுதேன்பாதம்
ஆரப்பா ரோமரிஷி யடியேன்பாதம்
அப்பனே நானுனக்குச் சரணஞ்சொன்னேன்
நேரப்பா இந்நூலைக் குகையில்வைத்து
நேர்மையா யெந்நேரந் தொழுதுபோற்று
கூரப்பா இந்நூல்தான் குருநூலாகும்
குவலயத்தில் கிட்டாது கிட்டாதன்றே. (1199)

கிட்டாது இந்நூல்தா னெவர்க்குக்கிட்டும்
கிருபையுடன் சிவயோகி முனிவர்க்குக்கிட்டும்
எட்டாத பொருள்களெல்லா மிதிலேதோயும்
என்மக்காள் சித்தர்களே முனிவர்க்கென்றும்
அட்டாத ஆயிரத்து இருநூறாக
அறைந்திட்டே னிகண்டெனவே பெயர்வகுத்தேன்
திட்டாம லெந்தனைநீ ரெப்போதுந்தான்
திறமுடனே துதிக்குநூ லிதுமுற்றே. (1200)

## போகர் நிகண்டு-முதற்காண்டம்

முற்றிற்று.

# புத்தக விளம்பரம்.

| | | |
|---|---|---|
| ஜோசியம் சாதகசிந்தாமணி | 1 | 8 |
| ஷை இளேஸ் | 2 | 8 |
| சிற்பசாஸ்திரகள ஞ்சியம் | 1 | 8 |
| காமலமாமுநிரேகை சாஸ்திரம் மூலமும்-உரையு | 1 | 0 |
| விஞ்டிபஞ்சபக்ஷி மூலமும்-உரையும் | 1 | 4 |
| போகர் பஞ்சபக்ஷி மூலமும்-உரையும் | 0 | 14 |
| அகஸ்தியர் பஞ்சபக்ஷி மூலமும்-உரையும் | 0 | 12 |
| ஜாதகலங்காரம் மூலம் | 0 | 12 |
| மணிகண்டகேரளம் | 0 | 8 |

வைத்திய புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| வைத்தியமூலிகை அகாதி | 1 | 0 |
| அகஸ்தியர்காவியம்-1500 | 1 | 0 |
| அகஸ்தியர்செந்தூரம்-300 | 0 | 6 |
| அகஸ்தியர் பரிபாஷைத்திரட்டு-500 | 0 | 8 |
| கொங்கணர் கடைக்காண்டம்-500 | 0 | 8 |
| தன்மந்திரி கருக்கடை நிகண்டு -300 | 0 | 8 |
| தன்மந்திரி தைலம் | 0 | 6 |
| போகர் சரக்கு வைப்பு-800 | 0 | 14 |
| போகர் ஜனன சாகரம்-557 | 0 | 12 |
| போகர்-700 | 0 | 0 |
| போகர் நிகண்டு-1200 | 1 | 8 |
| போகர் கருக்கடை நிகண்டு-500 | 0 | 10 |
| சுப்பிரமணியர் ஞானம்-500 | 0 | 10 |
| அகஸ்தியர்வல்லாதி-600 | 0 | 10 |
| ரோமரிஷி-500 | 0 | 0 |
| பதார்த்தகுண சிந்தாமணி | 1 | 4 |
| கெர்ப்பசாஸ்திரம் | 1 | 4 |
| அகஸ்தியர் தீக்ஷாவதி-200 | 0 | 5 |
| பகவற்கீதை மூலமும்-உரையும் குட்டைசயிஸ் | 1 | 4 |

வ. தீனதயாள முதலியார்.

நெ. 4, 2-வது சந்து பெருமாள்கோவில் தோட்டம்

சௌக்கார்பேட்டை போஸ்டு மதராஸ்.